மக்களும் மரபுகளும்

NCBH

பதிப்பாசிரியர்
நா. வானமாமலை

மக்களும் மரபுகளும்

மானிடவியல் ஆராய்ச்சிக்
கட்டுரைத் தொகுப்பு

பதிப்பாசிரியர்:

நா. வானமாமலை, எம்.ஏ;எல்.டி.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

MAKKALUM MARABUKALUM

by

N. Vanamamalai

முதற் பதிப்பு: அக்டோபர், 1975

இரண்டாம் அச்சு: ஏப்ரல், 1993

உரிமைப் பதிவு

Code No. A 623

விலை: ரூ. 28-00

ISBN : 81-234-0149-3

அச்சிட்டோர்:

பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,

142, ஜானி ஜான் கான் ரோடு,

சென்னை-600 014.

பதிப்பாசிரியர் உரை

மக்களும் மரபுகளும் என்னும் இந்நூல் மானிடவியல் ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாகும். இத்தொகுப்பில் இருவகைக் கட்டுரைகள் உள்ளன.

தமிழ் நாட்டிலும், தமிழக மலைப்பிரதேசங்களிலும் வாழும் பழங்குடி—இனக்குழு மக்களது வாழ்க்கை, மொழி, கலை, பழக்கவழக்கங்களை ஆராய்கிற கட்டுரைகள் ஒரு வகை; தமிழகத்திலும்,கேரளத்திலும் வழங்கி வரும் வேலன் வழிபாடு,பகவதி வழிபாடு பற்றிய வரலாற்று மானிடவியல் கட்டுரைகள் மற்றொரு வகை.

முதல்வகையைச் சார்ந்த கட்டுரைகள் இனக்குழு—வாழ்க்கையின் கலை அம்சங்களை ஆராய்கின்றன. உதாரணமாக நரிக்குறவர் மருந்துகள், மொழி, மதச் சடங்குகள் பற்றிய நேரடி ஆய்வுகளினடிப்படையில் சில கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. இவர்கள் நாடோடிகளாகப் பல நூற்றாண்டுகள் வாழ்ந்து, சில நகரங்களின் ஒதுக்குப் புறங்களில் சில ஆண்டுகளாக நிலையாகத் தங்கத் தொடங்கியுள்ளனர். இவர்கள் வீடு வாசலற்றவர்கள். மூங்கில் அல்லது ஈந்துக் கூரைகளாலான கூடாரங்களில் குடியிருக்கின்றனர். உணவு தேடும் மக்களாக வாழ்ந்து, இப்பொழுது ஊசி, மூலிகைகள், நரிப்பல் விற்று, உணவுப் பொருள்களை வாங்கிச் சமைத்துண்பவர்களாக உள்ளனர். நாகரிகத்தின் முதற்படிகளில் கூட இவர்கள் சமுதாயம் காலடி வைக்கவில்லை. உணவுற்பத்தியில் இவர்கள் ஈடுபட

வில்லை. நகர்ப் புறங்களில் இன்றும் நாடோடிகளாக வாழ்கிறார்கள். வாக்ரிபோலி என்ற ஓர் இந்தோ ஆரிய மொழி பேசுகிறார்கள். பழமையான ஓர் இனக்குழுச் சமயத்தைப் பின்பற்றுகிறார்கள். பல நூற்றாண்டுகளாகத் தமிழ்நாட்டில் வாழும் இவர்கள் தமிழகக் கலாசார ஓடையினின்றும் ஒதுங்கியே வாழ்கிறார்கள். இவர்களது வாழ்க்கை மொழி, சமயம் ஆகியவற்றை ஆராய்வது மிகவும் கடினமான முயற்சி. சீனுவாச வர்மா, ராஜகோபாலன், சிரோமணி முதலிய ஆய்வாளர்கள் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். களஆய்வுகள் மூலம் இதுவரை தெரியாத பல உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார்கள். அவர்கள் பற்றிய கற்பனைக் கதைகளே, இதுவரை அவர்களது யதார்த்த வாழ்க்கை என்ற எண்ணம் தோன்றும்படி வெளியிடப்பட்டுள்ளன. இக் கட்டுரைகளில் நேரடி ஆய்வுகளை, மானிடவியல் அறிவினால் ஆராய்ந்து, நரிக்குறவர் வாழ்க்கையில் சில அம்சங்களின் உண்மையான செய்திகள் விஞ்ஞான முடிவுகளாக வெளியிடப்படுகின்றன. இது இந் நூலின் சிறப்பு அம்சமாகும்.

மலைநாட்டு மக்களில் பெரும்பகுதியினர் நீலகிரிமலைப் பிரதேசங்களில் வசிக்கிறார்கள். அவர்களில் கோத்தர், கசவர், இருளர் ஆகிய இனத்தவர் தமிழையொத்த மொழிகளைப் பேசுகிறார்கள். இம்மொழிகள் தமிழுக்கும் கன்னட, மலையாள மொழிகளுக்கும் இணைப்பு மொழியாக உள்ளன. திராவிட மொழிகளின் மொழியமைப்பையும் வரலாற்றையும் அறிய இவை துணைபுரிகின்றன. அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் ஆய்வாளர்கள், இம் மொழிகளை ஆராய்வதற்காக நீலகிரிமலைப் பிரதேசங்களுக்குச் செல்லுகிறார்கள். மொழியோடு வாழ்க்கையையும் மரபுகளையும் ஆராய்கிறார்கள். எனவே அவர்களது ஆய்வுகள் இனவியல், மானிடவியல் துறைகளிலும் நுழைகிறது. இருளரைப் பற்றிச் சில கட்டுரைகளும், கோத்தர் பற்றிய ஒரு கட்டுரையும், கசவர் பற்றிய ஒரு கட்டுரையும் இத் தொகுப்பில் உள்ளன.

தென்தமிழ் நாட்டு மலைகளில் பளியர்கள் வாழ்கிறார்கள் பொதிகைமலை, சிவகிரிமலை, ராமநாதபுரம் மாவட்டம் ராஜபாளையம் மலைப் பகுதிகளிலும் பளியர் வாழ்கிறார்கள். இவர்களைப் பாபநாசம் மலைப்பகுதிகளில் 'மலைப் பளியங்கர்' என்று அழைக்கிறார்கள். இவர்களைப் பற்றிய கட்டுரையொன்று உள்ளது.

பலதுறை ஆய்வுகளைப் பயன்படுத்தி எழுதப்பட்ட இரண்டு பண்பாட்டு ஆய்வுக் கட்டுரைகள் இந் நூலின் முதற் பகுதியில் உள்ளன. வேலன் வழிபாடு பகவதி வழிபாடு ஆகிய இரண்டு முக்கியமான நாட்டுமக்கள் வழிபாட்டுக் கருத்துகளை தமிழ்நாடு, கேரளம் ஆகிய இரு பண்பாடுகளை ஆராய்ந்து பி.எல். சுவாமி சில உண்மைகளைக் கண்டறிகிறார். இவ் வழிபாடுகளில் காலப்போக்கில் தோற்றத்திலிருந்து, வரலாற்றுக் காலங்களில் கலந்துவிட்ட தனித்தனி கருத்துகளையும், மரபுகளையும் ஆய்வாளர் இனம்பிரித்துக் காட்டுகிறார். இத்தகைய ஆராய்ச்சி தமிழ் நாட்டின் பண்பாட்டு வரலாற்றிற்குப் புதியதாகும்.

இவையாவும் 'ஆராய்ச்சி' இதழில் கடந்த நான்கு ஆண்டுகளில் வெளியிடப்பட்டவை. இப்புதிய ஒப்பு ஆய்வுகளுக்கும், மானிடவியல் ஆராய்ச்சிக்கும் ஊக்கமளிக்கும் வகையில் **நியூ செஞ்சுரி புத்தக வெளியீட்டகத்தார்** இக் கட்டுரைகளை நூலாக வெளியிட முன் வந்துள்ளனர். அவர்களுக்கு ஆய்வாளர்கள் சார்பில் நன்றி.

நா. வானமாமலை

பொருளடக்கம்

			பக்கம்
1.	வேலன் வழிபாடு —பி. எல். சாமி	...	1
2.	கண்ணகியும் பகவதி வழிபாடும் —பி. எல். சாமி	...	24
3.	கோத்தர்களின் சாவு விழா —கோ. சுப்பையா, எம். ஏ.,	...	63
4.	கோத்தர்களின் உறவுமுறைச் சொற்கள் —கோ. சுப்பையா, எம். ஏ.,	...	69
5.	தமிழ்நாட்டுப் பளியர்கள் —ஆ. சிவசுப்பிரமணியன்	...	80
6.	நரிக்குறவர்களின் வாழ்க்கை முறை —கோ. சீனுவாசவர்மா, M.A.,Ph.D.,	...	90
7.	நரிக்குறவர் வாழ்க்கையில் சடங்குகளும் பூசைகளும் —கே. ஆர். ராஜகோபாலன், ஜே. பி. விஜயதிலகன்	...	96
8.	இருளப்பள்ளர் என்ற வெட்டக்காட இருளர் —ஆர். பெரியாழ்வார், எம். ஏ.,	...	109

9. இருளர் திருமணம் ... 134
—ஆர். பெரியாழ்வார்

10. இருளரும் இசையும் ... 149
—ஆர். பெரியாழ்வார்

11. நீலகிரி கசவா பழங்குடி மக்கள் ... 156
—வே. சிதம்பரநாத பிள்ளை, எம். ஏ.,

12. கொடவர் வாழ்க்கை முறை ... 166
—இரா. பாலகிருஷ்ணன், எம். ஏ.,

1. வேலன் வழிபாடு

பி. எல். சாமி

[இக்கட்டுரை ஓர் ஒப்பியல் ஆய்வாகும். பழைய பண்பாட்டு நம்பிக்கையொன்றை இலக்கியச் சான்றுகளிலிருந்து எடுத்துக்காட்டி அதன் எச்சமாக இன்று மலபாரில் நிலைத்திருக்கும் வேலனாட்டம் என்ற நாட்டு நடனத்தையும், நாட்டுச் சடங்கையும் விளக்கி, இரண்டையும் ஒப்பிட்டு வேலன் வழிபாட்டு நம்பிக்கையின் வரலாற்றை ஆசிரியர் நிறுவ முயன்றுள்ளார். இலக்கியம் மானிடவியல், முன் ஆய்வுகளின் முடிவுகள், நாட்டுப் பண்பாட்டியல் நேரடி ஆய்வுகள் ஆகியன அளிக்கும் சான்றுகளைப் பயன்படுத்தியுள்ளார். தமிழகம், மலபார் ஆகியவற்றின் பரப்பில் இவ்வாய்வுகள் பொருத்தமான முடிவுகளுக்கு வருகின்றன. ஹாரப்பா முத்திரையிலிருந்து, வேலன் ஆட்டத்திற்கு ஆய்வுகள் செல்ல வேண்டுமானால், இடைப்பட்ட பூகோளப் பகுதிகளிலிருந்து, அகழ்வாராய்ச்சி, தற்கால மானிடவியல், அல்லது இலக்கியச் சான்றுகள் தேவை. வேலன் வழிபாடு ஸ்கந்த வழிபாட்டோடு இணைந்தபின் கிடைக்கிற சான்றுகள், ஹாரப்பா, மலபார் வேலன் வழிபாட்டுத் தொடர்பை நிரூபிக்கப் பயன்படா. ஹாரப்பாவிலிருந்து தெற்கு நோக்கி வேலன் வழிபாடு பரவியதா, அல்லது தெற்கிலிருந்த வேலன் வழிபாட்டோடு, வடக்கிலிருந்து வந்த ஸ்கந்த வழிபாடு கலந்து இணைப்புப் பெற்றதா என்ற வினாவிற்கு பல அறிஞர்கள் விடை கண்டுள்ளார்கள். இரண்டு வழிபாடுகளுக்குமே ஒரு பரிணாம வளர்ச்சியும், இணைந்தபின் ஒருமித்த வளர்ச்சியும் உள்ளது. ஹாரப்பா முத்திரையிலிருந்து தெற்கு நோக்கி இவ்வழிபாடு வந்ததென்று முடிவு செய்ய, இடைவெளியிலுள்ள நாடுகளிலும், கால இடைவெளியான பல நூற்றாண்டுகளிலும், இது பரவிய விதத்தையும் மாறிய விதத்தையும் காட்ட ஒவ்வொர் இடத்திலிருந்தும் காலத்திலிருந்தும்

சான்றுகள் தேவை. அவ்விதச் சான்றுகள் இன்று கிடைக்கவில்லை. ஆனால், ஹாரப்பா முத்திரையில் உள்ள வேலன் வழிபாட்டு ஊகத்தை, தமிழ்நாட்டுச் சங்க இலக்கியச் சான்றுகளோடும், தற்கால வேலன் ஆட்டத்தோடும் பொருத்தச் சான்றுகள் கிடைக் கின்றனவா என்று ஆராய்தல் வேண்டும்.

—பதிப்பாசிரியர்.]

வேலன் மட்டுமே சங்க இலக்கியத்தில் காணப்படும் பூசாரி என்று கருதலாம். காதல் வயப்பட்ட தலைவியிட மிருந்து கெட்ட தேவதைகளை விரட்ட அவன் அமர்த்தப் பட்டான். களவியலில் தலைவனோடு உறவு கொண்ட தலைவி, அத்தலைவனுக்காக ஏங்கித் துயருற்றுப் பசலை எய்தும் பொழுது அவளுடைய அன்னை கவலையுறுகிறாள்; தன் மகளைப் பீடித்துள்ள கெட்ட தேவதையை விரட்ட அவள் வேலனை அழைக்கிறாள். வேலன் அக்கெட்ட தேவதைகளை விரட்ட முருகனை வழிபடுகிறான். முருகனுக்கு ஓர் ஆட்டைப் பலியாகக் கொடுக்கிறான். முருகனது பெயரை உச்சரித்து மந்திரம் சொல்லுகிறான். தரையில் களம் ஒன்றமைத்து அக்களத்தில் ஆட்டின் இரத்தத்தைத் தெளிக்கிறான். வேலனது வெறியாட்டத் தோடு பெரும்பாலும் இச்சடங்கு முடிவடைகிறது. சங்கத் தொகை நூல்களில் காணப்படும் பல பாடல்களில் கூறப் பட்டுள்ளபடி இவ்வெறியாட்டமே மிக முக்கியமான சடங் காகக் காணப்படுகிறது. இத்தொகை நூல்களைக் காட்டிலும் காலத்தால் பிந்தியவையாகிய திருமுருகாற்றுப் படை, கல்லாடம் ஆகியவற்றில் வேலனது வெறியாடலைப் பற்றி இன்னும் சற்று விரிவான வருணனை காணப்படு கிறது. தமிழ் நாட்டில் இந்த வெறியாட்டம் மறைந்து விட்டது. ஆனால் கேரளத்தில், வட மலபாரில் திரை யாட்டம், அல்லது பேயாட்டம் என்ற பெயரிலும், மலபாரில் வேலன் பூசைகளிலும் சிற்சில மாற்றங்களுடன் இந்தப் பண்டைய வழிபாடு இன்றும் நாட்டு வழக்கில்

இருப்பது வியப்பூட்டுவதாக உள்ளது. களம் அமைப்பதிலும், இரத்த பலியிலும், வேலன் அணியும் ஆடைகளிலும், வழிபாட்டு முறையிலுள்ள சில விவரங்களிலும் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. சங்ககாலத் தமிழகத்தில் நிகழ்ந்து வந்த வேலனாட்டத்தின் எச்சமாகக் கேரளத்தில் இன்றும் நடைபெறும் இக்கிராமிய வழிபாடுகள் உள்ளன என்ற முடிவுக்கு ஐயத்துக்கு இடமின்றி வர முடிகின்றது.

திரையாட்டம் என்னும் நாட்டு நடனம் வட மலபாரில் மிகப் பரவலாகக் காணப்படுகிறது. சாதாரணமாசப் பேயாட்டம் என்று இதை அழைக்கிறார்கள். தெற்குக் கர்னாடகத்திலும், இலங்கையிலும் உள்ள இது போன்ற ஆட்டங்களோடு இது தொடர்புடையது. 'கோலம்' என்றும் இதற்கு வேறோர் பெயருண்டு. கெட்ட தெய்வங்களையும் தென்புலத்தாரையும், சிறு தெய்வங்களையும் வழிபடுவதற்காகவே பெரும்பாலும் இவ்வாட்டம் ஆடப்படுகிறது. ஒவ்வொரு ஆட்டமும் ஒரு தெய்வத்தைக் குறிக்கிறது. அத்தெய்வங்கள் கடிவனூர் வீரன், க்ஷேத்திர பாலன் போன்ற புகழ் பெற்ற வீரர்களாகவும் இருக்கலாம்; அல்லது விஷ்ணு மூர்த்தி போன்ற இந்து மதப் பெருங் கடவுளாகவும் இருக்கலாம். இத்தகைய தெய்வங்களில் பகவதி மிகப் பிரபலமானதாகும். இத் தெய்வம் வட கேரளத்தில் மிகப் பெருமளவில் வணங்கப்படுகிறது. பகவதியைக் குறித்து நிகழும் ஆட்டங்களில் நாக வழிபாட்டையும் பார்க்கிறோம். இது பகவதி வழிபாடும் நாக வழிபாடும் இணைந்ததைக் காட்டுகிறது. கண்ணகியை நினைவுறுத்தும் அம்சம் எதுவும் இவ்வாட்டத்தில் இல்லை. 'செம்பரத்தி' என்றொரு ஆட்டம் உண்டு. இது, கணவனோடு உடன்கட்டையேறிய ஒரு பத்தினிப் பெண்ணைக் குறித்து நிகழுகிறது. இவ்வாட்டங்கள் நாயர் மற்றும் தியர் ஆகிய சாதியினரின் பரம்பரை வீடுகளில் நிகழுகின்றனவென்றாலும், அவ் வட்டாரங்களில் வாழ்கின்ற பெருவண்ணான், வேலன், பெருமலையன், பாணன், மயிலன் போன்ற சாதியினரே அவற்றை நிகழ்த்துகிறார்கள். இந்தச் சாதியினர் திராவிட இனக் குழுக்களைச் சேர்ந்தவர்

கள் என்பதில் ஐயமில்லை. நாயர்களும், தீயர்களும் இவ் வாட்டங்களை ஆடக் கூடாது. ஆட்டத்தின் சிறப்பான அம்சம் ஆட்டக்காரன் அணியும் மிகையான ஆடை அலங் கார ஒப்பனைகளே. ஒவ்வொரு தெய்வத்திற்குத் தக்கவாறு ஆட்டக்காரன் ஒப்பனை செய்து கொள்கிறான். இதற்குக் 'கோலம்' என்று பெயர். ஒப்பனை செய்து கொண்ட ஆட்டக்காரனின் முகம் கோரமாகக் காட்சியளிக்கும். முகத்திலும், உடம்பிலும் முரண்பட்ட அழுத்தமான வர்ணங்கள் பூசப்பட்டு அவன் பயங்கரமாகத் தோற்றம் அளிப்பான். மூங்கிலாலும் தென்னை ஓலையாலும் செய்யப் பட்ட சிவப்பு மற்றும் வெள்ளை நிற உடைகளை அணிந் திருப்பான். அவை மிகக் கனமாகவும் பார்ப்பதற்கு மிக வேடிக்கையாகவும் இருக்கும். சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் பலவிதமான நாட்டு நடனங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கோமாளி, தலைவன், அந்தணன் மற்றும் பறையறிவிப்போன் அணியும் ஒப்பனை யைக் 'கோலம்' என்று அவர் அழைத்தார். மலபாரில் அச் சொல்லே இன்றும் வழக்கில் உள்ளது. தெய்வத்தை சாந்தி செய்து பூசிப்பதற்கும், வெறியாடுவதற்கும் பயன் படும் இடத்திற்குக் களம் என்று பெயர். வேலன் களமமைக் கும் இடத்தைப் பற்றித் திருமுருகாற்றுப்படை விவரிக்கிறது. ஆற்றங்கரைகளிலும், காவுகளிலும், கழிமுகங்களிலும் (துருத்தி) மன்றம், பொதியில், கடம்ப மரத்தடி ஆகிய பொதுவிடங்களிலும் அவன் களம் அமைப்பான். வட மல பாரில் இடையர் சாதியினருக்காக நடத்தப்படும் தெய்யாட் டம் நிகழும் இடம் மன்னம் (தமிழில் மன்றம்) என்றழைக் கப்படுகிறது. தீயர்கள் களம் அமைக்கும் இடத்தைக் கழகம் என்றழைக்கிறார்கள். பிற இடங்கள் தரை, காவு, (மண்டிய புதர்) அறை, துருத்தி (கழிமுகம்) என்றழைக்கப்படு கின்றன.

களம் அமைத்து ஆடுகின்ற சில இனக் குழுக்களில் நம் முடைய ஆய்வுக்கு வேலன்மார் அல்லது வேலச்சாரியர்தாம் மிக முக்கியமானவர்கள். வட மலபாரில் இப்படிப்பட்ட

தொரு வெறியாட்டத்திற்கு நான் ஏற்பாடு செய்தேன். அந்த ஆட்டத்திற்கும், பண்டைய இடைக்காலத் தமிழ் இலக்கியங்களில் வருணிக்கப்படும் வேலன் வழிபாட்டுக்கும் இடையே இருந்த ஒற்றுமைகளைக் கண்டு வியந்தேன். காதல் நோயுற்ற தலைவியைப் பீடித்திருக்கும் அணங்கை விரட்ட வேலனைத் தாய் வரவழைப்பது பற்றியும், வேல னின் விநோதமான வெறியாட்டத்தைப் பற்றியும் பல விவரங்கள் அகநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு, குறுந் தொகை போன்ற நூல்களில் பல பாடல்களில் உள்ளன. நாம் குறிப்பிட்ட சிறு தெய்வ வழிபாடுகளிலும், திரையாட் டங்களிலும், நம்மை உடனடியாகக் கவருவது இவற்றில் பயன்படுத்தப்படும் சிவப்பு நிற ஆடைகளும், மலர்களுமே ஆகும். வணங்கப்படும் தெய்வம் எதுவாக இருந்தாலும் இது ஓர் ஆர்வமூட்டும் விஷயமே. மலபார் வேலன் ஒன்றுக் கொன்று முரண்பட்ட நிறங்களான சிவப்பு, வெள்ளை நிற ஆடைகளை அணிந்து கொள்கிறான். முதலில் சிவப்புக் கறையையுடைய வெள்ளாடையை வேலனாட்டக்காரன் உடுத்திக் கொள்ளுகிறான். இவ்வாடைக்குக் 'காணி' என்று பெயர் இவ்வாடையின் மேலே சிவப்பு நிற ஆடையை அவன் அணிகிறான். இதற்குச் 'சிவப்பு' என்பதே பெயர். வேலன் ஒன்றுக்கொன்று நேரெதிரான நிறங்களுள்ள ஆடை களை ஒன்றின் மேல் ஒன்றாக அணிந்து கொண்டான் என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது. கரத்திலே சிவப்பு நிறக் கயிற்றால் ஆன காப்பு நாண் அணிந்திருக்கிறான். இதே கங்கணத்தைத் தெய்யக்காரன் என்றழைக்கப்படும் வட மலபார் வேலனாட்டக்காரன் அணிகிறான். குறுந்தொகை யில் கடவுள் வாழ்த்துப் பாடல் முருகன் அதிமதுர விதை போன்ற சிவப்பு நிற ஆடை அணிந்திருந்ததாகக் கூறுகிறது. பரிபாடல் (19-97) அவன் அணிந்திருந்த ஆடையும் இடுப் பில் தரித்திருந்த கச்சையும் சிவப்பு நிறம் எனக் கூறுகிறது. கலித்தொகை 105 ஆவது பாடலிலும் சிவப்பு ஆடை முருக னுக்குப் பொருத்தமானவை என்று கூறப்பட்டுள்ளது. அடியில் உள்ள வெண்மை நிற ஆடை, பாதங்களுக்கு

அருகில் மட்டுமே வெளியே தெரியும். அதுவரை சிவப்பு ஆடை மூடியிருக்கும். இத்தகைய உடையணிந்த வேலன் வெண்மையான குளம்புகளைக் கொண்ட காளையோடு உவமித்துக் கூறப்படுகிறான். மலபார் வேலனும் சடங்கு களின்போது சிவப்பு நிற ஆடையும் சிவப்பு நிற கச்சையை யுமே அணிந்திருக்கிறான். வெண்ணிற ஆடை சிவப்பு ஆடைக்குக் கீழே தெரிகிறது.

செந்நிற மலர்கள் பயன்படுத்தப் படுவதும் இன்னு மோர் ஆர்வமூட்டும் விவரமாகும். சங்க இலக்கியத்தில் செந்நிறமான வெட்சி மலர்களை (Ixora coccinea) வேலன் அணிந்ததாகக் கூறும் பாடல்கள் பல உள்ளன. அவன் செச்சை மலர்களால் ஆன கண்ணியை அணிந்திருந்த தாகவும் (வரி 208) களத்திலே செந்நிற மலர்களைத் தூவியதாகவும் (வரி 241) திருமுருகாற்றுப்படை தெளி வாகக் கூறுகிறது. செச்சை மலரை வெட்சி என்று உரை யாசிரியர் விளக்குகிறார். செச்சை மலர் வெட்சியின் (Ixora coccinea) பொது இனத்தைச் சேர்ந்ததுதான் என் றாலும் சற்று வித்தியாசமான தாவரத்தைச் சேர்ந்ததாகும். மலபாரில் திரையாட்டம் மற்றும் சில மதச் சடங்குகளின் போது செக்கி என்னும் மலர் பயன்படுகிறது. களத்தில் அம் மலரே தூவப்படுகிறது. அம்மலர் வழிபடுவோருக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது. தாவர இயலின்படி இம் மலர் செக்கி (Ixora rosea) என்று வழங்கப்படும். வெட்சிக்கு (Ixora coccinea) இது நெருங்கிய உறவுடையது. மலபாரில் பயன்படுத்தப்படும் செக்கி மலர் திருமுருகாற்றுப் படையில் குறிப்பிடப்படும் செச்சை மலராகத்தான் இருக்கவேண்டும். இம்மலர் நிறத்திலும் வடிவத்திலும் வெட்சியைப் போலவே இருப்பதால் உரைகாரர் இவை இரண்டும் ஒன்றெனவே கொண்டார் எனத் தோன்றுகிறது. கல்லாடத்திலும் வேலன் வெட்சி மலர் அணிந்ததைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

மலபார் வேலன், முதலில் மார்பிலும் கைகளிலும் சந் தனம் பூசிக்கொள்கிறான். திருமுருகாற்றுப்படையில் வரும்

வேலன் வெண்கடுகும், நெய்யும் கலந்த கலவையை உடலின் மீது பூசிக்கொள்கிறான் (நெய்யோடு ஐயவி அப்பி). வெண்கடுகு, பேயை விரட்டும் சக்தியுடையது என்பது நம்பிக்கை. பின்னர், மலபார் வேலன் தாழ்ந்த குரலில் மந்திரம் ஜெபிக்கிறான். அப்படி ஜெபிக்கும்பொழுது கூப்பிய இரு கரங்களின் கட்டை விரல்களும் அவனுடைய இதயத்தை நோக்கி வளைந்திருக்கும். இம்மாதிரி அபிநயிப்பதை 'ஆத்ம சாட்சி' என்று மலபார் வேலன் அழைக்கிறான். இதைப் போன்ற சமிக்ஞையையே திருமுருகாற்றுப்படையில் வரும் வேலன் மந்திரம் ஜெபிக்கும்பொழுது செய்கிறான். 'குடந்தம்பட்டு' என்ற சொல் திருமுருகாற்றுபடையில் இதைக் குறிக்கிறது. பாடலின் அடிக்குறிப்பில் இந்தச் சமிக்ஞை மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. நான்கு விரல்களும் மூடி இருக்க வேண்டும். அதே சமயம் கட்டை விரல்கள் இரண்டும் நெஞ்சை நோக்கி வளைந்திருக்க வேண்டும். இந்த விவரமும் மலபார் வேலனின் அபிநயமும் ஒத்திருக்கின்றன. அதனால், இவ்விளக்கம் சரியானது என்றே கொள்ளலாம். மலபார் வேலன் களத்தின்மீது வெண்பொரியையும், காப்பரிசியையும் (Puffed rice) தூவுகிறான். திருமுருகாற்றுப்படையில் வெண்பொரி சிதறப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. களமமைப்பதைச் சற்று விளக்குவோம். மலபாரில் களமமைக்க வாழை மட்டைத் துண்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. வாழை மட்டைத் துண்டுகளைத் தரையில் வைத்துச் சதுரமான வடிவம் அமைக்கிறார்கள். இதில் சம அளவுள்ள பன்னிரெண்டு பிரிவுகள் இருக்கும். இப்படி அமைக்கப்படும் வடிவம் 'களம்' என்ற பெயராலேயே அழைக்கப்படுகிறது. இதில்தான், வேலன் தான் வேட்கின்ற தெய்வத்திற்கு வேண்டிய பலிப் பொருள்களைத் தூவுகிறான். அக்காலத்தில் களமமைக்க மூங்கில் பயன்பட்டதென்றும், களத்தில் அறுபத்து நான்கு பிரிவுகள் இருந்தனவென்றும் சங்கப் பாடல்களால் அறிகிறோம். சங்கத் தமிழில் இப்பிரிவுகள் 'பல்பிரப்பு' என்று அழைக்கப்பட்டன. பிற்காலத்து உரையாசிரியர்கள் இதன்

சரியான பொருளை அறியவில்லை. மூங்கிலால் அது ஆன தென்று அவர்கள் அறிந்திருந்தார்கள். சில உரையாசிரியர்கள் அறுபத்து நான்கு பிரிவுகளைக் களத்தின்மேல் வைக்கப்படும் அறுபத்து நான்கு சிறிய கூடைகள் என்று கருதினார்கள். மலபார் வேலன் வாழை மட்டையை வைத்து இன்று களமமைப்பதைப் பார்க்கும்பொழுது சங்க காலக் களம் எவ்வாறு இருந்திருக்கும் என்று நம்மால் எளிதில் ஊகிக்க முடிகிறது. மூங்கிலால் ஆன களம் அமைத்து அதன் எல்லாப் பிரிவுகளிலும் இரத்தம் தெளித்ததைத் திருமுருகாற்றுப்படை விளக்குகிறது. மலபார் வேலன் தனது களத்தைப் பல விதங்களில் அமைக்கிறான். அது சதுரமாகவோ, நீண்ட சதுரமாகவோ, வட்டமாகவோ இருக்கலாம். 'யந்திரம்' என்ற பெயரால் அது அழைக்கப்படுகிறது. கணபதி முதலிய பல்வேறு தெய்வங்களுக்கும் வெவ்வேறு விதமான யந்திரங்கள் அமைக்கப் படுகின்றன. யந்திரம் வரைந்து வழிபடும் இன்றைய பழக்கத்தின் மூலத்தை வேலன் களம் வரையும் பழக்கத்திலிருந்தும் பழைய வழிபாட்டையொட்டிய பூசாரிகளின் வழிபாடுகளிலிருந்தும் ஆராய்ந்து கண்டறியலாம்.

மலபார் வேலன் மந்திரம் ஜெபித்து முடிந்ததும் சேவல் ஒன்றைப் பலியிடுகிறான். சேவலின் கழுத்தைக் கத்தியினால் நறுக்குவதற்குமுன் அதன் காதில் சிறிது நேரம் ஏதோ மந்திர உச்சாடனம் செய்கிறான். நீர் நிறைந்த பாத்திரம் ஒன்றில் இரத்தத்தை வடிக்கிறான். அதற்குப் பின்னர், மிக முக்கியமான சடங்கான 'குரிசி' நடத்தப் படும். இரத்தம் கலந்த நீரை வேலன் கைகளால் கலக்குகிறான். காப்பரிசி, பொரி, செக்கி மலர், மல்லிகைப்பூ ஆகியவற்றையும் இரத்தத்தில் போட்டு, அவை சிவப்பேறும்படி கலக்குகிறான். இந்தக் கலவையைக் குரிசி என்றழைக்கிறார்கள். இப் புனிதக் குரிசியை வேலன் மந்திர உச்சாடனம் செய்துகொண்டே களத்தின்மீது தெளிக்கிறான். குரிசி என்ற மலையாளச் சொல் 'குருதி'

என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபு ஆகும். உயிர்ப் பிராணி களைப் பலியிடுவது தடைசெய்யப்பட்ட பொழுது, 'குருதி' என்னும் இந்தக் கலவை, எலுமிச்சம் பழச் சாற்றையும் மஞ்சளையும் கலந்து ஆக்கப்பட்டது. சங்கப் பாடல்களில் ஆட்டறுத்தலே கூறப்பட்டுள்ளது. ஆடு பலியிடப்பட்டு அதன் இரத்தத்தில் தினைமாவைக் கலந்து அக்கலவை, களத்தின் பிரிவுகளில் தெளிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. திரு முருகாற்றுப்படையில் தினைமாவுக்குப் பதிலாக அரிசி மாவு இரத்தத்தில் கலக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. குறுந் தொகை 263 ஆம் பாடலில் வேலன் பல்வேறு தெய்வங் களைக் குறிப்பிட்டு வாழ்த்துப் பாடல் பாடி வேட்டதை யும், நோய்வாய்ப்பட்ட தலைவியின் நோயைத் தீர்க்கும்படி வெறியாட்டயர்ந்ததையும் கூறுகிறது. இப் பாடல் 'தோற்றம்' என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது. மலபாரில் தெய்யாட்டத்தின் போது, குறிப்பிட்ட தெய்வம் அல்லது தெய்வத்தின் தோற்றத்தையும் அதன் கதையையும் கூறி வேலன் பாடுகிறான். அதற்கும் 'தோற்றம்' என்ற பெயரே வழங்கப்படுகிறது. மலபார் வேலன், சங்க கால வேலனின் எச்சமாக விளங்குகிறான் என்பதற்கு இது இன்னுமொரு உதாரணமாகும்.

அகநானூறு 195 ஆவது பாடலில் வேலன் தலையில் உயரமான தலையணியை அணிந்திருக்கிறான் என்றும் நீண்ட பாகை முதுகுப்புறத்தில் தொங்கிற்று என்றும் சொல்லப்படுகிறது. மலபாரில் பெரும்பாலான தெய்யாட் டங்களில் ஆட்டக்காரன் மிக உயரமான கிரீடம் அல்லது தலையணி அணிந்திருப்பான். மூங்கில் பிரம்பாலும் தென்னோலையாலும் மிக வேலைப்பாடோடு இத் தலையணி பின்னப்பட்டிருக்கும். களத்தைச் சுற்றிச் செவ்வலரி மலர்கள் ஒரே அளவாகத் தொடுக்கப்பட்டுத் தொங்கவிடப்பட்டிருக்கும் என்று திருமுருகாற்றுப்படை விவரிக்கிறது. வட மலபாரில் கள வழிப்பாட்டில் இந்த மலர், மிகச் சாதாரணமாய்ப் பயன்படுத்தப்படுகிறது. மாலைகளிலும் களத்தைச் சுற்றித் தொங்கவிடப்

பட்டிருக்கும் தோரணங்களிலும் அவற்றை இன்றைக்கும் காணலாம். 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்லாடம் என்ற நூல் வேலனாட்டச் சடங்கை விவரிக்கிறது. (25—1—16) உறவினர் கூடியிருக்கும் முற்றத்தில் முருகனது மஞ்ஞைக் கொடி (மயில் கொடி) நடப்பட்டது தரையெங்கும் வெட்சி மலர்கள் பரப்பப்பட்டன. தேக்கிலைகளில் இரத்தம் கலந்த தினைமாவு படைக்கப்பட்டது. நான்கு திசைகளை நோக்கி அவ்விலைகள் வைக்கப்பட்டன. வேலன் ஆட்டுக்குட்டியைப் பலி கொடுக்கிறான். ஈச்ச இலையால் வடிகட்டப்பட்ட கள்ளை அவன் குடிக்கிறான். பேரிகை அடித்து முருகனை அழைக்கிறான். கல்லாடத்தில் காணப்படும் விவரங்களிலேயே மிக முக்கியமானது, வேலனாட்டம் காடன்மலை நாட்டிலே நடந்தது எனப்படும் குறிப்பேயாகும்.

10 ஆவது நூற்றாண்டுக்குப் பிற்பட்ட கல்வெட்டுகளில் கேரளம் இப்பெயராலேயே குறிப்பிடப்படுகிறது, தென்னோலை, கடம்ப மலர்கள், சந்தனம், மஞ்சள் ஆகியவை, வேலனாட்டச் சடங்கின் போது பயன்படுத்தப்பட்டதைத் திருமுருகாற்றுப்படை விவரிக்கிறது. இவற்றில் கடம்ப மலரைத் தவிர, பிற பொருள்கள் எல்லாம் மலபாரில் தெய்யாட்டத்தின்போது, பிற ஆட்டக்காரர்களாலும் வேலனாலும் உபயோகிக்கப்படுகின்றன. இச் சடங்குக்காகப் போடப்படும் பந்தல் பற்றிச் சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. தென்னங் குருத்தால் ஆக்கப்பட்ட தோரணங்களாலும் கடம்பமலர் செவ்வலரி மலர் மாலைகளாலும் பந்தல் அலங்கரிக்கப்பட்டது. மலபாரில் இந்த வழக்கம் இன்றும் வழக்கில் உள்ளது. திருமுருகாற்றுப்படையில் வேலன் இரத்தத்தில் நனைக்கப்பட்ட மலர்களையும், தினைமாவையும் படைத்து இச் சடங்கை முடித்து வைத்தான் என்று கூறப்பட்டுள்ளது. பலவித இசைக் கருவிகளை இசைத்துக் குறிஞ்சிப் பாடலைப் பாடியவாறு சாம்பிராணி தூபம் காட்டுகிறான். மலபார் வேலனும் சடங்கின் போது சாம்

பிராணி தூபம் காட்டுகிறான். மணி அடிக்கிறான். தெய்யாட்டத்தில் செண்டை மேளம், மற்றும் பலவிதமான வாத்தியங்கள் வாசிக்கப்படுகின்றன. அவை எழுப்பும் சத்தத்தில் காது செவிடாகிவிடும் போல் இருக்கிறது. பரிபாடலில் மணி அடித்தலும், கோலெரியில் நறும்புகை காட்டுவதும் விளக்கப்பட்டிருக்கின்றன. தெய்யாட்டம் சடங்குகளில் மனித மண்டையோடு அல்லது யானை ஆகியவை வரையப்பட்ட நீண்ட கொடியேற்றுகிறார்கள். இதைப் போலவே அந் நாளிலும் மண்டை ஓட்டுச் சின்னம் கொண்ட கொடி ஏற்றப்பட்டதாக அறிகிறோம்.

மலபாரில் நடைபெறும் வேலன் வழிபாடு மற்றும் தெய்யாட்டம் சடங்குகளைச் சங்கப் பாடல்களிலும் பிற்காலப் பாடல்களிலும் சொல்லப்பட்டிருக்கும் வேலன் வழிபாட்டுச் சடங்குகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது மரபு வழிப்பட்ட வேலன் வணக்கம் மலபாரில் தொடர்ந்து நீடிப்பதையும், அதே சமயம், தமிழ்நாட்டில் அது வழக்கொழிந்து போனதையும் காண்கிறோம். தமிழகத்தில் அது ஏன் மறைந்தது என்பது விளங்கவில்லை; ஒரு வேளை ஆழ்வார்கள், நாயன்மார்கள் தோற்றிய பக்தி வெள்ளத்தில் தமிழ்நாட்டில் இத்தகைய வேலன் வழிபாடு அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. ஆழ்வார்கள் தமது பாசுரங்களில் சிறு தெய்வ வணக்கத்தையும் வேலன் வணக்கத்தையும் அதற்காக நடத்தப்படும் உயிர் பலியையும் கேலி செய்து பாடியிருக்கிறார்கள். பக்தி இயக்கக் காலத்தில் வேலனையும் முருகனையும் ஒன்றெனக் கொண்ட பொழுது வைதீகச் சடங்குகள் பிரதானமடைந்தன. வேலன் வழிபாட்டை இது பின்னுக்குத் தள்ளி விட்டது. வேலன் வழிபாடும், வைதீகவழி முருக வணக்கமும் ஏக காலத்தில் தமிழகத்தின் பல்வேறு தலங்களில் நடைபெற்றதாகத் திருமுருகாற்றுப்படை காட்டுகிறது. சங்க காலத்தில் முருகனுக்குப் பூசாரியாக இருந்தவன் வேலன். மிகப் பிந்தியக் காலத்தில்தான், வேலன் என்னும் சொல்

முருகனோடு இணைக்கப்பட்டது. திருமுருகாற்றுப் படை காலத்திலே கூட வேலன் என்ற சொல் முருகனின் பூசாரியையே குறித்தது. கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்பக் காலங்களிலேயே ஸ்கந்த கார்த்திகேயன், ஸ்கந்த குமாரன் என்ற பெயர்கள் வழக்கில் இருந்தன. வேலன் வழிபாடு ஸ்கந்த குமாரன் என்ற கருத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஸ்கந்தனது பல பெயர்களோடு இணைத்துக் கூறப்படும் பல்வேறு புனை கதைகளைக் கவனமாக ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஸ்கந்தன் என்ற ஒருங்கிணைந்த பிற்காலக் கடவுட் கருத்திற்கு அடிப்படையாக, ஏறத்தாழ ஒரே தன்மையுடைய பல கடவுட் கருத்துகள் இருந்திருப்பது தெரிய வருகிறது என்று டாக்டர் பானர்ஜி குறிப்பிடுகிறார். 'வேலன்' என்ற சொல் முருகனது பூசாரி கையில் வேலை வைத்திருந்தான் என்பதிலிருந்து பெறப்பட்டதாகத் தோன்றுகிறது. ஸ்கந்தன் கையில் வைத்திருக்கும் ஆயுதங்களில் ஒன்று வேல். யௌதேயர்களின் நாணயங்களில் சேவல் பொறிக்கப்பட்டிருக்கிறது. வேலன் பலியிடும் சேவலிலிருந்து இது பெறப்பட்டதாக இருக்கலாம். மணியும் வெற்றிக் கொடியும் ஸ்கந்தனின் இரண்டு சின்னங்கள். வேலன் வழிபாட்டிலிருந்தே இவையும் பெறப்பட்டிருத்தல் வேண்டும். எனவே, இணைப்புக் கருத்தான ஸ்கந்தனின் முக்கியமான சின்னங்கள் நமது பகுதியைச் சேர்ந்த வேலன் வழிபாட்டிலிருந்து பெறப்பட்டவை எனலாம். ஸ்கந்தனின் பிற சின்னங்கள் எல்லாம் அவனது போர்த் தொழிலுக்கு உரியனவாக உள்ளன. சங்கப் பாடல்கள் அவனைப் போரில் பெரு வெற்றி எய்திய 'செய்யோன்' என்று குறிப்பிடுகின்றன. சங்க காலத்தின் ஆரம்பத்திலேயே முருகன் என்ற ஒரே தெய்வத்திற்குத்தான் கோயில்கள் எழுப்பப்பட்டன. குறவர் குடியைச் சேர்ந்த வள்ளியை அவனுக்கு மனைவியாக்கி இருந்தனர் என்று கூறலாம். (நற்றிணை 244) ஸ்கந்தனது பிறப்பு குமாரனோடு இந்திரன் போர் புரிந்தது. இந்திரனது மகளை ஸ்கந்தன் மணந்தது ஆகியவை பிற்காலக் கதைகள்

இவை ஆரம்பக்காலச் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. முதல் குமார குப்தனது (5 ஆவது நூற்றாண்டு பல்லவன்) நாணயங்களில் காணப்படும் கார்த்திகேயன் பரவணி என்னும் மயிலின் மீது அமர்ந்திருக்கிறான். ஒரு கையால் வேலேந்தியும், இன்னொரு கையால் பலி பீடத்திற்கு நறும்புகை தூவிக் கொண்டும் இருக்கிறான். திருமுருகாற்றுப்படை, பரிபாடல் போன்ற தமிழிலக்கியங்கள் 5 ஆவது நூற்றாண்டுக்குப் பிற்பட்டவை என்று தோன்றுகிறது. ஏனெனில், அவற்றில் 'பிணிமுகம்' எனப்படும் முருகனது யானையோ, மயிலோ குறிப்பிடப்படுகிறது. ஸ்கந்தனது சின்னங்களில் பெரும்பாலானவை வேலன் வழிபாட்டிலிருந்தும், அவன் தேவர்களின் சேனாபதி என்ற கருத்திலிருந்தும் தோன்றியவை என்று கொள்ளலாம். வேலன் வழிபாடு இனக்குழு மக்களின் பூசைகளை (ஷாமனிஸம்) ஒத்தது என்பதோடு முற்காலத்தைச் சேர்ந்ததாக இருப்பதால் இவ்வழிபாட்டின் பல அம்சங்கள் ஸ்கந்த குமாரன், கார்த்திகேயன், விசாகன் ஆகிய இந்துக் கடவுட் கருத்துகளில் இணைக்கப்பட்டன என்று கொள்ள வேண்டியுள்ளது. வேறுவிதமாகக் கொள்வதற்கில்லை.

இவ்வேலன் வழிபாடு ஹாரப்பா, மொகஞ்சோதரா நாகரிகத்திலிருந்து தொடங்கியது என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள். ஹீராஸ் பாதிரியார்தான், முதன் முதலில் கையில் வேலேந்திய ஒரு மனித உருவம் பொறித்த சின்னத்தை 'வேலன்' என்று விளக்க முயன்றார். வேளிர் எனப்படுவோர் துவரையிலிருந்து வந்தார்கள் என்ற கதையும் பிற்கால உரைகளில் காணப்படுகிறது. மு. இராகவையங்கார் வேளிர்களுக்கும், சாளுக்கிய ஹொய்சாலர்களுக்கும் உள்ள தொடர்புகளை ஆராய்ந்திருக்கிறார். ஆந்திரர்களோடும், கடம்பர்களோடும், யாதவ குலத்தினரோடும் அவர்களுக்கு உள்ள தொடர்பையும் அவர் ஆராய்ந்திருக்கிறார். தமிழ் இலக்கிய மரபுப்படி வேளிர்கள் இன்று தென் கன்னடம் என்றழைக்கப்படும் கொங்கணம், துளுநாடு ஆகிய தென் ஆந்திரப் பகுதிகளிலிருந்து வந்தவர்கள்.

மலபார் வேலன்மாரிடம் நான் சேகரித்த விவரங்களின்படி வேளிர்களின் பிறப்பிடம் பற்றிய மேற்குறித்த கருத்தே வலியுறுவதைக் கண்டேன். அவ்விவரம் வருமாறு: தென் கன்னட மாவட்டத்தில் புத்தூர் வட்டத்தில் சுப்பிரமணிய ஸ்தலம் ஒன்று உள்ளது. அப்பிரதேசத்தை சுப்பிரமணிய நாடு என்றழைக்கிறார்கள். மலபார் வேலன்மார் இதையே தங்கள் மூதாதையர் வாழ்ந்த இடம் என்று கூறிக்கொள் கிறார்கள். இத்தெய்வத்தையே தங்கள் குலதெய்வம் என்று அவர்கள் கூறுகிறார்கள். தாங்கள் ஐஞ்ஞூற்றன் என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொள் கிறார்கள். கர்னாடகத்திலுள்ள சோமேஸ்வரத்திலிருந்து மங்களூர் வழியாக மலபாருக்கு வந்ததாக அவர்கள் கூறு கிறார்கள். அவர்கள் முதலில் துளுநாட்டில் தங்கி வாழ்ந் தார்கள். அதன் பின்னர், மலபாரிலுள்ள திருக்களிப்பூர் எனப்படும் துளுநாட்டின் தென்பகுதியாகிய அல்லாட நாட்டுக்குப் பரவினர். அவர்கள் தங்களை வேலன்மார், வேலாச்சாரி மக்கள் என்றழைத்துக் கொள்கிறார்கள். வேலன் என்றும் கருனாடகக்காரன் என்றும் அழைக்கப்படு கிறார்கள். 'கோட்டுக் கோப்பாலன்மார்' எனவும் இவர்கள் அழைக்கப்படுகிறார்கள். தாங்கள் துளுநாட்டைச் சேர்ந் தவர்கள் என்றும் சொல்லுகிறார்கள். ஆள்கார் என்றும் இவர்களுக்குப் பெயர் உண்டு. தென்னம்பாளையினால் செய்த நீண்ட குல்லாயைப் போன்ற தலையணியை அணிவ தனால், இவர்களுக்கு இப்பெயர் தோன்றியிருக்கலாம். பாளையால் ஆன இரு கொம்புகள் அத்தலையணியில் இருக்கும். முற்காலத்தில் தாங்கள் கூடை முடைபவர் களாகவும், மருத்துவர்களாகவும் இருந்ததாக இவர்கள் கூறுகிறார்கள். துளுநாட்டில் உள்ள வேலன்மார் குண்டூர் சாமுண்டி, குறத்தி முதலிய காட்டுத் தெய்வங்களின் ஆவேசம் கொண்டு வெறியாடுகிறார்கள். மகிஷாசுரன் பற்றிய புனைகதையோடு தொடர்புடைய தெய்வம் சாமுண்டி. சங்க இலக்கியத்தில் மைசூர் எருமை நாடு என்றழைக்கப்படுகிறது. குறத்தியைப் பற்றி ஆடும்



சிந்து சமவெளி அகழ்வாராய்ச்சிப் பொருள்களுக்கும்
தென் துருக்கிமேனியாவில் கிடைத்த பொருள்களுக்கும் உள்ள
ஒற்றுமையைக் காட்டும் படங்கள்

நன்றி: ''ஆராய்ச்சி''

ஹாரப்பா முத்திரை
எண்—2430

நன்றி: ''ஆராய்ச்சி''

தெய்யாட்டம் வள்ளியைக் குறித்தது. அவள் முருகனின் மனைவியாகக் கருதப்பட்டவள். மலபார் வேலன்மார் கர்னாடகத்திலிருந்தும், துளுநாட்டிலிருந்தும் மலபாருக்கு வந்தவர்கள் என்ற கருத்து முக்கியமானது.

ஏனெனில், சங்க இலக்கிய மரபுப்படி வேளிர்கள் கொங்கணம் மற்றும் துளு நாடுகளிலிருந்து வந்தவர்கள் என்ற செய்தியும், இவர்களுடைய வாய்மொழிச் செய்தியும் ஒன்றுபடுகின்றன. இடைக் காலத்தில் கொங்கணம் அல்லாட நாடு என்றழைக்கப்பட்டது. சோமேஸ்வரம் ஹொய்ஸாலர்கள் வசித்த பகுதிகளில் ஒன்றாகும். இந்த ஹொய்ஸாலர்கள் சங்க இலக்கியம் குறிப்பிடும் 'புலிக்கடி மாலுடன்' தொடர்புடையவர்கள். இருங்கோவேள் பண்டைய வேளிர் கொடி வழியைச் சேர்ந்தவன். இவர் களது மூதாதையர்களின் தோற்றம் பற்றிய செய்தியும் ஹொய்சாலர்களின் கதையும் ஒத்திருக்கின்றன. சிந்து வெளி எழுத்துகளில் வேளிரின் பெயரைச் சில அறிஞர்கள் கண் டிருக்கிறார்கள். மலபார் வேலன், வேலனது சந்ததியைச் சேர்ந்தவன் எனக் கூறிக்கொள்கிறான் என்பது தெளிவு. வேளிர் அகத்தியரின் தலைமையில் துவரையிலிருந்து (ஹாரப் பாவிலிருந்து) வந்தார்கள் என்று சில அறிஞர்கள் கருது கிறார்கள். வேலன் என்ற பெயரும், வேளிர் என்ற பெயரும் ஒரே மூலத்திலிருந்து தோன்றியவை என மு. இராசவை யங்கார் 'வேளிர் வரலாறு' நூலில் கூறியுள்ள கருத்தை ஏற் கெனவே குறிப்பிட்டோம். துளுநாட்டில் உள்ள வேலர்கள் குன்னூர் சாமுண்டியைக் குறிக்கும் ஆட்டங்கள் ஆடுகிறார் கள். வேளிர் தலைவர்கள் வாழ்ந்த இடங்களில் குன்றூர், மூதூர் ஆகியவை பழமை வாய்ந்தவை. வேளிர் குலத்தின் பூசாரிகளாக வேலர்கள் இருந்திருக்கலாம். தென் கன்னடத் தில் உள்ள வேலன்மாரில் ஒரு பிரிவினர் 'கோட்டுக் கோப்பா லன்மார்' என்றழைக்கப்படுகிறார்கள் என்று முன்னமேயே குறிப்பிட்டிருந்தோம். 'கோடு' என்பது கொம்பு. கோப்பு என்றால், கோத்துப் பின்னப்பட்டது என்று பொருள்படும்.

'கோட்டுக் கோப்பு' என்பது கொம்புடைய தலையணி என்றாகும். இது வேலன்மார் அணிந்திருக்கும் குல்லாவைக் குறிக்கலாம். சிந்து சமவெளியில் காணப்பட்ட முத்திரையின் படம் ஒன்று தரப்பட்டிருக்கிறது. இது தொடர்பான முக்கியமான சில விவரங்களை இப் படம் அளிக்கிறது.

கோட்டுக் கோலப்பாலன் எனப்படும் பூசாரி வேலன் அணியும் தலையணிக்கும், சிந்து சமவெளி முத்திரை எண் 2430-இல் காணப்படும் தலைமைப் பூசாரி அணிந்துள்ள தலையணிக்கும் இடையே வியப்பூட்டும் ஒற்றுமை காணப் படுகிறது ஃபின்லாந்து அறிஞர்கள் கூற்றுப்படி, இந்தக் காட்சி ஒரு தெய்வத்திற்கு நடத்தப்படும் சாந்தி விழாவில் நடைபெறும் பலிக்காட்சியாகும். இம்முத்திரையை ஆராய்ந்த அந்த ஃபின்லாந்து அறிஞர்கள், கொம்புடைய ஆளின் உருவம் வரையப்பட்ட அந்தப் பெரிய கும்பத்தின் முன்னால் மண்டியிட்டு அமர்ந்திருப்பது, அத்தெய்வத்தின் தலைமைப் பூசாரி என்று கருதுகிறார்கள். அப்பூசாரி இரண்டு கொம்பு டைய தலையணியை அணிந்திருக்கிறான். தலையின் உச்சி யில் திரிசூலத்தைத் தரித்திருக்கிறான் தமிழ்மரபுப்படி இது முத்தலைவேல் என்றழைக்கப்படும். இம்முத்தலைவேல் கொண்ட தலையணியிலிருந்து, இப்பூசாரி ஒரு வேலன் தலைமைப் பூசாரி என்றறியலாம். வேலன் இனக்குழுவில் ஒரு உட்பிரிவினரான கோட்டுக்கோப்பாலனைப் போலவே இவனது தலைப்பாகை அமைந்திருக்கிறது. அப்பூசாரிக்குப் பின்னால் ஏதோ ஒரு விலங்கும், முன்னால் கொம்பு டைய ஓர் ஆவின் உருவமும், பெரிய கும்பமும் (ஜாடியும்) செதுக்கப்பட்டுள்ளன. அதோடு மட்டுமின்றிக் கீழே காணப்படும் மூன்று பிரிவுள்ள சதுர வடிவினாலான சின்னமொன்று உள்ளது.



பின்னால் உள்ளது பலிகிடாவாகும். உருவம் வரைந்த கும்பத்தில்தான், பலியிடப்பட்ட ஆட்டின் இரத்தம் உணவு

தானியத்தோடு கலந்து அத்தெய்வத்திற்குப் படைக்கப்படும். கொம்புடைய அத்தெய்வச் சித்திரம் அப்பலியினால் சாந்தி செய்யப்படும் தெய்வத்தைக் குறிக்கும். இத்தெய்வமே அவ்வேலனின் வேட்டலுக்கு இரங்கிக் கும்பத்திலிருந்து வெளியே வந்து அருள் புரியும். சதுரமான சின்னத்தை ஃபின்லாந்து அறிஞர்கள் புனிதச் சடங்கைக் (பிராம்மணச் சடங்கு) குறிப்பது என்று மட்டும் கூறுகிறார்கள். இது அவ்வளவு திருப்தி அளிக்கக்கூடிய விளக்கமாக இல்லை. இச்சதுரம் மூன்று பிரிவுகளைக் கொண்ட களம் என்று கொள்ள வேண்டும். சங்ககாலக் கவிஞர்கள் அறுபத்து நான்கு பிரிவுகளைக் கொண்ட களத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். பண்டைக் கால வழிபாட்டில் களம் மிக முக்கியம் வாய்ந்தது. கும்பத்தின் ஓரத்தில் காணப்படும் அரச இலை வேலனின் வழிபாட்டில் கடைசிச் சடங்காகிய இரத்த பலியில், இரத்தத்தைத் தெளிக்கப் பயன்படும் தொன்னையைக் குறிக்கிறது எனக்கொள்ளலாம். மலபார் வேலன்மார் இன்றுகூடச் செக்கி இலையையும் மலரையும் மதச் சடங்குக்குப் புனிதமானது என்று கருதுகிறார்கள். இதே போலவே அந்நாளில் அரச இலையைக் கருதியிருக்கலாம். களஞ்சியம் என்னும் தமிழ்ச் சொல்லுக்கு நேரான குறியீடு, மொகஞ்சோதரா முத்திரைகளில் இவ்வாறு காணப்படுகிறது.



மௌரியர் காலத்து நாணயங்களில் களஞ்சியத்தைக் குறிக்கும் சித்திரத்தோடு இது ஒத்திருக்கிறது. இதை G.M. பொன்கார்டு லெவின் இந்தியன் ஸ்டடீஸ் பத்திரிகையில் (Vol-no 2-1-60) எழுதியுள்ள கட்டுரையில் தெளிவாக விளக்கியிருக்கிறார். மொகஞ்சோதரா முத்திரையில் களஞ்சியத்தைக் குறிக்கும் குறியீடு மேற்குறிப்பிட்ட களஞ்சியத்தோடு பெரிதும் ஒத்திருக்கிறது. 'களம்' என்ற சொல்லும் களஞ்சியம் என்ற சொல்லும் ஓசையிலும் பொருளிலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. எனவேதான், இரண்

டுக்கும் ஏறத்தாழ ஒரே மாதிரியான குறியீடு பயன்படுத்தப் பட்டுள்ளது. தலைமைப் பூசாரியும், கொம்புடைய அத் தெய்வமும் தலையணியிலிருந்து நீண்டுதொங்கும் பாகையை அணிந்திருக்கிறார்கள். அது மலபார் வேலன்மார் அணியும் நீண்ட சிவப்புத் துணியை ஒத்திருக்கிறது. மலபாரில் தெய் யாட்டத்தின்போது தெய்வத்தின் பங்கேற்று ஆடுபவர்கள் அத்தகைய தலைப்பாகையை அணிகிறார்கள். தலையி லிருந்து பின்புறமாக முதுகுப் புறத்தில் அத் துணி நீண்டு தொங்குகிறது. முத்திரையில் காணப்படும். சப்தமாதர்கள் எனப்படும் ஏழுபெண்களின் தலையில் காணப்படுவது சிகை யலங்காரத்தை (பின்னலை)க் குறிக்கும் ஆனால்தலைமைப் பூசாரியும், வழிபடப்படும் கொம்புடைய தெய்வமும்அணிந் திருப்பது தலைப்பாகையாகும். பின்னல் என்று கூறுவதற் கில்லை. அவ்வேழு பெண்டிரும் வேளிர் மக்களின் ஏழு பிரி வினரைக் குறிப்பார். ஏனெனில், வேளிர் குலம் தாய்வழிச் சமுதாய அமைப்பைக் கொண்டதாகும். வாதாபியை ஆண்ட சாளுக்கிய மன்னர்கள் சப்த மாதர்களை வணங் கினர். இவர்கள் வேளிர் குலத்தைச் சேர்ந்தவர்கள். மஹா சேனன் எனப்படும் கார்த்திகேயன், சப்த மாதர்களின் அடி களில் அமர்ந்து வணங்குவதாகக் காட்டும் சிற்பங்கள் உள்ளன. வேளிர்கள் பற்றிய ஆரம்பக்காலக் கல்வெட்டு களில் அவர்கள் ஸ்வாமி மஹாசேனரையும், சப்த மாதர் களையும் வணங்கியதாகக் குறிப்பிடப்படுகிறார்கள். இவ் வழிபாட்டை அகத்தியர் ஓமத்தீ வளர்த்துச் செய்த வைதீக வழிபாடு என்று கூறுவது சரியாகாது. ஏனெனில், புராதன காலத்தில் இரத்தபலி கொடுத்து வழிபடுதலே வழக்கில் இருந்திருக்க வேண்டும். தண்ணீராலும், ஓமத்தீ வளர்த்தும் வழிபடும் வழக்கம் பண்பட்டது. பிற்காலத்தைச் சேர்ந்தது. தமிழ் மரபுப்படி வேளிர்குலம் வழிபாட்டுக்குப் பயன்படும் கும்பத்திலிருந்து (குடத்திலிருந்து) தோன்றியதாகக் கூறப் படுகிறது.

சிந்துசமவெளி நாகரிகக் காலத்திலிருந்து பௌத்த மத, இந்துமத மரபுகளின் வழியாக இன்றுவரை மதச்சடங்கு

களில் அரசமரம் பெரும் பங்கு வகிக்கிறது. சிந்து நாகரிகக் காலத்திலிருந்து அரசமரம் அரசனுக்கும் மதச் சடங்குகளுக் கும் உரிய சின்னமாக வழங்கி வந்திருக்கிறது. பாண்டியர் களின் ஆரம்பக் கால நாணயங்களில் அரசனுக்குரிய சின்ன மாக அரசமரம் காணப்படுகிறது. சதுரவடிவத்திலும் நீண்ட சதுர வடிவத்திலும் காணப்படும் இந்தச்செப்பு நாணயங்கள் அமைப்பில் சாதவாகனர்களின் நாணயத்தை ஒத்திருக்கின் றன. இவற்றை கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடையேயுள்ள காலத்தைச் சேர்ந்தவை எனக் கொள்ளலாம். இந்த நாணயங்களில் வேலியினுள் போதிவிருட்சம் காணப்படுகிறது. இதுபௌத்த மதச் சின்னமாகக் கொள்ளப்பட்டது. ஆனால், அரசமரத்தை அரசனுக்குரிய சின்னமாகக் கொள்ளுவதே சரியாகும். அரசன் என்ற சொல் மன்னனைக் குறிப்பதாகும். இது அரையன் என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். இச்சொல் வேளிர் குல மன்னர்களது பரம்பரைப் பெயராகக் குறிப் பிடப்படுகிறது. இதன் வேர்ச் சொல் 'அரை' என்பதாகும். இது தமிழில் அரச மரத்தையே குறிக்கிறது. அரசன் என்ற சொல்லே அவன் அரசமரத்தைச் சின்னமாகக் கொண்ட திலிருந்து தோன்றியதாகும். இருங்கோவேளின் முன்னோ னாகிய மிகப் பண்டைய வேளிர் தலைவன் 'அரையம்' என்ற நகரையே தனது தலைநகராகக் கொண்டிருந்தான். பேரரையம், சிற்றரையம் என இரு பகுதிகளாக அது இருந்ததெனக் கருதப்பட்டது. பெரும் செல்வவளம் படைத் திருந்த பண்டை நகரமாகிய அரையம், கழாத் தலையார் என்ற புலவரின் சாபத்தினால் அழிந்துபட்டது. (புறம் 202) அரையம் என்ற சொல்லும் 'அரை' என்ற அரச மரத்தி லிருந்து பிறந்ததாகும். பண்டைய வேளிருக்கு அரசமரம் எவ்வளவு முக்கியம்வாய்ந்தது என்பதை இது காட்டுகிறது. இரு பகுதிகளாக அரையம் பிரிக்கப்பட்டிருந்த செய்தி மிக முக்கியமானது, ஏனெனில் மொகஞ்சோதரா, ஹாரப்பா, காளிபங்கன் ஆகிய இடங்களில் நகர அமைப்பு இரு பிரிவு களாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதனோடு ஒப்பிட்டுப்

பார்க்க வேண்டியதாகும். அரண்மனை அரசவை போன்ற கட்டடங்களையுடைய ஒரு பகுதியையும், பெரும்பான்மை மக்களின் வாழிடங்களைக் கொண்ட பிறிதொரு பகுதியையும் கொண்டதாக இந்த முற்கால இந்திய நகரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அரசமரம், அரசர்கள் மற்றும் தலைமைப் பூசாரிகளின் சின்னமாக இருந்திருக்கலாம். சிந்து நாகரிகத்தின் இக்குறியீட்டிலிருந்துதான், பௌத்தமதத்தின் அரசமர வணக்கம் தோன்றியிருக்க வேண்டும்.

கடம்பர்கள், யாதவர்கள், சாளுக்கியர்கள் மற்றும் சில பரம்பரையினர் வேளிர் குலத்திலிருந்து தோன்றியவர்கள் என்று மு. இராகவையங்கார் கருதினார். நாம் குறிப்பிட்டுள்ள முத்திரையில் காணப்படும் காட்சி முருகனை வேளிர் குலத் தலைமைப் பூசாரி வழிபடுவதைச் சித்திரிப்பதாகக் கொள்ளலாம். கடம்பர் போன்றவர்களால் இம் முருகன் மஹாசேனன் என்ற பெயரால் வணங்கப்பட்டான். முருகன், சேய், அருமீன் கடத்தாளன் போன்ற பெயர்கள் அடிக்கடி காணப்படுவதை ஃபின்னிஷ் மற்றும் சோவியத் அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். தமிழில் முருகன் என்பது எதிரிகளை அழிப்பவன் எனப் பொருள்படும். இளமை, அழகு போன்றவற்றோடு இப் பெயரைத் தொடர்புபடுத்துவது பிற்கால வழக்காகும். கும்பத்தில் வரையப்பட்டிருக்கும் தெய்வம் முருகனாகவே இருத்தல் வேண்டும். இத் தெய்வம் வேலன் வழங்கும் பலியை ஏற்றுக் கொள்ளுகிறது. வேலன் முருகனைத் தன்னுள்ளே ஆவியேற்கும் பொழுது வேலன் முருகனாகவே மாறிவிடுகிறான். எனவே முருகன், வேலன் ஆகிய இரு பெயர்களும் ஒரே பெயரையுடையனவாக மாறிவிட்டன. அதனால்தான், சிந்து முத்திரையில் வழிபடும்

பூசாரியும், கும்பத்தில் வரையப்பட்ட தெய்வமும் உருவத்தில் மிக ஒற்றுமையுடையவர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளார்கள். முருக வழிபாட்டைச் சிந்து சமவெளி நாகரிகத்தோடு தொடர்புபடுத்திப் பார்ப்பது பொருத்தமற்றது எனக் கூறுவதற்கில்லை. மலபாரில் தெய்யாட்டம் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த பூசாரிகள் நடத்தும் பூசைகளில் பல அம்சங்கள், சங்கப் பாடல்களில் காணப்படும் வழிபாட்டு முறைகளோடு தொடர்புபடுத்திப் பார்க்கும் தன்மையுடையவை என்பதில் ஐயமில்லை.

தமிழாக்கம் : **வெ கிருஷ்ணமூர்த்தி**

2. கண்ணகியும் பகவதி வழிபாடும்

பி. எல். சாமி

[பகவதி வழிபாடு கேரளா முழுவதும் பரவியுள்ளது. தாய்வழி உரிமைச் சமுதாயத்தில் பெண் தெய்வ வழிபாடு முக்கியமானதாயிருக்கும் என்பது எதிர்பார்க்கக்கூடும். பகவதி வழிபாட்டை நேரில் பார்த்துப் பல இடங்களில் இவ்வழிபாட்டில் காணப்படும் வேறுபாடுகளை உற்று நோக்கி, வரலாற்று வழியாக எத்தகைய மூல வழிபாடுகள் இதில் இணைந்துள்ளன என்பதைக் கண்டுபிடித்து, அதில் வடமலபாரில் கண்ணகி வழிபாட்டில் இவ்வழிபாடு ஒரு கூறாக இருப்பதை ஆய்வாளர் எடுத்துக் காட்டுகிறார்.

பண்டைக்கால வரலாற்றில் கேரளப் பண்பாட்டில் இணைந்த ஜைன, பௌத்த பெண் சிறுதெய்வங்களான யக்ஷி, தாரை முதலியவையும், தமிழ் நாட்டுப் பெண் தெய்வங்களும், மூலத் தாய்த்தெய்வத்தோடு ஒன்றாக்கப்பட்டு விட்டதையும், வடமலபாரில் இவற்றோடு கண்ணகி வழிபாடும் இணைந்துள்ளதையும் ஆசிரியர் சான்றுகளோடு நிறுவுகிறார். விஷஹாரி பகவதி வழிபாட்டில் தமிழ்நாட்டுப் பாடல் ஒன்று பாடப்படுவதைப் பதிவு செய்து ஆசிரியர் இந்தப் பகவதியின் இயல்புகளில், கண்ணகியின் இயல்பு இணைந்துள்ளதைக் காட்டுகிறார். கண்ணகி பற்றிய நாட்டுப் பாடலைத் தமிழ் தெரியாத மலையாளிகள் பாடுவதும், அவர்கள் காவிரிப்பூப்பட்டினத்திலிருந்து வந்ததாகக் கூறிக் கொள்ளுவதும், கண்ணகிக் கதை நாட்டுப் பாடல் மரபில் எவ்வாறு இடம் பெற்றது என்பதும் ஆராயப்படல் வேண்டும். இந்த ஆராய்ச்சியைத் தொடங்குகிற முறையில் கண்ணகி வரலாறு பற்றிய இந்நாட்டுப் பாடலும், வழிபாட்டு முறையும் இருக்கின்றன.

இக்கட்டுரையில் ஆசிரியர், மானிடவியல், சமுதாய வியல், நாட்டுப் பண்பாட்டியல் முதலிய துறைகளின் செய்திகளையும் வரலாற்று ரீதியாக பகவதி வழி பாட்டின் கூறுகளை ஆராய்கிறார். ஆய்வுமுறை பல துறை இணைப்பு. (Interdisciplinary integrated method) வரலாற்று வழிப்பட்ட வளர்ச்சியைக் காணும் முறையிலும் உள்ளது. (Historical development)

—பதிப்பாசிரியர்.]

கேரளத்தில் பகவதியை வழிபடும் வழக்கம் மிகவும் பரவலாகக் காணப்படுகின்றது. கிராம மக்களிடையே பகவதி மிகச் சக்தி வாய்ந்த தெய்வமாகக் கருதப்படு கிறாள். வடமலபாரில் பகவதி கோவில் இல்லாத கிராமமே இல்லையென்று கூறலாம். 'மலையாள பகவதி' என்ற வழக்குத் தமிழகத்தில் வழங்குகின்றதையும் காணலாம். இந்தப் பகவதி வழிபாடு கண்ணகியை வழிபட்டதிலிருந்து தோன்றியது என்ற கருத்துத் தமிழ்நாட்டிலும் கேரளத் திலும் சில அறிஞர்களிடையே உள்ளது. ஆனால், இக் கருத்துக்குச் சான்றான கதைகள், நம்பிக்கைகள், நேரிடை யாக மலையாள கிராம மக்களின் பகவதி வழிபாட்டில் காணோம். கண்ணகியின் கதை தனியாக மலையாள நாட்டுப் பாடல்களில் வழங்குகின்றது. ஆனாலும், பகவதி வழிபாட்டில் கண்ணகி வழிபாடு இரண்டறக் கலந்துள்ளது என்பதற்குச் சில இடங்களில் மறைமுகமான, உறுதியான சான்றுகள் இருக்கின்றன. பகவதியின் வழிபாட்டில் தாய் வழிபாடு (Mother worship) கொற்றவை, காளி வழிபாடு, சக்தி வழிபாடு, நாக வழிபாடு, மாரியம்மன் வழிபாடு, சைனர்களின் பத்மாவதி தேவதை வழிபாடு, புத்தர்களின் தாராதேவி வழிபாடு ஆகிய வழிபாடுகளின் கலப்பையும் காண்கிறோம். சிலப்பதிகாரத்திலேயே கண்ணகி காளியாகக் கருதப்பட்டதைக் காண்கிறோம். பாலைத்தெய்வமான கொற்றவையும் காளியும் இணைக்கப்பட்டதைச் சங்க காலத்திற்குப் பின்னரும் காண்கிறோம். நாடு செழிப்பாவ

தற்குக் கண்ணகியைத் தமிழ்நாட்டு மன்னர்களும் இலங்கை மன்னன் கயபாகுவும் வழிபட்டதையும் உரைபெறு கட்டுரை கூறுகின்றது வெப்பு நோயும் குருவும் போகக் கண்ணகியை வழிபட்டதும் கூறப்பட்டுள்ளது. இவற்றில் கண்ணகியைச் சக்தி தேவதையென்று கருதிய எண்ணமும் மாரியம்மன் போன்று அம்மை நோயைத் தடுக்கக் கூடியவள். தரக் கூடியவள் என்ற கருத்தும் சிலப்பதிகாரக் காலத்திலேயே இருந்தது என்பது தெரிகின்றது. கண்ணகி வழிபாட்டி லிருந்து பகவதி வழிபாடு தோன்றியபோது அதனுடன் சேர்ந்த சக்தி வழிபாடு (செழிப்புத் தெய்வம்), காளி வழிபாடு ஆகியனவும் பகவதி வழிபாட்டில் சேர்ந்தன. ஆனால் நாக வழிபாடு, பத்மாவதி தேவதை வழிபாடு, தாரா தேவி வழிபாடுகள் பிற்காலத்தில் கண்ணகி வழி பாட்டுடனோ, பகவதி வழிபாட்டுடனோ கலந்திருக்கலாம். அவ்விதமாகக் கலந்ததற்குத் தமிழ்நாட்டு இலக்கியங் களிலும் சிற்பக்கலையிலும் சான்றுகள் தென்படவில்லை. கேரளத்தில் இந்த மாற்றம் சிலப்பதிகாரக் காலத்துக்குப் பின் தோன்றி இருக்கலாம்.

வடமலையாள நாட்டில் பகவதி வழிபாட்டைக் கிராமங்களில் உள்ள கோயில் வழிபாடுகளை ஆராய்ந்ததி லிருந்து தெரிந்து கொண்டேன். மற்றும் கிராமங்களில் பகவதியின் கோலங்கொண்டு ஆடும் தெய்வ ஆட்டங்களை (folk dances) ஆராய்ந்து பார்த்ததிலிருந்தும் பகவதி வழி பாட்டைப் புரிந்து கொண்டேன். இந்தக் கட்டுரையில் முதலில் இரு பகவதிக் கோயில்களில் பகவதி வழிபாட்டு முறைகள் விளக்கப்பட்டு முடிவுகள் கூறப்படும். வட மலையாள நாட்டில் முக்கியமானதொரு பகவதிக் கோயில் கொயிலாண்டி என்ற ஊரில் உள்ள விஷாரி காவு கோயி லாகும். கொயிலாண்டி பந்தலாயினிக் கொல்லம் என்றும் அழைக்கப்படும். இந்த ஊர் கள்ளிக்கோட்டையிலிருந்து முப்பது மைல் தொலைவில் வடக்காக உள்ளது. இந்த விஷாரி காவு கோயில் தோன்றியதைப் பற்றி ஒரு கதை வழங்குகின்றது. தெற்கேயிருக்கின்ற கொல்லத்திலிருந்து

(Quilon) திருவனந்தபுர அரசனின் கொடுமை தாளாமல் சில நாயர் பிரபுக்கள் கப்பலில் ஏறி வடக்கு நோக்கி வந்தனர். அப்போது, ஓரிடத்தில் கரையில் புலியும் பசுவும் ஒன்று சேர்ந்து தண்ணீர் குடிப்பதைக் கண்டனர். அந்த அமைதியான இடத்தில் தாங்கள் கொண்டுவந்த குலதெய்வமான பகவதியை வைத்து வழிபட்டனர். அந்த இடத்திற்குக் கொல்லம் என்று பெயரிட்டனர். கேரளத்திலே பகவதிக்குத் தலைமைப் பீடமாகக் கருதப்படும் கோயில் கொடுங்களூரில் உள்ளது. கண்ணகி மதுரையிலிருந்து சென்றடைந்த செங்குன்று, கொடுங்களூர் அருகில் உள்ளதாக அடியார்க்கு நல்லார் கூறினார். அவர் காலத்தில் (11-ஆம் நூற்றாண்டு) கொடுங்களூர் கோயில் இருந்திருக்கலாம். கொடுங்களூரில் உள்ள கிராம மக்களிடையே பகவதியுடன் கண்ணகியைத் தொடர்புபடுத்திக் கூறும் கதைகளோ நம்பிக்கையோ சிறிதும் காணப்படவில்லை. இக்கோயிலைப் பற்றி ஆராய்ந்த இந்துச்சூடன் என்ற ஆசிரியர் அடிகள் என்ற பூசாரிகள் இக்கோயிலில் தொழுவதைக் குறிப்பிட்டு அவர்களை இளங்கோவடிகளின் வழி வந்தவர்கள் என்று கூறுகின்றார். (The secret chamber V. T. Induchudan published by Cochin Devosom board) ஆனால். இந்த ஊகம் வெறும் பெயரொற்றுமை காரணமாகக் கூறப்பட்டுள்ளதே ஒழிய உறுதியான ஆதாரத்தில் எழவில்லை. இந்த அடிகள் என்ற சாதிப் பூசாரிகள், சாக்தேயப் பிராமணர்கள் என்று கருதப்படுவதைக் கவனிக்க வேண்டும். இவர்களிடையும் கண்ணகியின் கதையைத் தொடர்புபடுத்தும் நம்பிக்கை காணப்படவில்லை. அடிகள் என்ற பெயர்கள் சைனர்களும், சைவர்களும், பிறரும் துறவிகளுக்கும் ஞானிகளுக்கும் வழங்கிய பெயர்கள் என்பதைத் தேவாரத்திலும் தமிழிலக்கியத்திலும் காணலாம். கேரளத்திலும் சில கோயில் பூசாரிகளுக்குத் தனித்தனிப் பெயர்கள் வழங்குவதைக் காணலாம் விஷாரி காவு கோயில் பகவதிக்கு இரத்தப் பலிச்சோறு படைக்கும் பூசாரிக்கு 'மூசாது' என்ற பெயர் வழங்கப்படு

கின்றது. இவன் கலப்பட நாயர் சாதியைச் சேர்ந்தவன், கண்ணனூருக்கு அருகிலுள்ள பார்சினிக் கடலில் உள்ள முத்தப்பன் தெய்வத்திற்கு (வேட்டைத் தெய்வம்) நடக்கும் வழிபாட்டிற்குப் பொறுப்பேற்று நடத்தும் தலைவனை 'மடையன்' என்றழைக்கின்றனர். இந்த மடையன் என்ற பட்டப் பெயரோடு 'இராமன் மடையன்' என்ற பொறுப்பாளர் இன்றும் இருக்கின்றார். சிலப்பதிகாரத்தில் மடையன் என்ற பெயர் முருகனுக்கு குன்றக் குரவையில் கூறப்படுவதைக் காணலாம். ஆனால், பார்சினிக் கடலில் வழங்கும் பெயருடன் சிலப்பதிகாரத்தில் வழங்கும் மடையன் என்ற பெயரைத் தொடர்புபடுத்த முடியாது. கொடுங்களூர் பகவதி வழிபாட்டில் கண்ணகியின் கதை பெரும்பாலும் மறைந்துபோய் கிடக்கின்றது என்றே கருத வேண்டும். ஆனால், விஷாரிகாவு பகவதிக் கோயில் வழிபாட்டில் கண்ணகியின் கதை இன்றும் மறையாதிருப்பது மிகவும் வியப்பை அளிக்கின்றது. சில கேரள அறிஞர்கள் (காளி ஆராதனை — பத்மநாபமேனன் — மலையாளம்) கண்ணகியின் கதை கொடுங்களூருக்கு வடக்கே வழங்க வில்லை என்றும், அதனால் சேரநாடு வடக்கில் கொடுங் களூர் எல்லை வரைதான் இருந்தது என்றும் கருதினர். ஆனால், வடமலையாளத்தில் கண்ணகியின் கதையோடு தொடர்புபடுத்திய நம்பிக்கைகளும் கதைகளும் காணப் படுவதால் இந்தக் கருத்துத் தவறானது என்பது தெளி வாகும். விஷாரிகாவில் உள்ள பகவதியை இளைய பகவதி என்று கருதுகின்றனர். மூத்த பகவதி கொடுங்களூரில் உள்ளதாக ஐதீகம். சில கிராமங்களில் ஒரே காவில் மூத்த பகவதிக்கும் இளைய பகவதிக்கும் கோயில்கள் இருக்கின் றன. இந்தப் பகவதிகளில் இளைய பகவதி கூடுதலான சக்தி வாய்ந்த தெய்வம் என்று கருதப்படுகின்றது. விஷாரி காவில் உள்ள இளைய பகவதி வடக்கு நோக்கியது. வடக்கு நோக்கிய பகவதியும், காளியும் மிகவும் சக்தி வாய்ந்த தெய்வங்கள் எனக் கருதப்படுகின்றன. பொதுவாகக் காளி, கிழக்கு நோக்கியிருப்பாள் என்று கூறுவர். இக்கோயிலில் பெண்கள் தெற்கு வாயில் வழியாகவும் ஆண்கள் மேற்கு

வாயில் வழியாகவும் போகின்றனர். இக் கோயிலில் உள்ள பகவதி உருவம் காளியின் உருவத்தை ஒத்து உள்ளது. இங்கு நடக்கும் பரணி உற்சவம் மிக முக்கியமானது. இதைக் காளியாட்டம் என்றழைக்கின்றனர். இந்தக் கோயிலுக்கு முன்னால் ஏழிலைப் பாலை மரம் (Alstonia scholaris) உள்ளது. இந்த மரம் பகவதி வழிபாட்டில் முக்கியமானது என்று கருதப்படுகின்றது. கேரளத்தில் காளி பூஜைக்கான பந்தல்கால்கள், தட்டுமுட்டுகள், மரக் கால்கள் எல்லாம் பாலை மரத்தில் செய்யப்பட வேண்டும் என்று கருதுகின்றனர். பாலை மரம் காளியின் ஸ்தல விருக்ஷம் என்று கருதலாம். கடும்பாலை கூறுதலைக் காளி வழிபாட்டிற்கு ஓர் அங்கமாக இலக்கண விளக்கம் கூறியுள்ளது. கேரளத்தில் வழங்கும் நாவேறு பாட்டுகளில் 'முற்றத்தில் உள்ள தெய்வப்பாலை வெட்டி' என்றவரி காணப்படுகின்றது. இந்த ஏழிலைப்பாலை மரத்தைத் தெய்வப்பாலையென்றும், வல்லியபாலை என்றும் கூறுவர். விஷாரிகாவில் திருவிழா நாட்களில் பாலை மரத்திலிருந்து தான் ஊர்வலம் போகும். இந்த ஊர்வலத்தில் பகவதியின் தெய்வ உருவமோ, படிமமோ எடுத்துச் செல்லப் படுவதில்லை. யானையின் மேல் ஒரு கொடுவாளே எடுத்துச் செல்லப்படுகின்றது. கொடுவாளைச் சுற்றிச் செக்கிப் பூமாலை[1] தொங்குகின்றது. கொடுவாளே பகவதியின் சின்னமாக வழிபடப்படுகின்றது. கொடுவாள் ஊர்வலம் வரும்போது அதற்கு முன் கோமரம் செல்வான். அவன் கையிலும் ஒரு வாள் உண்டு. ஆனால், அது கொடுவாள் போல் வளைந்திருக்காது. 'ப' என்ற எழுத்து வடிவில் வளைந்து இருக்கும். தொழப்படும் கொடுவாளை ஏற்றிச் செல்லும் யானை பெண் யானையாகவே இருக்க வேண்டும். இந்தப் பெண் யானை அந்த ஆண்டே இறந்துவிடும் என்ற நம்பிக்கை உண்டு. பகவதியின் வாளிற்கு உள்ள சக்தி அத்தகையது என்பர். இந்த நம்பிக்கையால் இந்துக்கள் எவரும் யானையைக் கொடுப்பதில்லை. இந்த ஊர்வலத்திற்கு முகம்மதியர்களே யானையைக் கொடுக்கின்

றனர். இந்த கொடுவாளே எப்படிப் பகவதியைக் குறிக்கின்றது என்பதைப் பற்றி பின்னர் விளக்குவேன். மலபாரில் பகவதி கோயில்களில் பல, சில குறிப்பிட்ட சாதியினரின் ஆதிக்கத்தில் அவர்களே தொழுவதற்கு ஏற்பட்டதாகக் காணப்படுகின்றன. ஆனால், விஷாரிகாவில் எல்லா சாதியினரும் பங்கு கொள்வது சிறப்பாகக் கருதப்படுகின்றது. ஒவ்வொரு சாதியாருக்கும் ஒரு கோயில்பணி கொடுக்கப்படுகின்றது. இந்த வழக்கம் தமிழகத்துப் பெருங்கோயில்களில் இடைக் காலத்தில் காணப்பட்டது போல உள்ளது. பகவதியின் கொடுவாள் ஆண்டுதோறும் புதியதாகக் கொல்லனால் செய்யப்படுகின்றது. பகவதியின் உற்சவத்திற்குரிய மரப் பொருள்கள் தச்சர்களால் செய்யப்படுகின்றன. நாயர், ஈழவர், முக்குவர், வேட்டுவர், வண்ணார், தட்டார் முதலிய சாதியாரும் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். வேட்டுவருக்கு உப்பு கொடுக்கப்படுகின்றது. கொடுங்களூர் முதலிய முக்கிய கோயில்களில் 'காவு தீண்டல்' என்ற சடங்கு சிலஆண்டுகளுக்கு முன்வரையில்கூட நடந்து வந்தது. இந்தக் கோயில்களில் முக்குவர், ஈழவர், வேட்டுவர், வண்ணார், தட்டார் போன்ற தாழ்ந்த இனத்தவர் போக முடியாது. ஆதலின், அவர்களுக்கு முதலில் கோயிலுக்குச் சென்று தொழ அனுமதி கொடுத்தனர். இதைக் காவு தீண்டல் என்றழைப்பர். காவு தீண்டினதும் தீட்டுப் போக நம்பூதிரியோ, கொடுங்களூரில் 'அடிகளோ' சுத்தம் செய்யும் பூசை செய்வார். கொடுங்களூரில் தட்டான் காவு தீண்டுவதாகவும், முக்குவர் (மீனவர்) பரணி உற்சவத் தொடக்கத்திலும் அடக்கத்திலும் கோயிலில் வரலாம் என்ற வழக்கம் இடைக்காலம்வரை இருந்து வந்ததாகக் கூறுவர். திருவனந்தபுரத்தில் பத்மநாப க்ஷேத்திரத்தில் உற்சவத் தொடக்கம் மலையன் கொண்டுவந்த தீயைக் கொண்டு தொடங்கியது. திருநாவாய் க்ஷேத்திரத்தில் செருமர் கொண்டுவந்த செக்கிமாலையைத் தெய்வத்திற்கு அணிவித்தே உற்சவம் தொடங்குகின்றது. இக் கோயில்களெல்லாம் இன்று வேதவழிப்பட்ட நம்பூதிரி பிராமணர்

களின் ஆதிக்கத்தில் இருந்தாலும், தாழ்ந்த சாதியினர் செல்லக் கூடாததாக இடைக்காலம் வரையில் இருந்தாலும், முற்காலத்தில் தாழ்ந்த சாதியினருக்கு உரியதாகவும் அவர்கள் செல்லக்கூடியதாகவும் இருந்தன என்பதையே சமீப காலம் வரை நடந்த காவு தீண்டல் சடங்கு காட்டுகின்றது. ஆனால், விஷாரிகாவு கோயிலில் காவு தீண்டல் நடந்ததாக வரலாறு இல்லை. விஷாரி காவு உற்சவத்திற்கு வரும் வேட்டுவர்க்கு உப்பு கொடுக்கப்படுகின்றது. இதன் பொருள் அங்குள்ளவர்க்குத் தெரியவில்லை. பகவதிக்குக் குருதிச்சோறு பலியாகக் கொடுக்கப்படும் சடங்கு கடைசியாக நடைபெறும். ஆடுகளையே பலியிடுகின்றனர். இதற்கு 'அறுந்தாடு' என்று பெயர். அறுந்த ஆடு என்பதே அறுந்தாடு ஆயிற்று. ஆடுகளை வெட்டி நவதானியங்களோடு கலந்து 'குருசி' யாக்கிப் பலியிடுவது வழக்கம். இப்பொழுது ஆட்டு இரத்தம் கலப்பதற்கு ஈடாக மஞ்சள் முதலியன போட்டு அரிசிச் சோற்றை இரத்தச் சிவப்பாக்கிக் குரிசிச் சோறு[2] பலியாகக் கொடுக்கப்படுகின்றது. சில ஆண்டுகளுக்கு முன் ஒவ்வொரு ஆடு வெட்டும் போதும் ஒரு வெடி விடப்படும். ஒரு முதியவர் 77 வெடிகளைத் தன்னுடைய சிறுவயதில் கேட்டதாகவும் 77 ஆடுகளை வெட்டினார் என்றும் கூறினார். இந்தக் குரிசிச் சோற்றுப் பலியைத் தருபவர் மூசாது என்ற ஒரு கிளைச் சாதியினர் ஆவர். நாயர் வகுப்பைச் சேர்ந்தவர். இவர்கள் மூன்று பேர் குறிப்பிட்ட காலம் விரதம் இருந்து புலால், லாகிரிப் பொருள்களைப் பயன்படுத்தாமல், பெண்களுடன் உடலுறவு கொள்ளாமல் இருக்க வேண்டும். இவர்களே பலி கொடுக்கத் தகுதி உள்ளவர்கள். இரவு பதினொன்று மணிக்குமேல் பலியைத் தருவர். பலியைக் கோவிலைச் சுற்றி வீசுவர். விஷாரிகாவில் உள்ள இளைய பகவதி அந்தப் பலியை ஏற்றுக் களியாட்டம் ஆடுவாள். அந்த நடு இரவில் கொடுங்கலூரில் உள்ள மூத்த பகவதி, காவில் உள்ள கிணற்றின் வழியாக வந்து இளைய பகவதியுடன் சேர்ந்து ஆடுவதாக நம்பிக்கை உள்ளது. 2 கூளிகளும்

பூதங்களும் பலியை உண்டு காவில் உலவும். ஆதலால், பதினொன்று மணிக்குமேல் கடைகண்ணிகளைப் பிரித்து எடுத்துவிட்டு எல்லாரும் காவைச்சுற்றி வெளியேறி விடுவார்கள் மூசாது மட்டுமே காவில் இருப்பார். மற்றவர்கள் இருந்தால் பூதங்கள் அடித்துக் கொன்று விடும் என்று நம்புகின்றனர். சுருக்கமாக இவைதான் விஷாரிகாவு உற்சவச் சடங்குகளாகும்.

விஷாரிகாவில் மிக முக்கியமும் வியப்புக்குரியதுமாகக் காணப்படுவது செட்டியார்கள் என்னும் சாதியினர் செய்யும் சடங்காகும். மிகக் குறைவாக உள்ள இந்த இனத்தார் மாகி என்ற ஊருக்கு அருகிலும் தெல்லிச்சேரியிலும் உள்ளனர். இவர்கள் மலையாளமே பேசுகின்றனர். தமிழோ பிற மொழிகளோ அறியாதவர்கள் விஷாரிகாவு உற்சவம் இந்த செட்டியார் இனத்தாருக்கு ஓலை கொடுத்து அழைத்த பிறகுதான் தொடங்கும். முதல் ஓலை இவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. இந்தச் செட்டியார்கள் விஷகாரிகாவிற்கு வந்து செட்டிப்பறம்பு என்ற இடத்துச் சத்திரத்தில் தங்கி விழாவை மந்திரங்கள் சொல்லித்தொடங்குகின்றனர். இவர்களுக்கு அனுப்பும் ஓலை 'வலிய வீட்டு சுப்பிரமணியன்" என்னும் முகவரியுடன் எப்போதும் அனுப்பப்படும். இப்போது (1969) முத்தையாச் செட்டியார் என்பவருக்கு அனுப்பப் படுகின்றது. ஆனால், முகவரி 'வலிய வீட்டு சுப்பிரமணியன்' என்றே காணப்படுகின்றது. யானை மேல் உற்சவத்தின்போது எடுத்துச் செல்லும் கொடுவாளை இந்தச் செட்டியார்கள் செலவில் செய்து கொண்டு வருகின்றார்கள். இந்தச் செட்டியார்கள் தலையில் சிவப்புத் துணியால் தலைப்பாகை கட்டி, மந்திரப்பாட்டைச் சொல்லி உற்சவ ஊர்வலத்தில் செல்கின்றனர். செல்லும்போது 'கோழி நடே நடே' என்று கத்திச் செல்வதும் உண்டு. இந்தச் செட்டியார்களில் மூத்த குடியினராகக் கருதப்படும் முத்தையாச் செட்டியாரிடம் அவர்கள் செய்யும் வழிபாட்டைப் பற்றிக் கேட்டு வியப்புக்குரிய செய்திகளைத் தெரிந்து

கொண்டேன். தமிழ் சிறிதும் தெரியாத இந்தச் செட்டியார்கள் மலையாள எழுத்தில் தமிழ் மந்திரத்தை எழுதி வைத்து அதை விஷாரிகாவு உற்சவ ஊர்வலத்தில் சொல்லுகின்றனர். இந்த மந்திரப் பாட்டில் கண்ணகியின் கதை வழங்குவது மிகவும் வியப்புக்குரிய செய்தியாகும். இந்த வகையான தமிழ் மந்திரம் சொல்லப்படும் செய்தியை வேறு எந்தப் பகவதி கோயில்களிலும் எந்தக் கேரள ஆசிரியர்களும் இது வரை கண்டறிந்து எழுதவில்லை. விஷாரிகாவிலும் இது தமிழ்ப் பாட்டு என்றறியாது, ஏதோ ஒரு மொழியில் பாடப்படுவதாகக் கூறுகின்றனர். இந்தப் பாட்டு, விருத்தம் என்று அந்தச் செட்டியார்கள் கூறுகின்றனர். பாட்டு கீழே தரப்படுகின்றது:

1) ''ஆதிமுதல் காவேரிப் பூம்பட்டினத்து
ஆயிரவர் வங்கிசத்தில்
அரியகண் ணகை அம்மன் ஆகவே தான்
பிறந்து அதிரூபமான பொழுது
திதிலா கோவிலருடன் பாரியாளாகவும்
சிறிது காலம் சென்றபின்
திங்கள் முகமாய் வந்து தனிக்காக
மதுரையில் சிலம்பு கூறினாளில்
நீதியரசனென்றான பாண்டியன்வாசரில்
நிகரிற்ற மழுவரசனாம்
நிந்தின புறக்கவே பாண்டினாடெத்தி நீ
நீறாயெரித்த சோதி
ஆதிகாலத்திலும் மகிமையாய் நீ வந்த
அதியமும் ஆரறிவரோ
ஆனைக்குளம் வளர் பகவதி அம்மையே
ஆனந்த மகமாயே''

2) அக்ரசாலக் குளவளர் பகவதி அம்மையும்
ஆனைதளியில் தேவரும்

திக்கெல்லாம் புகழ்வரும் கொல்லத்து
பகவதி திசவரக்கல் பகவதி
தினந்துதி கொண்டாடும் புத்தூரில் அம்மையும்
ஸ்ரீ குறும்ப பகவதி பக்கமது விளையாடும்
நரங்கேரி பதவிலாளிக்கல் பகவதி
பரிபால கிருஷ்ணனும் கொடுங்களூர் அம்
மையும் பலகாலம் வாழு நமக்கு
அக்கினியிடம் பொருள் அரிச்சேத்திர
பாலனும் அடிபணிந்தருளும்
ஆனைக்குளங்கரை பகவதி அம்மையே
ஆனந்த மகமாயே''

3) காரொத்த கூந்தலும் குப்பியும் தொங்க
லும் கமல முகவதனனழகும்
கழில்விழி கண்களும் முத்து மூக்குத்தியும்
காதினொடு புழையினழகும்
பாரொத்த பூமுலை கழுத்தணி பதக்கமும்
நங்கலானாணினழகும்
வஞ்சீரி செங்கையும் சுற்றிடைதன்னி
லொருமாந்திளர் பொட்டிலழகும்
சீரொத்த தொந்தியும் பாத சலங்கையும்
செம்பவள மேனினழகும்
தேவியுன் பாதமே நண்ணுமடியேனுமே
சிந்தித்து வந்த கரிமம்
நோராப்ப வாகவே இந்தருள் பொறுத்
தருள் நேமி அபிராமி கவுரி
நல்ல நாக மேவிய அனவரது ஆனந்த
மான பொழினி''

இந்த மூன்று மந்திரப் பாட்டுகளும் முத்தையாச் செட்டியார் சொன்னது அப்படியே பதிவெடுக்கப் பட்டுள்ளது. இந்தப் பாடலில் கொச்சையும் பிழையும் உள்ளன. மலையாள உச்சரிப்புச் சிலவிடங்களில் உள்ளது. இந்தச் செட்டியாருக்கு மந்திரத்தின் பொருள் தெரியாததால் திருத்த

மான பாடம் எதுவென்று அறியமுடியவில்லை. தமிழ் தெரிந்தோர் எளிதில் திருத்திக் கொள்ளக்கூடிய பாட்டே யாகும்.[1] முதல்பாட்டில் காவேரிப் பூம்பட்டினத்தில் ஆயிரஞ் செட்டியார் வம்சத்தில் பிறந்த கண்ணகி, கோவ லனின் மனைவியாகச் சிறிது காலம் இருந்து மதுரையில் சிலம்பு கூறின நாளில், நீதியரசன் என்ற பாண்டியன் வாசலில் நிந்திக்கப்பட்டு, நீறாய் எரித்துச் சோதியானாள் என்று கூறப்பட்டுள்ளது. இந்தப் பாட்டில் கண்ணகியின் கதை நிச்சயமாகக் கூறப்படினும் முழுவதாக இல்லை.

கண்ணகியைக் கண்ணகை அம்மன் என்று அழைப் பதைக் காணலாம். பாண்டியன் நெடுஞ்செழியன் நீதியரசன் எனப்படுகிறான். மழுவரசன் என்ற பெயர் கோவலன் நீதியற்ற முறையில் கொலை செய்யப்பட்டதால் வந்த பெயராயிருக்கலாம். வாசலில் என்பது வாசரில் என்று சொல்லப்பட்டது. நிந்தின புறக்கவே என்பது நிந்தித்துப் புறக்கவே என்றிருக்க வேண்டும். எத்தி நீ என்பது எய்தி நீ என்று இருக்க வேண்டும். இரண்டாம் பாட்டு பகவதி இருக்கும் இடங்களைக் கூறுவதாகும். இதில் ஸ்ரீ குறும்பக் காவு பகவதியும், கொடுங்களூர் பகவதியும் மிக முக்கிய மான தெய்வங்களாகும். வேறு சில தெய்வங்களும் கூறப் பட்டுள்ளன. ஆனைக்குளத்துப் பகவதியை இருபாட்டிலும் கடைசி வரிகள் போற்றுகின்றன. கண்ணகி, காளியாகக் கருதப்பட்டதால் மகமாயி என்று அழைக்கப்படுகிறாள். மூன்றாவது பாட்டு கண்ணகியின் வர்ணனையாகும். ஆனால், இந்த வர்ணனை காளியின் வர்ணனையாகவோ, இப்போது கேரளத்தில் காணப்படும் பகவதியின் உருவ வர்ணனையாகவோ இல்லாமல் கண்ணகியின் வர்ணனை யாக இருப்பது கூர்ந்து கவனிக்கத் தக்கதாகும். அடிமுதல் முடிவரை வர்ணனையாக உள்ளது. இப்பாட்டிலும் பிழை கள் உள்ளன. கழில்விழி கயல்விழியாக இருக்க வேண்டும். காதில் இருந்த புழையினதழகு கூறப்படுவது குறிப்பிடத் தக் கது. கண்ணகி சிலையாகக் கூறப்படுவனவற்றில் காதுவடிந்து, தொங்கிப் பெரிய ஓட்டையிருப்பதைக் காணலாம். நங்க

வாணினழகும் என்பது மங்கல நாணினழகும் என்று இருக்க வேண்டும். மாந்தளிர் பொட்டு, கருமம், ஈந்தருள் என்று சொற்களைத் திருத்திப் படிக்க வேண்டும். கண்ணகியைத் தேவியாகவும், கவுரியாகவும், அபிராமியாகவும் வர்ணித்திருப்பதையும் காண்கிறோம். 'அக்ர சாலகுளவளர் பகவதி அம்மையும்' என்று தொடங்கும் வரியில் கோவலன் இருந்த பொற்கொல்லனின் இருப்பிடத்துக்கு அயல் இருந்த 'அக்க சாலைப் பள்ளியின்' பெயர் காணப்படுகிறது. இது சிலப்பதிகாரத்தில் வருகின்றது. கோவலன் சிலம்பு விற்கச் சென்றபோது தனிப்பெண்டுகள் தெருவைக் கடந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்தப் பகவதி பாட்டிலும் 'ஆனைத் தனியில் தேரும்' என்ற வரி சிறிது ஒத்துக் காணப் படுகிறது. கண்ணகி கதையைக் கூறும் இந்தப் பாட்டு இன்றும் மந்திரமாகச் செட்டியார்களால் பாடப்படுவது மிகவும் வியப்புக்குரிய செய்தியாகும். மற்றும் இந்தச் செட்டி யார்கள் கண்ணகிக் கதையை மாற்றிச் சொல்கிறார்கள்.[5] சிலப்பதிகாரத்தில் கோவலனின் பூர்வ ஜென்மக் கதை போல ஒரு கதை இவர்களிடையே வழங்குகின்றது. தம்பிரானுடைய (அரசனுடைய) சிலம்பு ஒன்றைப் பருந்து திருடிப் போயிற்று. விஷாரி ஒருவன் சிலம்பு விற்க வந்து அப்படி விற்ற சிலம்பு பகவதியின் சிலம்பாகும். தம்பிரான் நடை அடைச்சி இருந்ததால் விளக்கு வைக்கக்கூடாது. அந்தச் சமயம் வாணியன் வந்தான். விஷாரியைக் கொன்று விட்டான். அந்த வாணியன் கோவலனாகக் கடன் தீர்க்கப் பிறந்தான். அரசனுடைய தேவி கண்ணகையாகப் பிறந்தாள். அவள் கோவலன் தன்னைத் தொடக்கூடாது என்று இருந்தாள். அவளே பகவதி ஆனாள். இந்தக் கதையே செட்டியார்களிடையே வழங்கும் கண்ணகிக் கதை. பின்னால் நிகழ்ந்த சிலப்பதிகாரத்துப் பிறப்புக் கதையை முன்னால் நிகழ்ந்ததாக மாற்றிக் கூறுவதைக் காணலாம். சிலம்பைப் பருந்து எடுத்துச் சென்ற கதையைப் பஞ்ச தந்திரக் கதையுடன் ஒப்பிடலாம். விஷாரி என்ற சொல் பாம்பு விஷத்தை நீக்குவது என்ற பொருளுடையது. இங்கு விஷாரியைப்

பாம்பாட்டியென்றோ பாம்பு விஷத்தை எடுப்பவன் என்றோ கருதலாம். இவனிடம் எப்படிச் சிலம்பு வந்தது என்பதை இக்கதைக் கூறவில்லை.பஞ்சதந்திரக் கதையைத் தழுவி வருவதால் பாம்புப் புற்றில் பருந்து சிலம்பைப் போட்டிருக்கலாம். விஷாரி கையில் கிடைத்திருக்கலாம். அதை விற்கப்போய் அவனை வாணியன் கொன்றான் என்று கொள்ள வேண்டும். அரசனது நடை திறக்கவில்லை என்ற நிகழ்ச்சி பாண்டியன் நெடுஞ்செழியன் தன் தேவியின் ஊடலைத் தீர்க்க சென்ற நிகழ்ச்சியை மாற்றிக் கூறினது போலுள்ளது. கோவலனின் முற்றப்புக் கதையில் அருங் கலம் விற்ற வாணிகன் கொல்லப்பட்டான் என்று கூறப் பட்டுள்ளது. ஆனால், இக் கதையில் வாணியன் சிலம்பை விற்றவனைக் கொன்றான். அதனால், கோவலனாகப் பிறந் தான் என்று கூறப்பட்டுள்ளது சிலப்பதிகாரத்தில் உள்ள பூர்வ ஜென்மக் கதையே உருமாறித் தலைகீழாக வழங்கு கின்றது. சிலப்பதிகாரத்திலேயே பஞ்ச தந்திரத்தில் வரும் பார்ப்பனியும் கீரியும் கதை சேர்க்கப்பட்டுள்ள தையும், கோவலன் மேலேற்றிக் கூறப்படுவதையும் காண் கிறோம். அதுபோன்றே, கண்ணகியின் கதையில் பஞ்ச தந்திரத்தில் வரும் மற்றொரு கதையான காக்கையும் அரசனுடைய தேவியின் நகையும் என்ற கதை சேர்க்கப் பட்டு ஒரு காலத்தில் வழங்கி இருக்கலாம். காக்கையை மாற்றிப் பருந்தாகக் கூறியுள்ளார்கள். இந்தக் கதையைக் கூறும் செட்டியார்கள் தங்கள் மூதாதையர்கள் காவிரிப் பூம்பட்டினத்தில் வாழ்ந்து வந்ததாக சொல்லிக் கொள் கிறார்கள். கண்ணகி ஆயிரவர்கோத்திரம் என்றும் கூறிக் கொள்கிறார்கள். இந்தச் செட்டியார்கள் விஷாரி காவில் களியாட்டத்திற்கு வாள் கொண்டு வருவதைக் கவனிக்கலாம். ஒருவேளை அந்தக் கொடுவாள் கோவலன் வெட்டுண்ட கொடுவாளையும் குறிப்பிடலாம். சிலப்பதி காரத்தில் கொற்றவையின் வாளும் கோவலன் கொல்லப் பட்டவாளும்'வெள்வாள்' என்று ஒரே பெயரால் அழைக்கப் படுகிறது. மலையாள மொழியில் கண்ணகிக் கதையைக்

கொண்ட நாட்டுப் பாடல்கள் சில வழங்குகின்றன. ஆனால் பகவதியுடன் தொடர்புபடுத்திக் கோயிலில் பாடப்படும் கண்ணகிக் கதைப்பாட்டு விஷாரிகாவில்தான் காணப்படு கின்றது. பகவதியைப்பற்றி வழங்கும் பழைய நாட்டுப் பாடல்களில் கண்ணகிகதையைக் காணோம். பத்ரகாளியின் பாட்டிலும் கண்ணகி கதை கூறப்படுவதில்லை. ஆனால், கொடுங்களூர் பகவதிக்குப் பாடப்படும் ஸ்தோத்திராஞ்சலி யில் சில வரிகள் மறைமுகமாகக் கண்ணகியை குறிப்பிடுகின் றன. 'விதவாரூபையாம் தூமவதியை நான்தொழுன்னேன்' 'திங்கள்சூடும் பகவான்டேபத்னியை நான் தொழுன்னேன்' என்று வரும் வரிகளில் கண்ணகியை விதவையென்றும், பத்தினியென்றும் மறைமுகமாகக் குறிப்பிடுவதைக் காண வாம். இதைத் தவிர கண்ணகியெனக் குறிப்பிடும் மந்திரங் களோ, கதைகளோ கொடுங்களூர்க் கோவில் வழிபாட்டில் காணப்படவில்லை. மலையன்மாரிடையே கண்ணகிப் பாட் டொன்று வழங்குகின்றது. இந்த மலையன்மாரைத் தமிழ் இனத்தார் என்று மலையாளத்தார் கருதுகின்றனர். மலை யன்மார் மலையாளமே பேசுகின்றனர். நல்லம்மை தோற் றம் என்ற பாட்டு, கண்ணகியைப் பற்றிய நாட்டுப் பாடலாகப் பாலக்காட்டுப் பகுதியில் வழங்குகின்றது. ஆனால், இப்பாட்டுகள் எவையும் இதுவரை எழுத்து மூலமாகப் பதிவு பெறவில்லை. பாலக்காட்டில் சித்தூரில் உள்ள பகவதி கோயிலுள் ஆண்கள் செல்லக்கூடாது என்ற ஐதீகம் உள்ளது. இந்தப் பகவதியைக் கண்ணகியம்மன் என்றும் கருதுகின்றனர்.

வடமலபாரில் உள்ள மற்றொரு முக்கியமான பகவதி கோயில் கண்ணனூருக்கு அருகில் உள்ள ஸ்ரீகுறும்பக் காவாகும். இது எடைக்காடு என்ற ஊரில் முப்பிலங்காடு (முழாப் பலாங்காடு) என்ற கிராமத்தில் உள்ளது. முழவு போன்ற பலாப்பழத்தைச் சங்கப் பாட்டுகள் கூறுவதுபோல முழவு போன்ற பலாப்பழம் பழுக்குங்காடு என்னும் பெயரில் இந்தக் கிராமம் உள்ளது. இங்குக் குறும்பக்காவு

என்னும் காவில் மூன்று கோட்டங்கள் உள்ளன. இங்குள்ள கோவில்களைக் கோட்டம் என்று மலையாளத்தில் அழைக்கின்றனர். கோட்டம் என்ற சொல் சங்க காலத்தில் கோயிலுக்கு வழங்கி வந்தது. சிலப்பதிகாரத்திலே வழங்கும் கோட்டம். ஸ்ரீகோயில், அம்பலம் என்னும் சொற்கள் கோயிலைக் குறித்து இன்றும் மலையாளத்தில் பேச்சு வழக்கில் வழங்குவதைக் காணலாம். மூன்று கோட்டங்களில் மூத்த பகவதிக்கும் இளைய பகவதிக்கும் அருகருகே இருக்கும் கோட்டங்கள் கிழக்கு நோக்கி இருக்கின்றன. பகவதியின் காவல்காரனான தண்ணனுக்கு ஒரு கோட்டம் தெற்கு நோக்கி ஒரு புறமாக உள்ளது. மூத்த பகவதிக் கோட்டத்திற்கு எதிரில் ஒரு பீடம் உள்ளது. இதைக் கண்டகர்ணன் கோட்டம் என்றுசொல்கின்றனர். பகவதியின் பலிபீடமாகவும் கொள்ளலாம். தண்ணனும் கண்டகர்ணனும் பகவதியின் மெய்க் காப்பாளர்கள். தண்ணன் கையில் பெரிய குண்டாந்தடி உள்ளது. அரிசிப் பொரியைத் தென்னை ஓலையில் வைத்து ஆக்கின அடை தண்ணனுக்கு நைவேத்தியமாக அளிக்கப்படுகின்றது. இது அழகர் மலையில் பெருமாளுக்குக் கொடுக்கப்படும் அடை போல உள்ளது. இதைத் 'தண்ணன் அடா' என்றழைக்கின்றனர். மூத்த பகவதிக்குத் தேங்காயை உடைத்து வாழைப் பழத்தை உரித்துப் படைக்கின்றார்கள். ஆனால், இளைய பகவதி மிகவும் சக்தி வாய்ந்த தெய்வமாதலால் தேங்காயையும் வாழைப் பழத்தையும் அப்படியே படைக்கின்றனர். தண்ணன் கோயில் முகப்பிலும், வேறு சில பகவதி கோயில்கள் முகப்பிலும் பாம்பு உருவங்கள் ஓவியமாகத் தீட்டப்பட்டிருப்பதைக் காணலாம். இந்தக் கோட்டங்கள் எல்லாம் பெரும்பாலும் மரத்தால் ஆனவை. கீழே மட்டும்தான் கட்டடம் உள்ளது. குறும்பக்காவில் பகவதி கோட்டங்களில் மூலஸ்தானத்தில் பகவதி சிலை கிடையாது. பகவதி இருக்கும் பீடத்தை பள்ளியறை என்று அழைக்கின்றனர். பகவதி இருக்க வேண்டிய பீடத்தில் ஒரு கொடுவாள் உள்ளது. கொடுவாளே

பகவதியென்று கருதப்படுவது முக்கியமாகக் கவனிக்கத்தக்கதாகும். மலையாள நாட்டில் பெரும்பாலான கிராமங்களில் உள்ள பகவதி கோயில்களில் பகவதி உருவச்சிலை கிடையாது. ஆனால், பகவதியைக் குறிக்கும் கொடுவாளே பகவதியென்று தொழப் படுகிறது. மாகியில் உள்ள பகவதி கோயிலில் வெண்கலத்தில் ஆன கொடுவாளே தொழப்படுகின்றது. விஷாரிகாவில் கொடுவாளே பகவதி உற்சவத்தில் தொழப்பட்டு ஊர்வலம் வருவதை, இது சார்பாக இணைத்துப்பார்க்க வேண்டும். சிலப்பதிகாரக் காலத்திற்கு முன்னர்த் தெய்வங்களின் அடையாளங்களையே தொழும் வழக்கம் இருந்து வந்திருக்கலாம். சிலப்பதிகாரத்தில் கனாத்திறமுரைத்த காதையில் கற்பகத்தரு நிற்குங் கோட்டம், வெள்ளையானை நிற்கும் இந்திரன் கோயில், ஸ்ரீகைலாயம் நிற்கும் கோயில், வேல் நிற்கும் முருகன் கோட்டம், வச்சிராயுதம் இருக்கிற கோயில் ஆகியவை கூறப்பட்டிருப்பதைக் காணலாம். இந்திரனைக் குறிக்க வச்சிராயுதமும், முருகனைக்குறிக்க வேலும் கோட்டத்தில் தொழப்பட்டதையே சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. சிவபெருமானின் ஊர்க்கோட்டத்திலும் ஸ்ரீகைலாயமலையின் உருவமோ படமோ தொழப்பட்டது.[6] ஆதலின் தெய்வங்களின் அடையாளங்கள் தொழப்படுவது பழைய மரபு என்றே தெளிவாகின்றது.

பல்லவ மகேந்திரவர்மன் காலத்தில் திருச்சியில் உள்ள குகைக் கோயில் கர்ப்பகிரகத்தின் சுவரில் சிவபெருமானைக் குறிக்கும் செதுக்கப்பட்ட புடைப்புச் சித்திரமோ, ஓவியமோ வழிபடப்பட்டது என்று புதை பொருளாராய்ச்சியாளர் கே. ஆர். சீனிவாசன் அவர்கள் சொல்லியிருப்பதைக் கவனிக்க வேண்டும். இலிங்கம் தமிழ்நாட்டில் தொழப்பட்டது, அதற்குச் சற்றுப் பிற்காலத்தில் இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். ஆர். ஜீ. பந்தர்க்கர் என்ற அறிஞரும் இலிங்கத்திற்கு முன்னர்ச் சிவனின் அடையாளங்கள், அடையாள உருவங்கள் தொழப்பட்டன என்று

கூறுவதைக் கவனிக்க வேண்டும். மகேந்திரன் காலத்துக்கு முன்னர் ஸ்ரீகைலாய மலையின் உருவம் புடைப்புச் சித்திர மாகவோ ஓவியமாகவோ தொழப்பட்டிருக்கலாம்.

இந்த மரபில் கொற்றவைச்குரிய கொடுவாள் பகவதி யாகத் தொழப்பட்டு வருவதை இன்று மலையாள நாட்டில் காண்கிறோம். இங்குள்ள பகவதிக்காவு தீயர்கள் (ஈழவர்கள்) பொறுப்பில் உள்ளது. மேற்பார்வை செய்பவர் களை ஆயத்தார் என்றழைக்கின்றனர். ஆனால், உற்சவக் காலங்களில் காட்டு மாடத்து நம்பூதிரி என்ற தந்திரி விசேஷ பூஜை செய்கின்றார். சாதாரண பூஜை ஆயத் தாராலேயே செய்யப்படுகின்றது. ஸ்ரீகுறும்ப பகவதி தோன்றிய வரலாற்றில் கொடுங்களூர் பகவதியைத் தொடர்புபடுத்திக் கூறுகின்றனர். கொடுங்களூர் பகவதி கானத்தூர்காவிற்கு வந்தபோது ஒரு தீயன் (ஈழவன்) பகவதிக்குத் தேங்காயைக் காணிக்கை செலுத்தினான். இதைக்கண்ட நம்பூதிரி சினங்கொண்டு தாழ்ந்த சாதி யானான தீயனை வெட்டித் தள்ளினான். ஆனால், தம்புராட்டி பகவதி நம்பூதிரி மேல் கோபமடைந்து அவனுக் கும் அவன் குடும்பத்தாருக்கும் அம்மை நோய் காணும்படி செய்தாள். அதிலிருந்து காட்டு மாடத்து நம்பூதிரி குடும்பத் தில் எப்போதும் யாராவது ஒருவர் அம்மையால் வருந்து கின்றனராம். நம்பூதிரி பின்னர்ப் பகவதியை வேண்டியத னால் குணமாகி ஸ்ரீகுறும்ப பகவதிக்கு அவன் சந்ததியார் பூசை செய்ய அனுமதிக்கப்பட்டார்கள் ஆண்டு உற்சவத்தில் ஆயத்தார்களில் ஒருவன் பூசை செய்கிறான். சிவப்பு உடுப் பும் சிவப்புத் தலை ஆடையும் அணிந்து நெற்றிப்பட்டம், இடம்புரி, வலம்புரி, லோலாக்கு, சிலம்பு, கடகம் ஆகிய அணிகளை அணிந்து கோயில் குளத்தில் குளித்துக் காட்டு மாடத்து நம்பூதிரி அருகில் செல்வான். அந்த நம்பூதிரி ஸ்ரீகுறும்பகாவு பகவதியின் தோற்றப்பாட்டை பாடுவான். தோற்றம் என்பது தெய்வத்தின் தோற்ற வரலாற்றைக் கூறும் பாட்டாகும்.

''மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பிரீஇச்
செல்லாற்றுக் கவலைப் பல்லியங் கறங்கத்
தோற்ற மல்லது நோய்க்குமருந்த தாகா
வேற்றுப்பெருந் தெய்வம் பலவுடன் வாழ்த்தி''

—குறுந்தொகை, 263.

வேலன் வெறியாட்டைக் கூறும் இந்தக் குறுந்தொகைப் பாடலில் 'தோற்றம்' என்னும் சொல் தெய்வத்தின் வரலாறுகூறுவதைக் குறித்து வழங்குவதைக் காணலாம். வட மலபாரில் தெய்வங்கள் வேடம் போட்டு ஆடும் வேலன் முதலிய பலராலும் அந்தந்தத் தெய்வங்களின் தோற்றப்பாட்டு முதலில் பாடப்படுவதைக் காணலாம். இதை மந்திரம் என்று கருதுகின்றனர். விஷாரிகாவில் செட்டியார்கள் பாடும் கண்ணகி வரலாற்று மந்திரமும் இதுபோன்ற தோற்றப்பாட்டே என்று கருதலாம். தோற்றப்பாட்டைக் கேட்ட குறும்பந்காவுப் பூசாரி கோயிலுக்குள் வந்து பகவதிக்குக் களிஆட்டம் ஆடுவான். மூத்த பகவதியின் களம் நாகப்பாம்பின் வரிப் படம்போல் தரையில் மஞ்சள் கலந்த அரிசிமாவால் வரையப்பட்டிருக்கும். இந்தக் களத்தில் பகவதிக்கு நேர்ச்சையாக இளநீர், தங்கம், வெள்ளியில் செய்த உருக்கள், சிவப்புக் குட்டைகள் ஆகியவை வைக்கப்படும். களத்தில் ஆடும் ஆட்டக்காரன் களத்தைக் கால்விரலால் அழித்து விடுவான். இவ்வாறு, களத்தை அழிப்பதைக் ''களமாய்க்கல்'' என்று கூறுவர். இந்தக்களம், பகவதி தம்புராட்டிக்குச் செய்யப்படும் 'சர்ப்பக்கெட்டு' என்று கூறப்படுகின்றது. இங்கு வரும் பக்தர்களுக்கு மஞ்சள் பொடியும், செக்கிப்பூவும் பிரசாதமாக வழங்கப்படும். மஞ்சள்பொடி அம்மை நோய் வராதிருக்கப் பகவதி வரம் தருவதற்கு வழங்கப்படுகின்றது. இந்த வழக்கம் கொடுங்கலூர் பகவதி கோயிலுக்கருகில் உள்ள வசூரிமாலையின் கோயிலிலும் வேறு பகவதி கோயில்களிலும் உள்ளது. கள ஆட்டம் ஆடும் ஆயத்தான் குற்றிக்கொடையென்றழைக்கப்படும் பனைஓலையால் ஆன சிறிய குடையும் சூரலும் (பிரம்பும்) கையில் வைத்துக்

கொண்டு 'குறியிட்டுக் குணப்படுத்தி' என்ற மந்திரச் சொற்களைச் சொல்லி அம்மை நோய் வராதபடி குழந்தை களை ஆசிர்வதிப்பான். இந்த மந்திரச் சொற்கள் தமிழ்ச் சொற்கள் போலத் தெரிகின்றன.

இதே பகவதி கோட்டத்தில் பூதகணங்களைச் சாந்தி செய்ய 'பெலின்' என்றழைக்கப்படும் சடங்கு செய்யப்படு கின்றது. பலி என்பதே 'பெலின்' என்று உச்சரிக்கப்படு கின்றது. இதை வேலன் இனத்தைச் சார்ந்தவனே செய் கிறான். இந்தச் சடங்கை, பூதகணங்களைக் கழிக்குதல் என்றும் அழைக்கின்றனர். இந்தச் சடங்கு மிகவும் விசித்திர மானது. பலிக்களத்தில் வாழையின் அடிமரம் நேர்க்குத் தாக வைக்கப்படுகின்றது. அந்த வாழை மரத்தில் ஐந்து மட்டத்தில் தென்னை ஈர்க்குகள் நெருக்கமாகக் குத்தப் பட்டு ஐந்து தட்டுகள் செய்யப்படுகின்றன. ஐந்து தட்டு களிலும் கிளியோலை என்றழைக்கப்படும் தென்னை ஓலை யால் செய்த ஓலை உருவங்கள் ஓரத்தில் இணைக்கப்படும். இந்த வாழை அடிமரத்திற்குக் கோழி, ஆடு பலியாக வெட்டப்படும். இதற்குக் குரிசி செய்யப்பட்டு வழங்கப் படும். குரிசி என்பது பலியான ஆடு, கோழியின் இரத்தமும் நவதானியங்களும் கலந்து துழவப்பட்டக் கலவையாகும். இந்தக் குரிசிக் களத்தில் சிறிது சிறிதாகப் பலியாகக் கொடுக்கப்படும். கலிங்கத்துப்பரணியிலும் தக்கயாகப் பரணியிலும் வரும் கூழடுதல் என்பதோடு குரிசியிடுதலை ஒப்பிட்டுப் பார்க்க முடியும். பல ஒற்றுமைகளைக் காண லாம். களத்தில் பலியிடப்பட்டு முடிப்பதைக் 'கமம்' செய்வ தாகச் சொல்கின்றனர். கமம் என்ற சொல் நிறைவுறுதல் என்ற பொருளில் வழங்கும் என்று தொல்காப்பியம் கூறு கின்றது. 'கமம்நிறைந்தியலும்' என்பது தொல்காப்பிய உரியியல் சூத்திரம். தொல்காப்பியப் பொருளில் இன்றும் மலையாளத்தில் வழங்குவது மிகுந்த வியப்பைத் தருகின்றது. வாழைப்போழால் (மட்டை) தரையில் செய்யப்பட்ட களத்தை அழிக்கக் கத்தியால் அந்த மட்டைகளைச் சிறிய

தாக வெட்டிக் கலைப்பதுண்டு. ஆனால், பூதகணங்களுக் காகச் செய்யப்பட்ட பெலின் களத்தை வெட்டி அழிக்காமல் திரித்து அழிக்கின்றான். 'திரிக்க' என்ற சொல்லைப் பயன் படுத்துகின்றனர். களவழிபாடு முடிந்ததும் அதை அழிக் காமலோ திரிக்காமலோ இருந்தால் வேறொருவன் அந்தக் களத்தைப் பயன்படுத்திக் களஞ்செய்தோனுக்கு அழிவு தேடித்தருவான் என்ற நம்பிக்கை நிலவுகின்றது. இந்த ஸ்ரீ குறும்ப பகவதியின் வழிபாட்டில் கண்ணகிக் கதையைத் தொடர்புபடுத்தும் செய்திகளைக் காண முடிய வில்லை. ஆனால், குறும்ப பகவதியை மற்ற பகவதிகளை விடப் பழமையானதாகக் கருதும் நம்பிக்கை கேரளத்தில் இருக்கின்றது. கொடுங்களூர் பகவதி கோயில் இருக்குமிடத்தி லிருந்து தெற்கில் கால்நாழிகை தூரத்தில் ஸ்ரீ குறும்பக்காவு க்ஷேத்திரம் என்பது உள்ளது. இங்குதான், பகவதி தேவி முதலில் தங்கியதாக ஐதீகம் உண்டு. கொடுங்களூர் பரணி உற்சவத்தைத் தொடங்குவதற்குக் குறும்பக்காவிலிருந்து தான் தாலப்பொலி எழுகின்றது. தாலப்பொலி ஊர்வலம் குறும்பக்காவிலிருந்து வரும்போது 'எதிரேற்பு' இருக்கும். முற்காலத்தில் எதிரேற்பில் வஞ்சிக்குளத்து அரசன் தம்பி ரானும் அடிகளும் (குருக்கள்) சேர்ந்து குடை முதலிய அலங் காரங்களுடன் வரவேற்புக் கொடுப்பர். வாரநாரிகள் என்ற ழைக்கப்படும் சில பெண்கள் குலவையிட்டுப் பாட்டுபாடி வரவேற்பர். குலவையிடுதலை 'வாக்குரவை' என்பர். குறும் பர் இனத்தாரிடையே பகவதி வழிபாடு முதலில் புகழ் பெற் றுப் பின்னர் அவர்களால் கேரளத்தில் பரப்பப்பட்டிருக்க வேண்டும் என்று கருதலாம்.[7] சிலப்பதிகாரக் கதையின் படி சேரன் செங்குட்டுவனுக்குக் கண்ணகி தெய்வமாகி வானுலகு சென்றதைப் பற்றி முதலில் குறவர் முதலிய மலைச்சாதியினர் சொன்னதாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். குறும்பர்கள் இந்தப் பகவதி வழிபாட்டை முதல் முதலில் கேரளத்தில் பரப்பியிருக்கலாம். பாலைக்குத் தெய்வம் பகவதி என்று இறையனாரகப் பொருள் உரை யாசிரியர் கூறியுள்ளார். அவரே பாலைக்குரிய ஊர்களின்

பெயராகக் கொல்குறும்பு என்று கூறியுள்ளார். ஆதலின், பகவதி வழிபாடு இந்த உரையாசிரியர் காலமாகிய 13-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் கொல்குறும்பர்களிடையே நன்றாகப் பரவியிருந்திருக்க வேண்டும். பாலைத் தெய்வமான கொற்றவையோடு ஒன்றிக்கப்பட்ட பகவதி, கொற்றவைக்குப் பதிலாகப் பாலைத் தெய்வமாக்கப்பட்டாள். வட மலபாரில் ஒவ்வோர் இனத்தாரும் சாதியாரும் தங்களுக்கென்று தனியாகப் பகவதிக் கோயில்கள் வைத்திருப்பதையும் காணலாம். குறும்பர்கள் தங்களை ஊராளி நாயர்கள் என்று உயர்த்திக் கூறிக்கொள்கிறார்கள். இவர்களுக்கும் வாணியர்களான முச்சோலடன் நாயருக்கும் தனித்தனி பகவதிகள் உண்டு. பகவதிப் பாட்டை வண்ணான்மாரும் பாடுகின்றனர். மலையர்கள் பகவதியை நீலி என்றழைக்கின்றனர். மலைத் தெய்வமான நீலியை மாணிக்காத மலையன் அன்றும் இன்றும் இல்லை என்ற மலையாளப் பழமொழி உண்டு. கேரளத்தில் புகழ்பெற்ற மாந்திரிகனான கல்லூர் நம்பூதிரிபாடு செங்குன்றத்துப் பகவதியைப் பெருந்தெய்வமாகக் கருதி ஆராதித்து வந்ததைக் கேரள ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பகவதிக்குக் கோயில்களில் வழிபாடு நடப்பதுபோலப் பகவதிக்குந் தெய்யாட்டம் (தெய்வ ஆட்டம்) ஆடுவது மலபாரில் பரவலாக உள்ளது. இந்தப் பகவதிக்கான தெய்யாட்டத்தை வேலன்மாரும் பிற இனத்தாரும் ஆடுகின்றனர். தெய்வமாக வேஷங்கட்டி ஆடுதலைக் களியாட்டம் என்றும், கோலங்கட்டியாடுதல் என்றும் வட மலபாரில் வழங்குகின்றனர். இந்தக் கோலங்கட்டியாடல் என்ற சம்பிரதாயம் வட மலபாரில் மட்டும் காணப்படுவதால் இந்த நாடு 'கோலத்து நாடு' என்றழைக்கப்படுகின்றது. இந்தக் களியாட்டங்கள், அதாவது தெய்யாட்டங்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. மர்மமூர்த்தி தந்திர மூர்த்தி, உபயமூர்த்தி என்று மூன்று வகை மூர்த்திகளாகப் பிரிக்கின்றனர். வீரர்களின் வேஷம் போட்டு

ஆடுதலையே கோலம் என்று சிறப்பாக அழைக்கின்றனர். தெய்வத்தையே வீரத் தெய்வமாகக் கருதும்போது தெய்யக் கோலம் என்றழைப்பர் இந்துமதக் கடவுளர்களான இராமன், இலக்ஷ்மணன், சிவன், விஷ்ணு ஆகியவர்களைக் கூட வீரர்களாக்கித் தெய்யாட்டம் ஆடுவதுண்டு. இந்தத் தெய்வக் கோலங்களில் பகவதியின் தெய்யாட்டம் பரவலாக ஆடப்படுகின்றது. தமிழில், பரத சங்கிரத்தில் 'கோலம்' என்ற ஆட்டம் விளக்கப்பட்டுள்ளது. குறள், மறம், சிந்து, சோனகம், பார்ப்பான், சடாதாரிபாறை முதலிய பல கோலங்களை மேற்கொண்டு அவ்வக் கோலத்திற்குப் பொருத்தமான வசனத்துடன் மகளிரால் ஆடப்படும் கூத்துகள் கோலம் என்ற வகையைச் சேர்ந்தன என்பர். குறள் என்ற குள்ளனின் கோலம் இன்றும் 'செம்மறத்தி' என்னும் பெயரில், இறந்த கணவனோடு உடன்கட்டை யேறும் பெண்களுக்குக் கோலங்கட்டி, மலையாள நாட்டில் ஆடப்படுகின்றது. வரிக்கூத்து என்பதற்கு விளக்கம் கூறிய அரும்பத உரையாசிரியர் வரி என்றது நடத்தையை என்று சொல்லியிருப்பதைக் கவனிக்க வேண்டும். தொழிலுக்கும், குணத்திற்கும், சாதிக்கும், துணையொழுக்கத்திற்கும் தக்கவாறான நடத்தையைக் காட்டி ஆடும் கூத்தே வரி என்று விளக்கப் பெறுகிறது. மலையாளத் தெய்யாட்டங் கள் பலவும் பல்வரிக் கூத்தில் சேர்க்கக் கூடியவையே. அடியார்க்குநல்லார் பல்வரிக்கூத்தைப் பற்றிக்கூறும் பழைய ஒரு பாடலைக் காட்டியுள்ளார். இதில் 'பகவதியாள்' என்ற கூத்துக் கூறப்படுவதைக் காணலாம். ஆதலின், மலையாளத்தில் பகவதிக்கு ஆடப்படும் ஆட்டம் போல, ஓர் ஆட்டம் தமிழ்நாட்டிலும் இடைக்காலத்தில் இருந்திருக்க வேண்டும். மலையாளி என்றொரு கூத்தும், ஒற்றை முலைச்சி என்றொரு கூத்தும் பல்வரிக் கூத்தில் கூறப்படுவ தைக் காணலாம். கோலங்கட்டுகிறவன் உடம்பு முழுவதும் முக்கியமாக முகத்தில் அழுத்தமான பல வர்ணங்களால் வேஷம் பூசிக் கொள்கிறான். இவ்வாறு கோலம் எழுதப்படு வதையே 'எழுது வரிக்கோலம்' என்று சிலப்பதிகாரம் கூறு

கின்றது. மலையாள நாட்டில் பல தெய்வங்களுக்கும் பரவலாகப் பல கிராமங்களில் இந்த ஆட்டங்கள் சிலமாதங்களில் நடைபெறுகின்றன. இந்த ஆட்டங்கள் ஓர் ஊரில் பகவதி ஆட்டத்துடன் தொடங்கி மற்றொரு ஊரில் பகவதி ஆட்டத்துடன் முடிவதாகக் கூறும் பழமொழியும் உள்ளது. ''பேடியாட்டம்மா துறக்காணும் அம்மன்சேரி அம்மா அடைக்காணும்'' என்பதே அப் பழமொழி. வட மலபாரில் பேடியாட்டக்காவில் பகவதிக்குத் துலாநாளில் ஆட்டம் தொடங்கப்பட்டு அம்மன்சேரி பகவதி ஆட்டத்துடன் எல்லா ஆட்டங்களும் முடிவுறுகின்றன என்று கூறுவர். இந்தப் பகவதி ஆட்டங்களிலும், பிற தெய்வ ஆட்டங்களிலும் கொடுங்களூர் பகவதியின் பெயரைச் சொல்லி அழைக்கும் வழக்கையும் காண்கிறோம். ''என்னுடைய கொடுங்களூர் நேர் முத்தாச்சி ஆக்ஞை உண்டாயிட்டு'' என்று ஆட்டக்காரன் தன் அதிகாரத்தை எடுத்துக் கூறுவதுண்டு. பகவதியின் வணக்கம் எவ்வளவு முக்கியமானது என்பதையே இது காட்டுகின்றது. கொடுங்களூர் பகவதியின் கிளைகளென்று தீயர்களும், ஆசாரிகளும், முக்குவர்களும் கருதும் பகவதிக் காவுகளும் கேரளத்தில் உண்டு. அவற்றைச் சீர்மைக்காவுகள் என்றழைப்பர். இந்தச் சீர்மைபகவதி ரோகம் விதைப்பதாகக் கூறுவர். அதாவது, அம்மையை உண்டாக்குவாள் என்பர். கொடுங்களூர் பகவதிக்குத் தலைமையிடம் கொடுக்கும் சம்பிரதாயம் பகவதி கோயில்களில் பொதுவாகக் காணலாம். சிலப்பதிகாரத்தில் கண்ணகி, தான் சோழ நாட்டுக் கற்புடைப் பெண்டிரின் மரபு வழியில் வந்ததாகக் கூறிக்கொள்வது போல், ஆதி பகவதியான கொடுங்களூர் பகவதியின் வழியாக வந்த பிற பகவதிகளும் தொழப்படுகிறார்கள். துன்பத்தில் உழன்று தெய்வமாக மாறிய பெண்களும் பகவதியாகக் கருதப்பட்டுத் தொழப்பட்டதைக் காணலாம். ஒரு பிராமணப் பெண் பகவதியாகத் தொழப்பட்டது ஒரே தோற்றப்பாட்டில் காணப்படுகின்றது. ''அம்மோன்மார் என்றும் திருமுன்புமோர் என்றும் தானப் பேருள்ள பிராமணருடைய கிருகமான தாழக்காட்டு

மனையில், ஒரு கன்னிகா பிலாவில் கயறி கண்டல் சக்கா பறிச்சு (பலாமரத்தில் ஏறி கண்டல் பலா என்ற பழத்தை பறித்தாள்) என்ற குற்றங்கொண்டு, மாதுலனால் (மாமனால்) வாதிக்கப்பட்டு (கொல்லப்பட்டு) அக்கன்னிகா பின்னீடுமனையில் (போதி மனையில்) பகவதி என்ற கன்னிகோலமாய் ஆராதிக்கப்பட்டாள்'' என்று ஒரு மலையாளத் தோற்றப்பாட்டு கூறுகின்றது. அம்மோன்மார், திருமுன்புமார் என்பவர்கள் பிராமணனுக்கும் க்ஷத்திரிய பெண்ணுக்கும் பிறந்த கலப்பு இனத்தாராவார். தாழக்காட்டுப் பகவதியின் தோற்றப்பாட்டிலிருந்து கண்ணகி கதையுடன் சம்பந்தமில்லா வேறு பகவதிக்கும் உண்டு என்பது தெரிகின்றது. வடமலபாரில் வாணியர்க்குச் சொந்தமான மச்சில்லு பகவதி அல்லது முச்சிலோட்டு பகவதிக்கும் வேறு விதமான கதை உள்ளது. இந்தப் பகவதிக்கு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பெருங்களியாட்டம் நிறைய செலவு செய்து நடைபெறுகின்றது. பகவதியுடைய கலியாணமும் நடத்துகிறார்கள். இவர்கள் பாடும் பாட்டில் பகவதியின் வர்ணனை காளிதேவியின் வர்ணனையாகவே உள்ளது. கேரளத்தில் பெரும்பாலான பகவதிப் பாட்டுகளில்காளியின் வர்ணனையும் வணக்கமுமே இருக்கின்றன. கண்ணகியின் கதையை இந்தப் பாட்டுகளில் காண முடியவில்லை. ஆனாலும், கண்ணகிக் கதையைக் குறிப்பிடும் சில செய்திகள் இல்லாமலுமில்லை. ஒரு வேலனாட்டக்காரன் சொன்ன கதையிலிருந்து, கண்ணகி கதை இருந்தது என்பது தெரிகின்றது. ''பொன் பணிக்காரரை அந்து நல்ல அபிப்பிராயம் இருந்நதில்லா. தன்னைப் பட்டிச்ச (ஏமாற்றிய) நகர வீரிய பெருந்தட்டானோடு வாக்கத்தூரம்மா பறையுன்ன சங்கதியிலிருந்து வியக்தமாகும்'' என்று மலையாளத்தில் சொன்னான். கோவலனை ஏமாற்றிய தட்டானை நகர வீரிய தட்டான் என்றும், கண்ணகியை வாக்கத்தூரம்மா என்று சொல்வதும் தெரிகின்றது. கண்ணகி என்ற வாக்கத்தூரம்மா சொல்லும் பாட்டு மலையாளத்தில் பின் வருமாறு கொடுக்கப்படுகின்றது.

"எல்லல்லா தெய்வத்தோடு
பகவதியோடும்
இடையிலோகி செறுமனுஷரோடு
காட்டும் போல
ஈ தெய்வத்தோடு நீதட்டாம்மா
காணிக்குமோ"

இதன் பொருள் எல்லா தெய்வத்திேைனாடும், பகவதியினேரடும் இந்த உலகத்தில் சிறிய மனுஷரோடும் காட்டுவது போல் இந்தத் தெய்வத்தோடும் ஏமாற்றி விட்டுப் போவாயா என்பதாகும். பகவதி தட்டானால் ஏமாற்றப் பட்டதால், 'தட்டாம்மா' என்ற சொல்லே ஏமாற்றுவது என்ற பொருள் பெற்றது. ஆதலின், களியாட்டங்களில் பகவதி ஆட்டம் ஆடப்படுவதில் கண்ணகிக் கதை மறைந்து காணப்படுகின்றது என்பது தெரிகின்றது. வடமலபாரில் ஊர்களின் பெயரோடு துர்க்கா பகவதி, உச்சிஷ்ட பகவதி, நாக பகவதி என்று பல பெயர்களுடன் பகவதிகள் அழைக்கப் படுகின்றார்கள். நாக பகவதி என்ற பகவதிக்குச் சில ஊர் களில் கோலங்கட்டி ஆட்டம் ஆடப்படுகின்றது. வேலன் மார் ஆடிய நாக பகவதி ஆட்டத்தை நான் ஆழியூர் என்ற ஊரில் கண்டேன். பல வர்ணங்கள் கோலமாகப் பூசப்பட்ட முகத்துடனும் உடலுடனும் அட்டைகளாலும் மூங்கிலாலும் ஆன உடைகளையும் ஆடைகளையும் அணிந்திருக்கின்றான். தலையில் 20 அடி உயரமுள்ள தென்னங்கீற்றாலும் மூங்கிலாலும் பின்னப்பட்ட கூம்பாரமான முடியை அணிந் திருக்கிறான். முடியிலும் ஆடைகளிலும் அட்டையில் செய்யப்பட்ட பாம்பின் உருவங்கள் உள்ளன. இந்தக் கூம்பாரமான முடி நாகத்தின் படத்தைக் குறிக்கின்றது. கடைவாயில் இரு நாக எகிருகள் எனப்படும் கோரைப் பற்கள் வெளியே தெரிகின்றன. இங்கு நாக பகவதிக்கு மிளகும் முட்டைகளும் காணிக்கையாகச் செலுத்தப்படு கின்றன. தென்னை ஓலையால் செய்யப்பட்ட குதிரை மேல் ஏறிப் பறையர்கள் வீடு வீடாகச் சென்று முட்டைகளைச் சேகரிப்பார்கள். இந்தக் குதிரை, புலைக்குதிரை என்றழைக்

கப்படுகின்றது. சங்க இலக்கியத்தில் பனை ஓலையால் செய்த குதிரை மேல் ஏறி ஊர்வலம் வரும் மடலேறுதல் வழக்கத்தோடு இந்தப் புலைக்குதிரை ஒப்பிட்டுப் பார்க்கத் தக்கது. பாம்பிற்கு முட்டை உகந்தது என்பதற்காக நாக பகவதிக்கு முட்டைகள் தரப்படுகின்றன. பகவதி வழி பாட்டில் நாக வழிபாடு கலந்துள்ளதையே நாக பகவதி யின் வழிபாடு காட்டுகின்றது. குறும்பக்காவில் நாகக்களம் அமைப்பதும் இதையே காட்டுகின்றது.

கேரளத்தில் பகவதியைத் தமிழ்நாட்டில் மாரியம்மன் போலக் கருதி வழிபடுவது வழக்கமாகும், கேரளத்துத் தாரவாடுகளில் (Ancestral houses) மச்சிலம்மாவிற்குக் காலை மாலை விளக்குக் காட்டுதல் வழக்கம். முத்தச்சி என்றும் ஸ்ரீபோதி என்றும் இந்தத் தெய்வத்தை அழைப்பர். ஸ்ரீபகவதியே, ஸ்ரீபோதி என்று அழைக்கப்படுகின்றது. மச்சிலம்மாவிற்கு அல்லது ஸ்ரீபோதிக்கு வீடுகளின் மேற்குச் சுவரில் ஒரு புரை இருக்கும். திரையாட்டங்களிலும் அதாவது தெய்யாட்டங்களிலும் ஸ்ரீபோதி என்ற பகவதி யானது துர்க்கா பகவதி முதலிய பகவதிகளுடன் தனியாக வந்து ஆடுவதுண்டு. இந்த ஸ்ரீபோதி, அம்மைக்கான தெய் வமாகும். ஆந்திர நாட்டில் பிடுகு என்ற மகரிஷியுடைய மனைவி ஆகிய நாகாவலியின் இரண்டாம் ஜென்மம் மாரியம்மா என்ற நம்பிக்கை உள்ளது. தமிழ் நாட்டில் ஜமதக்னி முனிவரின் மனைவியாகிய ரேணுகா தேவியோடு தொடர்பு படுத்தி மாரியம்மனைக் கூறுவர். கேரளத்திலும் பரசுராமன் குரியென்று கூறுவதுண்டு. கொடுங்களூரில் மூத்த பகவதி கோயிலருகில் தனியாக வசூரிமாலை என்ற அம்மனுக்குக் கோயிலுண்டு. இது ஒரு பாம்புப் புற்றுடன் உள்ளது. நாக வழிபாட்டில் மாரியம்மன் வழிபாடு கலந் திருப்பதையும் காண்கிறோம். குறும்பக்காவிலும் நாக வழிபாடு நடப்பதையும் அம்மை வராமல் இருப்பதற்குப் பகவதிக்கு நேர்ச்சை செய்வதையும் காண்கிறோம். பகவதியை நாக பகவதியாக வழிபடுவதைக் காணும்போது சைனர்களின் பத்மாவதி என்ற நாக

தேவதையின் வழிபாடு இதில் கலந்திருப்பதாகக் கருத வேண்டியுள்ளது. சைனர்களின் தெய்வங்களின் வரிசையில் நாக வரிசையில் நாக தேவதையான (Snake goddess) பத்மாவதி, முக்கியமான தெய்வமாகும். இதை ஒரு யக்ஷி (இயக்கி) என்று சொல்வர். தாமரைப் பீடத்தில் இருப்பதால் பத்மாவதி என்று அழைக்கப்பட்டாள். ஏழு படமுள்ள நாகங்கள் தலையில் குடைபிடிப்பதுபோல் பத்மாவதியின் சிலை அமைக்கப்படும். புத்தர்களாலும் சைனர்களாலும் வணங்கப்படும் எட்டு நாக தேவதைகளின் தலையிலும் எட்டு வகை நவநிதிகளான ரத்தினங்கள் உண்டு என்ற நம்பிக்கை உண்டு. வேட்டுவவரியில் கண்ணகியை 'ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி' என்று வர்ணித்திருப்பதைக் காணலாம். மு. இராகவையங்கார் (ஆராய்ச்சித் தொகுதி-மு. இராகவையங்கார்) தாமரைப் பொருட்டில் வீற்றிருப்பவள் என்ற பொருளில் மாமணி என்று அழைக்கப்பட்டாளென்றும் கூறியுள்ளதைக் காணலாம். கண்ணகி, கர்ணகை என்ற பெயர்க் காரணம் இதுவேயாகலாம். மற்றும் திருமணி என்ற பெயர் சங்க காலத்திலேயே நாகத்தின் தலையில் இருந்த இரத்தினத்திற்குப் பெயராக வழங்கியுள்ளது. கண்ணகியைத் தாமரைப் பொருட்டில் வீற்றிருப்பவள் என்றும், நாக இரத்தினம் போன்றவள் என்றும் ஒப்பிடுவதிலிருந்து சைனரின் பத்மாவதி தெய்வத்தோடு மிகவும் நெருங்கிய ஒப்புமை பெறுகிறாள். சைனர்களால் இந்த பத்மாவதி தேவதை இந்துக்களின் லக்ஷ்மி அல்லது திரு போன்று செல்வச் செழிப்பைக் குறிக்கும் கடவுளாகவும் கருதப்பட்டதுண்டு. சைனர்களின் நாக தேவதையாகக் கருதப்பட்டபோது இந்த தேவதையை 'விஷஹரி' (Vishahari) என்றழைத்தனர் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இந்த விஷஹரி என்ற பெயரே விஷாரி என்று விஷாரிகாவுப் பெயரில் மாறியது என்பது தெளிவாகும். விஷாரிகாவில் உள்ள பகவதி முன்னர்

பகவதியென்று அழைக்கின்றனர். இந்த மங்களாதேவியை சைனர்களின் பார்சுவநாதருடனும் பத்மாவதியுடனும் தொடர்புபடுத்தி மங்களூரில் சொல்லி வருகின்றனர். மங்கல மடைந்தகோட்டம் கண்ணகியின் கோயிலாகச் சிலப்பதிகாரத்தில் வரந்தரு காதையில் கூறப்பட்டுள்ளது மங்கலாதேவி உரையில் கூறப்பட்டது. மங்களூரில் இந்த மங்கலாதேவி கோயில் பின்னர்த் தோன்றி இருக்க வேண்டும். சைனர்களின் நாக தேவதையான பத்மாவதியின் வழிபாடு கலந்ததினால் பகவதியின் வழிபாட்டில் நாக பகவதி வழிபாடு தோன்றியிருக்க வேண்டும். சைனர்களின் பத்மாவதியை ஆதி மாதா வென்றும், மகாபைரவி, காளி என்றும் பத்மாவதி ஸ்தோத்திரம் கூறுகின்றது. திவாகர நிகண்டில் பகவதியின் பெயர்களுள் ஒன்றாகப் ‘பண்ணம் பணத்தி’ என்ற பெயர் காணப்படுகின்றது. பிங்கலந்தையில் துர்க்கையின் பெயராக அம்பணத்தி பகவதி என்ற பெயர்கள் காணப்படுகின்றன. பணத்தி என்ற சொல் பாம்புப் படத்தையுடையவள் என்று பொருள் பெறும். ‘பணக்கா’ என்ற சொல் வடமொழியில் பாம்பைக் குறிக்கும். பண்ணம் பணத்தி என்ற பெயர் பாம்புப் படத்தைப் பூண்டவள் என்ற பொருள் தருகின்றது. இதுவே நாகதேவதையாகும்.[10] சுவதேம்பரர் மல்லிசேனர் எழுதிய ‘பைரவபத்மாவதி கல்பத்தில்’ பண்ணகதி என்று பத்மாவதி தேவியை வர்ணித்திருக்கின்றார். பத்மாவதி தோத்திரம் என்ற வடமொழி நூல் பத்மாவதியைப் ‘பணிந்திர பத்னி’ என்றழைக்கின்றது. பணிந்திரன் பாம்புக் குடையுடன் சிற்பங்களில் காட்டப்படுகிறான். இந்தப் பணிந்திரன் மங்களூரில் உள்ள பத்மாவதி தெய்வமான பகவதியுடன் சேர்த்துப் பேசப்படுகிறான். கண்ணகியைப் பத்தினி என்று கூறுவதும் கவனிக்கத்தக்கது. பகவதி வழிபாட்டில் தாய்வழிபாடு (Mother worship) இரண்டறக் கலந்துள்ளது. மூத்தத்தாய் என்ற பொருளில்தான் கொடுங்களூர் பகவதி ‘மூலத்தாயே’ என்றும் ‘மூத்தச்சி’ என்றும் தெய்யாட்டக்காரர்களால் விளக்கப்படுகின்றாள். சிலப்பதிகாரத்திலும் கண்ணகி

யைத் தாய்த்தெய்வமாகக் கருதும் குறிப்பு உள்ளது. 'இவளோ கொங்கச் செல்வி, குடமலையாட்டி' என்ற வேட்டுவவரிப் பாடல் வரிக்கு உரையெழுதிய இடத்தில் இவள் துர்க்கையாகவே பிறந்தாள் என்று எழுதியிருப்பதைக் காணலாம். 'கானமர் செல்வி' (அகம்: 345) நன்னனுடைய கொண்கானத்தில் அமர்ந்த செல்வியாக அதாவது துர்க்கையாகச் சங்க இலக்கியத்திலேயே கூறப்படுகிறாள். இப்போது அவள் கான துர்க்கையாகக் கானங்காட்டில் தொழப்படுகிறாள். அதுபோலவே, கண்ணகியைத் துர்க்கையாகக் கருதினபோது கொங்கு நாட்டுத் துர்க்கையாகவும், குடமலை நாட்டுத் துர்க்கையாகவும் கருதப்பட்டாள். பதிற்றுப்பத்து விந்தாடவியென்கிற விந்தியமலைத் துர்க்கையைக் குறித்துப் பாடியிருப்பதையும் காணலாம். துர்க்கை, காட்டிலும் மலையிலும் வாழ்பவளாக, இருப்பவளாகக் கருதுவது வழக்கம். கொடுங்களூர் பகவதியின் ஸ்தோத்திர மாலையில் காளியென்று முதலில் விளிக்கப்பட்டுப் பின்னர் ஸ்ரீ குறும்ப பகவதி, கொடுங்களூர் பகவதி, பத்ரகாளி என்ற பெயர்கள் வருகின்றன. ஸ்ரீ குறும்ப பகவதி என்ற பெயர் கொடுங்களூர் பகவதிப் பெயருக்கு முன்னால் வருவதைக் கவனிக்க வேண்டும். இந்த ஸ்தோத்திர மாலையில் தாய்த்தெய்வமாகிய கார்த்தியாயினியின் பெயரும் மற்றும் சப்த மாதர்களான மகேஷ்வரி, அம்பிகா முதலிய பெயர்களும் காணப்படுகின்றன. இதிலிருந்து பகவதி வழிபாட்டில் தாய்த் தெய்வ வழிபாடு கலந்துள்ளது தெரிகின்றது. பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதும் திவாகர நிகண்டில் பகவதியின் பெயர்களாகத் துர்க்கை, கொற்றவை, ஐயை, நீலி, விந்தைசையமகள், பாலைக்கிழத்தி, கன்னி, குமரி நாராயணி என்ற பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன இந்தப் பெயர்களெல்லாம் தாய்த் தெய்வத்தைக் குறிப்பன கொற்றவை காளியானபோது பகவதியும் கொற்றவையாகக் கருதப்பட்டாள்.[11] பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த இறையனார் அகப்பொருளுரையில் பாலைக்குத்

தெய்வமாகக் கொற்றவைக்குரிய இடத்தில் பகவதி கூறப் பட்டதைக் காணலாம். நிகண்டுகளில் பாலைக்கிழத்தி என்று பகவதி கூறப்பட்டுள்ளாள். விந்தையைசைய மகள் விந்திய மலையில் வாழ்பவள் என்ற பதிற்றுப்பத்துச் செய்தியை ஒட்டி வருகின்றது. இச்செய்தி வடநூலான ஹரிவம்சத்திலும் காணப்படுகின்றது. கன்னியாகவும் குமரி யாகவும் தாய்த்தெய்வத்தைக் கருதுவது மிகப் பழமையான கருத்தாகும். பெரிப்ளூஸ் என்ற கிரேக்கன் கி.பி. முதல் நூற்றாண்டில் கன்னியாகுமரித் துறையில் குமரித்தெய்வம் இருந்ததையும் அவளைத் தொழுவதற்குத் துறையில் குளிப் பதைப் பற்றியும் எழுதியுள்ளான். தைத்திரிய ஆரண்யகம் என்ற வடநூலில் (கி.மு. 7-ஆம் நூற்றாண்டு) கன்னியா குமரி என்ற பெயரில் தாய்த்தெய்வம் குறிப்பிடப்பட்டுள் ளாள். வேதவழக்கொடுபடாத தாய்த்தெய்வத்தை ஆரியர்களும் வணங்கினர். கன்னியாகுமரித் தெய்வம் காளியாகவும் பின்னர்ப் பகவதியாகவும் கருதப்பட்டாள். பகவதி நாள் பூரநாள் என்று திவாகரம் சொல்லுகின்றது. மலையாள நாட்டில் பூரநாளன்றே பகவதிக் கோயில்களில் உற்சவம் தொடங்குகின்றது. திவாகர நிகண்டு எழுதப் பட்ட காலத்திற்கு முன்னர் எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டு களில் பகவதி வழிபாடு தமிழகத்தில் தொடங்கியிருக்கலாம். தாய்த் தெய்வமாக வழிபடப்பட்டபோது பகவதி என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கலாம். பகவதி என்ற பெயர் தாரா என்ற பௌத்தர்களின் தாய்த்தெய்வத்திற்கு, கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வழங்கியதைக் காண்கிறோம்.[12] இந்தத் தாரா தேவியின் வணக்கம் வங்காளத்தில் ஆறாம், ஏழாம் நூற்றாண்டில் தொடங்கினதாக அறிஞர்கள் கருது கின்றனர். இந்தத் தெய்வத்தை வங்காளத்தில் பால அரசர்கள் போற்றி வழிபட்டபோது, 'பகவதித் தாரா' என்ற பெயருடன் அழைத்தனர், டி.சி. சர்க்கார் (D.C. Sircar) என்ற வரலாற்றறிஞர் வங்காளத்தில் சந்திரதீவத் தில் இருந்த பகவதித்தாரா என்ற தேவதையின் வழிபாடு பற்றி விளக்கியுள்ளார். பால அரசர்களின் (Pala kings)

கொடியில் பகவதி தாராவின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. ஏழாம் நூற்றாண்டில் தாரா வழிபாடு பரவியிருந்ததைப் பற்றி ஹுவான் சுவாங் என்ற யாத்திரிகன் குறிப்பிட்டுள்ளான். தாராதேவியின் வணக்கம் பௌத்தர்களின் தாய்த்தெய்வ வணக்கம் மட்டுமன்று. தாராதேவியை நாக தேவதையாகவும் கருதுகின்றார்கள். தாராதேவியைச் சைனரின் பத்மாவதி தேவியோடு நாக தேவதையாகக் கூறுகின்றார்கள். கொடுங்கலூர் பகவதியின் ஸ்தோத்திர மாலையில் தாராதேவியின் பெயரும் காணப்படுகின்றது. ஆதலின் பகவதியின் வழிபாட்டில் பௌத்தர்களின் தாய்த்தெய்வமான, நாகதேவதையான தாராதேவியின் வணக்கமும் சேர்ந்திருக்கின்றது என்பதை அறியலாம்.[18] மணிமேகலையிலேயே தாரை, வீரை என்ற பெயர்கள் காணப்படுகின்றன. பௌத்தர்களின் தாரை தெய்வத்தின் பெயரால் பெண்கள் பெயர் மணிமேகலை காலத்திலேயே வழங்கி வந்துள்ளது. ஆதலின், கண்ணகியின் பகவதி வழிபாட்டோடு தாராவின் வணக்கமும் பிற்காலத்தில் சேர்ந்திருக்கலாம். தாய்த் தெய்வங்களான பௌத்தர்களின் தாரையும் பத்மாவதியும் கண்ணகி தெய்வத்துடன் சக்தி தெய்வங்களாகக் கருதப்பட்டு, நாக தேவதையாகக் கருதப்பட்டு இணைக்கப்பட்ட போது கண்ணகிக்குப் பகவதி என்ற பெயர் வழங்கியிருக்க வேண்டும். கண்ணகி பகவதியாகத் தொழப்பட்டது. எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது ஒன்பதாம் நூற்றாண்டில் நிகழ்ந்திருக்கலாம். வையாபுரிப் பிள்ளையவர்கள் சிலப்பதிகாரத்தை எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியதாகக் கருதினார். சிலப்பதிகாரக் கண்ணகியின் வழிபாடு இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியதென்றால், 8, 9 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பகவதி வழிபாட்டிற்கும் கண்ணகி வழிபாட்டிற்கும் இடையே உள்ள இடைவெளிக் காலத்தில் இந்த வழிபாடு என்ன ஆயிற்று என்பதற்கு விடை தர வேண்டும் தாந்திர வழிபாடு (Tantricism) தோன்றிய பின்னர்தான், பகவதி வழிபாடு தோன்றியிருக்க வேண்டும் என்று உறுதியாகக்

கூறலாம். தாந்திர வழிபாடு இந்தியாவின் கிழக்குப்பகுதியில் கி. பி. 7-ஆம் 8-ஆம் நூற்றாண்டில் தோன்றியதாக வரலாற்றாசிரியர்கள் கூறுவர். இந்த இடைவெளிக் காலத்தில் கண்ணகி வழிபாடு தமிழ்நாட்டில் இருந்து வந்ததற்கு இலக்கியச் சான்றுகளோ, பிற ஆதாரங்களோ கிடைக்கவில்லை. கண்ணகியைப் பகவதியாக வணங்கும் வழிபாட்டில் பகவதித் தாராவின் வழிபாடு கலந்ததைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதை இன்னும் ஆராய்ந்தால் வேறு சில செய்திகளும் தெரிகின்றன. வங்காளத்தில் உள்ள சந்திராத் தீவுப் பகவதி, கன்னித் தெய்வமாகவும் தென்கடல் ஓரத்தில் மலையில் வீற்றிருப்பவளாகவும் கருதப்படுகின்றாள். இது கன்னியாகுமரித் தெய்வத்தின், கன்னியாகுமரி பகவதியின் வரலாற்றைப்போல உள்ளது. சந்திராத்தீவில் வழங்கப்பட்ட பகவதித்தாராவைச் சந்திரா என்று அழைத்திருக்கலாம். சந்திரா பழிவாங்கியது என்ற தலைப்பில் கோவலன் கதை தக்காணத்தில் வழங்கியதை வையாபுரிப்பிள்ளை சுட்டிக் காட்டியுள்ளார். கண்ணகிக்குச் சந்திரா என்று பெயர் வழங்கியது சந்திராத்தீவுப் பகவதித்தாராவுடன் இணைந்தபோது தோன்றியிருக்கலாம். ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவராகக் கருதப்படும் மாணிக்கவாசகர் இந்தச்சந்திர தீபத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளதைக் காணும்போது தமிழ்நாட்டிற்கும் சந்திரதீபத்திற்கும் சமயக் கருத்துக்களில் தொடர்பு இருந்திருக்கின்றது என்பது தெரிகின்றது. 'சந்திரதீபத்துச் சாத்திரனாகி' என்று தனது குருவைப் பற்றி திருவாசகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் வங்கநாடும் கலிங்கநாடும் கூறப்பட்டுள்ளதோடு, கலிங்க நாட்டில் கோவலன் முற்பிறப்புக் கதை நிகழ்ந்ததாகக் கூறியிருப்பதும் இது சார்பாக எண்ணிப் பார்க்கத் தக்கது.

கண்ணகி வேங்கை மரத்தடியில் தெய்வமானதாகக் கருதும் கற்பனைகூட தாய்த்தெய்வக் கருத்துடன் தொடர்

புடையது. மரத்தடியில் நிற்கும் பெண் தெய்வங்களின் (Tree goddess) சிற்பங்களைக் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே காணலாம். பார்ஹூத், சாஞ்சி ஸ்தூபங்களிலும் குப்தர்களின் கலையிலும் மரத்தடியில் நிற்கும் இந்தப் பெண் தெய்வங்களின் சிற்பங்கள் சிறப்பாகக் காணப்படுகின்றன. மலர் நிறைந்த மரக்கிளையினடியே இந்தப் பெண் தெய்வம் நிற்கின்றதைக் காண்கிறோம். இந்தப் பெண் தெய்வத்தை யக்ஷி தேவதை என்று கூறுவர். இதையே விருக்ஷகா (Vrksaka) என்று அழைப்பர்.[14] இந்த யக்ஷி தேவதைகள் பழங்கற்காலத்தில் தோன்றிய தாய்த்தெய்வத்தின் சிறப்பத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தவை என்று ஹென்றிச் சிம்மர் என்ற சிறந்த சிற்பக்கலை அறிஞர் கூறியுள்ளார். இந்த யக்ஷி தேவதைகள் புத்த மதத்திலும் சைவ மதத்திலும் தேவதைகளாக வணங்கப்பட்டன. சிலம்பாற்றின் கரையில் மூகைகள் அவிழ்ந்த மலர்களுடைய கோங்க மரத்தின்கீழ் ஓர் இயக்கித் தெய்வம் தோன்றியதாகக் காடுகாண் காதையில் சிலப்பதிகாரம் கூறியுள்ளது. இந்த இயக்கித் தெய்வம் சைவ மதத்தைச் சார்ந்ததாகலாம். புறஞ்சிறை மூதூர் பூங்கணியக்கிக்குப் பால்பாயாசம் படைத்து வணங்கிய மாதரியை அடைக்கலக் காதையில் இளங்கோ கூறியுள்ளார். சைனர்களின் இயக்கித் தெய்வ வழிபாடு சிலப்பதிகாரக் காலத்திலேயே இருந்தது. நற்றிணை 219ஆம் பாடலில் ஒரு முலை குறைந்த திருமாவுண்ணி எரி போன்ற பூவுடைய வேங்கை மரத்தில் கட்டுப் பரணுக்கருகில் நின்றதாகக் கூறப்பட்டுள்ளது. இந்தத் திருமாவுண்ணி கண்ணகியாக இருக்கலாம் என்று சில ஆராய்ச்சியாளர் கூறினர். கேரளத்தில் மச்சிலம்மா, மச்சிலோட்டு பகவதி எனப்படும் தெய்வங்கள் பரணுக்கடியில் இருந்த பகவதியைக் குறிப்பிடப்படுவதை இது சார்பாகக் கவனிக்கத்தக்கது. திருமாவுண்ணி என்ற பெயரில் உண்ணி என்ற சொல் மலையாளத்தில் வழங்குவதையும் குறிப்பிட்டுள்ளனர். மலையாளத்தில் உண்ணி நீலி சந்தேசம், உண்ணியாச்சி சந்தேசம் என்னும் நூல்கள் உள்ளன. திருமாவுண்ணி

ஒரு யக்ஷித் தெய்வமாக்கப்பட்டார் என்று கருத இடம் உண்டு. ஒற்றை முலைச்சி என்ற தேவதை கேரளத்தில் மலையன்மாரிடையேயும் பிற இனத்தாரிடையேயும் பயந்து வணங்கப்படும் தெய்வமாக உள்ளது. இந்த ஒற்றைமுலைச்சியை யக்ஷி தேவதையென்றும், மலையில் வாழ்பவள் என்றும், பாலை மரத்தடியில் நிற்பவள் என்றும் மலையர்கள் கூறுகின்றனர். இந்தத் தெய்வத்தால் வரும் துன்பங்களைப் போக்க வெற்றிலை பாக்கு காணிக்கையாகக் கொடுக்க வேண்டும். இந்த ஒற்றை முலைச்சியே திருமாவுண்ணியாகவே இருக்கலாம். சிலப்பதிகார உரையில் சொல்லப்பட்ட வரிக்கூத்துகளில் ஒற்றை முலைச்சி என்றோரு கூத்து காணப்படுகின்றது. உரை எழுதப்பட்ட காலத்தில் கண்ணகிக் கதையுடன் சேர்ந்ததோ, அதற்கு வேறானதோ ஆகிய ஒரு கதை ஒற்றை முலைச்சியைப் பற்றி வழங்கியிருக்க வேண்டும். இது நற்றிணையில் வரும் வேங்கை மரத்தினடியில் நின்ற திருமாவுண்ணியாகவும் இருக்கலாம். நற்றிணையில் வரும் வேங்கை மரத்தினடியில் நின்ற திருமாவுண்ணி, சிலப்பதிகாரத்தில் வரும் வேங்கை மரத்தினடியில் நின்ற கண்ணகி, கோங்க மரத்தினடியில் நின்ற இயக்கி, மலையர்கள் சொல்லும் பாலை மரத்தடியில் நிற்கும் தெய்வமாகிய ஒற்றை முலைச்சி ஆகிய தேவதைகள் எல்லாம் மலர் மரத்தடியே நிற்கும் யக்ஷித் தெய்வத்தைத் (Tree-goddess) தழுவியே கற்பிக்கப்பட்ட பெண் தெய்வங்கள் என்று கொள்ளவேண்டும். ஆதலின், கண்ணகி வேங்கை மரத்தினடியில் தெய்வமாக மாறியது சைனர்களின் யக்ஷித் தெய்வத்தோடு தொடர்புடையது என்று கருதவேண்டும்[13] சைனர்களின் பத்மாவதி தெய்வமும் யக்ஷித் தெய்வமாகவும் பார்சுவ நாதரின் சாசனத் தேவதையாகவும் கருதப்படுவாள் மற்றும் பத்மாவதி என்ற அப்சரஸைப் புத்தரின் பணிப் பெண்ணாக பார்ஹூத் ஸ்தூபத்தில் காணப்பட்ட கல்வெட்டு கூறுகின்றது. இந்தப் பத்மாவதியை அதே ஸ்தூபத்தில் சிற்பமாகவும் காட்டியுள்ளனர். பிங்கலந்தை நிகண்டில் இந்த யக்ஷித்தெய்வம் தரும தேவதை என்ற பெயருடன்

கூறப்படுகின்றது. தரும தேவதையின் பெயர் மரகதவல்லி, பூகநிழலினள், இயக்கி, பகவதி, அருகனைத் தரித்தாள், அறத்தின் செல்வி, அம்பாலிகை என்று நிகண்டு கூறுகின்றது. இப் பெயர்களில் மரகதவல்லியும், பூகநிழலினள்என்ற இரு பெயர்களும் யக்ஷித் தெய்வத்தைப் பாக்குமரக்குலையினடியில் காட்டும் வழக்கம் உண்டு. இவளே பூகநிழலினள் ஆவள். இந்தப் பூக நிழலினளான யக்ஷியை, நிகண்டு இயக்கியென்றும் பகவதியென்றும் கூறுவதைக் கவனிக்க வேண்டும். ஆதலின் பகவதியான கண்ணகி ஒரு வகையில் யக்ஷித் தெய்வமாகும். சூடாமணி நிகண்டு பூக நிழலுற்ற வஞ்சி என்று குறிப்பிடுகின்றது.

மலைவாணரே கண்ணகி தெய்வமானதைப் பார்த்துச் செங்குட்டுவனுக்குக் கூறியதாகச் சிலப்பதிகாரத்தில் வருகின்றது. பகவதி வழிபாடும் தமிழர் என்று கருதப்படும் மலையரால், மலைவாணரால் முதலில் மலை நிலத்தில் பரப்பப்பட்டு பின்னர், முல்லை நிலத்துக் குறும்பர்களால் பிற இனத்தாரிடம் பரப்பப்பட்டிருக்கலாம். அதனால்தான், எல்லா பகவதிகளுக்கும் முந்தின பகவதி, முதல் பகவதி குறும்ப பகவதி என்ற கருத்து கேரளத்தில் நிலவுகின்றது. இனக் குழு மக்களால் (Tribal groups) தொழப்பட்ட கண்ணகியாகிய பகவதியின் வழிபாடு, பின்னர் மற்ற சாதியினராலும், கடைசியில் வைதிக மதத்தைச் சேர்ந்த நம் பூதிரிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதைக் காணலாம். இனக்குழு மக்களின் பகவதி தெய்வத்தை வழிபட்ட நம் பூதிரிகளும், உயர்ந்த சாதியினரும் கொடுங்களூரில் அந்த இனக்குழு மக்களையே சாதியின் பேரால் அவர்களுடைய பகவதி தெய்வத்தை வழிபட, எல்லா நாட்களிலும் அனுமதிக்காததை இடைக்காலம் வரையில் காண்கிறோம், இப்பொழுது உள்ள பகவதி தெய்வ வழிபாட்டில் ஆரியர்க்கு முற்பட்ட பழங்கற்காலத்துத் தாய்த்தெய்வ வணக்கமும், பழந்தமிழரின் கொற்றவை வணக்கமும், இந்து மதத்தின் சக்தி. காளி வணக்கமும், சைனரின் பத்மாவதி

வணக்கமும் புத்த மதத்தினரின் தாரா தேவி வணக்கமும் கலந்து இருக்கின்றன என்று கூறலாம்.

அடிக் குறிப்புகள்

1. செக்கிப்பூ சங்ககாலத்தில் வேலன் வழிபாட்டிலும், மலையாளத்தில் தற்காலம் இனக்குழுத் தெய்வங்களின் வழிபாட்டிலும் மிக முக்கியமான பூசைக்குரிய பூவாகக் கருதப்படுவது கவனிக்கத்தக்கது.

2. சங்க இலக்கியத்தில் வரும்பெருஞ்சோறு கொடுக்கும் வழக்கம் இந்த முறையான பலியென்று கருதலாம்.

3. கோவலன் கண்ணகி இருவரும் ஆயிரஞ் செட்டியார் என்ற வணிகச் செட்டியார் சாதியில் பிறந்ததாகத் தமிழ்நாட்டிலும் கருதுவதுண்டு.

4. சிலப்பதிகாரம்—கொலைக்கள காதை—வரி 125-6 உரை

5. வாழ்த்துக் காதையில் கண்ணகியே தான் பாண்டிய அரசனின் மகளாகக் கூறிக் கொள்வதைக் காணலாம். ஆனால், கட்டுரைக் காதையில் கண்ணகி முந்தையப் பிறப்பில் சிங்கபுரத்தில் கொலைபட்ட சங்கமன் மனைவி நீலியென்று கூறப்படுவதைக் காணலாம். ஆதலின், கண்ணகி பாண்டியனின் மகளானது மற்றொரு பிறப்பில் என்று கொள்ள வேண்டும். மலையர்கள் கண்ணகியின் முற்பிறப்புப் பெயரால் நீலியை வணங்குவதைக் காணலாம். நீலியென்ற பெயர் காளிக்கும். பகவதிக்கும் பெயராக நிகண்டுகள் கூறுகின்றன.

6. சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் கொற்றவையின் அடையாளமாக வாளை ஏந்திச் செல்பவளை வெள்வாளுழத்தி என்று அழைப்பதைக் காணலாம்

7. காட்சிக் காதை—வரிகள்—57—62.

8. அரங்கேற்றுக் காதை—வரி 12-25—அடியார்க்கு நல்லார் உரை.

9. விஷாரிகாவில் மந்திரம் சொல்லும் செட்டியார்களைப் போன்ற ஏழூர் செட்டியார்கள் கன்னியா குமரி மாவட்டத்தில் உள்ளனர். அவர்கள் குல தெய்வமாக ஒடுப்பறை நாகரம்மனைத் தொழுகின்றனர். இவர்கள் சாதியில் யாரையும் பாம்பு கடித்துச் சாகடிக்காது என்ற நம்பிக்கை உண்டு. இந்த நாகரம்மன் பத்மாவதியாக இருக்கலாம்.

10. Information on Tara from the article 'Tara' by A.K Bhattacharya in the publication "The Sakti Cult and Tara" Edited by Prof D. C. Sircar University of Calcutta-*1968*.

11. கொற்றவையை வெற்றியைத் தரும் தெய்வம் என்று தமிழர் கருதினர். ஆனால், துர்க்கை நெருப்பு, நீர், பாம்பு, ஆறலைக் கள்வர் முதலிய அபாயங்களிலிருந்து தடுப்பவள் என்று வட நூலார் கருதினர். ஆறலைக் கள்வர் தங்களுக்குக் கொள்ளை தரும்படி கொற்றவையைத் தொழுதனர். ஆனால், ஆறலைக் கள்வரின் கொள்ளையிலிருந்து காப்பாற்றும்படி துர்க்கையை வழிபட்டதாக வடநூல்கள் கூறும். ஆதலின் கொற்றவையும், துர்க்கையும் தொடக்கத்தில் வெவ்வேறு தெய்வங்களாகும்.

12. Information from the article "The Tara of Chandrad-wipa by Prof. D.C. Sircar in the publication "The Sakti Cult and Tara" Edited by prof.D C. Sircar—University of Calcutta-*1968*.

13. தாரை என்ற தெய்வம் கடலில் விழுந்தோரைக் காப்பாற்றும் தெய்வமாகப் பௌத்தர்களால் முதலில் வணங்கப்பட்டது. மணிமேகலா தெய்வமும், இதேபோன்ற கடல் தெய்வம் என்பது சிலப்பதிகாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆதலின் தாரையும் மணிமேகலையும் ஒரே வகையான தெய்வங்கள். மாதவியின் முற்பிறப்புப் பெயர் தாரையென்று மணிமேகலை கூறுகின்றது.

14. The art of Indian Asia—Henrich Zimmer—Bollingen Series.

15. பார்சுவநாதர், பத்மாவதி ஆகிய சைனரின் தெய்வங்கள் எட்டு, ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுச் சிற்பங்களில் தமிழ்நாட்டில் காணப்படுகின்றன. கல்வெட்டிலும் இந்தத் தெய்வங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. சோழவாண்டிபுரம், கண்டராத்தியன் காலத்துக் கல்வெட்டு (10 ஆம் நூற்றாண்டு பத்மாவதிக்குத் தேவாரம் (கோயில்) எழுப்பியதைக் குறிப்பிடுகின்றது.

3. கோத்தர்களின் சாவு விழா

கோ. சுப்பையா, எம்.ஏ.

[கோத்தகிரி நகரிலும், அதன் சுற்றுப்புற மலைச்சாரல்களிலும் வசிப்பவர்கள் கோத்தர்கள் என்னும் இனக்குழு மக்கள். அவர்களது மொழிக்கு வரிவடிவமில்லை. அவர்கள் பேசும் மொழி திராவிட இன மொழி. தமிழோடு நெருங்கிய ஒப்புமையுடையது. அவர்களது மொழியைக் கற்று அம் மொழிக்கு வருணனை இலக்கணம் எழுது வதற்குரிய ஆராய்ச்சியில் அண்ணாமலைப் பல் கலைக்கழகத்தில் மொழியியல் துறையில் ஆராய்ச்சி மாணவராக இருக்கும் கோ. சுப்பையா ஈடுபட் டிருக்கிறார். இவ்வாராய்ச்சிக்குரிய சான்றுகளைத் தேடும்பொழுது அவர்களது வாழ்க்கை முறையை யும் நுணுகி நோக்கி இருக்கிறார். அவரது ஆய்வின் விளைவாக இக் கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது.

—பதிப்பாசிரியர்.]

தமிழகத்தில் நீலகிரி மலையில் உள்ள பகுதியிலும், கொடைக்கானல் மலைப்பகுதியிலும்[1] பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இப் பழங்குடி மக்களுள் நீலகிரியில் வாழும் கோத்தர்கள் மிகவும் முக்கியமானவர்கள். ஒவ்வொரு பழங் குடி மக்கட்கும் தனிப் பண்பாடு உண்டு. திராவிட இனத்தைச் சார்ந்த இப் பழங்குடி மக்கள் கோத்தம் (Kota)[2] எனும் தென் திராவிட மொழியைப் பேசுகின்றனர். இவர் களுடைய பழக்க வழக்கங்கள் நீலகிரியில் வாழும் ஏனைய பழங்குடி மக்களது பழக்க வழக்கங்களினின்று வேறுபட்டன வாகும். இவர்களுடைய சாவுச் சிறப்பு (Funeral festival) மிகவும் குறிப்பிடத்தக்கது. இதனை இவண் விரிவாகக் காண்போம்.

இவர்களுடைய சாவுச் சிறப்பு இரண்டு வகைப்படும். இறந்த அன்றே இறந்தவருக்குச் செய்யும் ஈமச் சடங்கு ஒரு வகை; மற்றொன்று இறந்தவரின் ஆவி நல்லுலகம் அடை

வதற்காக மற்றொரு நாளில் இவர்கள் கொண்டாடும் திருவிழாவிற்கு முன்—செய்யப்படும் சடங்காகும். முன்னை யதை, ''பச்தாவ்'' என்றும், பின்னையதை ''வர்ல்தாவ்'' என்றும் அவர்கள் மொழியில் குறிப்பிடுகின்றனர். ஓராண் டில் பல பச்தாவ்கள் ஏற்படலாம். ஆனால், வர்ல்தாவ் ஆண்டிற்கொரு முறைதான் வரும்.

ஊரில் ஒருவர் இறந்து விட்டால், அவருடைய இறப்புச் செய்தி ''கொல், பர்தட்க்'' முதலிய இசைக் கருவிகள் மூலம் இறப்பை உணர்த்தும் பண்ணில் (இசை) அறிவிக்கின் றனர். அன்று ஊர் மக்கள் ஊர்ப் பொதுவாகச் சுள்ளி விறகு களும், பெரிய விறகுக் கட்டைகளும், அரிசி, பருப்பு, காய் கறிகளோடு சேர்த்துக் கொடுப்பார்கள். யார் வீட்டிலும் தனியாகச் சமையல் செய்ய மாட்டார்கள். சுள்ளி விறகும், காய்கறிகளும், சாவிற்குப் பெண் கொடுக்கும் பரிசாகவும், மற்றவை— விறகுக் கட்டையும், அரிசியும் பருப்பும்—ஆண் கொடுக்கும் பரிசாகவும் ஏற்றுக் கொள்ளப்படும்.

புதிய கட்டில் செய்து, இறந்தவரை அதில் படுக்க வைப்பார்கள். அக் கட்டிலின் நான்கு முனைப்பக்கங்களிலும் நான்கு நீண்ட மூங்கில் கம்புகளைச் சேர்த்துக் கட்டுவார் கள். மூங்கிலின் மேல் முனைகள் நான்கையும் சேர்த்து இணைக்கக் குறுக்காகவும், நெடுக்காகவும் மூங்கிலை வைத்துக் கட்டுவார்கள். அதற்கு மேல் நான்கு மூங்கில்களை இணைத்துக் கோபுர வடிவமாகச் செய்வார்கள். கோபுரம் போன்ற வடிவு உள்ள பகுதியை வெள்ளைத் துணியால் சுற்றுவார்கள். சிவப்பு நாடாவினால் அத் துணியை அலங் கரிப்பார்கள். குஞ்சம் போன்று வட்ட வடிவமாகத் துணியைக் கோபுர வடிவப் பகுதிக்கு மேலுள்ள பகுதியில் (கம்பில்) சுற்றுவார்கள். அதற்கு மேல் குடை ஒன்று கட்டப்படும். இக்கட்டிலானது ஒரு சிறு தேர்போல் காட்சி அளிக்கும். இதனை இவர்கள் குடிகட்[3] என்று கூறுகின்றனர். இதனை வீட்டின் முன்னுள்ள வாயிற்புறத்தில் வைத்திருப் பார்கள்.

இறந்தவரைக் குளிப்பாட்டி, உடலில் துணி போர்த்து கிறார்கள். அக்கட்டிலில் இறந்தவரைப் படுக்க வைக்கின்ற னர். உறவினர்கள் அவருடைய நெற்றியில் மூன்று வெள்ளிப் பணத்தை வைக்கின்றனர். உறவினர்கள் வந்த வுடன், சில சடங்குகளைச் செய்கின்றனர். ஒரு பையில் அரிசி, பருப்பு முதலியவற்றைப் போட்டு, அதை ஒரு சிறு பொதி போல் செய்கிறார்கள். உறவினர்கள் அப் பொதி யைத் தோளில் சுமந்து கொண்டு, இறந்தவரை மும்முறை வலம் வருவார்கள். இவர்களோடு மற்றவர்களும் சேர்ந்து, கொல், பர் முதலிய இசைக் கருவிகளை முழக்கிக் கொண்டு வலம் வருவார்கள். கடைசியில் ஒவ்வொருவரும் தன் நெற்றி இறந்தவரின் கால் பெருவிரலைத் தொடும்படி தலை தாழ்த்தி வணங்குவார்கள். இச்செயலுக்கு, "தாவ்மூட்ம்" என்று சொல்கின்றனர்.

அன்று முழுவதும் இறப்பை உணர்த்தும் சாவு இசையை முழக்கிக் கொண்டேயிருப்பார்கள். சுமார் மாலை மூன்று மணிக்கு இறந்தவரைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்வார்கள். சுடுகாட்டிற்குத் "தூலி" என்று பெயர். இறந்தவரை எரித்து விடுவார்கள். சுடுகாட்டில் ஊர்மக்கள் கொடுத்த விறகுக் கட்டைகளையும், சுள்ளி விறகுகளையும் கொண்டு சிறுமேடை அமைப்பார்கள். தூலியின் ஓரத்தில் சிறு சுள்ளிகளின் உதவியால் நெருப்பு மூட்டுவார்கள்.

இறந்தவரை எரிப்பதற்கு முன், சில சடங்குகள் நடை பெறும். இறந்தவர் பெண் என்றால், ஆண் தன் உடை களைக் கழற்றி வேறு உடை அணிவான். இறந்தவர் ஆண் என்றால், மனைவி, தன் ஆடை நகைகள் முதலியவற்றைக் களைந்து விடுவாள். வேறு உடை அணிவாள். தலைப் பின்னலையும் களைந்து விடுவாள், கடைசியில் குடிகட் டோடு, இறந்தவரை விறகு மேடை மீது வைத்து எரிப் பார்கள். பின்னர், அனைவரும் ஊருக்குத் திரும்பி விடு வார்கள். அன்று ஊர்மக்கள் கொடுத்த அரிசி, பருப்பு

முதலியவற்றைக் கொண்டு சமையல் செய்து, எல்லோருக்கும் உணவு கொடுப்பார்கள்.

மறுநாள் மூவர் சுடுகாட்டிற்குச் செல்வார்கள். அங்கு இறந்தவரின் சாம்பல், மற்றும் தலை, கைகால் எலும்புகளை எடுத்துக் கொண்டு ஆற்றிற்குப் போவார்கள். ஆற்றில் இவற்றை வைத்துத் தேங்காய், பழம் முதலியவற்றோடு கூட ஆராதனை செய்வார்கள். எலும்புகளை "வர்தால்தல்ம்"[4] எனுமிடத்தில் பத்திரப்படுத்திய பின், ஆற்றில் குளித்து விட்டு ஊருக்குத் திரும்புவார்கள். சாவு நிலை (தீட்டு) மூன்று நாட்களுக்கு மேற் கொள்ளப்படும். இம்மூன்று நாட்களுக்கும் யாதொரு வேலையும் செய்ய மாட்டார்கள். இத்தகைய சாவுச் சிறப்பிற்குப் பச்தால்[5] என்று கூறுவார்கள்.

பழங்காலத்தில் தொதுவர்களும் மற்றவர்களும் இவர்களுடைய சாவு விழாவிற்கு வருவார்கள். இறந்தவருக்காக எருமைகளைப் பலியிடும் வழக்கம் இவர்களிடையே இருந்தது. ஆனால், அப்பழக்கம் இன்று வழக்கில் மறைந்து விட்டது.

பூசாரியின் வீட்டில் யாரேனும் இறந்து விட்டால், அவர் தம் கோயில் காரியங்களைச் செய்ய மாட்டார். அவ்வருடம் திருவிழாவும் நடைபெறாது. தேர்கார்ள் எனும் மருளாடி மற்றொருவரைப் பூசாரியாக நியமிப்பான். அவ்வாறு நியமிக்கப்பட்டவர் கோயில் காரியங்களையும், திருவிழாவையும் நடத்துவார்.

ஒவ்வோர் ஆண்டிலும் கூட்ல் மாதத்தில் குலதெய்வம் கம்பட்டராயருக்கு விழா எடுப்பார்கள். இவ் விழாவிற்கு, பாப்ம்[6] என்று பெயர். இவ் விழாவிற்கு முன், ஒரு சாவுச் சிறப்புக் கொண்டாடப்படும். அவ்வாண்டில் இறந்தவர்களுக்காக, அவர்களுடைய ஆவிகள் நல்நிலை அடைவதற்காகக் கொண்டாடப்படுகிறது. இதனை வர்தால்[7] என்று அழைக்கின்றனர். இத் தருணத்தில் கணவனை இழந்த

பெண் புத்தாடை அணிந்து, தலைவாரிப் பின்னிக்கொள்வாள். அவள் விரும்பினால், மறுமணம் செய்து கொள்ளலாம்.

இந்த ''பாய்ம்'' எனும் பண்டிகை எட்டு நாட்களுக்கு நடைபெறும். இக் காலத்தில் புத்தாடை அணிந்து, மக்கள் மகிழ்வோடு இருப்பார்கள். ஒவ்வொரு நாளும் ஆடலும் பாடலும் தெய்வ வழிபாடோடு இடம் பெறும். புதுமணம் புரிவோர்களும், மறுமணம் செய்வோர்களும் தங்கள் காரியங்களை இச் சமயத்தில் நிறைவேற்றிக் கொள்வார்கள், ஊருக்கும், மக்கட்கும் நன்மை ஏற்பட இறைவனுக்கு வேண்டுதல் இடுவார்கள்.

உருவம் இல்லாத இறைவனை வழிபடுகின்றனர். விதவை மறுமணம், மணமுறிவு (விவாகரத்து), காதல் மணம் முதலியன இவர்களிடையே உண்டு. மனிதன் இறந்தபின் ஆவியாக உயிர் வாழ்கிறான் என்றும், வானுலக வாழ்வு உண்டு என்றும் கோத்தர்கள் நம்புகின்றனர். இம் மக்கள் மிகுந்த தெய்வ பக்தியுடையவர்கள்.

மேற்கோள்களும் ஆதாரங்களும்

1. நீலகிரியில் கோத்தர்கள், தொதுவர்கள், பளியர்கள், இருளர்கள், குரும்பர்கள், கசவர்கள் எனப் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். கொடைக்கானலில் பழியர்கள் (பழையர்) புலையர்கள் என்ற பழங்குடி மக்கள் வாழ்கின்றனர்.

2. திராவிட மொழிக் குடும்பம் முப்பெரும் பிரிவுகளை உடையது. அதில் தென்திராவிட மொழிக் குடும்பம் ஒன்று. இது தமிழ், கன்னடம், மலையாளம், கோத்தம், தொதுவம், படகு, கோதவம் (கூர்க்கு) என்ற மொழிகளை தன்னகத்தே கொண்டுள்ளது. கோதவம் மொழியைக் குடகு என்றும் கூறலாம்.

3. குடிகட் என்று கூறப்படுவது இன்று நம்மிடையே இறந்தவருக்காக நாம் செய்கின்ற பாடையைப் போன்ற தாகும்.

4. வர்தாவ்தல்ம் என்னுமிடம் ஊரிலிருந்து சற்றுத் தொலைவிலுள்ள மைதானம். அங்குதான், இறந்தவர் களின் ஆவிகள் நல்லுலகம் அடைய ஒரு சிறு சாவுச்சிறப்பு நடைபெறும்.

5. பச்தாவ் என்பது இறந்தவரை வைத்துக் கொண்டு, இறந்த அன்று செய்கின்ற ஈமச் சடங்காகும். இதனைப் பசுமையான சாவுச்சடங்கு எனப் பொருள் கொள்ளலாம்.

6. பாப்ம் என்பது கோத்தர்களின் குலதெய்வம் கம்பட்டராயருக்குக் கொண்டாடப்படும் பண்டிகையாகும். இது நம் பொங்கல் பண்டிகை போன்று சிறப்புடையது.

7. வர்தாவ் என்பது இறந்தவர்களின் எலும்புகளை வைத்துக் கொண்டு, அவருடைய ஆவி நல்லுலகம் அடையத் தங்களின் பண்டிகைக்கு முன் கொண்டாடப்படுகின்ற ஒரு சிறு சாவு விழா. இதனை நாம் ஓராண்டுக் கழித்து இறந்த வருக்குச் செய்கின்ற திவசத்திற்கு ஒப்பிடலாம்.

4. கோத்தர்களின் உறவுமுறைச் சொற்கள்

கோ. சுப்பையா எம். ஏ.,

[1]கோத்தர்கள் எனும் பழங்குடி மக்கள் நீலகிரியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களது பழக்க வழக்கங்களும், மொழியும் மற்றப் பழங்குடி மக்களினின்றும் வேறு பட்டவை ஆகும். இவர்கள் தங்களது மொழியை, "கோவ் மான்த்" என அழைக்கின்றனர். இவர்கள் பேசும் கோத்த மொழி தென் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த தாகும். மானிடவியலாரில் சிலர் இஃது கன்னட மொழியின் கிளைமொழி எனக் கூறியுள்ளனர். ஆனால்,[2] பேராசிரியர் எமனோ அவர்களது ஆய்வினின்றும்,[3] என்னுடைய மொழி ஆய்வினின்றும் இஃது தனித் திராவிடமொழி என்றும், எம்மொழியின் கிளைமொழியல்ல என்றும் தெரியவருகின் றன. இவர்களிடையே நிலவும் உறவு முறையை (Kinship)ப் பற்றி இவண் காண்போம்.

இரத்தக் கலப்பாலும், பெற்றோர் கால்வழியாலும், மணவுறவினாலும், ஒரே குழுவினர் ஒரே இடத்தில் வாழும் தன்மையாலும் உறவு முறை அமைகிறது. சமுதாயத்தில் சமுதாய நடைமுறை அடிப்படையில் இருந்து எழுவது தான் உறவுமுறைப் பெயர்கள் என டாக்டர் ரிவர்ஸ் கூறுகிறார்கள். சமுதாயத்தில் ஓரின மக்களின் பண்பாட்டு வரலாற்றை எடுத்து இயம்புவதற்கு உறவுமுறைப் பெயர் கள் பெரிதும் பயன்படுகின்றன என டாக்டர் ஐராவதி கர்வே கூறுகிறார்கள்.

கோத்தர்களிடையே தந்தைக்கால்வழி அமைப்பும் (Patrilineal), தாய்க்கால்வழி அமைப்பும் (Matrilineal) உள்ளன.

எண்	உறவு முறைப் பெயர்	விளிக்கும் முறை	உறவு அமைப்பு	பேசுபவர்	குறிப்புகள்
1.	பேரீண்	பேரீணா/	தந்தையின் தந்தை	ஆ, பெ	—
		பேரீணோ	தாயின் தந்தை	,,	—
2.	பேரவ்	பேரவா/	தந்தையின் தாய்	,,	—
		பேரவோ	தாயின் தாய்	,,	—
3.	அய்ன்	அயா/	தந்தை:	,,	தொடாள்,
		அயோ	தந்தையின் சகோதரர்	,,	குளாள் என்பன
			தாயின் சகோதரியின்		முறையே மூத்த,
			கணவன்	,,	இளைய, என்பவற்றைக்
			வளர்ப்புத் தந்தை	,,	குறிக்கும்
4.	அவ்	அவா/	தாய்:	,,	தொடாச்
		அவோ	தாயின் சகோதரி	,,	குளாச் என்பன
			தந்தையின் சகோதரரின்		முறையே மூத்த,
			மனைவி	,,	இளைய என்பவற்றைக்
			வளர்ப்புத் தாய்		குறிக்கும்.

கோத்தர்களிடையே தந்தைக்கால்வழி அமைப்பும் (Patrilineal), தாய்க்கால்வழி அமைப்பும் (Matrilineal) உள்ளன.

எண்	உறவு முறைப் பெயர்	விளிக்கும் முறை	உறவு அமைப்பு	பேசுபவர்	குறிப்புகள்
5.	அண்	அணே	மூத்த சகோதரன்:	,,	தன்வயதில் மூத்தவராயின்
			தந்தையின் சகோதரரின் மகன்	,,	
			தாயின் சகோதரியின் மகன்	,,	
6.	கராள்	கராளே	இளைய சகோதரன்:	,,	தன் வயதில் இளையவராயின்
			தந்தையின் சகோதரரின் மகன்	,,	
			தாயின் சகோதரியின் மகன்	,,	
7.	அக்ன்	அகா/ அகோ	மூத்த சகோதரி:	,,	தன் வயதில் மூத்தவராயின்
			தந்தையின் சகோதரரின் மகள்	,,	
			தாயின் சகோதரியின் மகள்	,,	

8.	கடாச்	கடாசே	இளைய சகோதரி:	,,	தன் வயதில் இளையவராயின்
			தந்தையின் சகோதரரின் மகள்	,,	
			தாயின் சகோதரியின் மகள்	,,	
9.	மாம்ன்	மாமா/ மாமோ	தந்தையின் சகோதரியின் கணவன்	ஆ,பெ.	
			தாயின் சகோதரர்	,,	
			மனைவியின் தந்தை	ஆ	
			கணவனின் தந்தை	பெ	
10.	மேய்ம்	மேய்மே	தந்தையின் சகோதரி	ஆ,பெ	
			தாயின் சகோதரரின் மனைவி	,,	
			மனைவியின் தாய்	ஆ	
			கணவனின் தாய்	பெ	
11	அண்தம்ன்	அண்தமா/	கணவனின் சகோதரர்	பெ	
		அண்த மோ	சகோதரியின் கணவனின் சகோதரர்	பெ	

கோத்தர்களிடையே தந்தைக்கால்வழி அமைப்பும் (Patrilineal), தாய்க்கால்வழி அமைப்பும் (Matrilineal) உள்ளன.

எண்	உறவு முறைப் பெயர்	விளிக்கும் முறை	உறவு அமைப்பு	பேசுபவர்	குறிப்புகள்
12.	அய்ள்/ (அய்ள் பாவன்)	அய்ளே/ (அய்ள் பாவா அய்ள் பாவோ)	மனைவியின் சகோதரர்	ஆ	
			சகோதரரின் மனைவியின் சகோதரர்	ஆ	
13.	நாதுாய்ன்	நாதுாயா/ நாதுாயோ	கணவனின் சகோதரர்	பெ	
			மனைவியின் சகோதரி	ஆ	
14.	மொக்	மொகே	மகன்:	ஆ, பெ	
			கணவனின் சகோதரரின் மகன்	பெ	
			சகோதரியின் மகன்	பெ	
			மனைவியின் சகோதரியின் மகன்	ஆ	

15.	மோள்	மோளே	மகள்:	ஆ, பெ
			கணவனின் சகோதரரின் மகள்	பெ
			சகோதரியின் மகள்	பெ
			மனைவியின் சகோதரியின் மகன்	ஆ
16.	மீண்வெட்	மீண் வெடே	மகனின் மனைவி	ஆ, பெ
			சகோதரியின் மகள்	ஆ
			சகோதரரின் மகள்	பெ
			கணவனின் சகோதரியின் மகள்	பெ
			மனைவியின் சகோதரரின் மகள்	ஆ
17.	மோளான்	மோளானே	மகளின் கணவன்	ஆ, பெ
			கணவனின் சகோதரியின் மகன்	பெ
			மனைவியின் சகோதரரின் மகன்	ஆ
18.	ஆள்	ஆளோ (ஆளே)	கணவன்	பெ
19.	பெட்	பெடே	மனைவி	ஆ
20.	மாள்	மாளே	சகோதரத்துவ உரிமை கொண்ட நண்பன்	ஆ

1. பேரீள்:- தந்தையின் தந்தையையும், தாயின் தந்தையையும் இச் சொல்லால் அழைக்கின்றனர்.

2. பேரவ்:- தந்தையின் தாயையும், தாயின் தாயையும் இச் சொல்லால் குறிக்கின்றனர்.

3. அய்ன் :- தந்தையும், தந்தையுடன் பிறந்த சகோதரர்கள், தாயுடன் பிறந்த சகோதரியின் கணவன் ஆகியோர்கள் விளிக்க இச்சொல் பயன்படுகிறது. அவர்கள் தந்தையின் வயதிற்கு மூத்தவர் எனில், ''தொடாள்'' எனும் சொல்லையும், தந்தையின் வயதிற்கு இளையவரெனில் ''குளாள்'' எனும் சொல்லையும் சேர்த்து முறையே ''தொடாளய்ன்'' எனவும் ''குளாளய்ன்'' எனவும் அழைக்கின்றனர்.

4. அவ்:- தாயையும், தாயின் சகோதரியையும், தந்தையின் சகோதரரின் மனைவியையும் இச் சொல்லால் குறிக்கின்றனர். தாயின் வயதிற்கு மூத்தவரெனின் ''தொடாச்'' எனும் சொல்லையும், தாயின் வயதிற்கு இளையவரெனின் 'குளாசவ்' எனவும் அழைக்கின்றனர்.

5. அண்:- தன்னுடன் பிறந்த இளையவரையும், தாயின் சகோதரியின் மகனையும், தந்தையின் சகோதரரின் மகனையும்-தன் வயதில் மூத்தவர் எனின் இச்சொல்லால் விளிக்கின்றனர்.

6. கடாள்:- தன்னுடன் பிறந்த மூத்தவரையும், தாயின் சகோதரியின் மகளையும் தந்தையின் சகோதரரின் மகளையும்- தன் வயதில் இளையவரெனின் இச்சொல்லால் விளிக்கின்றனர்.

7. அக்ன்:- தன்னுடன் பிறந்த மூத்தவரையும், தாயின் சகோதரியின் மகளையும், தந்தையின் சகோதரரின் மகளையும்-தன்வயதில் மூத்தவரெனின் இச்சொல்லால் அழைக்கின்றனர்.

8. கடாச்:- தன்னுடன் பிறந்த இளையவரையும், தந்தையுடன் பிறந்த சகோதரரின் மகளையும், தாயின் சகோதரியின் மகளையும் தன் வயதில் இளையவரெனின் — இச்சொல்லால் குறிக்கின்றனர்.

9. மாமன்:- தாயுடன் பிறந்த சகோதரர், தந்தையின் சகோதரியின் கணவன், தன் மனைவியின் தந்தை, தன் கணவனின் தந்தை ஆகியோர்களைக் குறிக்க இச்சொல் பயன்படுகிறது.

10. மேய்ம்:- தந்தையின் சகோதரி, தாயின் சகோதரரின் மனைவி, தன் மனைவியின் தாய், தன் கணவனின் தாய் ஆகியோர்களை இச்சொல்லால் அழைக்கின்றனர்.

11. அய்ள்:- தன் சகோதரியின் கணவன், தன் மனைவி (அய்ள் யின் சகோதரர் ஆகியவர்களைக் குறிக்க பாவ்ன்) ஆண்கள் பயன்படுத்தும் சொல்.

12. அன்தம்ன்:- தன் கணவனின் சகோதரர் அல்லது தன் சகோதரியின் கணவன் இவர்களை இச்சொல்லால் கூறுகின்றனர்.

13. நாதூய்ன்:- தன் கணவனின் சகோதரிகள் அல்லது தன் சகோதரரின் மனைவியை இச்சொல்லால் பெண்கள் அழைக்கின்றனர். தன் மனைவியின் சகோதரிகளை அழைக்கும்போது ஆண்கள் இச்சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

14. மொக்:- தன் மகன், தன் சகோதரியின் மகன், தன் மனைவியின் சகோதரியின் மகள் இவர்களைக் குறிக்க ஆண் இச்சொல்லை உபயோகிக்கின்றான். பெண் தன் மகன், தன் சகோதரியின், தன் கணவனின் சகோதரரின் மகள் ஆகியோர்களைக் குறிக்க இச்சொல்லைப் பயன்படுத்துகிறாள்.

15. மோள்:- தன் மகள் தன் சகோதரியின் மகள், தன் கணவனின் சகோதரரின் மகள் ஆகியோர்களை இச்சொல்லால் பெண் கூறுவாள். தன் மகள், தன் சகோதரரின் மகள், தன் மனைவியின் சகோதரியின் மகள் ஆகியவர்களைக் கூறுவதற்கு ஆண் இச்சொல்லைப் பயன்படுத்துகிறான்.

16. மீண்வெட்:- தன் மகனின் மனைவி, தன் சகோதரியின் மகள், அல்லது தன் மனைவியின் சகோதரரின் மகள் ஆகியோர்களைக் கூற ஆணும், தன் சகோதரரின் மகள், தன் கணவனின் சகோதரியின் மகள் ஆகியோர்களைக் கூறப்பெண்ணும் இச்சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

17. மோளாள்:- தன் மகளின் கணவன், தன் சகோதரரின் மகள், தன் கணவனின் சகோதரியின் மகள்—இவர்களைக் கூறப் பெண்ணும், தன் சகோதரியின் மகள், தன் மனைவியின் சகோதரரின் மகள் ஆகியோர்களைக் குறிக்க ஆணும் இச்சொல்லைக் கையாளுகின்றனர்.

18. ஆள்:- பெண்ணின் கணவன்.

19. பெட்:- ஆணின் மனைவி

20. மாள்:- தான் மணம் செய்யும் இல்லத்தில் அல்லது ஊரில் தன்னுடன் மணம் செய்யும் உரிமையுடைய உயிர் நண்பன். இவருக்குத் தன் இல்லத்தில் சகலவிதமான காரியங்களில் சம பங்கும் மரியாதையும் உண்டு.

மற்றவர்களை விளிக்கும்போது—தன் உறவு முறையுள்ளவர்களின் பெயர் னகரத்தில் முடிந்தால் பெண் 'ஓ' எனும் விளியுருபையும், ஆண் 'ஆ' எனும் விளியுருபையும் பயன்படுத்துகின்றனர். ஏனைய மெய்யில்(மகரம் அல்லது ளகரம் அல்லது ணகரம்)முடியும் உறவுமுறைப் பெயர்களில் ஆண், பெண் இருபாலரும்'ஏ' விளியுருபைப் பயன்படுத்துகின்றனர்.

உதாரணமாகக் கீழேயுள்ளவற்றைக் காணலாம்.

பெண்: அயோ நீம் இய்க்வாம்.
"ஓ! அப்பா! நீங்கள் இங்கே வாருங்கள்!"

ஆண்: அயா நீம் இய்க்வாம்.
"ஓ! அப்பா! நீங்கள் இங்கே வாருங்கள்!"

ஆண்-பெண்: கராளே நீ ஓகாதீ!
"ஏ! தம்பி நீ போகாதே!"

இவ்வாறு விளியுருபைப் பயன்படுத்தும் தன்மை குறிப்பிடத்தக்கது.

மற்ற கோகாலில் தனக்கு உறவினர்கள் இல்லையெனில், அக்கோகாலில் உறவு முறையை ஏற்படுத்திக் கொள்ளலாம். எப்படியெனில், கோத்தர் ஒருவரின் முழங்காலைத் தொட்டுத் தம் நெற்றி அவருடைய முழங்காலில் படும்படி வணங்குவார். அவரும் இதைப்போல் செய்வார். இப்படி அவர்கள் செய்யின் அவர்கள் இருவரும் உடன் பிறந்த சகோதரர்கள் போல் கருதப்படுவார்கள். இதற்குப் பின் அவ்விருவரும் ஒரே வீட்டில் மணம் செய்து கொள்ளலாம். இத்தகைய உறவு முறையை "மாள்" என்று அழைக்கின்றனர். இத்தகைய வழக்கம் நீலகிரியிலுள்ள மற்ற பழங்குடி மக்களிடையே இல்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். கோத்தர்களது சமுதாய அமைப்பினை அறிவதற்கும் ஆராய்வதற்கும் உறவுமுறை பெரிதும் பயன்படுகின்றது.

அடிக் குறிப்புகள்

1. கோ. சுப்பையா-கோத்தர்கள்-ஓர் அறிமுகம்-69 மதுரை-1

2. Prof. M. B. Emeneau-Kota Texts, California University Publication, 44, California, U. S. A.
3. G. Subbiah-A Descriptive Grammar of Kota Language (Ph. D. in Progress), Annamalai University.

SELECTED BIBLIOGRAPHY

1. M. B. Emeneau-Dravidian Kinship Terms., Dravidian Linguistics, Ethnology and Folk Tales. Dept. of Linguistics, Annamalai University, Annamalai Nagar.
2. Dr. I. Karve-Kinship organization in India, Asia Publishing House, Bombay.
3. Dr. D N. Majumdar-Races and Cultures of India, Asia Publishing House, Bombay.
4. Dr. David. G. Mondolbaum-The Kotas in their social setting, Year Book of the American Philosophical Society 1957.
5. G. Subbiah-Field Notes on Kotas (Unpublished.)

5. தமிழ்நாட்டுப் பளியர்கள்

ஆ. சிவசுப்பிரமணியன்

[தமிழ் நாட்டின் மலைகளில் சில மக்கட் குழுக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் வளர்ச்சி குன்றிய பொருளாதார பண்பாட்டு நிலைகளில் உள்ளார்கள். தமிழ் நாட்டில் கற்கால நிலையிலிருந்து, நில உற்பத்தி முறைக்கு மக்கள் குழுக்கள் வளர்ச்சியுற்ற காலத்தில், வரலாற்று வெள்ளப் போக்கிலிருந்து ஒதுக்கிச் சிற்சில குழுக்கள் தனிமைப்பட்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ச்சி குன்றிய நிலையில் தேங்கி விட்டன. இவர்களில் பளியர்கள் உணவு தேடும் நிலையில் இருக்கிறார்கள். தற்கால மனிதனுக்கும் இவர்களுக்கும் உள்ள வேறுபாடு, இவர்கள் இரும்புக் காலத்தில் வாழ்வதுதான். இவர்கள் இரும்பை உணவு உற்பத்திக்குப் பயன் படுத்தவில்லை. அதனால் உற்பத்தி சக்திகளை வளர்த்துக் கொள்ள முடியவில்லை. இன்னும், உணவு தேடும் நிலையிலிருந்த நாகரிக ஆரம்ப வளர்ச்சிப் பண்பாட்டு நிலையில் உள்ளார்கள். இவர்கள் முன்னேற உணவு தேடும் நிலையிலிருந்து, உணவு உற்பத்தி நிலைக்குப் படிப்படியாக மாற வேண்டும். அதற்கு அவர்களுடைய உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியை வேகமாக்க வேண்டும். அவர்களுடைய இந் நிலைக்குக் காரணம், ஒரு வழிப் போக்கான சமுதாய வளர்ச்சியில் அவர்களுடைய உற்பத்திச் சக்திகள் மெதுவாக வளர்ந்ததேயாகும். நேரடி ஆய்வுகள் மூலம் கிடைத்த உண்மைகளை, மானிடவியல் அறிவையும், மார்க்சீய முறையியலையும் பயன்படுத்தி ஆ. சிவசுப்பிரமணியன் ஆராய்கிறார்.

—பதிப்பாசிரியர்]

0 : 1 திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களின் மேற்குப் பகுதியிலுள்ள மலைத் தொடர்களில், பளியர்கள் என்னும் இனக்குழு மக்கள் வாழ்கிறார்கள். சில இனக்குழு மக்களைப் போல இவர்களுக்குத் தங்கள்பூர்வீகத்தைப் பற்றிய புராண வரலாறு எதுவும் கிடையாது. தங்கள் முன்னோர்கள் யாவரும் பரம்பரையாகக் காட்டுப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் என்பதைத் தவிர வேறொன்றும் இவர்களுக்குத் தெரியாது. இனி, பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள இவர்களது சமுதாய வாழ்க்கையினையும், பொருளாதார வாழ்க்கையினையும் காண்போம்.

1 : 0 **பிறப்பு** : கருவுற்ற பளியப்பெண்ணைப் பேறுகால நேரம் நெருங்கியதும், பேறுகாலத்திற்கென்று உள்ள ஒரு தனிக்குடிசையில் இருக்கச் செய்துவிடுவர். குழந்தை பிறந்தவுடன் குழந்தையை வெந்நீரில் குளிப்பாட்டுவார்கள். எட்டு நாள்கள் அல்லது பதினாறு நாள்கள் வரை தாயும், சேயும் அக் குடிசையில் தனித்திருக்க வேண்டும்.

1 : 1 குழந்தை பிறந்து ஒன்பது அல்லது பதினேழாவது நாளில் தாயையும், குழந்தையையும் தங்கள் குடிசைக்கு அழைத்து வருவார்கள். அன்று தாயும், சேயும் வெந்நீரில் குளிப்பார்கள். இதனை ''வீடு கூட்டுதல்'' என்று கூறுவார்கள். அன்று வீட்டில் வழக்கமான உணவைத் தவிர வேறு சிறப்பான உணவு எதுவும் கிடையாது. ஒரு வருடம் கழிந்த பின்னரே குழந்தைக்குப் பெயரிடுவர்.

2 : 0 **பூப்பெய்துதல்** : பெண் பூப்பெய்தினால் பத்து அல்லது பதினைந்து நாள்கள் தனிக் குடிசையிட்டு அதில் இருக்கச் செய்வார்கள். பெண்ணின் தாயோ, உறவினரான வேறு பெண்ணோ துணையாக இருப்பார்கள். பதினொன்று அல்லது பதினாறாவது நாள் பெண்ணை வீட்டுடன் சேர்த்துக் கொள்வார்கள். அன்று அரிசிச்சோறு சமைத்து விருந்து நடக்கும். உறவினரும், ஊராரும் அரிசி அல்லது காய்கறிகள் கொண்டு வருவர். வந்த விருந்தினர்கள்

புது வேட்டியைத் தரையில் விரித்து அதில் அமருகின்றார்கள். பூப்பெய்திய பெண்ணையும், பெண்ணின் முறை மாப்பிள்ளையையும் அருகில் உட்காரச் செய்து, பெண்ணின் தாயாவது, பெண்ணின் அத்தையாவது வெந்நீரை இருவர் தலையிலும் ஊற்றுகின்றார்கள். முறை மாப்பிள்ளை இல்லாவிட்டால் பெண்ணை மட்டும் தனியே உட்காரச் செய்து வெந்நீர் ஊற்றுகிறார்கள். இதன் பின், பெண் வழக்கம்போலக் குடும்ப வேலைகளில் ஈடுபடுகிறாள்.

2 : 1 மாதவிலக்கு ஏற்பட்டதும் மூன்று அல்லது நான்கு நாள்கள் பளியப்பெண் தனிக் குடிசையிலிருக்கின்றாள். இந்நாட்களில் அவள் சமையல் வேலைகளைச் செய்ய மாட்டாள். வீட்டிலுள்ள பிற பெண்களோ, ஆடவர்களோ இவ்வேலையைச் செய்வார்கள். வெந்நீரில் குளித்த பிறகு, பளியப்பெண் வீட்டிற்கு வருகிறாள்.

3 : 0 **திருமணம்:** இவர்களுடைய திருமணச் சடங்கு மிகவும் எளிமையானது. காதல் திருமணமும், பெரியவர்கள் பார்த்து ஏற்பாடு செய்யும் திருமணமும் இவர்களிடையே நடைபெறும். காதல் திருமணத்தைப் பெரியவர்கள் தடை செய்வது கிடையாது. இவர்களிடையே பாலிய மணமும், பலதார மணமும் உண்டு.

3 : 1 திருமணம் நடைபெற என்று நல்ல நாள் பார்க்கும் வழக்கம் இவர்களிடையே இல்லை. திருமண நாள் குறித்தவுடன் உறவினர்களுக்கு இச்செய்தியினைச் சொல்லி அனுப்புவர். அவர்கள் தங்கள் சக்திக்கு ஏற்றபடி பணம், காய்கறி, கிழங்கு, அரிசி ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைக் கொண்டு வருகிறார்கள். மணமகனையும், மணமகளையும் அருகில் அமரச் செய்து, பெண்ணின் தாய் பாசிமாலை ஒன்றைப் பெண்ணின் கழுத்தில் அணிவிப்பாள். தாலி கட்டும் வழக்கம் இவர்களிடையே இல்லை. வேறு எவ்விதச் சடங்குகளும் அதை நடத்துவிக்கும் புரோகிதர்களும் இவர்களிடத்தில் கிடையா. மணமகன் வீட்டார் மணமகளுக்கோ அல்லது மணமகள் வீட்டார் மணமக

னுக்கோ பணமோ, பொருளோ கொடுப்பது இல்லை. திருமண நாளன்று கூடப் புத்தாடை அணியாது பழைய உடைகளையே அணிந்திருக்கும் மணமக்களே அதிகம்.

3 : 2 திருமணமான பின்னர்க் கணவனுக்கும், மனைவிக்கும் பிணக்கு ஏற்பட்டால் இருவரும் பிரிந்து கொள்ளலாம். இதற்காகப் பிரிபவர் பணங் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. இச் சமயங்களில் குழந்தை இருந்தால் அது கணவனிடமே இருக்கும். குழந்தையை மனைவி ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. விதவை மணமும் இவர்களிடையே உள்ளது.

4 : 0 **இறப்பு:** இறந்தவர்களை இவர்கள் புதைக்கிறார்கள். உறவினர்கள் வந்த பின்பு பாடைகட்டி எடுத்துச் செல்வார்கள். இறந்தவருக்கு அவரது மகன் செய்ய வேண்டிய சடங்கு எதுவும் கிடையாது. இறந்தவருக்காக ஒப்பாரி பாடிப் புலம்புவதும் கிடையாது. புதைப்பதற்கென்று காட்டில் ஒரு குறிப்பிட்ட இடத்தையே பயன் படுத்துகிறார்கள்.

4 : 1 ஒருவர் இறந்து ஆறு அல்லது ஏழு நாள்கள் கழித்துக் கருமாதி விசேடம் செய்வார்கள். தட்டாம்பயிறு, பாசிப்பயிறு போன்ற பயிறு வகைகளை அவித்து உறவினர்க்கும், ஊரார்க்கும் கொடுப்பார்கள்.

5 : 0 **தெய்வவழிபாடு:** காட்டுப்பளிச்சி, கருப்பசாமி, ஐயனார், முருகன் ஆகிய தெய்வங்களை வணங்குகின்றார்கள். வேலவர்சாமி, வேலப்பசாமி என்று முருகனை அழைக்கின்றார்கள். இவர்களுடைய அன்றாட வாழ்வில் கடவுளை வணங்கும் வழக்கம் பெரும்பாலும் இல்லை. எப்போதாயினும் நினைத்துக் கொண்டால் கடவுளை வணங்குவர். ஆண்டிற்கு ஒரு முறை விழாக்கள் நடத்தும் வழக்கம் இவர்களிடம் கிடையாது. இராஜபாளையம் நகரிலிருந்து 8 மைல் தொலைவிலுள்ள ஐயனார் கோவில் அருவியிலிருந்து, நான்கு மைல் தூரத்தில் வழுக்கப்பாறை என்னும் இடத்தில்

வேலப்பர்சாமி கோயில் ஒன்று உள்ளது. அதற்கு எப்பொழு தாவது தேங்காய், பழம், அவல், பூ ஆகியவற்றைப் படைத்து வழிபடுவர். கோழி, ஆடு ஆகியனவற்றை வெட்டிப் பலிகொடுத்தும் வணங்குகிறார்கள். இது சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் முருக வணக்கத்தினை நினைவூட்டுகின்றது.[1] மொத்தத்தில் கடவுள் வழிபாடு இவர்கள் வாழ்வில் ஒரு முக்கிய அம்சமாக இல்லை.

6 : 0 **உணவு:** பளியர்களின் முக்கிய உணவு அரிசி யாகும். இதனை அவர்கள் பெரும்பாலும் கூலியாகப் பெற்றுக் கொள்கிறார்கள். சில வேளைகளில் ஊர்ப்பகுதிக்கு வந்து பணம் கொடுத்து வாங்குவர். இது தவிர நூலாம் படை, வெற்றிலை, வள்ளி, முள்ளுவள்ளி, பிள்ளைவள்ளி, தாளவள்ளி, கமலவள்ளி, கருவள்ளி என்னும் பெயர்களை யுடைய காட்டில் இயற்கையாகக் கிடைக்கும் கிழங்குகளை அகழ்ந்தெடுத்து அவற்றை வேகவைத்தும், சுட்டும் உண்ணு கிறார்கள். பனங்கிழங்கை மட்டும், தங்கள் குடியிருப்பில், பனங்கொட்டைகளை ஊன்றி வளர்ப்பதன் மூலம் பெற்றுக் கொள்கிறார்கள். வேட்டையாடத் தெரியாததால் இவர்கள் உணவில் இறைச்சி அவ்வளவாகக் கிடையாது. காட்டி லுள்ள செந்நாய்கள், மான் போன்ற விலங்குகளை வேட்டையாடித் தின்று கொண்டிருக்கும்போது அவற்றை விரட்டிவிட்டு அவ்விறைச்சியை எடுத்துக் கொள்வார்கள். அல்லது நீர்நிலைகளில் கிடக்கும்; செந்நாய்கள் தின்று விட்டுப்போன இறைச்சித் துண்டுகளை எடுத்து வந்து சமைத்து உண்பர்.[2]

6 : 1 வேட்டியை நீரோடைக்குள் விரித்துப் பின் அதனைக் கொஞ்சம் கொஞ்சமாய் மடித்து, நீருக்கு வெளியே எடுத்து அதில் சிக்கியுள்ள மீன்களைச் சேகரித்து உணவாகக் கொள்வர். இரவு சமைக்கும்போது மறுநாள் காலைக்கும் சேர்த்துச் சமைப்பார்கள். இரவில் சமைத்த உணவை மறு நாள் காலையில் உண்டுவிட்டுச் சுமார் ஏழு மணிக்கு வேலைக்குச் செல்வார்கள். பெரும்பாலும் நண் பகலில் உணவு உண்பது கிடையாது.

7 : 0 **தொழில்:** காட்டிலுள்ள மரங்களின் பழங்களையும், தேனையும் சேகரிக்கும் உரிமையினை அரசாங்கத்தார் தனிப்பட்டவர்க்கு ஏலம் விடுகின்றனர். இவ்வாறு ஏலம் எடுத்தவர்கள் பளியர்களை இவ்வேலைக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

7 : 1 இம்மலைகளில் கடுக்காய், பூந்திக்காய் (நெக்கட்டான் காய்) குங்கிலியம் ஆகியவற்றைச் சேகரிக்கும் வேலையில் இவர்கள் ஈடுபடுகிறார்கள். இவ்வேலைக்குப் ''பளிப்பாட்டம்'' என்று பெயர். காலை ஏழு மணிக்கு வேலைக்குச் செல்லும் இவர்கள் மாலை 4 அல்லது 5 மணியளவில் இருப்பிடம் திரும்புகிறார்கள். இதற்குக் கூலியாக ஆணுக்கு முக்கால் படி அரிசியும், பெண்ணுக்குக் காலேயரைக்கால் படி அரிசியும் கொடுக்கப்படுகிறது. வேலையின் தன்மை, வேலை செய்யுமிடம், வேலை செய்யும் கால அளவு ஆகியவற்றை நோக்கும்போது இது மிகவும் அற்பமான கூலியாகும்.

7 : 2 மலையிலுள்ள உயரமான பாறைகளிலும், ஆழமான பள்ளத்தாக்குகளிலும் உள்ள தேன்கூடுகளிலிருந்து தேன் சேகரிக்கும் பணியிலும் இவர்கள் ஈடுபடுகிறார்கள். புகையூட்டித் தேனீக்களை விரட்டித் தேனெடுக்கிறார்கள். கருங்கொடி என்னும் நீண்ட காட்டுக் கொடியை வளையங்களாக முடிச்சுக்கள் போட்டு, ஒரு நுனியை மேலே உள்ள மரத்திலோ, பாறை இடுக்கிலோ கட்டிவிட்டு அவ்வளையங்களில் கால் வைத்து இறங்கித் தேனெடுக்கிறார்கள். இது மிகவும் ஆபத்தான பணியாகும். கொடி அறுந்தோ, தேனீக்கள் கொட்டி கைப்பிடி விட்டோ இவர்கள் கீழே விழுந்தால் இவர்கள் உடலை மேலே எடுக்கக்கூட முடியாது. இப்படி ஆபத்தான சூழ்நிலையில் இவர்கள் எடுக்கும் ஒருபடி தேனுக்குக் கூலியாக ரூபாய் இரண்டு கொடுக்கப்படுகிறது. குத்தகை எடுத்தவர் அதைப் பத்து அல்லது பன்னிரண்டு ரூபாய்க்கு வியாபாரிகளுக்கு விற்று விடுகிறார்.

7:3 உழுது பயிர் செய்யும் வழக்கம் இவர்களிடமில்லை. காட்டு நிலத்தில் பயிர் செய்து பார்த்த சில பளியர்களும், யானைக்கூட்டங்களினின்று பயிரைப் பாதுகாக்க வழியின்றிப் பயிர் செய்வதை கைவிட்டு விட்டனர்.

7:4 "பளிப்பாட்டம்" இல்லாதபோது இவர்கள் வாழ்க்கை மிகவும் இரங்கத்தக்க நிலையில் இருக்கும். காடுகளிலுள்ள கிழங்குகளைத் தேடி அலைவார்கள். இதற்காக ஐந்து மைல் தூரம்கூடச் செல்வார்கள். செந்நாய் கடித்த இறைச்சியோ, கிழங்குகளோ கிடைக்காவிடில் அன்று முழுதும் பட்டினிதான்.

8:0 **சமயமாற்றம்:** சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் இவர்களில் சில பகுதியினர் கத்தோலிக்கக் கிறித்தவர்களாக மாறியுள்ளனர். ஸ்ரீவில்லிபுத்தூர், வாசுதேவ நல்லூர், புளியங்குடி ஆகிய ஊர்களினருகிலுள்ள காட்டுப்பகுதியில் உள்ள பளியர்கள் இவ்வாறு சமய மாற்றமடைந்துள்ளனர். இச் சமய மாற்றம் இவர்களது வாழ்க்கையில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இவர்களிடையே உள்ள பலதார மணம் தடை செய்யப்பட்டுள்ளது. திருமணத்தில் சிலுவைத் தாலியினை மணமகள் கழுத்தில் மணமகன் கட்டுகிறான். ஆயினும், இந்து சமயத்திலுள்ள பளியர்களும், கத்தோலிக்கச் சமயப் பளியர்களும் திருமண உறவு கொண்டுள்ளனர். திருமணத்திற்குச் சமயம் தடையாக இல்லை.

8:1 இவர்களைச் சமய மாற்றம் செய்த கத்தோலிக்கப் பாதிரியார் அரசாங்கத்தாரிடம் முறையிட்டுக் காட்டில் பயிரிட நிலம் வாங்கிக் கொடுத்துள்ளார் என்றாலும் காட்டு மிருகங்களின் தொல்லையால் இவர்கள் அதில் பயிர் செய்யவில்லை. தற்பொழுது இவர்களது பிள்ளைகளை அநாதை விடுதிகளில் சேர்த்து இலவசமாக உணவும், உடையும் கொடுத்துக் கல்வி கற்பித்து வருகின்றனர். இந்து சமயப் பளியர்களை விடத் தோற்றத்திலும் பழக்கவழக்கங்களிலும் சற்று நாகரிகமடைந்தவர்களாக, கத்தோலிக்கப் பளியர்

காணப்பட்டாலும், பொருளாதார வாழ்வில் ஒன்று போலவே உள்ளார்கள்.

9:0 முன்னேற்றத்திற்குச் செய்ய வேண்டுவன: பளியர்களின் வாழ்க்கைமுறை வளர்ச்சியடைந்த உற்பத்தி முறை எதனோடும் தொடர்புடையதல்ல. கடப்பாறை, அரிவாள், மண்வெட்டி, சிறுகோடாலி ஆகியவை தவிர வேறு உற்பத்திக் கருவிகள் எதுவும் இவர்களிடம் கிடையாது. இவர்கள் எதனையும் உற்பத்தி செய்வது கிடையாது. உணவுப் பொருட்களைத் தேடிப் பெற்றோ, மலைபடு பொருட்களைச் சேகரித்துக் கொடுப்பதால் கிடைக்கும் கூலியினைப் பெற்றோ வாழ்க்கையினை நடத்துகிறார்கள். சுருங்கக் கூறின் நாகரிகமடையாத உணவு தேடி வாழும் இனக்குழு மக்களாகவே (Food gathering tribe) வாழ்கிறார்கள்.[3] இவ்வாழ்க்கை முறையின் காரணமாகவே இவர்கள் பெருங் கூட்டமாக ஒரே இடத்தில் வாழாது மிகவும் சிறிய குழுக்களாகப் பிரிந்து வாழ்கிறார்கள்.

9:1 இவர்களின் வாழ்க்கை முறை மாறினால் ஒழிய இவர்கள் முன்னேற வழியேதுமில்லை. அரசாங்கம் இவர்களுக்கு மலைப்பகுதிகளில் குடியிருக்க வீடுகளும், குடிநீர்க் கிணறுகளும் அமைத்துக் கொடுத்துள்ளது. ஆனால் பல வீடுகளின் ஓடுகள் காற்றில் பறந்து விட்டன, சில வீடுகள் இடிந்து விட்டன. சில கிணறுகளின் கைப்பிடிச் சுவர்கள் இடிந்து தூர்ந்து விட்டன.

9:2 இதனால் மட்டும் இவர்கள் வாழ்க்கையை மாற்றி விட முடியாது. இவர்களின் பொருளாதார வாழ்க்கையில் மாற்றம் செய்ய வேண்டும். முதலில் மலைபடு பொருட்களைக் குத்தகைக்கு எடுக்கும் குத்தகைதாரர்களின் சுரண்டலினின்றும் இவர்களைப் பாதுகாக்க வேண்டும். குத்தகை உரிமையைப் பளியர்களுக்குப் படிப்படியாக அளிக்க முயற்சி செய்ய வேண்டும். குத்தகை முறை ஒழிக்கப் படும் வரை, குத்தகைதாரர்கள் இவர்களுக்குக் கொடுக்க ஒரு குறைந்தபட்சக் கூலியினை நிர்ணயம் செய்ய வேண்டும்.

குறிப்புகளும் சான்றுகளும்

1. சிறு தினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ''

என்ற திருமுருகாற்றுப் படையின் 218 ஆவது அடியும் அக நானூற்றின் 22 ஆவது பாடலின்

''....பலி கொடுத்து
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்''

என்ற அடிகளும் நினைவு கூரத் தக்கன.

2. செந்நாய் கடித்துப் போட்டிருக்கும் இறைச்சியினை காட்டில் செல்லும் வழிப்போக்கர்கள் உணவாகக் கொள்வதாகச் சங்க நூல்கள் குறிப்பிடும் செய்தியும் இங்கு நினைவு கூரத் தக்கது.

''துகில்விரித் தன்ன வெயிலவிர் உருப்பின்
என்றூழ் நீடிய குன்றத்துக் கவா அன்
ஓய்பசிச் செந்நாய் உயங்குமரை தொலைச்சி
ஆர்ந்தன ஒழிந்த மச்சில் சேய் நாட்டு
அலுஞ்சுரஞ் செல்வோர்க்கு வல்சியாகும்''

(நற்றிணை, 43)

3. மதுரை மாவட்டத்தில் வாழும் பளியர்கள் குறித்து ஹட்டன் என்பவர் 'இந்தியாவில் சாதிகள்' என்ற நூலில் குறிப்பிடுவது ஏறத்தாழ இப்பளியர்களுக்கும் பொருந்தும்.

''A very similar tribe is that of the Paliyan of Madura District. They too do not cultivate, and live entirely by collecting forest produce .. they own no person al property except the clothes they wear, a few of the simplest utensils, a digging stick like that of the Pantaram and a bill-hook. They depend largely on wild honey and on the sale of wax from its combs.''

J. H. Hutton-Caste in India, *(1969)* Page 9

நன்றியுரை

இப் பளியர்கள் குறித்துக் கட்டுரை எழுதும்படி என்னைத் தூண்டி உற்சாகப்படுத்தியதுடன் அவர்களைச்

சந்திக்க ஏற்பாடுகள் செய்து தந்த நா. வானமாமலை அவர்களுக்கும், பளியர்கள் வாழும் இருப்பிடங்களுக்கு என்னை அழைத்துச் சென்று உதவிய இராஜபாளையம் இலக்கியக் குழு அன்பர்களான திருவாளர்கள் கொ. மா. கோதண்டம் பூ. அ. துரை ராஜா, கொ. ச. பலராமன், மு. கு. ஜகந்நாத ராஜா ஆகியோர்களுக்கும், சிவகிரி நண்பர்கள் இரா. தங்கமலை, தங்கவேலு, கே. செல்லையா, கவர்த்தலை, எஸ். நடராஜன் ஆகியோர்க்கும் நன்றி.

6. நரிக்குறவர்களின் வாழ்க்கை முறை

கோ. சீனிவாசவர்மா M.A. Ph. D

[நம் நாட்டில் பிற பண்பாட்டையுடைய சில இனக்குழுக்கள் (Tribal groups) உள்ளன. மானிட வியலாரைவிட மொழியியலாரே இக் குழுக்களைப் பற்றி ஆராய்கின்றனர். ''ஆராய்ச்சி'' பத்திரிகை யின் இந்த இதழில் மட்டும் மூன்று மொழியியல் ஆராய்ச்சியாளர்கள் தாம் ஆராயும் மொழி பேசும் மக்களது வாழ்க்கை முறைபற்றி ஆராய்ந்துள்ளனர். தற்கால பண்பாட்டு, பொருளாதார ஊடுருவலைப் பற்றித் தனியாக இனிமேல்தான் ஆராயவேண்டும். இவ்விதழில் வெளியாகும் ஆய்வுக்கட்டுரைகள். ஆரம்ப ஆய்வு முயற்சிகள். இதற்கு முன் இத்துறையில் விஞ்ஞான பூர்வமான உற்றுநோக்குக் கட்டுரைகள் அதிகமாக வெளியிடப் படவில்லை. இனக்குழுக்களை (Tribes) ஆராய்வதுதான் மானிடவியல் ஆராய்ச்சியின் எல்லையென்ற கருத்து இன்று பரவுகிறது. இது தவறானதாகும். இனக்குழு மாறி புதிய வளர்ச்சி பெற்ற சமுதாயத்தில் உறுப்பாகும். வரலாற்று ரீதி யாகத் தற்காலச் சமுதாயத்தின் உறுப்புகளையும் இவற்றின் நடைமுறைப் பண்பாட்டையும் அறிய வேண்டுவது அவசியமாகும்.

இவ்விதழில், நரிக்குறவர், கோதர், தோதவர் ஆகிய மூன்று இனக்குழு மக்களின் வாழ்க்கைமுறை பற்றிக் கட்டுரைகள் வெளியாகின்றன.

தோடர்களைப் பற்றி எழுதியவர் மானிடவியல் ஆராய்ச்சியாளர் சக்திவேல் அவர்கள். நரிக்குறவர் களைப்பற்றி எழுதியவர் டாக்டர் சீனிவாசவர்மா. குடவர்களைப் பற்றி எழுதியவர் R. பாலகிருஷ்ணன். பின்னவர் இருவரும் அண்ணாமலைப் பல்கலைக்கழ கத்தில் ஆராய்ச்சிப் பணியிலீடுபட்டிருக்கிறார்கள்.

--பதிப்பாசிரியர்.

தமிழகத்தில் வாழ்ந்து வருகின்ற நரிக்குறவர்கள் நாகரிக வளர்ச்சியடையாத பழங்குடி மக்கள். பிற மாநிலங்களிலும் இவர்கள் காணப்படுகின்றனர். 'வாக்ரி' என்னும் பெயரில் நாடோடிகளாக வாழும் மக்கள் இவர்கள். தமிழ் நாட்டில் வாழும் ஏனைய பழங்குடி மக்களுக்கும்,நரிக்குறவர் கட்கும் மிக்க வேறுபாடுகள் உள்ளன.

நரிக்குறவர்கள் குஜராத், மேவார் ஆகிய இடங்களிலிருந்து இங்குக் குடியேறியவர்கள் என்பது அவர்களின் மொழியான 'வாக்ரி போலி'யாலும், நாடோடிப் பாடல்கள், வாழ்க்கைமுறை முதலியவற்றாலும் அறிய முடிகிறது. கோத்தர், தோடர், படகர் போன்ற மலைவாழ் பழங்குடி மக்கள் திராவிடமொழிக் குடும்பத்தில் உள்ளடங்கிய மொழியினைப் பேசும்பொழுது, நரிக்குறவர்கள் மட்டும் லம்பாடியினைப் போன்ற இந்திய-ஆரிய (Indo-Aryan) மொழிக் குடும்பத்தில் உள்ளடங்கிய ஒரு மொழியினைப் பேசுவது அவர்கள் தொன்றுதொட்டுத் தமிழகத்தில் வாழ்ந்தனர் அல்லர் என்பதை வெளிப்படுத்தும். எந்த மாநிலத்தில் வாழ்கின்றார்களோ அம்மாநிலத்தின் மொழியையும் கற்றுக் கொண்டு, இருமொழி பேசும் மக்களாக உள்ளனர். பதின்மூன்று அல்லது பதினான்காம் நூற்றாண்டில் வந்து குடியேறிய நரிக்குறவர்கள் சமுதாய அமைப்பு, கலாசாரம், பழக்க வழக்கங்களில் தனியே ஒதுங்கி வாழ்கின்றனர். பிறரைத் தம்மினமாக்கவோ, தாம் பிறருடன் கலந்து[தம்மை மாற்றிக்கொள்ளவோ முயலவில்லை.

நரிக்குறவர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் ஏதும் கிடைக்கவில்லை. குறவஞ்சி, குறம், சிறுகதைகள், நாடகம், தெருக்கூத்து, சினிமா முதலியவற்றில் பொதுவாகக் குறவன்-குறத்தியைப் பற்றியும், நாடகம், தெருக் கூத்து, சினிமா முதலியவற்றில் நரிக்குறவன் நரிக்குறத்தியினைப் பற்றியும் நடித்துக் காட்டுகின்றனர். இவை பொதுவாக விவரிக்கின்றனவேயன்றிக் குறிப்பாக விளக்குவனவல்ல.

தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி, குற்றாலக் குறவஞ்சி முதலிய நூல்களில் குன்றில் வாழும் குறவனது தொழிலும், குறத்தி குறிசொல்லுதல், பிச்சையெடுத்தல் போன்ற குறிப்புகளும் உள்ளன. குறவன், குருவியையும் வனவிலங்குகளையும் பிடித்து நாட்டில் விற்பான், கழுதை மேய்ப்பான், கூடை முறம் கட்டுவான் என்றும்; குறத்தி, கூடைமுறம் கட்டுவதுடன், ஊர் ஊராகச் சென்று குறி சொல்லுதல், பச்சைகுத்துதல் போன்ற தொழிலும் செய்வாள் என்றும் உள்ளன. ஆனால், நரிக்குறவர் யாரும் குறி சொன்னதாகவோ, இப்பொழுதும் அத்தொழில் அவர்களிடம் உள்ளதாகவோ அறிய முடியவில்லை. நரியினைப் பிடித்து அதன் இறைச்சியை உண்டு, எஞ்சிய பல், தோல், நகம் முதலியவற்றை விற்பதால் நரிக்குறவன் என்றும், குருவிகளைப் பிடிப்பதால் குருவிக்காரன் என்றும் இம் மக்களைக் குறித்தனர். ஆதலால், இவை காரணப் பெயரே யன்றி இயற்பெயர் அல்ல. நரிக்குறவர்கள் தம்மை 'வாக்ரி' என்றே கூறுகின்றனர். எளிய வாழ்க்கையினைக் கொண்டுள்ள இம்மக்களிடம் நிறைய நாடோடிப் பாடல்கள் உள்ளன. பாடி மகிழும் வானம்பாடிகளாக வாழ்ந்து, தமது மரபு, வரலாறு, கடவுள் வழிபாட்டுமுறை, பரம்பரையினைத் தமது சந்ததியினருக்குப் புகட்டுகின்றனர். எழுதா இலக்கியமான அவர்களின் நாடோடிப் பாடல்களின் கருத்தும், ஆரிய வரலாற்றில் சிலவும் ஒத்துள்ளன.

நரிக்குறவர்கள் அனைவருமே தாய்க்கடவுள் வழிபாட்டினர். தந்தைவழிக் குடும்ப அமைப்பையும் கூட்டுச் சமுதாய அமைப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளனர். சப்தமாதர் என வழங்கப்படும் பிராமணி (பிராமி), நாராயணி(வைஷ்ணவி), மாஹேசுவரி, கௌமாரி, வராகி, உருத்திராணி (மாகாளி), இந்திராணி (மாஹேந்திரி) ஆகிய எழுவரும் வெவ்வேறு பெயரினால் வணங்கப்படுகின்றனர். தலைவராக 'தாதாஜி' என்ற கடவுளும், வீரத்திற்கு 'பிம் பர்க்கனுதே'வும் குறிக்கப்படுகின்றனர். 'குணேஹ் ஆக்பாள்' எனப் பிள்ளையாரையும் வீரபத்திரனையும் வழிபடுகின்றனர். இத்

தெய்வங்கட்கு ரொட்டி, பொங்கல். தேங்காய், பழம், தூபதீப ஆராதனைகளும், நீராட்டுதல், எருமைக்கடா, ஆட்டுக்கடா போன்ற உயிரைப் பலியிடுதலும் உண்டு. ஆரம்பத்தில், பூசுணைக்காயினை வெட்டிப் பலியிட்டனர். பின்னர்க் கருங்குரங்கைப் பலியிட நினைத்து அதைக் காட்டினின்றும் கொணர்ந்தபொழுது கைகூப்பித் தொழுததாம். ஆதலின் ஒரு கையினை மட்டும் வெட்டிக்கொண்டு விட்டு விட்டனர். அப்பாவத்தைப் போக்க வெள்ளியினால் கை போன்ற உருவத்தை ஹாஜா என்பவன் செய்து வழிபட்டானாம். ஒருநாள் தாதாஜி குளத்தில் குளித்துக்கொண்டிருக்கும் பொழுது அழுக்கினால் எருமை செய்து உலவவிட்டார். அது குளத்தருகில் மேய்ந்து, அந்நீரைக்குடித்து வாழ்ந்து வந்தது. மறுநாள் தாதாஜி வந்தபொழுது அவ்வெருமை பதினான்குமுழம் நீண்டு வளர்ந்த கொம்பினால் விரட்டியதாம். பயந்து போன தாதாஜி 'சில் பிலி பகாடு' எனும் பறவை வாழும் மலையில் ஒளிந்துகொண்டார். பின்னர் 'வெக்ஸி' (காளி) அந்த எருமையினைக் கொன்று விட்டாள். அதன் வழக்கமாக இன்றும் இவர்கள் எருமைக் கடாவைப் பலியிட்டுக் காளிச்சிலைமீது ரத்தம் பூசுகின்றனர். மகிஷாசுரமர்த்தினியின் புராணக்கதையும் நரிக்குறவர்களின் நாடோடிப் பாடலும் ஒத்த நிகழ்ச்சியை விவரிக்கின்றன.

மேலும், அவர்களுடைய திருமண உறவு தோடர், கோத்தர், இருளர், பணியர், படகர் போன்ற மலைவாழ் மக்களினின்றும் மாறுபட்டுக் காணப்படுகிறது. வயது வந்த ஆணோ பெண்ணோ தனித்து வாழக்கூடாது. அவர்களின் வயது வரம்போ, முன்னேயிருந்த பழக்க வழக்கங்களோ இதற்குத் தடையில்லை. சமுதாய ஒழுக்கமும், அன்றாட வாழ்வில் ஒருவர் மற்றவரின் உதவியுடனும் வாழவேண்டிய பொருளாதார வாழ்க்கைப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு அமைத்துக் கொண்டதாகும். அன்பின் அடிப்படையைவிடத் தேவையைப் பூர்த்தி செய்வதாக உள்ளது. குழந்தைகளின் திருமணம், விதவை மறுமணம்,

ஒருவன் பல பெண்டிரை மணத்தல், தன்னிலும் மூத்த பெண்ணை மணத்தல், திருமண உறவு முறித்தல் போன்ற பலவகை உறவுகள் உண்டு. ஆனால், ஒரு பெண் ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கணவனைப் பெறும்முறை (Polyandry) காணப்படவில்லை. ஒருத்தி கணவனை மண முறிவு பெற்றுக் கொண்டு வேறொருவனை மணந்து கொள்ளலாம். பேரன் பேத்தி எடுத்த குறவனும் குறத்தி யும்கூட மறுமணம் செய்து கொள்ளலாம்.

ஆண்டுதோறும் புதுப்புதுக் குடிசை தைக்க வேண்டும். ஆடவனே இதனைச் செய்ய முடியும். ஒரு வீட்டில் தந்தை வழிக் குடும்ப அமைப்பில் தானும் தன் மனைவியும் சிறு குழந்தைகளும் மட்டுமே இருக்கமுடியும். ஆதலால், கணவன் இல்லாத ஒரு பெண் தன்னுடைய பெற்றோர் களுடனோ மருமகனுடனோ வாழ வேண்டும். அது கூட்டத் தில் ஒழுக்கக் கேட்டிற்கு வழி வகுக்கும் ஆதலால், தனக் கென ஒரு மனைவி அல்லது கணவனை விரும்பி ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. ஏனைய உறவு முறைகள் அத்துணை நெருக்கத்தையும், பாதுகாப்பிற்கு நம்பிக்கையையும் ஏற்படுத்துவதில்லை. பிள்ளைகள்கூடப் பத்துப் பன்னிரண்டு வயதிற்குப்பின் தன்னிச்சையாக வாழத் தொடங்கிவிடுகின்றனர். ஆதலால், திருமண உறவு மூலம் ஒருவருக்கு மற்றவர் ஆதரவு தேடிக்கொள்ள வேண்டிய வாழ்க்கை நரிக்குறவரின் குடும்ப வாழ்க்கை. ஒரு குடும்பத்தில் நிகழும் எந்த ஒரு நிகழ்ச்சியும் அக் கூட் டத்தில் உள்ள ஏனைய குடும்பத்தையும் சாரும். திருமண மானாலும், வழிபாடானாலும், சாவானாலும் அடுத்தவர் களும் அதற்கிணைந்து செயல்பட வேண்டும் பொதுவாக ஒருவர் இறந்துவிட்டால் அதே இடத்தில் வாழ விரும்புவ தில்லை. பயத்தாலும் இடம் 'ராசியில்லை' என்ற நினைப்பாலும் வேற்றிடம் செல்லுகின்றனர். ஒரு குடும்பத் தில் நிகழும் இந் நிகழ்ச்சிக்கு, அக் கூட்டம் முழுவதும் கலந்தாலோசித்து வேற்றிடத்திற்கு அனைவருமே செல்கின்

றனர். அது பாதுகாப்பையும் ஒரே சமுதாய அமைப்பையும் மாறாமல் பேணிவருகிறது. இதனால் நரிக்குறவர்கள் வேற்றின மக்களுடன் கலக்காமல் தனித்து வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களின் தனித்த உடையாலும், அழுக்கான துணி மணிகளாலும், சுற்றுப்புறங்களாலும் ஒருவித முடை நாற்றம் வீசுகிறது. ஆதலின் நாய்கள் இவர்களின் வருகையைக் குரைத்துக் கட்டியம் கூறி வரவேற்கின்றன. நாகரிகமடைந்த ஏனைய பழங்குடி மக்களும் இவர்களுடன் கலந்து பழக விரும்புவதில்லை நரிக்குறவர்களையும் நல்ல குடிமக்களாக மாற்றத் தொண்டு மனப்பான்மையும், அரசினரின் ஆதரவும் இருந்தால் சுகாதாரமும், கல்வியறிவும் பெற்றுப் பொருளாதாரத் துறையிலும் மானிட இயலாருக்கும், வரலாற்றாசிரியர்கட்கும், மொழியியலாருக்கும் பயன்படும் நல்லதொரு இனமாக விளங்குவர்.

7. நரிக்குறவர் வாழ்க்கையில் சடங்குகளும் பூசைகளும்

கே. ஆர். ராஜகோபாலன்,
ஜே. பி. விஜயதிலகன்

[நரிக்குறவர்கள் இன்னும் நாகரிகத்தின் கீழ் நிலைகளில் உள்ளனர். பெரும்பாலும் உணவு சேகரிப்பவர்களாகவே (Food gatherers) இவர்கள் இருக்கின்றனர். சிறுவேட்டை, பறவை பிடித்தல், களம் பொறுக்குதல் போன்ற முறைகளிலேயே இவர்கள் உணவு பெறுகின்றனர். உழைப்பினால் உணவு உற்பத்திச் செய்யாததால் இவர்களிடம் உற்பத்திக் கருவிகள் அதிகம் இல்லை. பசிக்கொடுமையால் மிக எளிய தொழில்களைச் செய்கின்றனர். உணவு சேகரிப்பதே பெரும்பாலும் இவர்கள் வாழ்க்கை முறை. பண்டைக்கால உயர்நிலை சாவஜரி (Savagery) வாழ்க்கையைத்தான் அவர்கள் வாழ்கிறார்கள். நாடோடி வாழ்க்கையை அவர்கள் இன்னும் கைவிடவில்லை. சிற்சிலவிடங்களில் அரசின் முயற்சியால் நிலைத்த வாழ்க்கையில் அமர்த்தப் பெற்றிருந்தும், அதனோடு பொருந்திவாழ அவர்களது பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் இடம் தரவில்லை. பழக்க வழக்கங்கள் இலையும் பூவும் மாதிரி. வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிற அவர்களது தொழில் நுணுக்க முறை (Technology) தான் வேரும் அடிமரமும். இலையையும் பூவையும் கிள்ளியெறிந்து செயற்கை இலையையும் செயற்கைப் பூவையும் கிளைகளில் ஒட்ட வைத்தால் அவை வளரமாட்டா. அவர்களது வாழ்க்கையின் அடிப்படை உணவு தேடுதலிலிருந்து, உணவு உற்பத்தி முறைக்கு மாறினால்தான் அவர்கள் வாழ்க்கைச் சூழலிலுள்ள மக்களுடைய வாழ்கையோடு பொருந்தும். அவர்களுடைய பூசை முறைகள் பண்டைக்கால மக்க

ளுடைய பூசைமுறைகளை ஒத்திருப்பது கவனிக்கத் தக்கது. அவர்களுடைய தெய்வங்கள் பெண் தெய் வங்களாகயுள்ளன. அவை செழிப்பைக் குறிக்கும் பெரிய மார்பும், பெரிய வயிறும் கொண்டவை. கையில் மலரும், கிளியும் உள்ளன. எனவே இவர்கள் பண்டைக் காலத்தில் பெண்ணாதிக்க புராதன விவசாயச் சமுதாயமாக வாழ்ந்தார்கள் என்று தோன்றுகிறது.

அவர்களுடைய அறிவுத்திறன், அண்டைக் கிராம மக்களின் அறிவுத்திறனை விட அதிகமாக இருப்பதை ஆய்வாளர்களின் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. நிலைத்த வாழ்க்கையும், தொழில் முறை மாற்றமும், படிப்பு வாய்ப்புகளும் அளிக்கப் பட்டால் இவர்கள் சமுதாயத்தில் சிறந்து உயர்நிலை பெறுவார்கள்.

—பதிப்பாசிரியர்.]

நரிக்குறவர்கள் அல்லது குருவிக்காரர்கள் என்று கூறப் படும் இனக்குழு மக்கள் தென்னிந்தியாவின் நாடோடி இனத்தவர் ஆவர். இவர்கள் மத்திய இந்தியாவிலிருந்து இடம் பெயர்ந்து வந்ததாகக் கருதப்படுகிறார்கள்.[1] தென் னிந்தியாவில் சில நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்தாலும் தங்கள் தனித்தன்மையைக் காப்பதில் மிகவும் கவனமாக இருந்துவரும் இவர்கள் வேறு எந்த இனத்துடனும் கலந்து விடவில்லை.[2] இந்தியா விடுதலை பெற்றதும், அதன் பின் குறிப்பிடத்தக்க அளவில் ஏற்பட்ட சமுதாயப் பொருளா தார மாற்றங்களும், தொழில் நுட்ப வளர்ச்சியும் மிகவும் அருகிய அளவிலேயே இவ்வினத்தைப் பாதித்துள்ளன. இது ஒரு வேளை அவர்களின் கல்வியின்மையின் காரண மாக இருக்கலாம். ஏனெனில், இன்றும் கூட இவ்வினத்தில் மிகக் குறைந்த அளவிலேயே குழந்தைகள் பள்ளிக்கூடம் செல்கிறார்கள். இவர்களின் விநோதமான உடைகள், பழக்க வழக்கங்கள் காரணமாகத் தங்கள் குழந்தைகளைப் பிறர் அவமானப்படுத்துவார்களென்று இவர்கள் அஞ்சு கிறார்கள்.

இக் குறவர்கள் தங்கள் நாடோடி வாழ்க்கையைக் கைவிட்டு, பயனுள்ளதும் ஊதியம் தருவதுமான தொழில்களை மேற்கொண்டு ஓரிடத்தில் நிலைத்து வாழும்படி செய்ய முயற்சிகள் நடைபெற்று உள்ளன. செங்கற்பட்டு மாவட்டத்தில் சோழவரம் பஞ்சாயத்து யூனியனைச் சார்ந்த ஓரக்காடு கிராமத்திற்கு வெளியே மேற்கூறிய முயற்சியின் அடிப்படையில் ஒரு குறவர் குடியிருப்பு அமைந்துள்ளது. பத்து வருடங்களுக்கு மேலாக இருபத்தாறு குறவர் குடும்பங்கள் நிலைத்து வாழ்கின்றன. அதிர்ஷ்டவசமாக அவர்களிடையே ஆசிரியரும் சமுதாய ஊழியருமான திரு. ரகுபதி என்பவர் வாழ்கிறார். திரு. ரகுபதி இளமைக் காலத்திலிருந்தே நரிக்குறவர் இனத்தைக் கல்விபெறச் செய்யவும் நவீனப்படுத்தவும் செய்வதில் மிகுந்த செயல் ஆர்வம் கொண்டவர். அவர் ஓர் இளம் நரிக் குறவப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டவர் என்பது இங்கு மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். (நரிக்குறவர் இனத்திற்கும் வேறு எந்த இனத்திற்கும் இடையே நடைபெறும் மிகவும் அரிதான திருமணங்களில் இதுவும் ஒன்று.)

சாதிப் பிரிவுகளும் சமயமும்

எருமைமாடு பலிகொடுப்பவர்கள், ஆடு பலி கொடுப்பவர்கள் என இருபெரும் முக்கியப் பிரிவுகள் நரிக்குறவர்களிடையே உள்ளன. ஆடு பலி கொடுக்கும் பிரிவினர் ஓரக்காடு கிராமத்தில் அதிகம் உள்ளனர். அவர்களிடையே குஜராத்தி (ஒருவேளை குஜராத்திலிருந்து), மேவாடு (ஒருவேளை மேவாரிலிருந்து) தாபி, சாலியோ என நான்கு வகைச் சாதிகள் அல்லது பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு குழுவும் அவர்கள் வணங்கும் தேவதைகளைக் கொண்டு வேறுபடுத்தப் படுகிறது. அத்துடன் பல்வேறு வகைப்பட்ட பெயர்களை உடைய சிறு குழுக்களாலான உட்பிரிவுகளும் இவர்களிடையே உள்ளன. குஜராத்திகள் பர்வதீஸ்வரி அல்லது பர்வதம்மனை (பார்வதி) வழிபடுகிறார்கள். ஜிம்ளோ, கோவிந், ராமு, பான்வார், மாணிக்கியோ என ஐந்து பிரிவுகள் இவர்களிடையே உள்ளன. மேவாடுகள்

பரத மீனாட்சி அல்லது மதுரை மீனாட்சியை வழிபடு கிறார்கள். இவர்கள் ஏட்டோ, டாக்கியோ, ஹீரோ, நவால், நாமோ என ஐந்து பிரிவுகளாக உள்ளனர். காளி அல்லது துர்க்கையை வழிபடும் தாபி குழுவினரிடையே டாட்டோ, மனியோ, மக்ரோ என்னும் மூன்று பிரிவுகள் உள்ளன. செல் அல்லது கன்னியம்மாவை வழிபடும் சாலியோ குழுவினரிடம் வீதியோ என்னும் ஒரே ஒரு பிரிவு மட்டும் உண்டு.

தாபி குழுவில் டாட்டோ என்னும் உட்பிரிவைச் சார்ந்தவரும் மெலிந்த நடுத்தர வயது மனிதருமாகிய பரதேசி என்பவர் எங்களுக்கு நரிக்குறவர்களைப் பற்றிய தகவல்களையும் தமது குடும்ப வரலாற்றையும் கூறினார். அவர் கூறியபடி, காளிராஜா என்பவன்தான் முதல் குருவிக் காரன். மன்னனாகிய அவன் காட்டிற்கு வேட்டையாடச் சென்று வழிதவறி விட்டான். அவ்வேளை காளிதேவதை அவன் முன் வௌவால் வடிவில் தோன்றி ''நீ காட்டில் பெத்துப் போடு; நான் மேட்டில் வளர்க்கிறேன்'' என்று கூறி அவனைக் காப்பதாக உறுதி அளித்தாள். அதிலிருந்து அம்மன்னனைச் சார்ந்த குழுவினர் காளியைத் தங்கள் தெய்வமாக ஏற்றுக்கொண்டனர். பரதேசி தமது முன்னோர் கள் பதினைந்து பேர்களின் பெயர்கள் ஆதி காளி ராஜா விலிருந்து தொடங்கி—வாட்சின்யா, தடார், தாம்சி, மேபால், பஞ்சி, துலாராம், மாகூன், மாகுந்தார், மான்யோ, சந்தால், அப்பா, ஹர்னா, குல்பாளிசிங், ராமன்சிங், பரதேசி எனத் தம்வரை தம்மூதாதையரின் பெயர்களை வரிசையாகக் கூறுகிறார். அவருக்குக் குமார் என்னும் மகனும் முன்னா என்னும் பேரனும் இருக்கிறார் கள். நம்மில் சிலருக்கு நமது மூத்த பாட்டனார்களின் பெயர் கள் கூட நினைவில்லாமல் இருக்கும்போது, கல்வியறிவற்ற பரதேசி தம் மூதாதைகளின் நெடிய பெயர்ப் பட்டியலை நினைவில் வைத்திருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

நரிக்குறவர்கள் அனைவரும் இந்துக்கள் ஆவார்கள். அவர்களுக்குரிய தனி முறையில் அவர்கள் சமய உணர்ச்சி

மிக்கவர்களாகவே உள்ளார்கள். கோவிலுக்கு அவர்கள் அபூர்வமாகச் சென்றாலும் தங்கள் கடவுள்களைத் தங்கள் இருப்பிடங்களிலே வணங்குகிறார்கள். அக்கடவுள்களின் உருவங்கள் ஒரு துணி மூட்டையில் வைக்கப்பட்டு, அத் துணி மூட்டை சாமி மூட்டை என்று அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் ஒரு சாமி மூட்டை உண்டு. அம் மூட்டையானது குடும்பத் தலைவரால் மரியாதையாகவும் கவனமாகவும் கவனிக்கப்படுகிறது. சாமி மூட்டையில் துணியில் பலி கொடுக்கப்பட்ட விலங்குகளின் இரத்தத் தொகுதியும், பலி கொடுக்கப்பட்ட விலங்கின் இரத்தத்தில் தோய்க்கப்பட்ட துணியும் அடங்கி இருக்கும். இவற்றை அவர்கள் பல பரம்பரையாக உள்ளதாகக் கூறிக் கொள்வார்கள்.

வெள்ளி வார்ப்புகளில் அமைந்த அவர்களின் தேவதைகளின் நான்கு வடிவங்கள் (சுமார் 10 செ.மீ. உயரம் உடையவை) முக்கோண வடிவமான மெத்தை போன்ற பைகளில் வைக்கப்பட்டுள்ளன. அந்த உருவங்கள் இரண்டு கைகள் உடையதாகவே உள்ளன. அதில் ஒரு கைகூட வழக்கமான தேவதைகளின் அபயம் அளிக்கும் தோற்றத்திலோ, வரம் கொடுக்கும் தோற்றத்திலோ அமையவில்லை. ஒவ்வொரு உருவமும் நீண்ட பாவாடையும், உயர்ந்த தலையணையும், வளையல்களும், கைப்பட்டையும், சங்கிலியும் அணிந்துள்ளன.[3] கச்சு அணிந்துள்ள முதல் உருவமானது பெரிய வயிறுடையதாய் இரண்டு கைகளிலும் பூவினை ஏந்தி, இரண்டு முனைகளிலும் இணைக்கப்படாத ஒரு நீண்ட மாலையையும் அணிந்துள்ளது. இரண்டாவது மூன்றாவது உருவங்களும் கச்சு அணிந்து காணப்படாவிட்டாலும் உறுதியாக அவை பெண் வடிவங்கள்தாம். அவை, காலைமூடி உடை அணிந்துள்ளன. இடக்கையில் ஆறு இதழ்களுடைய மலரையும், ஒரு கிளியையும் அவை வைத்துள்ளன.[4] உருவங்களின் கீழே தலைகீழாக இரண்டு கிளி உருவங்கள் உள்ளன, நான்காவது உருவம் முதல் உருவத்தையே ஒத்துள்ளது. ஆனால், ஒரே ஒரு வேறுபாடு அதன் தலையருகில். ஒரு சக்கரம் (சிரசுச்சக்கரம்) உள்ளது.

அவ்வுருவம் ஆணா பெண்ணா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இந்நான்கு உருவங்களும் இருவகைத் தெய்வங்களைக் குறிப்பிடுகின்றன.

இரத்தத்தில் தோய்க்கப்பட்ட பாவாடை ஒன்று 'சாமி பாவாடை' என்று பெயர் பெற்று அவர்களிடையே உள்ளது. நரிக்குறவப் பெண்கள் சாமி மூட்டையைத் தொடுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அத்துடன் ஒரு பிரிவைச் சார்ந்தவர்களின் சாமி மூட்டையை அடுத்த பிரிவைச் சார்ந்தவர்கள் தொடக் கூடாது. அடுத்தவர்களுக்கு அவர்கள் தங்கள் சாமி மூட்டையைப் பிரித்துக் காட்ட விரும்புவதில்லை. வழிபாடு செய்யும் பொழுது குடும்பத் தலைவன் தன் தலையை விரித்துப் போட்டுக் கொண்டு சாமி மூட்டையைத் திறப்பான். பின்னர் இரத்தம் தோய்ந்த பாவாடையை அணிந்து கொண்டு, வெள்ளி உருவங்களை முக்கோண வடிவமான சிறிய மெத்தைகளுள் பொருத்துவான். இம் மெத்தைகள் திறக்கப்பட்ட சாமி மூட்டையின் மீது வைக்கப்படும்.

பூவும், குங்குமமும், மஞ்சள் தூளும் தேவதைகளின் முன் படைக்கப்படும். பலி கொடுத்த மிருகத்தின் இரத்தமும் தேவதைகளின் முன்னர்ப் படைக்கப்படும். குடும்பத்தின் தலைவன் தேவதைகளின் முன்னர் நடனமாடிக் கொண்டு அந்த இரத்தத்தில் புரள்வான். ஒரு குடும்பத்தில் மகன் மணம் புரிந்து கொண்டால் தகப்பனின் சாமி மூட்டையில் ஒரு பகுதி அவனுக்குக் கொடுக்கப்படும். மிகவும் பழையதான துணியானது அவனது சாமி மூட்டையில் வைக்கப் பட்டுப் பின்னர் அவனது தந்தையிடம் கொடுக்கப்படும். குடும்பத்தில் மூத்த மகன் தந்தையினுடைய சாமிமூட்டைக்கு வாரிசாகக் கருதப்படுகிறான். எனவே, அவனது சாமி மூட்டையில் உள்ள இரத்தம் தோய்ந்த துணி ஏழு அல்லது எட்டுத் தலைமுறைகள் கடந்த மிகப் பழைய துணியாக இருக்கும்.

எப்பொழுதெல்லாம் பூசை நடத்துகிறார்களோ அப்பொழுதெல்லாம் உறவினர்களையும், கோத்திரக்காரர்களை

யும் (தந்தைவழி உறவினர்கள்) அழைத்து அவர்களுக்குத் தலைக்கு ஐந்து ரூபாயும், சம்பந்திகளுக்கு இரண்டு ரூபாயும் அன்பளிப்பாகக் கொடுப்பார்கள்.

வேறு சில சடங்குகள்

ஆணாயினும் பெண்ணாயினும், குழந்தை பிறந்த ஐந்தாம் நாளன்று, குழந்தையின் தலைமுடி எடுத்து அதற்குப் பெயரிடுவர். ஆண் குழந்தையாயின், அது பிறந்த கிராமம் அல்லது நகரின் பெயரே அதற்கு இடப்படுகிறது. உதாரணமாக நெல்லூர் சிங் அல்லது குண்டூர் சிங் என்ற பெயர்களைச் சொல்லலாம். பெண்கள் மட்டும் அவித்த அரிசி, கருப்பட்டி, நெய் இவற்றாலான விருந்து கொள் கின்றனர்.

மாங்கனி என்ற பெயருடைய ஆடை ஆபரணங்கள் முதல் நாளன்றே மணப்பெண்ணுக்குக் கொண்டு வரப்படு கின்றன. அன்றே, மணமகனும் மணமகளும் ஒருவருக் கொருவர் மஞ்சளில் தோய்ந்த கங்கணத்தைக் கட்டிக் கொள்கின்றனர். மணமகன் மணமகளின் அகத்தாருக்குப் பரிசத் தொகை கொடுக்கிறான். உறவினர்க்கும் விருந்திடு கிறான். இன்றைக்கு, அப்பரிசத்தொகை சுமார் ஐந்நூறு ரூபாயாகும். எல்லாருக்கும் வெற்றிலையோடு தட்க்ஷிணை அளிக்கப்படுகிறது. கருகமணி கோத்த மஞ்சள் நூலாலான தாலியை, மணமகன் மாலையில் பெண்ணுக்கு அணிவிப் பான். கல்யாண நாளன்று பிறிதொரு கருகமணித் தாலியை அவனே மணப்பெண்ணுக்குக் கட்டுவான். இச்சடங்குகளெல் லாம் மணமகன் இல்லத்திலேயே நடைபெறும். இவர்கள் வழக்கமாகப் புழுங்கலரிசி உண்பினும், விழா நாளிலும் பூஜைநாட்களிலும்பச்சரிசியே உண்கின்றனர் எல்லா நேரத் திலும் குடித்தலென்பது சாதாரண நிகழ்ச்சியே ஆகும். மணமக்களைச் சுற்றிப் பெண்கள் தீபம் சுற்றுகின்றனர். ஒரு வேளை, கண்திருட்டிக் கழிப்புக்காக இதை அவர்கள் செய் கின்றனர் போலும். மறு நாளில் கங்கண விசார்ஜனமென்ற கங்கண அவிழ்ப்புச் சடங்கு நடைபெறும். நீர் நிறைந்த

பாத்திரத்தின் எதிரெதிர்ப் பக்கங்களில் ஒருவரை ஒருவர் நோக்குமாறு தம்பதியர் அமர்கின்றனர். மணமகளின் சகோதரன் தண்ணீரினுள் ஒரு சிறிய சுருளுடன் பல மோதிரங்களைப் போடுவான். மணமக்களிருவரும் தண்ணீருள் அதனைத் தேடுவர். முதலில் கண்டெடுத்தவரே இதனில் வென்றவராம். இச் சடங்கு எல்லா இந்துக்களிடமும் வழங்கி வருகிறது. பின்னர்த் தம்பதியர் ஒருவருக்கொருவர் இட்லி உண்பிப்பதுண்டு. இதனைத் தொடர்ந்து புனித நீராட்டுண்டு. இத்துடன் சடங்குகள் முற்றுப் பெறுகின்றன.

இறப்புச் சடங்குகள்

இறந்தவரது சடலம் இரவில் வைத்திருக்கப்படுவதில்லை. அன்றே எரிப்பதுதான் வழக்கம். வெள்ளியன்று இறந்தோரது சடலத்துடன் கோழிக்குஞ்சு ஒன்றைக் கட்டுவர். இடுகாட்டில் அக் குஞ்சை மீண்டும் விட்டுவிடுவர். மலராலும் ஆடையாலும் அலங்கரித்த சடலம் மூங்கிற் பாடை மேல் கிடத்தப்படும். மற்றவர் அதனைத் தோளிற் சுமப்பர். உறவினரும் உற்றவரும் பின் வருவர். ஆடலும் பாடலும் பறையடித்தலும், குழலூதலும் உண்டு. புதையற் சடங்கின் பின், எல்லாரும் குளித்துவிட்டுத்தான் வீடு திரும்புவர். ஆணாயின் பதினொரு நாளும், பெண்ணாயின் பத்து நாளும் அழுது தீர்ப்பதும் ஒரு சடங்குதான். கருமாதி என்ற இறப்புச் சடங்கு மறுநாளமையும்.

ஒவ்வொரு குடும்பத்தவரும் தங்களது சாமி மூட்டையை எடுத்துக் கொண்டு ஊருக்கு வெளியே உள்ள ஓரிடத்துக்குச் செல்வர். அரிசியும் காய்கறியும் எல்லாருக்கும் தரப்பட, வெளியிடத்தில் சமையலுண்டு. ஓர் இடத்தினருகில் பல வட்டில்களில் சோறும் சாம்பாரும் வைக்கப்படும். இறந்தோரின் இல்லத்தார் சாமித்தட்டின் மேல் சோறும் இனிப்பும் மாறி மாறி இடுவர். உறவினர் அவர் பங்கினை இடுதலுண்டு. இறந்தவர் பெயரைச் சொல்லி இரண்டையும் கலந்து ஓர் உருண்டையாக்கி ஒதுக்கி வைப்பர். இதுவே

நாயிடமே போட்டு விடுவார்கள். பின்பு நன்கு விரவிய உணவு எல்லாருக்கும் தரப்படும். மீத உணவு வீட்டிற்கு எடுத்துச் செல்லப்படும். வீட்டில் இதனை அவர்கள் உண்பார்கள். சமையலுக்கு உபயோகமான மண்பாண்டங்களை அங்கேயே உடைத்து விடுவர். அந்த வருஷம், பணம் உள்ளபோது தலைத்திவசம் என்ற சடங்குண்டு. ஆடு பலியிட்டு, அனைவரும் விருந்துண்பர். இதன்பின் வேறு சடங்கில்லை.

பூஜை

பணமுள்ளபோது, குலதெய்வத்துக்கு ஒவ்வொரு குடும்பத்தினரும் பூஜையிடுவர். பொதுவாகச் சுமார் ஐந்நூறு ரூபாயாவது செலவாகும். காளிக்காயினும், துர்க்கைக்காயினும் ஓர் ஆடு பலியிடப்படும். காளி, கள் அல்லது சாராயத்தையே விரும்புவதால், அவற்றில் இரண்டு பாட்டில்கள் அவளுக்குப் படைக்கப்படுகின்றன. துர்க்கை இதனை விரும்புவதில்லை. எனவே, அந்தத் தேவதைக்கு இரண்டு பாட்டில் இஞ்சிச்சாறு படைக்கப்படுகிறது. தேவதைகள் ஒரு பை அரிசியையும் பன்னிரண்டு தேங்காய்களையும் ஒரு மணங்கு மாவையும் ஆறு வீசை கருப்பட்டியையும் இரண்டு வீசை எண்ணெயையும் அரை வீசை நெய்யையும் இரண்டு ரூபாய் மதிப்புள்ள கற்பூரத்தையும் வேண்டுகிறார்கள். நிறையப் பூக்களும் தேவைப்படுகின்றன. சம்பந்திகளும் கோத்தரக்காரர்களும் அழைக்கப்பட்டு அவர்களுக்குத் தக்ஷிணை அளிக்கப்படுகிறது. பூஜை வேளைகளில் வழக்கமான ஆடல்பாடலும் மதுவருந்தலும் நடைபெறுகின்றன. பூசாரி தமது சிறிய உருண்டை வடிவமான மணிகளுடன் கூடிய இரத்தம் தோய்ந்த ஆடையே அணிந்துகொள்கிறார். அதன்பின் ஆட்டைப் பலி கொடுத்து அதன் இரத்தத்தைத் தேவதைக்குப் படைக்கின்றார். பின்பு தானும் அதனைக் குடிக்கின்றார். அதன் பின்பு நல்ல விருந்தொன்று நடைபெறுகிறது.

வேறு இரண்டு முக்கியமான பூஜைகளும் இவர்களி டையே நடைபெறுகின்றன. அவை இரண்டும் தற்காலத்தில் வழக்கத்திலிருந்து மறைந்து வருகின்றன. அவற்றிலொன்று ஏழு பானைகள் பூஜை என்பது. அது அடுத்து விவரிக்கப்படு கிறது.

ஏழு பானைகள் பூஜை

இதற்குப் பொருட் செலவும் பொறுமையும் தேவை. மூன்று கற்கள் நிலத்தின் மீது அடுப்பிற்குப் பதிலாக வைக் கப்படுகின்றன. ஒன்றிலிருந்து ஒன்று அளவில் குறைந்த ஏழு பானைகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அவற்றில் மிகவும் பெரிய பானை ஒன்று அல்லது ஒன்றரைப்படி அரிசி யைக் கொள்ளும். அவற்றில் மிகவும் சிறிய பானை அரைக் கால்படி அரிசியைக் கொள்ளும். இப்பானைகளில் இடுவதற் குப் பச்சரிசியே பயன்படுத்தப்படுகிறது. சமைப்பதற்காக இப்பச்சரிசி நன்கு கழுவப்பட்டுப் பல்வேறு அளவுகளிலுள்ள பானைகளில் போதுமான நீருடன் இடப்படுகிறது. அடுப்பின் மேல் இப்பானைகள் ஒன்றிற்கு மேல் ஒன்றாகப் பானை களின் அளவின்படி வைக்கப்படுகின்றன. இதனால், மிகவும் சிறிய பானை மேலே அமைகிறது. கீழே நெருப்புப் பற்ற வைக்கப்படுகிறது. இக் குழுவினர் குடித்து விட்டுப் பானை களைச் சுற்றி ஆடிப்பாடுகின்றனர். மேலே உள்ள பானை யில், அரிசி பொங்கி வடியும் வரை இந் நிகழ்ச்சி நீடிக்கிறது. பின்பு, பூசாரி அந்தப் பானையைக் கீழே இறக்கி ஒதுக்கி வைக்கின்றார். அதன்பின் பூசாரி அடுத்த பானையிலுள்ள அரிசியைத் தன் வெறும் விரல்களாலே துளாவுகின்றார். இந்தத் தண்ணீர் கொதித்திருப்பதில்லை. (இவ்வாறு அவர் கள் கூறி நம்புகிறார்கள்) இதனைப் பார்வையாளர்களில் எவரும் தம் விரல்களால் துளாவிப் பரிசோதிக்கலாம். அடுத்து, மேலே இருக்கும் பானையிலுள்ள அரிசி பொங்கி வடியும் வரை மீண்டும் ஆடலும் பாடலும் நீடிக்கின்றன. இதுவும் இறக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப்படுகிறது. முன் போலவே அடுத்த பானையிலுள்ள அரிசி வெற்று விரல்

களால் துளாவப்பட்டு, முன்னர்த் தொடும் பொழுது குளிர்ந்திருந்தது போலவே இப்பொழுதும் உணரப்படுகிறது மிகவும் பெரிய பானையிலுள்ள அரிசி பொங்கும் வரை இதே நடைமுறை தொடர்கிறது. பிறகு, எல்லாச் சோறும் சாமித்தட்டில் கருப்பட்டி போன்றவற்றுடன் கலக்கப்பட்டு அங்குக் கூடியிருக்கும் எல்லாருக்கும் வினியோகிக்கப்படு கிறது. இம் மக்கள் மேலே கூறியவற்றை உறுதியாக நம்புகிறார்கள். எங்களுக்குத் தகவல் கூறிய பரதேசி, இது போன்ற பூஜையைத் தாம் பார்த்திருப்பதாகவும், ஆனால் அப்பூஜையில் பூசாரியாக இருந்ததில்லை என்றும் கூறினார்.

பால் பூஜை எனக் கூறப்படும் மற்றொரு பூஜையும் அண்மைக் காலங்களில் கைவிடப்பட்டது. நனைத்த கோதுமை மாவினால் செய்யப்பட்ட பணியாரங்கள், கொதிக்கின்ற எண்ணெய்யில் வேக வைப்பதற்காக இடப் படுகின்றன. பூசாரியோ, பூசையை நடத்தும் குடும்பத் தலைவனோ பணியாரம் வெந்திருக்கிறதா இல்லையா என்ப தைக் காணத் தம் விரல்களை எண்ணையினுள் அமிழ்த்து வார்கள். இது பலமுறை திரும்பத் திரும்பச் செய்யப்படும். மீண்டும் மீண்டும் கொதிக்கும் எண்ணெய்யில் அமிழ்த்தினா லும் அவனுடைய விரல்கள் புண்ணாகிவிடுவதில்லை.

அறிவுத் திறமை

பெரும்பாலான நரிக்குறவரினத்தைச் சேர்ந்த குழந்தை கள், இங்குள்ள மற்றக் கிராமக் குழந்தைகளுடன் பள்ளிக் கூடம் செல்கிறார்கள். இவ்விரு வகைகளிலிருந்தும் 17 குழந்தைகள் வீதம் தேர்வு செய்து (Goddard Form Board) பரீட்சையை நடத்தினோம். இவ்வகைத் தேர்வில் அவர்கள் குறிப்பிட்ட வடிவமைந்த உருவங்களைச் சேர்த்து, அதற் காக முறைப்படுத்திச் செதுக்கப்பட்டிருந்த மற்றொரு வடி வத்தில் பொருத்த வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் மும் முறை இத் தேர்வில் பரிசோதிக்கப்படுவர். இதனைச் செய்து முடிக்க அவர்கள் எடுத்துக் கொண்ட குறைந்த

பட்சக் கால அளவும், சராசரி கால அளவும் இருவகைக் குழந்தைகளோடு ஒப்பிட்டுக் கீழே தரப்பட்டுள்ளது.

	குறைந்தபட்ச நேரம் (செகண்டுகளில்)		சராசரி கால அளவு (செகண்டுகளில்)	
வயது	நரிக்குறவர் குழந்தைகள்	கிராமத்துக் குழந்தைகள்	நரிக்குறவர் குழந்தைகள்	கிராமத்துக் குழந்தைகள்
5	47.0	54.1	59.2	65.0
6	40.2	44.2	50.9	52.4
7	30.1	37.6	33.8	44.7
8	35.0	39.1	42.1	46.0
9	24.3	—	27.1	—
10	26.9	28.0	34.7	43.6

நன்றியுரை:

நரிக்குறவர்களைப் பற்றிய ஆய்வு ஆய்வுப் புள்ளியல் துறையினால் 1971 டிசம்பரில் மாணவர்களின் துணையுடன் இக்கட்டுரை ஆசிரியர்களைக் கொண்டு நடத்தப் பட்டது. உளவியல் சோதனைகளுக்குப் பொறுப்பாக இருந்த திரு. S.S. சுந்தர் அவர்களுக்கும் இவ்வாய்வில் பங்குபெற்ற மாணவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும், குறிப்பாக, திரு. ஸ்ரீராமுலு நாயுடு (முற்போக்கு நிலக்கிழார்) அவர்களுக்கும் சமுதாய ஊழியர்களான திரு. ரகுபதி தம்பதியர்களுக்கும் அவர்களுடைய அளவிட முடியாத உதவிக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழாக்கம்: **ஆ. சிவசுப்பிரமணியன்**

மேற்கோள்கள்

1. Thurstone, E-''**Castes and Tribes of South India**''—Vol. IV, (Madras 1909)

2. Srinivasa Varma, G.G.-''Vaagriboli, an Indo Aryan Language,'' [Annamalai University, Tamil Nadu, India 1970].

3. நரிக்குறவப் பெண்களும் இவ்வாறே பாவாடை அணிகின்றனர்.

4. நரிக்குறவர்கள் கிளியை உணவாகக் கொள்வதில்லை,

8. இருளப்பள்ளர் என்ற வெட்டக்காட இருளர்

ஆர். பெரியாழ்வார், எம்.ஏ.

(இருளப்பள்ளர் தமிழ்ப் பழங்குடி மக்கள். மொத்தம் 79,835 பேர்கள் இப்பழங்குடியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இருளரினின்றும் வேறுபட்டவர்கள். இனப்பண்புகளில் வேறுபட்டாலும் மொழியில் மிகவும் ஒன்றுபட்டவர்களாக உள்ளனர். இவர்களது மொழியினைப் பற்றிய ஆராய்ச்சியால் பழங்காலப் பேச்சுத் தமிழின் உருவத்தை அறிய முடிகிறது. இவர்களது பழக்கவழக்கங்களும், சடங்காசாரங்களும், வழிபாட்டு முறைகளும், பழந்தமிழர் பண்பாட்டுக் கூறுகளோடு ஒப்பிடத்தக்கவை. இலக்கியச் சான்றுகளையும், தற்கால மானிடவியல் சான்றுகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்தால், பண்டைத் தமிழ் மக்களில் உழைக்கும் பகுதியினரது வாழ்க்கை முறையைப் பற்றி அறிய முடியும். இவர்களது தெய்வங்கள், ஆணாதிக்க சமுதாய வாழ்க்கையின் வழித் தோன்றல்கள் ஆவார்கள். பழங்குடி மக்கள் பல மாவட்டங்களில் பரவி வாழ்ந்தபோதிலும், பண்பாட்டுக் கூறுகளில் பழமையை இன்னும் பாதுகாத்து வருகிறார்கள். அவர்களது திருமணச் சடங்குகள், பூப்புவிழாச் சடங்குகள், கல்நாட்டும் சடங்குகள் முதலியனவற்றிலிருந்து அவர்களது ஆன்மிக நம்பிக்கைகளையும், அவற்றிலிருந்து அவர்களது பண்பாட்டு வரலாற்றையும் அறிய முடியும். இக் கட்டுரையின் நோக்கம் அவர்களது குழு வாழ்க்கை வருணனையே. (Ethnogrphic description) பெரியாழ்வார் தமது நேர்முக ஆய்வில் கண்ட சான்றுகளை, முன்னர் இப் பழங்குடி மக்களை ஆராய்ந்த ஆய்வாளர்களது நூல்களில் காணப்படும் முடிவுகளோடு இணைத்தும், வேறுபட்டும் எழுதியுள்ளார். இது ஒரு மூல ஆய்வுக் கட்டுரை.

—பதிப்பாசிரியர்.]

இன்று இந்திய நாட்டில் ஏறத்தாழ மூன்று கோடிக்கும் அதிகமான பழங்குடிமக்கள் வாழ்கின்றனர். இவர்களை 427 இனங்களாகப் பகுக்கின்றனர். இவ்வினங்களில் சில, சில மக்களையே கொண்டுள்ளன. இன்னும் சில, பல ஆயிரம் மக்களைக் கொண்டவை. தமிழகத்தைப் பொறுத்த மட்டில் 23 பழங்குடியினர் வாழ்வதாக 1961 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணிப்புக் கூறுகிறது.[1] இருளப் பழங்குடியினரும் தமிழகத்தில் வாழும் பல்வேறு பழங்குடியினரில் ஒரு வகையினர். இவர்கள் எந்த இனத்தைச் (race) சேர்ந்தவர்கள் என்பதைப் பற்றி மானிடவியல் அறிஞர்கள் பல்வேறு கருத்துகளைக் கொண்டுள்ளனர்.

இருளர் பற்றி மானிடவியல் அறிஞர் கூற்று

இந்தியாவுக்குள் நுழைந்த மிகப் பழமையான மனித இனம் நீக்ரோ இனமாகும். இவ்வினம் ஆப்பிரிக்காவிலிருந்து புறப்பட்டு அரேபியா, ஈரான் நெய்தல் நிலப்பகுதிகள் வழியாக மேற்கு இந்தியாவிலும் வந்து குடியேறி, பிறகு அங்கிருந்து வட இந்தியாவை நோக்கிப் படர்ந்து மலேயா, பிலிப்பைன்ஸ், நியூகினியா ஆகிய இந்தோனேஷியத் தீவுகளில் சென்று தழைத்தது. இந்தியாவைப் பொறுத்தவரை நீக்ரோ இனத்தவர்கள், பின்னர் வந்த வேறு இனத்தைச் சார்ந்த மக்களால் அழிக்கப் பட்டிருக்க வேண்டும் அல்லது புதிய இனத்தவர்களுடன் நீக்ரோ இனத்தினர் ஒன்றிப் போயிருக்க வேண்டும். தமிழ்க் கிளை மொழிகளைப்பேசும் சில தென்னிந்தியப் பழங்குடிகளிடையே நீக்ரோக்களுக்கே உரிய பதிவுகளைக் காணலாம். காடுகளில் உறையும் இருளர், காடர், குறும்பர், பளியர் ஆகிய பழங்குடி மக்களிடையே நீக்ரோக்களின் சாயல் காணப்படுவதால் தக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் நீக்ரோ இனம் தேங்கிப்படிந்திருப்பதைத் தெளிவாக உணரலாம்.[2] இருளர்கள் பளியர்கள் மற்றும் எண்ணற்ற இந்தியப் பழங்குடிகள் தொல் ஆஸ்திரலாயீடு மனித இனப் பிரிவுடன் தொடர்புடையவர்களாகக் கொள்ளலாம் என்று பேராசிரியர் மஜூம்தார் கூறுகிறார்.

பேராசிரியர் மஜூம்தார் கருத்தைப் போற்றும் வகையில் எல். ஏ. கிருஷ்ண ஐயர் அவர்கள், "இந்தியா முழுவதும் பரந்து விளங்கிய தொல் ஆஸ்திரலாயீடு மனித இனத்தின் பிரதிநிதிகளாக நீலகிரியில் வாழும் பளியர்களையும் குறும்பர்களையும், ஊராளியர்களையும் இருளர்களையும் கேரளத்தில் உள்ள முதுவர்களையும் குறிப்பிடலாம் என்கிறார்."[4] மேலே அறிஞர்கள் குறிப்பிடுவது போன்று இருளர்கள், நீக்ரோ இனத்தைச் சார்ந்தவர்களா? ஆஸ்திரலாயீடு இனத்தைச் சார்ந்தவர்களா? என்று இரு வேறுபட்ட கருத்துகள் உள்ளன.

தமிழகத்திலுள்ள இருளர்கள் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அண்டை மாநிலங்களான கேரளத்திலும் மைசூரிலும் உள்ளனர். மைசூர் மாநிலத்தில் இரளிகர் என்னும் பெயரில் அழைக்கப்படுகின்றனர். 1961 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்குப்படி பல்வேறு மாவட்டங்களில் இவர்கள் மக்கள் தொகை பின்வருமாறு:

சென்னை 151; செங்கல்பட்டு 24062; வடார்க்காடு 21411; தென்னார்க்காடு 12177; சேலம் 4641; கோவை 10598; நீலகரி 4502; மதுரை 8; திருச்சி 2134; தஞ்சை 38; நெல்லை 6; குமரி 87 (76838).

இவர்கள் மிகுதியாகக் கோவை, நீலகரி, செங்கல்பட்டு சென்னை, வடார்க்காடு, தென்னார்க்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ளனர். எங்களுடைய இனவியல் ஆய்வின்படி (Ethnographic studies) கோவை மற்றும் நீலகிரி மாவட்டத்திலுள்ள நீலகிரி குன்றுகளின் கீழ்ச்சரிவில் வாழும் இருளர்கள் தமிழ்நாட்டில் பிற மாவட்டங்களில் வாழும் இருளர்களினின்றும் இனத்தால் (Ethnically) வேறுபடுகின்றனர் என்று தெரிகிறது. பொதுவாக, எல்லா மாவட்டங்களிலும் உள்ள இருளர்கள் குட்டையாகவும் கறுப்புநிறம் உடையவர்களாகவும் காணப்பட்டாலும் கோவை, நீலகிரி மாவட்டங்களிலுள்ள இருளர்கள் மூக்கு அமைப்பிலும் சமுதாயப் பழக்கவழக்கங்களிலும் மற்றப் பகுதியில்

உள்ள இருளர்களினின்றும் தனித்து விளங்குகின்றனர். கோவை, நீலகிரி இருளர்களுக்கும் பிற பகுதியிலுள்ள இருளர்களுக்கும் எவ்விதமான சமுதாயத் தொடர்பும் (Social contact) இல்லை என்று தெரிகிறது.[5]

1961 ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் புள்ளிவிவரங்களின்படி இந்தியாவில் 4124 இருள மொழி பேசும் இருளர்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் 3958 இருளர்களும், கோவை மாவட்டத்தில் 30இருளர்களும் வடார்க்காடு மாவட்டத்தில் 5இருளர்களும், சேலம் மாவட்டத்தில் 18 இருளர்களும் இருள மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர்.[6]

1961 ஆம் ஆண்டின் இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி கோவை மாவட்டத்தில் 84 பேர் இருள மொழி பேசுகின்றனர். ஆனால் அதே ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் துறையினர் வெளியிட்ட வேறு நூலின்படி 10594 இருளர் உள்ளனர். என் ஆய்வின்போது கோவை மாவட்டத்திலுள்ள அவினாசி, கோவை வட்டங்களில் சுமார் 50-க்கு மேற்பட்ட காட்டுக்குடியிருப்புக்களில் இவர்கள் இருப்பதை அறிந்தேன். இந்த இரு வட்டங்களில் இவர்கள் தொகை சற்றேறத்தாழ பத்தாயிரம் இருக்கும் எனத் தோன்றுகிறது. இவர்கள் அனைவரும் இருள மொழியே பேசுகின்றனர். 84பேர்தான் இருளமொழி பேசுவர் என்று கொடுக்கப்பட்டுள்ள 1961 மக்கள்தொகை கணக்கு முற்றிலும் உண்மைக்குப் புறம்பான ஒன்றாகத் தோன்றுகிறது. இந்திய மக்கள் கணக்கெடுப்பில் நீலகிரி மாவட்ட இருளர்களும் கோவை மாவட்ட இருளர்களும் இனத்தால் ஒன்று பட்டவர்கள் என்று குறிக்கப்படுகிறது. இந்தக் கூற்று உண்மையே.

இந்த இனவியல் நெருக்கத்தைக் கோவை மாவட்ட, நீலகிரி மாவட்ட இருளர்களிடையே உள்ள குலப்பெயர்களின் ஒற்றுமை சுட்டிக் காட்டுகிறது. இவ்விரு பிரிவினருக்கிடையே உள்ள குலப்பெயர்களின் ஒப்புமையைக் கீழே காணலாம்.

இருளப்பள்ளர் (கோவை)	இருளர் (நீலகிரி)
1. குப்பெ	1. குப்பெ
2. சம்பெ	2. சம்பெ
3. கரிட்டிகை	3. கல்கட்டி
4. குறுநகெ	4. குறுநகெ
5. தேவனெ	5. தேவனெ
6. புங்கெ	6. புங்கெ
7. கொடுவெ	7. கொடுவே
8. பேரதாரெ	8. பேராத
9. குப்பிலி	...
10. உப்பிணி	...
11. வெள்ளை	...
12. ஆறுழுப்பு	...

இருளப்பள்ளரிடையே 12 குலங்களும் (Sects) இருளரிடையே 8 குலங்களும் உள்ளன. இருளப்பள்ளரிடையே யுள்ள கரிட்டிகெ என்ற குலம்தான் இருளரிடையே கல்கட்டி என்ற பெயரில் வழங்கப்படுகிறது என்று இந்த இரு இனத்தவர்களாலும் ஒத்துக்கொள்ளப்படுகிறது.

ஆனால், கோவை மாவட்டத்தில் வாழும் இருளர்கள் நீலகிரியில் வாழும் இருளர்களினின்றும் வேறுபடுவதுடன் அவர்கள் தம்மை இருளப்பள்ளர்கள் என்றும், வெட்டக்காட இருளர்கள் என்றும் குறிப்பிட்டு அவர்களினின்றும் வேறுபடுத்திக் கொள்கின்றனர். நீலகிரி மாவட்ட இருளர்களை **மலைநாட்டு இருளர்கள் அல்லது மலைதேச இருளர்கள்** என்று கோவை மாவட்ட இருளர்களும் மற்றவர்களும் அழைக்கின்றனர். இனத்தால் (Ethnically) ஒன்று பட்டவர்களாகக் கருதப்படும் நீலகிரி மாவட்ட இருளரும் கோவை மாவட்ட இருளரும் இன்று முறையே மலைதேச இருளர் அல்லது மலை நாட்டு இருளர் என்றும், இருளப்பள்ளர் அல்லது வெட்டக்காட இருளர் என்றும் இருசாதி உட்பிரிவினராக உள்ளனர்.

பொதுவாக இந்த இரு பிரிவினருக்கிடையே கொள்வினை கொடுப்பினை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், அங்குமிங்குமாகச் சில சமயங்களில் சில திருமணங்கள் இவ்விருசாதி உட்பிரிவினருக்கிடையே நடைபெறுவதும் உண்டு.

ஏன் இவர்களுக்கு இருளப்பள்ளர் அல்லது வெட்டக்காட இருளர் என்று பெயர் வந்தது என்று ஆராய்வதற்கு முன், கோவை மாவட்ட இருளர்களுக்கும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த அட்டப்பாடி பகுதி இருளர்களுக்கும் உள்ள தொடர்பைக் காண்போம். இருவரும் பெயராலும் இனத்தாலும் ஒன்றுபட்டுள்ளனர் என்பது உண்மையே. அட்டப்பாடி பகுதி இருளர்களும் கோவை மாவட்டத்திலிருந்து குடியேறியவர்கள்தாம் என்ற கூற்றைக் கேரள மாநில மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆய்வாளர்கள் கேரளப் பழங்குடி ஊர்களின் ஆய்வு நூலில் கூறியுள்ள கருத்தைக் காண்போம்.

அட்டப்பாடி இருளர்கள் கோவை மாவட்டத்தில் இருந்தவர்கள். பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குடியேறியதாக வரலாறு கூறுகிறது. விஜயநகரப் போரினால் ஏற்பட்ட குழப்பங்களை அடுத்தும் மனித உயிர்களுக்குப் போதிய பாதுகாப்பு இன்மையாலும், இவர்கள் கோவையிலிருந்து அட்டப்பாடிக்குக் குடியேறினார்கள் என்று கூறப்படும் காரணம் ஏற்றுக் கொள்ளத் தக்கதாகவே உள்ளது. இருளர்களுடைய முன்னோர்கள் தாங்கள் தொடக்கத்தில் வாழ்ந்த இடத்திலிருந்து பகைவர்களால் பலவந்தமாகத் துரத்தி அடிக்கப்பட்டார்கள் என்று கூறப்படுகிறது. போரின்போது கொள்ளைக்கும் படுகொலைக்கும் ஆளானார்கள். தாங்கள் வாழ்ந்த இடத்தைவிட்டுக் காடுகளும் வனவிலங்குகளும் நிறைந்த அட்டப்பாடி குன்றுகளைத் தங்கள் புகலிடமாகக் கொண்டனர் இருளர். இவர்கள் குடியேறிய காட்டுப் பகுதிக்குள் நுழைவது அத்துணை

எளியது அல்ல. ஆதலால் அவர்களுக்கு ஆபத்து இல்லை. செவிவழிச் செய்தியாகக் கூடத் தங்கள் பழைய கொடூர மான வரலாற்றையும் போரினால் விளைந்த நாசங்களை யும் இன்றைய இருளர்கள் அரிதாகவே அறிந்துள்ளனர். ஆயினும் போரின் விளைவால் நிகழ்ந்த மனமாற்றங்களை யும் புறவாழ்க்கையில் நிகழ்ந்த மாறுதல்களால் ஏற்றுக் கொண்ட பண்பாட்டுக் கூறுகளையும் இன்றும் காணலாம். காட்டாக இன்றும் இருளர்கள் கிணற்றிலிருந்தும் குட்டையி லிருந்தும் நீர் பருகுவதைத் தவிர்த்து விடுகின்றனர். அந்த நீர் குடிக்கத்தக்க அளவிற்குத் தூய்மையாக இருந்தாலும், இருளர்கள் அல்லாத, மற்றவர்கள் முன்வந்து அருந்தினா லும் இருளர்கள் மேற்குறித்த இடங்களில் நீரோட்ட மில்லாமல் தேங்கியுள்ள நீரை இன்றும் குடிப்பதில்லை. தேங்கியுள்ள நீர் நச்சுத்தன்மை கலந்துள்ளது என்று நெடுங் காலமாக நம்புவதால் அத்தகைய நீரை அருந்துவதில்லை. இது ஒரு மூடநம்பிக்கையாக இருந்தாலும் இத்தகைய நம்பிக்கை தோன்றுவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

விஜயநகர ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற கொடூர மான போரின்போது பகைவர்கள் படு தோல்வியையும் பெரும் இன்னல்களையும் மக்களுக்கு விளைவித்தனர். எதிரி களை அடியோடு துடைத்து எறிவதற்குப் பகைவர்கள் கிணறுகளிலும், குளம் குட்டைகளிலும் நஞ்சைக்கலந்து பெருத்த உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தி இருக்கக் கூடும். தங்கள் உயிர்களுக்கும், தங்கள் நெருங்கிய உற்றார் உறவினரின் உயிர்களுக்கும் இதன் விளைவாக நேர்ந்த முடிவைக் கண்டு அஞ்சி நடுங்கிய இருளர்கள், வேறு வழி யில்லாமல் பின்வாங்கிப் படிப்படியாக அடர்ந்த காடுகள் நிறைந்த அட்டப்பாடியில் வந்து குடியேறினார்கள். யாராலும் அணுக [முடியாத காட்டுப்பகுதியில் வந்து குடி யேறிய போதிலும் பகைவர்களின் செயல்கள் அவர்கள் நெஞ்சில் அச்சத்தை உண்டாக்கிக் கொண்டிருந்ததால் இன்றும் அவர்கள் தேங்கிய நீரைப் பருகுவதை விரும்புவ தில்லை. அதன் பின்னர், அட்டப்பாடியில் நீரோட்டமுள்ள

நதிகளிலிருந்தும், கால்வாய்களிலிருந்தும் மட்டுமே இருளர்கள் நீரை அருந்துவது வழக்கமாயிற்று. இந்தக் கட்டுப்பாடு நிலைத்து நிற்கத் தொடங்கியது மட்டும் அல்லாமல் காலப் போக்கில் கடுமையாகவும் அனுசரிக்கப்பட்டது. அதன் விளைவாகத் தேங்கிய நீரைக் குடிப்பது ஒரு செய்யக் கூடாத தவறாக (Taboo) அமைந்தது.

அட்டப்பாடியிலுள்ள இருளர்களில் ஒரு பிரிவினர் கறுப்புச் செம்மறி ஆட்டைக் கொல்வதும் இல்லை. அவற்றின் கறியை உண்பதும் இல்லை. அந்த வழக்கத்துக்குப் பின் பலமாக உள்ள கதை, இருளர்களுக்குத் தக்க சமயத்தில் உதவிய கறுப்பு ஆடுகளின்மீதுள்ள ஈடுபாட்டைக் காட்டுகிறது. கொடூரமான அழிவுமிக்க போரின்போது அவர்கள் பின்வாங்கிய நிலையில் ஒருநாள் அவர்கள் இரவு உணவை ஓர் ஆற்றங்கரையில் தங்கி உண்டனர். அவர்கள் எடுத்துச் செல்லும் பொருள்களையும் (Movable properties) கால்நடைகளையும் தங்களுடன் கொண்டு சென்றனர். ஆற்றங்கரையில் கால்நடைகளும் கறுப்புச் செம்மறி ஆடுகளும் மேச்சலுக்கும் தண்ணீர் குடிப்பதற்கும் அவிழ்த்து விடப்பட்டன. உணவின்றி, நீரின்றி வெகுதூரம் நடந்து வந்த களைப்பு மிகுதியால் இருளர்கள் நித்திரையில் தங்களை மறந்து அயர்ந்திருந்தனர். நள்ளிரவில் அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது எதிரிகள் நடமாட்டம் மிக அருகில் இருப்பதை உணர்த்துவதுபோல் செம்மறி ஆடுகள் கத்தின. அமைதியான நள்ளிரவில் செம்மறி ஆடுகள் சேர்ந்தாற்போல் கத்தி உறங்கிக் கொண்டிருந்தவர்களை எழுப்பியது. இருளர்கள் விழித்துக் கொண்டு நோக்கியபோது எதிரிகள் கல் எறியும் தொலைவிலிருந்து கள்ளத்தனமாக முன்னேறிக் கொண்டிருந்தனர். எதிரியின் தாக்குதலிலிருந்து இருளர்கள் தப்பி ஓடினார்கள். தங்களிடமிருந்த கறுப்புச் செம்மறி ஆடுகள் மட்டும் கத்தித் தங்களை எழுப்பாமல் இருந்திருந்தால் அவர்கள் எதிரிகளுக்குப் பலி ஆகியிருப்பார்கள். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இருளர்கள் கறுப்புச் செம்மறி ஆடுகள் காலத்தால் செய்த

உதவியை உணர்ந்து அவற்றின்மீது பற்றும் பாசமும் கொண்டனர். கறுப்புச் செம்மறி ஆட்டைக் கொல்வதும், அதற்குத்தீங்கு விளைவிப்பதும்,அதற்குச் செய்யும் துரோகம் என்று இருளப்பள்ளர்களிடையே ஒரு கருத்து நிலவுகின்றது. இத்தகைய செயல்களை அவர்கள் தவிர்க்கின்றனர். ஆடு களின் மீதுள்ள பற்றையும் பாசத்தையும் அவர்களுக்குப் பின் வந்த சந்ததிகளும் பாதுகாத்து வருகின்றனர்.

இருளர்கள் விஜயநகரப்போரின் விளைவால் குடி பெயர்ந்து இப்போது இருக்கும் இடத்திற்குக் குடியேறி யிருக்க வேண்டும் என்ற கருத்தை மேலே குறிப்பிட்ட கதை களும் வேறு சில வரலாற்றுச் சான்றுகளும் வலியுறுத்துவன வாக அமைகின்றன.[7]

இருளப்பள்ளர்

நீலகிரி மாவட்டத்திலுள்ள இருளர்கள் எலியை உண்பதில்லை. ஆனால், கோவை மாவட்ட இருளர் எலியை உண்கின்றனர். பள்ளர் என்ற தாழ்த்தப்பட்ட சாதியினர் எலியை உண்பது நாம் அறிந்த ஒன்றாகும். தாழ்த்தப்பட்ட பள்ளர் சாதியினர் போன்று கோவை மாவட்ட இருளர் களாகிய இவர்களும் எலியை உண்பதாலும், இவர்கள் இருளப்பள்ளர் என்று அழைக்கப்படுகின்றனர். இருளர்கள் தம்மை உயர்ந்த இனத்தவராகவும் இருளப்பள்ளரைத் தாழ்ந்த இனத்தவராகவும் கருதுகின்றனர். இருளரும் இருளப்பள்ளரும் திருமணச் சடங்கு, பூப்புவிழா, ஈமச் சடங்கு போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளின் போதும், சமுதாயப் பழக்கவழக்கங்களிலும் வெவ்வேறு நடைமுறைகளை மேற்கொள்கின்றனர். இருளர்கள் பேசும்மொழி இருளப் பள்ளர் பேசும் மொழியினின்றும் ஒன்றுபட்டும், வேறு பட்டும் காணப்படுகின்றது. என் ஆய்வின் போது கண்ட கோவை மாவட்ட இருளப்பள்ளர்களின் சமுதாயப் பழக்க வழக்கங்களையும் வாழ்க்கையின் பல்வேறு கூறுகளையும் பார்ப்போம்.

கோவை மாவட்டத்தில் இருளப்பள்ளர் அவினாசி, கோவை, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி வட்டங்களி லுள்ள காடுகளிலும் சிறுவாணி, பாலமலை, மருதமலை, வெள்ளியங்கிரிமலை போன்ற மலைப் பகுதிகளிலும் வாழ் கின்றனர். இம்மாவட்டத்தில் வாழும் சுமார் 10,548 இருளப்பள்ளரில் கோவை, அவினாசி வட்டங்களில் மட்டும் 9000 பேருக்கு மேல் வாழ்வதாக 1961 ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மூலம் தெரிகிறது. இவ்விரு வட்டங்களில் சுமார் 60-க்கு மேற்பட்ட காட்டுக் குடியிருப்புகளில் (Forest settlements) உள்ளனர். இருளப் பள்ளர் வாழும் காட்டுக் குடியிருப்புப் பகுதிகளுக்குப் "பதி" என்று பெயர். ஒவ்வொரு பதியிலும் 10 முதல் 20 அல்லது 30 வீடுகள் உள்ளன. பெரும்பாலான பதிகள் கடல் மட்டத்திலிருந்து 1000 அடி முதல் 2000 அடிக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ளன. சிங்கப்பதி, பொட்டப்பதி, சாடிவயல், ஜாகீர்பதி, கல்கொத்திப்பதி, சர்க்கார்பதி, தாணிகண்டி, அட்டுக்கல், கொரவன்கண்டி, தோண்டை, பெருக்கப்பதி, பறையன் கோம்பை, நெல்லி மரத்தார், மானார் சிறுகிணறு குண்டூர், பூச்சமரத்தூர், சொரண்டி, கொடியூர், சேத்துமடுவு, மாங்குழி, பூலப்பதி, செங் குட்டை, பெரும்பதி, குஞ்சூர்பதி, மருதன்பரைப்பதி, அரக்கடவு, பரணி, மேல்பில்லூர், சித்துக்கணி, வீரக்கல், ஊஞ்சலரக்கோம்பை, நீராணி, கடம்பன் கோம்பை, வேப்ப மரத்தூர், கண்டப்பட்டி, கோரப்பதி, கெத்தைக்காடு, மூல செங்கால்பதி, மணியரசன்குட்டை, பசுமணி, உப்புப் பள்ளம், மரிக்கோடு, கீழபில்லூர், அரியூர், உளியூர், போத்தம்படிகை, ஊக்காப்படிகை, நீலம்பதி, மொட் டியூர், ஊக்காயனூர், மேல்பாவிப்புதூர், பூனைப்பதி, செங்கல், சுண்டப்பட்டி, குழிவெளாமுண்டி, செங்குட்டை, வெளாமுண்டி, ஆலாங்கண்டி, ஆலாங்கண்டி புதூர், கோப னாரி முதலிய ஊர்களில் இவர்கள் வாழ்கிறார்கள்.

பதிகளின் பெயர்க்காரணம்

இந்தப் பதிகளின் பெயர்கள் இயற்கைப் பொருள்களின் பெயர்களாகவும், காரணப் பெயர்களாகவும் அமைந்துள்ளன. காட்டாக, அவினாசி வட்டத்திலுள்ள தோளம் பாளையம் கிராமத்திலுள்ள பதிகளை மட்டும் ஆய்வோம். **போத்தம்படுகை** என்ற பதி போத்தன் என்ற இருளப்பள்ளனால் படுகைமண் கட்டப்பட்டது. **ஊக்காப்பட்டி**, ஊக்கான் என்பவனால் உண்டாக்கப்பட்ட பதியாகும். **நீலம்பதி**, **மொட்டியூர்**, **ஊக்காயனூர்**, முறையே நீலன், மொட்டியன், ஊக்கான் என்ற இருளப்பள்ளர்களால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. **பூளைப்பதி** பூளை என்ற ஒருவகைச் செடி மிகுதியாக அந்தப் பதி இருக்கும் இடத்தில் இருந்ததால் பூளைப்பதி என்றழைக்கப்படுகிறது. **மேல்பாவிப்புதூர்** மேல் பாவி என்றால் மேல்பகுதி கிணறு என்று அவர்கள் மொழியில் பொருள்படும். இந்தப் பதியில் மேல்பாவி என்று ஒரு கிணறு இருப்பதால் இந்தப் பதிக்கு இப்பெயர் வரலாயிற்று. **குழிவெளாமுண்டி** ஒரு குழியில் விளாமரம் இருக்கிறது. மூன்று பக்கங்களிலும் மலைச்சரிவுகளில் கிண்ணம் போன்ற பகுதியில் உள்ளது. அந்த மலைச்சரிவுகளிலுள்ள கிண்ணம் போன்ற பகுதிக்கு **உண்டி** என்ற பெயர். அதனால் இந்தப்பதி குழிவிளாமுண்டி என்ற பெயரில் வழங்கலாயிற்று. **செங்குட்டைவெளாமுண்டி** செம்மண் தண்ணீர் குட்டையில் விளாமரம் உண்டி பகுதியில் அமைந்துள்ளதால் இந்தப் பதிக்கு இப்பெயர் வரலாயிற்று. **சீங்குளி** என்ற பதியில் சீங்கை என்ற செடி மிகுதியாக இருந்ததாலும் அப்பதி குழிப்பகுதியில் அமைந்ததாலும் **சீங்குளி** என ஆயிற்று. கண்டி என்றால் இவர்கள் மொழியில் இரண்டு மலைகளும் சேரும் கணவாய் போன்ற இடைவெளிக்குப் பெயர். அந்தக் கண்டியில் ஆலமரங்கள் மிகுதியாக இருந்ததை ஒட்டி அப்பதி அமைந்ததால் **ஆலங்கண்டி** என்றும், அதை யொட்டிப் புதிதாக அமைந்த பதிக்கு ஆலங்கண்டிபுதூர் என்றும் பெயர்கள் பெற்றன. கோப்பை என்ற செடி நல்ல நறுமணத்தை உடையது. அதை மனிதர்கள் தலைக்குத்

தேய்த்து நீராடப் பயன்படுத்துகின்றனர். குறிப்பிட்ட ஒரு பகுதியில் மிகுதியாகக் கோப்பைச்செடி இருப்பதால் கோப்ப னாரை என்று அப்பதிக்குப் பெயர் வரலாயிற்று.

பொது இயல்புகள்

இருளப்பள்ளர் கருமை நிறமும் நடுத்தர உயரமும் உடையவர்கள். இருளப்பள்ளர் அடி மட்டத்திலுள்ள ஏழை கள் அணியும் ஆடைகளையே அணிகின்றனர். இருளப் பள்ளப் பெண்கள் ஆடை அணியும் முறைகொண்டும் கூந்தலை முடியும் தன்மைகொண்டும் இவர்களை எளிதில் இருளப்பள்ளர் என்று அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது. இவர்கள் இடுப்பைச் சுற்றிப் புடவையை அணிந்து கொண்டு ஒரு நுனியை மார்பக்கத்தின்மீது படரவிட்டுஇடது அக்குளின் அருகில் ஒரு முடிபோட்டுக் கொள்கின்றனர். தோள்பட்டைகள் வெறுமனே விடப்படுகின்றன. இந்தப் பெண்கள் கூந்தலை வாரிச் சுருட்டி வலப்பக்கத்தில் ஒரு வகையாகச் செருகிக் கொள்கிறார்கள். இவ்வாறு கூந்தல் முடிவதை இவர்கள் மொழியில் ''துரும்பிடுதல்'' என்றழைகின்றனர். இவ் வழக்கம் இருளப்பள்ளரிடையே மட்டும் காணப்படுகிறது. துரும்பிடுதலாகிய இவ்வழக்கம் இருளப்பள்ளர்களை நீலகிரி இருளர்களினின்றும் புறத் தோற்றத்தில் பிரித்துக் காட்டுகிறது. இருளரும் துரும்பிடு தலை அறிந்துள்ளனர். ஆயினும், இருளர்கள் மிக அரிதா கவே இதனை மேற்கொள்கின்றனர்.

உணவுப் பழக்கம்

இவர்கள் அரிசியையும், கேழ்வரகு, தினை போன்ற சிறு தானியங்களையும் உணவிற்குப் பயன்படுத்துகின்றனர். காடு களில் தாங்கள் விளைவிக்கும் உணவுப் பொருள்கள் சில மாதங்களுக்குப் போதுமானதாகவே உள்ளன. உணவுப் பற்றாக்குறை உள்ள மாதங்களில் அவர்கள் உணவுக்குப் பெரிதும் அல்லல் படுகின்றனர். இந்தச் சமயத்தில் எது

கிடைத்தாலும் அதை உணவாகக் கொள்கின்றனர். மாவுச் சத்து மிகுதியாக உள்ள புளியங்கொட்டையை உணவாகக் கொள்கின்றனர். மிகக் கொடிய பசியையும் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் உடையவர்களாக இவர்கள் காணப்படு கின்றனர். காடுகளில் கிடைக்கும் பலவகை வேர்களையும் கிழங்குகளையும், காய்கனிகளையும் உணவாகக் கொள் கின்றனர். பறவைகளைக் கொன்றும், விலங்குகளை வேட்டையாடியும் அவற்றை உட்கொள்கின்றனர் இருளர் கள். தமக்கு என்று குறிப்பிட்ட உணவு பழக்கத்தைப் பின் பற்றுபவர்களாகத் தோன்றவில்லை. இவர்கள் எருமை, காட்டெருமை ஆகியவற்றின் இறைச்சியை உண்பதில்லை.

வீடு

வனத்துறையினர் இவர்களுக்குக் கொடுத்துள்ள காடு களில் வீடுகள் கட்டிக் கொள்கின்றனர். காடுகளில் கிடைக் கும் பொருளைக் கொண்டும் வீடுகளைக் கட்டிக் கொள் கின்றனர். வீட்டின் இரு பக்கங்களிலும் திறந்தவெளி இருக் கும் வகையில் வீடுகளை வரிசையாகக் கட்டி கொள்கின்ற னர். அவர்கள் வீடுகளை அடுத்து அரசினரால் அளிக்கப் பட்டுள்ள பயிர் இடுவதற்கு ஏற்ற நிலங்கள் உள்ளன. வீடுகள் கட்டுவதற்கு முன் மூங்கில் தட்டிகளையோ, வேறு குச்சிகளாலான தட்டிகளையோ கட்டி அதன்மீது மண்பூசிச் சுவர் அமைக்கிறார்கள். 'கனுங்கு பில்லு' (கணுங்குப்புல்) என்ற காட்டில் உள்ள புல்லையாவது ஓலை, கரும்புத் தோகை, வைக்கோல் போன்றவற்றைக் கொண்டாவது கூரையை வேய்ந்து கொள்கின்றனர். பாக்குத் தோப்பு களில் பணியாற்றும் இருளப்பள்ளர் அங்குக் கிடைக்கும் மட்டைகளைக் கொண்டு வீடுகளின் கூரைகளை வேய்கின் றனர். வீட்டைச் சாணம் போட்டு மெழுகுகின்றனர். சுவர் களையும் சாணத்தால் மெழுகுகின்றனர். சுவர்களுக்கு வெள்ளையடித்தால் யானை வந்து விடும் என்ற காரணத் தால் வெள்ளை அடிப்பதில்லை. அரசினர் சில காட்டிருப்பு

களில் (Forest settlements) வீடுகள் கட்டிக் கொடுத்துள்ளனர்.

தொழில்

அவினாசி வட்டத்திலுள்ள மேட்டுப்பாளையப் பகுதியிலுள்ள இருளப்பள்ளர்களில் பலரும் பாக்குத் தோப்புகளைக் காவல் காத்துக் கொண்டு அவற்றுக்குத் தண்ணீர் பாய்ச்சும் கூலிகளாக உள்ளனர். கோவை மாவட்ட வனத்துறை காட்டுக் குடியிருப்புகளில் வாழும் பெரும்பாலான இருளப்பள்ளர்களுக்கு ஒதுக்கப் பட்ட காடுகளில் (Reserved forests) காட்டு நிலத்தைப் பயிரிடக் கொடுத்துள்ளனர். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலத்தில் சாமை, தினை போன்ற சிறு தானியங்களைப் பயிரிடுகின்றனர். காடுகளில் உள்ள மூன்றாம் தர தடிமரம், விறகு, மூங்கில், புற்கள் ஆகியவற்றைச் சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ள அரசினரால் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கால்நடைகளை (வெள்ளாடுகள் தவிர) இலவசமாகக் காட்டில் மேய்த்துக் கொள்ள அனுமதிக்கின்றனர். குடியிருப்புப் பகுதி (Settlements)க் காடுகளில் உள்ள சில்லறை வனப்பொருள்களை இருளப்பள்ளர் தங்கள் சொந்த உபயோகத்திற்குப் பயன் படுத்த அனுமதிக்கிறார்கள். காடுகளில் உள்ள வேலைகளான சந்தனமரம் வெட்டுதல், மற்றும் இதர வேலைகளை வனத்துறையிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட விகிதங்களில் கூலி பெற்று வேலை செய்து வருகின்றனர். மேலும், விறகு வெட்டும் வேலையையும், கூப்பு வெட்டும் வேலையையும் வனக் குத்தகைக்காரர்களிடம் கூலி பெற்றுச் செய்து வருகின்றனர். சில்லறை வனப்பொருள்களைச் சேகரிக்கும் வேலைகளையும் குத்தகைக்காரர்களிடமிருந்து கூலி பெற்றுச் செய்து வருகின்றனர். இதைத் தவிரச் சிலர் பில்லூர், நெல்லித்துறை மின்சார அணைக்கட்டுப் பணிகளில் ஈடுபட்டும் பயிர்த்தொழில் செய்யும் விவசாயக் கூலிகளாகவும் உள்ளனர். பாக்குத் தோப்புகளையும், மூங்கிலை

யும், காடுகளையும், அவற்றில் உள்ள பொருள்களையும் வைத்தே இவர்கள் தொழிலும் வாழ்வும் அமைகின்றன.

வேட்டையாடுதல்

இருளப்பள்ளர் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதில் நுண்மதி படைத்தவர்கள். சில சமயங்களில் அவர்கள் கூட்டமாக வேட்டைக்குச் செல்வதுண்டு. இவ்வாறு கூட்டமாக வேட்டைக்குச் செல்வதைக் "**கலப்பை வேட்டை**" என்றழைக்கின்றனர். பாதையின் இரு பக்கங்களில் வேட்டைக்காரர்களும் வேறு சிலரும் "பொரெ", "தப்பட்டை" போன்ற இசைக் கருவிகளை அடித்துச் சத்தத்தை உண்டாக்கி விலங்குகளை அந்தப் பாதையில் விரட்டுவர். பாதையின் இருமருங்கிலும் ஒளிந்திருக்கும் இருளப்பள்ளர் குறி வைத்து விலங்கை அடித்துக் கொல்வர். இந்த வேட்டையில் ஈடுபட்ட எல்லா இருளப்பள்ளர்களும் வேட்டையாடிய விலங்கினைப் பங்கு போட்டுக் கொள்வர்.

மொழி

இருளப்பள்ளர் பேசும் மொழி இருளமொழி. இது தென்திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது. இருளப்பள்ளர் பேசுவதும் இருளர் பேசுவதும் இருளமொழியே ஆயினும், சொற்கள் அளவிலும், (Lexical level) சொல்லியலிலும் (Morphology) வேறுபாடுகள் உள்ளன. இருளர் பேசும் மொழியும் இருளப்பள்ளர் பேசும் மொழியும் இருளமொழியின் கிளைமொழிகள் (Dialects of irula language) என்று கூறலாம். எடுத்துக்காட்டாக, ஆறாம் வேற்றுமையிலுள்ள வேறுபாடுகளை இருளக் கிளைமொழிகளில் காண்போம்.

இருளப்பள்ளர் கிளைமொழி	தமிழ்	இருளர்கிளைமொழி (நீலகிரி)
எத்து	என்	நன
நித்து	உன்	நின
நம்முத்து	நமது	நம்ம
எம்முத்து	எமது	
நிம்முத்து	உங்கள்	நிம்ம
எத்துகூரெ	என்வீடு	நனகூரெ
நித்துகூரெ	உன்வீடு	நினகூரெ
நம்முத்துகூரெ	நமதுவீடு	நம்மகூரெ
எம்முத்துகூரெ	எமதுவீடு	
நிம்மத்துகூரெ	உங்கள்வீடு	நிம்மகூரெ

தன்மை ஒருமை வேற்றுமைப்பகுதி (First person singular oblique base) 'நன்' என்று இருளர் கிளைமொழியிலும், 'என்' என்ற இருளப்பள்ளர் மொழியிலும், தன்மை வேற்றுமைப் பகுதியில் இருளமொழியில் 'தம்' எனவும் அமைகின்றன. இருளப்பள்ளர் மொழியில் உளப்பாடுதன்மை பன்மையை (First person inclusive plural) 'நம்' என்னும் பகுதியும் உளப்படாத் தன்மை பன்மையை (First person exclusive plural) 'எம்' என்னும் பகுதியும் உணர்த்தி நிற்கின்றன. ஆனால், இருளர் கிளைமொழியில் இத்தகைய வேறுபாடு காணப்படவில்லை. இருளர்கள் பேசும் கிளைமொழியில் கன்னடம், தமிழ், மலையாளம் மொழிகளின் இலக்கணக் கூறுகள் காணக்கிடக்கின்றன. இருளப்பள்ளர் பேசும் கிளைமொழியில் கோவை மாவட்டத்தில் பேசப்படும் கன்னடம், தெலுங்கு மொழிகளின் செல்வாக்கு அருகிக் காணப்படுகின்றன. இருளப்பள்ளர்களில் பெரும்பாலோர் கன்னடமொழியை அறிந்துள்ளார்கள். இருளர் கிளைமொழியும், இருளப்பள்ளர் கிளைமொழியும் தமக்குள் தனித்தனி இயல்புகளைக் கொண்டனவாயினும் இவற்றைத் தமிழின் கிளைமொழிகளாகக் கொள்வதா அல்லது தனி மொழிகளாகவே கொள்வதா என்பது

பற்றித் திட்டவட்டமாக எனது ஆய்வின் முடிவில் ஒருவாறு கூறமுடியும்[8].

இலக்கியமும் இசையும்

இவர்கள் இலக்கியம் ஏட்டில் ஏறாத நாட்டுக் கதைகளும் நாட்டுப் பாடல்களும் ஆகும். இருளர்களைப் போன்று இருளப்பள்ளர்களும் இசை இன்பத்திலும் மிகுதியாக ஈடுபாடு கொண்டுள்ளனர். இவர்கள் பல்வேறு வகையான நாட்டுப்பாடல்களை அறிந்துள்ளனர். பல்வேறு விழாக்களில் இவர்கள் பாடல்களைப்பாடி மகிழ்வெய்துகின்றனர். விழாக்களிலும் சடங்குகளிலும் இசைக்கருவிகளை இசைத்து அதற்கேற்ப ஆட்டங்கள் ஆடியும் பாட்டுகள் பாடியும் மகிழ்வெய்துகின்றனர். இருளப்பள்ளர் பொரெ, தப்பட்டெ, நாகசுர, குவாலு, பங்கெ போன்ற இசைக்கருவிகளைக் கொண்டுள்ளனர். இவர்களிடம் இருளர்களிடம் இல்லாத ஓர் இசைக்கருவி உள்ளது. இது ஒரு துளைக்கருவி. இதன் பெயர் 'மங்கெ' என்று இவர்களால் கூறப்படுகிறது. இது ஓரடி நீளமுள்ள புல்லாங்குழல் போன்ற ஒரு மூங்கில் தண்டு, இந்த மங்கெ என்ற இசைக் கருவியில் புல்லாங்குழலின் பக்க வாட்டில் துளைகள் இருப்பதுபோன்று இதில் இல்லை

கல்வி

அரசினர் இவர்களுக்கெனத் தனியாகப் பழங்குடிப் பள்ளிகள் அமைத்துக் கொடுத்துள்ளனர். இருப்பினும், இருளப் பள்ளரில் மிகச் சிலரே பள்ளிக்குச் செல்கின்றனர். காட்டாக, நெல்லித்துறைக் கிராமத்தில் ஒன்பது காட்டிருப்புகளில் இவர்கள் குடியிருக்கின்றனர். ஆனால், அங்குள்ள ஊராட்சி ஒன்றியப்பள்ளியில் இருளப்பள்ளர் இனத்தைச் சேர்ந்த ஒரு சிறுவன்கூட இப்பொழுது படிக்கவில்லை என்பது மிகமிக வியக்கத்தக்கது. பெரும்பாலான பதிகள் காட்டுக் குடியிருப்புப் பகுதிகளில் இருப்பதாலும்,

ஏழ்மை காரணமாகவும் இவர்களுக்குப் படிப்பின்மீது நாட்டமில்லை. இருளப்பள்ளர் 99 சதவீத மக்கள் கல்வி அறிவில்லாதவர்கள்.

மருத்துவம்

டாக்டர். எஸ். நரசிம்மன் அவர்கள், பல ஆண்டுகளாகக் கோவை, அவினாசி வட்டங்களில் பதிகளுக்குக் காரில் சென்று இலவச மருத்துவப் பணிபுரிகிறார். நீலகிரி ஆதிவாசி நலச்சங்கத்தின் மூலமாக கோலிக்கரையிலும், அரையூரிலும் நிறுவப்பட்ட இலவச மருத்துவமனைகளில் மருத்துவ உதவி பெறுகின்றனர். இந்த மருத்துவமனைகள் இருளருக்கும், இருளப்பள்ளருக்கும் மற்றப் பழங்குடி மக்களுக்கும் மருத்துவ உதவி புரிவதோடு இருளரையும் இருளப்பள்ளரையும் இணைக்கும் கலாசாரப் பாலமாக அமைகிறது. இரண்டு பிரிவினருக்குமிடையே பொதுவாகத் திருமண உறவு ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றாலும், சில சமயங்களில் இதற்கு விதிவிலக்காக ஓரிரு திருமணங்கள் நடந்துள்ளன. மருத்துவமனைகளில் இருளரும், இருளப்பள்ளரும் இணைந்து பழக வாய்ப்பு ஏற்படுகின்றது. இவ்வாறு இணைந்து பழகுதல் இத்தகைய திருமணங்கள் நிகழ ஒரு காரணமாக அமைகிறது.

பழக்க வழக்கங்கள்

இருளப்பள்ளரிடம் வெற்றிலைப்போடும் பழக்கமும் சாராயம் குடிக்கும் பழக்கமும் உண்டு. இருளப்பள்ளப் பெண்கள் காதோலை, மயிர்மத்தி, பாசிமணி, சங்கிலி, வெள்ளி மணி, மூக்குப்பொட்டு, வளையல், காப்பு, மிஞ்சி போன்ற அணிகலன்களை அணிகிறார்கள். இருளப்பள்ளப் பெண்கள் தோளில் பச்சைக் குத்திக் கொள்கிறார்கள். இருளப்பள்ளர் வாழும் ஒவ்வொரு பதிக்கும் ஒரு தலைவன் உண்டு. அப்பதிக்குரிய தலைவனை '**மூப்பன்**' என்றழைக்கிறார்கள். அத்தலைவன் 'மூப்பன்' என்று ஏன் பெயர் பெற்றான் என்பது

தெளிவாகத் தெரியவில்லை. பதித்தலைவனாகிய **'மூப்பன்'** பூப்புவிழா, திருமணவிழா, ஈமச் சடங்கு போன்ற பல்வேறு சடங்குகளையும், விழாக்களையும் முன்னின்று நடத்தி வைப்பதோடு மண முறிவு வழக்குகளையும், சிறுசண்டை சச்சரவுகளையும் தீர்த்து வைக்கிறான். பதியிலுள்ள இருளப் பள்ளர் அனைவரும் பதித் தலைவனாகிய மூப்பனுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுப்பதோடு கட்டுப்பட்டும் நடக்கிறார்கள். பொதுவாக, பதிகளிலுள்ள இருளப்பள்ளர் அனைவரும் ஒருங்கிணைந்து வாழ்கின்றனர். இருளப்பள்ளர் இனத்தில் ஆண், பெண் இடையே ஓரளவு சம அந்தஸ்து உள்ளது. இயல்பாகவே இவர்கள் சோம்பேறிகளாகவும் உடலுழைப்பிற்குத் தயக்க முடையவர்களாகவும் இருக் கிறார்கள். மிகவும் நாணம் உடையவர்களாகவும், தமிழ் மக்களுடனும் மற்றவர்களுடனும் பழகுவதற்கு அஞ்சுபவர் களாகவும் உள்ளனர். காடுகளில் கொடிய விலங்குகளைக் காணும் பொழுது மிகவும் தைரியமுள்ளவர்களாகவும் அவற்றைச் சமாளிக்கும் திறன் உடையவர்களாகவும் உள்ளனர்.

சமயமும் வழிபாடும்

இருளப்பள்ளர் ஆவி, ஆன்மா ஆகியவற்றில் நம்பிக்கை யுடையவர்கள். பாலமலை ரங்கசாமியையும், காரமடை ரங்கசாமியையும் இவர்கள் வழிபடுகின்றனர். இந்த இரண்டு கோவில்களுக்கும் இருளப்பள்ளர் பூசாரிகளாகவும் உள்ளனர். மாரியம்மன், காளி, சாடி, பத்திரகாளி போன்ற தெய்வங்களையும், திங்கள் ஞாயிறு போன்ற இயற்கைத் தெய்வங்களையும் வழிபடுகின்றனர். மாரியம்மனும், ரங்க சாமியும் இவர்கள் வணங்கும் தலையாய தெய்வங்கள். இத் தெய்வங்களும், இருளரையும் இருளப்பள்ளரையும் இணைக் கும் தெய்வங்களாவதோடு இவ்விரு பிரிவினர் சமுதாயவியல் நெருக்கத்தைக் காட்டுகிறது. காரமடை ரங்கசாமிக்கு நாமம் இடப்பட்டிருந்தாலும் இவர்கள் வைணவம் பற்றிய தத்துவம் அறிந்தவர்களா என்பது ஐயப்பாடே. வீட்டுத்

தெய்வம் என்று குலத்தெய்வத்தைக் கூறுகின்றனர். இத் தெய்வத்திற்கு விழா எடுக்கும்பொழுது குறிப்பிட்டவகைப் பாடலைப் பாடியும், ஆட்டம் ஆடியும் இசைக் கருவிகளை இசைத்தும் மகிழ்வு எய்துகின்றனர். தாம் வழிபடும் சாடி அம்மனைப் பத்திரகாளியாகவே வழிபடுகின்றனர். இவர் கள் வணங்கும் தெய்வங்களுக்கெனக் கோயில் கட்டடங்க ளாக இல்லை. பதியின் கோடியிலோ, மலையில் பெரிய மரங்களின் நிழலிலோ கற்சிலைகளை நட்டு வழிபடுகின்ற னர். சிலவிடங்களில் வெறும் கருங்கற்களைத் தெய்வங்க ளாக நட்டு வழிபடுகின்றனர். சில பதிகளில் மேல் கூரை இல்லாத கோயில்கள் உள்ளன. வெள்ளியங்கிரி மலையி லுள்ள தெய்வத்தையும் வணங்குகின்றனர்.

இருளப்பள்ளர் வைகாசி விசாகத்தைச் சிறப்பான விழா நாளாகக் கொண்டாடுகின்றனர். விசாக விழாவில் சாடி அம்மனைக் கொண்டாடுகின்றனர். இவ்விழா எட்டு நாள் கள் நடப்பது வழக்கமாம். சாடி அம்மனை, மண்பானைக் கரகத்தில் வைத்து வழிபடுகின்றனர். வைகாசி விசாகம் கொண்டாடும் முதல் ஏழு நாட்களிலும் கரகத்தோடு மலர் களையும் நெருப்பையும் எடுப்பது இவர்கள் வழக்கம். மலர் களை அணிந்து கையில் நெருப்புச் சட்டி ஏந்தி அந்த ஏழு நாட்களிலும் இவர்கள் இவ்விழாவினைக் கொண்டாடுவர். ஏழாவது நாள் இரவு அந்தக் கரகத்தோடும் நெருப்புச்சட்டி யோடும், மண்ணால் செய்யப்பட்டு அழகிய வண்ணங்கள் தீட்டப்பட்ட பல சிலைகளையும் எடுத்துச் செல்வர். மட் குடக் கரகத்தில் உள்ள சாடி அம்மனோடு மண்ணால் செய் யப்பட்ட குதிரை, யானைபோன்ற உருவங்களையும் தலை யில்வைத்து ஊர்சுற்றி விழா எடுப்பர். சில பதிகளில் மட் குடத்தோடு கூடிய சிலைகளை நீர்நிலைகளில் இட்டு, வழி பாட்டினை முடித்துக் கொண்டு, எல்லாரும் ஒன்றாகக்கூடி விருந்துண்பர். இன்னும் சில பதிகளில் மரத்தடியில் கோவிலில் வைத்து வழிபாட்டினை முடித்துக் கொண்டு எல்லாரும் கூடி விருந்துண்பர்.

பூப்புவிழா

இருளப்பள்ளர் பெண் பூப்பெய்தியவுடன் தாய் மாமனாவது, தாய்மாமன் மகனாவது, முறை மாப்பிள்ளை யாவது அவள் இருக்கக் குடிசை கட்டிக் கொடுக்கிறான். ஏழாவது நாள் விடியற்காலையில் அந்தக் குடிசையை எரித்து விடுகிறார்கள். பெண் பருவமடைந்ததைக் கொண்டாடும் வகையில் ஒரு சிறு விழா நடத்துவது மரபு. பெண் பூப்பெய்திய மூன்றாவது வாரத்திலாவது மூன்றாவது மாதத்திலாவது இவ் விழா நடைபெறுகிறது. இவ் விழா நடத்தும்பொழுது பூப்பெய்திய பெண்ணின் அருகில் உலக்கை, உரல், பாய், பாட்டில், துடைப்பம், சீப்பு முதலியன வைக்கப்படும். இப்பொருள்களை இருளப்பள்ளர் ஏன் அப் பெண்ணின் அருகில் வைக்கின்றனர் என்பதற் குரிய காரணம் தெரியவில்லை. **இருளர் (நீலகிரி) பூப்பு விழா நடத்தும்பொழுது இருளப்பள்ளரைப் போன்று இப் பொருள்களை பருவமடைந்த பெண்ணின் அருகில் வைப்ப தில்லை என்பது குறிப்பிடத் தக்கது.** பருவமடைந்த இருளப் பள்ளர் பெண் கையில் எண்ணெய் எடுத்து தேய்த்துக் கொள்ளும்பொழுது முறைப் பெண்கள் (மாமன் பெண்கள்) அந்த எண்ணெயைத் தேய்க்கவிடாமல் கையைத் தட்டிவிடு வர். இதே போன்று மும்முறை அப்பெண்ணை எண்ணெய் தேய்க்க விடாமல் கையைத் தட்டிவிடுவர். அந்தப் பெண் உணவு உண்ண கையில் உணவை எடுத்து வாயின் அருகே கொண்டு செல்லும் பொழுது, கையிலுள்ள உணவை மும் முறை தட்டிவிடுவர். பருவமடைந்த பெண் எண்ணெய் தேய்க்கும்பொழுதும், உணவு உண்ணும் பொழுதும் அவள் இந்த கையை ஏன் தட்டிவிடுகின்றனர் என்பது தெரிய வில்லை. விழா முடிவடைந்த உடன் எல்லாருக்கும் விருந்து படைக்கின்றனர். இத்துடன் விழாவும் விருந்தும் முடி வடைகின்றன.

திருமணம்

பெரும்பாலும், ஒருவரை ஒருவர் விரும்பிய ஆடவனும் பெண்ணும் சம்மதித்து மணக்கும் முறையே உள்ளது. பெரியவர்கள் பெண் பார்த்து மணம் முடித்து வைக்கும் வழக்கம் மிகக் குறைவாகவே உள்ளது. இவ்வாறு விருப்பம் உடையவராக மனம் ஒருங்கிணைந்தவராக இருந்தாலும், பெண்ணை மணக்க விரும்பும் ஆடவன் குறைந்தது ஆறு திங்களாவது மனம் நடக்கும்முன் பெண் வீட்டில் அல்லது அவர்கள் கண்காணிப்பில் இருக்க வேண்டும். மாப்பிள்ளை, பெண்ணின் தாய் தந்தை மனம் உவக்கும் வகையில் நடந்து கொள்ளவேண்டும். அதன் பிறகே பெண்ணை மணம் முடித்துக் கொடுக்கின்றனர். மற்றொரு மணமுறையும் இவர்களிடையே உள்ளது. உள்ளம் ஒருங்கிணைந்த ஆணும் பெண்ணும் மணம் செய்து கொள்ளப் பல ஆண்டுகள் ஆகலாம். அவனும் அவளும் கணவன் மனைவியாக வாழ்ந்து குழந்தைகள் பெற்றுக்கொண்டாலும் பெரியவர்கள்முன் முறைப்படி மணம் நடைபெறாவிடில் அவர்கள் தம்பதிகள் ஆக முடியாது. பல ஆண்டுகள் வாழ்ந்து குழந்தைகளைப் பெற்ற பின் நடைபெறும் மணங்கள் சில உள்ளன. ஒத்து வாழ்ந்தாலும் இறுதிவரையில் கூட மணம் இல்லாமலே இருக்கலாம் போலும். எனினும் மணமின்றி இறத்தலாகாது.

இருளப்பள்ளர் இனத்தில் 12 குலங்கள் உள்ளன. குப்பெ, குப்பிளி, உப்பிலி என்னும் இந்த மூன்று குலங்களைச் சேர்ந்தவர்கள், மற்ற ஒன்பது குலங்களில் திருமணம் செய்து கொள்ளலாம். சப்பெ, குறுநகெ, புங்கெ என்னும் இந்த மூன்று குலத்தினர் ஏனைய ஒன்பது குலங்களில் மணம் முடித்துக் கொள்ளலாம். கரிட்டிகெ, பேரதர, ஆறுமுப்பு என்னும் குலத்தினர் மற்ற ஒன்பது குலத்தினரைத் திருமணம்செய்து கொள்ளலாம். பெரியவர்கள், மூப்பன் ஆகியவர்களுடன் மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டிற்குப் பெண் கேட்கச் செல்லும் பொழுது, கையில் தடியும் குச்சியும் கொண்டு செல்கின்றனர்.

இந்தக் குலத்தைச் சேர்ந்தவர்கள் பெண் கேட்கச் செல்லும் பொழுது, இன்ன குச்சியைத்தான் கையில் எடுத்துச் செல்ல வேண்டும் என்னும் மரபு உள்ளது. சம்பெ, குறுநகெ, புங்கெ என்னும் குலங்களைச் சார்ந்தவர்கள் புங்கங்குச்சிகளை எடுத்துச் செல்லுதல் மரபு. கரிட்டிகெ, பேரதர, ஆறுமுப்பு குலங்களைச் சார்ந்தவர்கள் மூங்கில் குச்சிகளை எடுத்துச் செல்லல் மரபு. வெள்ளை, தெவனெ, கொடுவெ என்னும் குலங்களைச் சார்ந்தவர்கள் பாஸ்கர மரக்குச்சிகளை எடுத்துச் செல்கின்றனர். பெண் வீட்டாரிடம் பெண் கேட்கும் பொழுது பெண் வேண்டும் என்று நேரடியாகக் கேட்பதில்லை. பெண்ணை வாழை மரத்திற்கும் நிலத்திற்கும் உருவகப்படுத்தி இருளர் கேட்பது போன்று இருளப் பள்ளரும் பெண்ணை வாழை அல்லது வேறு மரப்பெயர்களோடு உருவகப்படுத்திப் பெண் வேண்டும் என்னும் செய்தியை ஒரு பாட்டின்மூலம் வெளிப்படுத்துகின்றனர்.

''கிழநாடு கம்புங்க பிலி
தென்னாடு தென்னம் பிலி
வடநாடு வானெ பிலி
மேநாடு மொந்தவாளை பிலி
சின்னமொக வாளெபிலி வாங்கி போக
வந்திருக்கு''

பெண்கேட்க வந்திருப்பதை இந்தப் பாடலின் மூலமாகத் தெரிவிக்கிறார்கள். பெண் வீட்டார் பெண் கொடுக்கச் சம்மதித்தால் பெண்ணுக்குப் பரியப் பணமாக ரூபாய் 25- குறிப்பிட்ட நாளில் கட்டப்படுகிறது. அந்தப் பணத்தில் பெண்ணின் தாய்க்கு ரூபாய் 1-25 கொடுக்கப் படுகிறது. பெண்ணின் தாய் மாமனுக்கு ரூபாய் 1-25 கொடுத்தல் மரபு. பரியப் பணம் கட்டுகிற அன்றே திருமணத்திற்குரிய நாளும் குறிக்கப்படுகிறது. குறிப்பிட்ட நாளில் பெண்ணை மாப்பிள்ளை வீட்டிற்கு அழைத்து வந்து திருமணம் நடத்துவர். பதிக்குரிய தலைவனாகிய 'மூப்பன்' திருமண நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தி வைக்கிறான். கருப்புப் பாசிகள் அல்லது உலோகத்தால்

ஆன சிறிய தகடு, தாலியாக அமைகிறது. தாலிகட்டித் திருமணம் முடிந்தவுடன் வந்திருந்த விருந்தினர்களுக்கு விருந்து படைக்கப்படுகிறது. திருமணத்தின்போது புது மணத் தம்பதிகள் '**தண்ணீர்த்துறை போதல்**' என்ற சடங்கு நடைபெறுகிறது. மணப்பெண் செம்பு எடுத்துக்கொண்டு மாப்பிள்ளையுடன் ஆற்றுக்குச் சென்று தண்ணீர் எடுத்து வருகின்றாள். இவ்வாறு ஆற்றுக்குச் சென்று நீர் எடுக்கும் பகுதியில் நீர் எடுத்து வருதலைத் 'தண்ணீர்த் துறை போதல்' என்று அழைக்கின்றனர். இத்துடன் திருமணம் முடிகிறது. பின் விருந்தினருக்கு விருந்து படைப்பர். விதவைத் திருமணங்களும் நடைபெறுகின்றன. இறந்தவனுடைய உடன் பிறந்தவர்களை இறந்தவனுடைய மனைவி திருமணம் செய்து கொள்ளக்கூடாது. சில பெண்கள் மணவிலக்குச் செய்து கொண்டு வேறு ஒருவனை மணந்து கொள்வதும் உண்டு.

பெண் கருவுற்றிருக்கும் காலத்தில் சிற்சில சடங்குகள் செய்கிறார்கள். இருளப்பள்ளர் குழந்தைப் பெற்றவளை வீட்டின் முன்பகுதியில் ஒதுங்கி இருக்கச் செய்வர். மூன்று மாதங்கள் கழித்துத் தீட்டுக் கழித்தபின் தான், தாயை ஏற்றுக்கொண்டு குழந்தையைத் தொட்டிலில் இட்டு வீட்டிற்குள்ளே அழைத்துக்கொள்வர்.

ஈமச்சடங்கு

பதியில் ஒருவன் இறந்தவுடன் சாவுச் செய்தியை எல்லாருக்கும் அனுப்புவர். உறவினர் அனைவரும் வந்தபின் பிணத்தை எடுப்பர். உறவினர் அனைவரும் வந்தவுடன் சடலத்திற்கு நீராட்டுவர். பின்பு, பாடைகட்டிப் பிணத்தைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்வர். அவ்வாறு சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லும் வழியில் ஒரு சடங்கு செய்வர். அப்பொழுது இறந்தவனுடைய மனைவியின் கருகமணியையும், தலைமுடியையும் பிணத்தின் மீது போடுகிறார்கள். பின்பு, பிணத்தைக் குழியில் வைத்துப் புதைத்ததாகக் கூறப்படுகின்றது. ஓராண்டுக் கழித்துப்

பதியிலுள்ள அனைத்து இருளர்களும், இருளப்பள்ளர் களும் சேர்ந்து இறந்தவனுக்கு நினைவு விழா எடுக்கின்றனர். அப்பொழுது இறந்தவர்கள் நினைவாகச் சுடுகாட்டில் 'கல்' வைக்கின்றனர். இவ்வாறு கல் எடுக்கும் பொழுது ஒரு சீர் செய்கிறார்கள். அதைக் கஞ்சிச்சீர் என்கின்றனர். சுடுகாட்டில் கல் எடுக்கும் நாளன்று வைக்கப்பட்டிருக்கும் வடிகஞ்சி நீரில் நினைவுவிழா கொண்டாடும் இருளப்பள்ளர் அனைவரும் தாங்கள் அணிந்திருக்கும் புதுத் துணியின் முந்தியை நனைப்பர். இத்துடன் இச் சீர் முடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. டாக்டர் ச. அகத்தியலிங்கம் (1972)
'தமிழகப் பழங்குடி மக்கள்' பக்கம்.iii-IX.

2. Tamil culture, vol. 8, No. 4 (1959)
India-Aryan and Hindi (1960)
pp. 35.

3. Races and cultures of India (1961)
pp. 63-64.

4. Anthropology on the March (1963)
pp. 83.

5. P.K. Nambiar (1965) Census of India 1961, Volume IX, Madras Part VI, village survey Monographs 20, Hallimeyar pp. 7.

6. A. Matra (1961) Census of India (1961)
Volume 1, India Part 11-C
(ii) Language tables pp. LXXXVI

7. M.K. Devassy (1966) Census of India
1961 Volume VII, Kerala part VI G village survey Monographs Tribal Areas pp. 17 to 19.

8 R. Perialwar, Field Notes of Irula dialect

9. இருளர் திருமணம்

ஆர். பெரியாழ்வார்

[நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் வட்டத்தில் 33 சிற்றூர்களில் 4072 இருளர்கள் வாழ்கிறார்கள். இந்தச் சிற்றூர்கள் கடல் மட்டத்திற்கு 4000 அடிக்கு மேல் உள்ள மலைப் பகுதிகளிலும், பள்ளத்தாக்குகளிலும் உள்ளன. இவர்களிடம் பலவகையான பழக்க வழக்கங்கள் உள்ளன. சில பழக்க வழக்கங்கள் புதுமையானவை. இருளர்களின் திருமணம் பற்றிய சில செய்திகளை இங்கு விரித்து எழுதியுள்ளேன்.

—பதிப்பாசிரியர்.]

ஹார்க்னெஸ் என்பவர் இருளர்கள் திருமணத்தைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ''இருளர்களிடையில் திருமண ஒப்பந்தம் என்று சொல்லத்தக்க சடங்கு எதுவும் காணப்படவில்லை. ஓர் ஆணுடன் சேர்ந்து வாழ்வதோ அவனிடமிருந்து பிரிந்து சென்று விடுவதோ பெண்ணின் விருப்பத்தைப் பொறுத்ததாகும். இருளர்களில் வசதிஉள்ள சிலர் ஆணும் பெண்ணும், கணவன், மனைவியாக இணையும் பொழுது நண்பர்களுக்கும் அண்டை அயலாருக்கும் விருந்து ஒன்று நடத்துவார்கள். அவ்விருந்தின்போது குறும்பர்கள் தங்கள் இசைக்கருவிகளுடன் கலந்துகொண்டு அன்று இரவு முழுவதும் ஆடிக்களிப்பார்கள். ஆயினும், இது அரிதாகக் காணப்படும் நிகழ்ச்சியாகும்.''

இருளர்களிடையே நடைபெறும் திருமணம் மிகவும் **எளிமையான ஒரு நிகழ்ச்சி** என்று தார்ஸ்டன் குறிப்பிடுகிறார். ''திருமணத்தின் போது செம்மறி ஆடு கொல்லப்பட்டு விருந்துக்கு ஏற்பாடு செய்யப்படும். திருமணத்தில் கலந்துகொள்ளும் விருந்தினர்கள் மணமகனுக்குத் தம்மால்

இயன்ற அளவு பரிசாகக் கொடுக்கிறார்கள். மணமகன் அப் பரிசுப் பணத்தை ஒரு துணியில் முடிந்து கொண்டு மணமகள் வீட்டிற்குச் சென்று அவளைத் தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்று விடுவான். விதவைகள் மறுமணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். இருளர்களிடையில் பூங்கரு (Poongkaru), குடகர் (Kudager), கல்கட்டி (Kal katti), வெள்ளக (Vellaka), தெவாலா (Devala), கொப்பி லங்கம் (Koppilingam) என ஆறு உட்பிரிவுகள் உண்டு. இப் பிரிவுகளில் முதல் ஐந்து பிரிவுகளைச் சார்ந்தவர்கள் சகோதர உறவு உடையவர்களாகக் கருதப்படுகிறார்கள். எனவே, இப்பிரிவுகளைச் சார்ந்தவர்களுக்குள் திருமணம் நடைபெற முடியாது, இப் பிரிவுகளைச் சார்ந்த அனைவரும் **கொப்பிலங்கம்** (Koppilingam) பிரிவைச் சார்ந்தவர்களோடு மட்டுமே மண உறவு கொள்ளலாம்.''

பூ. சா. கோ. கலைக்கல்லூரியின் சார்பில் 1962-இல் எடுக்கப்பட்ட சமுதாய பொருளாதார சர்வே பின்வருமாறு கூறுகிறது. இருளர் இனத்தில் இரு அகமணக் குழுக்கள் இருக்கின்றன. அவற்றுள் உயர்ந்தது (Superior) என்றும், மற்றொன்று தாழ்ந்தது (Inferior) என்றும் கூறுகிறது. உயர்ந்த அகமணக் குழுவில் (Endogamous marriage group) உள்ள உட்பிரிவுகள் ஏழு. 1. கொப்பிலிகெ, 2. குறுநகெ, 3. புங்கெ, 4. கொடுவெ, 5. கல்கட்டி, 6. சம்பெ, 7. தெவனெ என்பன. தாழ்ந்த அகமணக் குழுவிலுள்ள உட் பிரிவுகள் 1. சோலைகள், 2. உப்பிலிகர், 3. வெள்ளைகள், 4. கர்த்திகர், 5. லொரிகர் என்பன. இருளர்கள் திருமணத் தைப் பொறுத்தவரை இரு மரபுகளைக் கொண்டுள்ளனர். ஒரு மரபுப்படி மணமகனின் பெற்றோர் ஆடவனுக்கு வயது வந்தவுடன் பெண் வீட்டிற்குச் சென்று பெண் கேட்டுத் திருமணம் செய்து வைப்பது. பெண் வீட்டிற்குச் செல்லும் பொழுது மாப்பிள்ளையின் தாய் தந்தையர் இரு இரும்புத் தடிகளுடன் சென்று பெண் கேட்பார்கள். அவர்கள் பெண் கொடுப்பதாகச் சொல்லி விட்டால் தம்முடன் கொண்டு சென்ற இரண்டு இரும்புத் தடிகளையும் பெண் வீட்டில்

வைத்து விட்டு வந்து விடுவார்கள். ஒரு மாதத்திற்குப் பின் மாப்பிள்ளையின் தாயும், தந்தையும், மற்றும் ஐந்து உறவினர்களும் பெண் வீட்டிற்கு ஏழு குச்சிகளுடன் செல் வார்கள். பெண்ணின் பெற்றோர்கள் பெண் கொடுக்கச் சம்மதித்தால் வந்தவர்களுக்கு ஒரு விருந்து கொடுப்பார்கள். பெண் கேட்கச் சென்றவர்கள் ஏழு குச்சிகளுடன் திரும்பு வார்கள். மாப்பிள்ளை வீட்டிலிருந்து சில நாள்கள் கழித்து ஆண்கள் பெண்கள் கொண்ட குழுக்கள் இசைக்குழுவோடு சென்று பெண்ணின் தாய், தந்தைக்கு அணிகலன்கள் இருபத் தைந்து ரூபாய் ஆகியவற்றைக் கொடுப்பார்கள். பெண் ணைப் புதுத் துணிகளை உடுத்தச் செய்து இசைக்குழு புடை சூழ அவளை ஊர்வலமாகத் தாய்மாமன் வீட்டிற்கு அழைத்துச் செல்வார்கள். பெண்ணையும், மாப்பிள்ளை யையும், நிறுத்தி அவர்களுக்கிடையே ஒரு திரையிடுவர். மாப்பிள்ளை தாலியை ஒரு முதியவரிடம் கொடுக்கிறான். முதியவர் அதைத் தன் மனைவியிடம் கொடுக்க அவள் பெண்ணுக்குத் தாலி கட்டுகிறாள். பண்டைக் காலத்தில் பாசியோ, மஞ்சள் கயிறோ தாலியாகப் பயன்படுத்தப் பட்டது. இப்போது உலோகத்தால் செய்யப்பட்ட தாலியை பயன்படுத்துகிறார்கள். திருமணம் ஆனவுடன் மணமகள் தன் கணவன் வீட்டில் அவனுடைய தாய், தந்தையருடன் சேர்ந்து வாழ்வாள். சில சமயங்களில் கணவனும் மனைவி யும் சேர்ந்து தனியாக வாழ்வார்கள்.

இருளர்களிடையே காணப்படும் வேறு சில உட்பிரிவின ரிடையே இன்னொரு திருமண முறையும் வழக்கில் காணப் படுகிறது. இம் முறைப்படி பூப்பெய்திய பெண் திருமணத் துக்கு முன் தன்னை மணக்கவிருப்பவன் வீட்டிற்குச் சென்று அவனுடன் ஓராண்டு வரை வாழ்க்கை நடத்துவாள். மாப்பிள்ளை வசதிக்கேற்பப் பணம் சேர்த்தவுடன் திருமணம் நடைபெறுகிறது. இப்படி இருவரும் வாழும் பொழுது அவள் பிள்ளை பெறும் நிலை அடைந்து விட்டால் உடனே திருமணம் நடைபெறும். பெரும்பாலும் தாய் தந்தையரே திருமண ஏற்பாடுகளைச் செய்கிறார்கள்.

சிலரே தாங்களே பெண் பார்த்துத் திருமணம் செய்து கொள் கின்றனர். விதவைத் திருமணங்கள் நடைபெறுகின்றன. சிலர் பூப்பெய்தாத பெண்களையும் திருமணம் செய்து கொள்கின்றனர்.

இருளமொழி பற்றிய கள ஆய்வின் போது (Field work) இருளர்களின் திருமணம் பற்றி நேரில் கண்டறிந்தவற்றை யும் இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

மணவகைகள்

இருளர்களிடையே இரண்டு மூன்று மண வகைகள் உள்ளன. மாப்பிள்ளையின் தாய் தந்தையர் பெண்ணை நேரில் பார்த்துப் பெண் வீட்டாரிடம் கேட்டு மணம் முடிப் பது ஒரு மரபு. மற்றொரு மரபு, மாப்பிள்ளை தனக்குப் பிடித்த பூப்பெய்திய பெண்ணோடு திருமணத்திற்கு முன்பு தொடர்பு கொண்டு அவளுடைய வீட்டில் தங்கி வாழ்க்கை நடத்திப் பின் அவளைத் திருமணம் செய்து கொள்வதாகும். பெண் வீட்டில் தங்கி வாழ்க்கை நடத்தும் ஆடவனை ''மென மாப்பிள்ளை'' என்று இவர்கள் மொழியில் கூறு கிறார்கள். ''மென மாப்பிள்ளை'' அவளோடு வாழ்க்கை நடத்தும் காலத்தில் தான் ஈட்டும் ஊதியத்தை அவள் வீட்டாருக்குத் தருகிறான். இதைப் பணி செய்து திருமணம் செய்து கொள்ளும் முறை என்று கொள்ளலாம். (Marriage by service). சில சமயங்களில், இவ்வாறு வாழ்க்கை நடத்தும் மெனமாப்பிள்ளை பெண் பிடிக்கவில்லை என்ற காரணத் தால் அவளை விட்டுச் செல்வதும் உண்டு. பெண் பருவம் அடைவதற்கு முன்பே சிலர் திருமணம் செய்து கொள்ளு கிறார்கள். பருவம் அடைந்த பெண்ணைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று வைத்திருந்து வாழ்க்கை நடத்திய பின் திருமணம் செய்து கொள்வது ஒரு வகை மரபு. சிலர் தமக்குப் பிடித்த பெண்ணைக் கூட்டிக் கொண்டு ஓடி விடு வதும் உண்டு. இதை உடன் போக்குத் திருமணம் (Marriage by elopement) என்று கொள்ளலாம். ஒரு பெண் ஒரு

வனை மணக்கச் சம்மதிக்காவிட்டால் அவளுக்கு மருந்திட்டு வசியம் செய்து (Black magic witchcraft) திருமணம் செய்து கொள்வதுண்டு. விதவைத் திருமணங்கள் நடைபெறுகின்றன.

திருமணமுறை

இருளர் இனத்தில் இரு அகமணக் குழுவில் ஏழு உட்பிரிவுகள் உள்ளன. 1. குப்பெ, 2. சம்பெ, 3. தெவனெ 4. கல்கட்டி, 5. குறுநகெ, 6. கொடுவெ, 7. புங்கெ என்பனவாகும். இன்னொரு அகமணக் குழுவில் உப்பளிகெ, வெள்ளிளகெ, பேராத, போரிகெ, வெட்டகெ, பணிகெ ஆகிய ஆறு உட்பிரிவுகள் காணப்படுகின்றன. முதலில் குறிப்பிட்ட ஏழுபிரிவுகளில்தாம் பெரும்பாலான இருளர்கள் அடங்குவர். இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் பற்றிக் கேள்வியுற்றுள்ளேன். ஆனால், அவர்களைப் பார்த்ததில்லை. ஒவ்வோர் ஊரிலும் 'கொத்துக்காரன்' என்றும் 'ஜாத்தி' என்றும் பெரியவர்கள் இருக்கிறார்கள். கொத்துக்காரன் ஊருக்குத் தலைவன். ஜாத்தி என்னும் பெரியவன் திருமணம், ஈமச்சடங்கு, பெண் பூப்படைந்ததைக் கொண்டாடும் விழா (நெர அப்ப), குழந்தைக்குப் பெயரிடும் விழா போன்றவற்றை நடத்தி வைக்கிறான். ஓர் அகமணக் குழுவிலுள்ள உட்பிரிவுகள் அனைத்துக்கும் ஒருவனே ஜாத்தியாக இருக்க முடியாது. ஒரு பிரிவைச் சார்ந்தவனுக்கு மாமன், மைத்துனன் அல்லது சம்பந்தம் செய்து கொள்ளத்தக்க பிரிவைச் சேர்ந்தவன் ஜாத்தியாக இருக்க இயலும். அகமணக் குழுவிலுள்ள உட்பிரிவுகளில் இன்ன பிரிவைச் சார்ந்தவன், இன்ன பிரிவில் தான் திருமணம் கொள்ள இயலும் என்பதையும் பின்வரும் பட்டியல் விளக்கும்.*

குப்பெ என்ற பிரிவைச் சார்ந்த இருளர்கள் சம்பெ, கல்கட்டி, தெவனெ, கொடுவே, புங்கெப் பிரிவைச் சேர்ந்தவர்களை திருமணம் செய்து கொள்ளலாம்: ஜாத்தியாக நிய

மித்துக் கொள்ளலாம். இதுபோல சம்பெ என்ற பிரிவினர் குப்பெ, தெவனெ, குறுநகெ என்ற பிரிவினரை திருமணம் செய்து கொள்ளலாம்; ஜாத்தியாக நியமித்துக் கொள்ள லாம். கல்கட்டி என்ற பிரிவினர் (சம்பரைப் போன்று) குப்பெ, தெவனெ, குறுநகெ என்னும் மூன்று பிரிவினரைத் திருமணம் செய்து கொள்ளலாம். ஜாத்தியாக நியமித்துக் கொள்ளலாம். தெவனெ என்னும் பிரிவினர் சம்பெ, குப்பெ குறுநகெ என்னும் மூன்று பிரிவினருடன் திருமணம் செய்துக் கொள்ளலாம்; ஜாத்தியாக நியமித்துக் கொள்ள லாம். குறுநகெ என்னும் பிரிவினர் சம்பெ, கல்கட்டி, தெவனெ என்னும் பிரிவினரைத் திருமணம் செய்து கொள்ளலாம். இந்த மூன்று பிரிவினரில் ஒரு பிரிவினரை ஜாத்தியாக நியமித்துக் கொள்ளலாம். கொடுவே என்னும் பிரிவினரைத் திருமணம் செய்து கொள்ளலாம்; ஜாத்தியாக நியமித்துக் கொள்ளலாம்; புங்கெ என்னும் பிரிவினர் குப்பெ என்னும் பிரிவினரைத் திருமணம் செய்துகொள்ள லாம்; ஜாத்தியாக நியமித்துக் கொள்ளலாம்.

மற்றொரு அகமணக் குழுவிலுள்ள உட்பிரிவினரைப் பற்றித் தெளிவாகத் தெரியவில்லை. எந்தப் பிரிவினர் எந்தப் பிரிவினரைத் திருமணப் செய்து கொள்ளலாம் என்று தெரிய வில்லை. அந்தப் பிரிவினரைப் பற்றிய பெயர்களைக் கேள்விப்படுகிறோம். ஆனால், அவர்கள் பற்றி ஒன்றும் தெரியவில்லை.

திருமணச் சடங்கு

மாப்பிள்ளை வீட்டுக்காரர் பெண் வீட்டிற்கு ஞாயிற்றுக் கிழமையாவது திங்கட்கிழமையாவது பெண் பார்க்கச் செல்வார்கள். அவ்வாறு செல்லும்போது கையில் ஒரு இரும்புத் தடியுடனும், மரத்தடியுடனும் செல்வார்கள். மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் ஏழுமுறை பெண் வீட்டிற்குச் சென்று முடிவு செய்ய வேண்டும். முதல்முறையாக ஒருநாள் மாலைப் பொழுதில் பெண்வீட்டிற்குச் செல்வர். சென்றதும்

தாம் கொண்டு சென்ற இரும்புத் தடியையும் குடையையும் வைத்துவிட்டு, அன்று இரவு அவர்கள் விருந்தினராக அங்குத் தங்கிவிடுகிறார்கள். காலையில் உணவு உண்டபின், ''நாங்கள் போய்வருகிறோம்'' என்று மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் விடைபெற்றுக் கொள்வர். அப்போது ''நீங்கள் எப்பொழுதும் வராதவர்கள் வந்திருக்கிறீர்கள் என்ன காரணம்?'' என்று பெண் வீட்டார் கேட்கிறார்கள். ''உங்களிடம் கொஞ்சம் நிலம் வாழைமரம் உள்ளதாம். இந்த நிலத்தை உங்களிடம் கேட்டு வேளாண்மை செய்யலாம் என்று வந்திருக்கிறோம்'' என்று மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் கூறுகிறார்கள். ''நீங்கள் அந்த முள்ளுக்காட்டை வெட்டமாட்டீர்கள்'' என்று பெண் வீட்டுக்காரர்கள் கூறுகிறார்கள். பின்பு வீட்டிலுள்ள அனைவரையும் கேட்டுவிட்டு, ''நீங்கள் அடுத்த முறை வரும்பொழுது பதில் சொல்லுகிறோம்'' என்று பெண் வீட்டுக்காரர்கள் கூறுகிறார்கள். இரண்டாவதுமுறை மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் பெண் வீட்டிற்குச் செல்லுகிறார்கள். முதல்முறை விருந்து கொடுத்து விருந்தோம்பியது போன்றே இம்முறையும் விருந்து கொடுக்கிறார்கள். பெண் வீட்டிலுள்ள எல்லாரிடமும் ''நிலம் வேண்டும்'' என்று கேட்கிறார்கள். ''எங்களிடம் சின்னக்காடுதான் இருக்கிறது; அதை நல்ல முறையில் வேளாண்மை செய்யவேண்டும்'' என்று பெண்வீட்டுக்காரர்கள் சொல்லுகிறார்கள் ''நாங்கள் நல்லமுறையில் நிலத்தைப் பயிர் செய்கிறோம்'' என்று மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் கூறுகிறார்கள். பின்னர், மாப்பிள்ளை வந்து பெண்ணைப் பார்த்துச் சம்மதிக்க வேண்டும். அடுத்த முறை மாப்பிள்ளையைக் கூட்டிக் கொண்டு மாப்பிள்ளை வீட்டார் பெண்பார்க்க வருகிறார்கள். பெண்ணும் மாப்பிள்ளையும் ஒருவரையொருவர் பார்க்கின்றனர். பின்னர், இருவரும் அவர்கள் சம்மதத்தைத் தெரிவிக்கின்றனர்.

பின்பு, மாப்பிள்ளை வீட்டுக்காரர் தங்களுடைய ஜாதியுடன் ஏழுபேரைக் கூட்டிக்கொண்டு போவார்கள்

பெண் வீட்டாரும் தங்களுக்கு ஒரு ஜாத்தியை நியமனம் செய்திருப்பார்கள். இரு ஜாத்திகளும் மற்றவர்களும் எப்போது திருமணம் நடத்தலாம் பெண்ணுக்கு மாப் பிள்ளை வீட்டார் எவ்வளவு பரியப்பணம் கட்ட வேண்டும் என்பன போன்றவற்றைப் பேசி முடிப்பார்கள். பழைய காலத்தில் மாப்பிள்ளை வீட்டார் பெண்ணுக்குப் பரியப்பண மாக ஆறேகால் ரூபாய் அல்லது பத்தேகால் ரூபாய் கட்டி னார்கள் என்று இவர்கள் கூறுகிறார்கள். இப்பொழுது பெரும்பலோனோர் அறுபதேகால் ரூபாயைப் பெண்ணுக்குப் பரியப்பணமாகக் கட்டுகிறார்கள். பெண்ணுக்கு எவ்வளவு பணம் பரியமாகக் கொடுக்க வேண்டும் என்று ஜாத்திகள் முடிவு செய்கிறார்கள். இதனைக் ''கடிகட்டுகாரு'' என்று இவர்கள் மொழியில் கூறுகிறார்கள். பரியப்பணம் இவ்வளவு என முடிவு செய்யும்போதே, திருமணத் தேதியையும் குறித்து விடுவார்கள். மாப்பிள்ளை வீட்டு ஜாத்தி மாப் பிள்ளைக்கும், பெண் வீட்டு ஜாத்தி பெண்ணுக்கும் பொறுப்பு ஏற்கிறார்கள். ''வருகிற திங்கட்கிழமை கடிகட் டியதற்குச் சரியாக எட்டாம் நாள் திருமணம்'' என்று சொல்லி, மாப்பிள்ளை வீட்டுக்காரர் பெண்ணுக்குப் பரியப் பணமாக அறுபதேகால் ரூபாய் கட்டவேண்டும் என்று முடிவு செய்கிறார்கள். ''வருகிற ஞாயிற்றுக்கிழமை வந்து திங்கட்கிழமை பெண்ணை அழைத்துச் செல்கிறோம்'' என்று கூறிவிட்டு மாப்பிள்ளை வீட்டார் சென்றுவிடு கின்றனர்.

மாப்பிள்ளை வீட்டார் வீட்டுக்குச் சென்று வீட்டைச் சுத்தம் செய்து வெள்ளை அடிக்கின்றனர். பின் தங்கள் உறவினர்களையும் மற்ற இருளர்களையும் வெற்றிலை பாக்குக் கொடுத்துத் திருமணத்திற்கு வரும்படி அழைக் கின்றனர். பெண்வீட்டில் ஆலி என்ற ஒருவகை மரத்தி லிருந்து 12 தூண்கள் வெட்டிப் பந்தலுக்குக் கால்கள் நாட்டுகிறார்கள். பெண் வீட்டாரும் தம் உறவினரையும், மற்ற இருளர்களையும் திருமணத்திற்கு வெற்றிலை பாக்குக் கொடுத்து அழைக்கின்றனர்.

ஜாத்திகளும், பெரியோர்களும், உறவினர்களும் குறித்த நாளன்று திருமணத்தை நடத்தும் நிமித்தம் மாப்பிள்ளை வீட்டில் கூடுகிறார்கள். மாப்பிள்ளை வீட்டு ஜாத்திக்கும், அவன் மனைவிக்கும் மாப்பிள்ளை வீட்டில் கோழிக்கறி யுடன் சாப்பாடு போடுகிறார்கள். அவர்கள் சாப்பிட்டபின் மாப்பிள்ளையின் தாய் தந்தையர், பெண்ணுக்குக் கொடுக்க வேண்டிய அணிகலன்களையும், பரியப்பணத்தையும் ஜாத்தி யிடம் ஒப்புவிக்கிறார்கள். முதலில் மாப்பிள்ளை வீட்டு ஜாத்தியும் அவன் மனைவியும் அவர்களைப் பின்தொடர்ந்து மாப்பிள்ளையின் பெற்றோர்களும், மற்றவர்களும் மண மகனை அழைத்துக் கொண்டு இசைக்கருவிகளை இசைத்த வண்ணம் வீட்டை நோக்கிச் செல்கின்றனர்.

மணப்பெண் வீட்டில் திருமண நிகழ்ச்சிகள்

மணப்பெண் திருமண நாளைக்கு முந்திய நாள் காலை யில் குளித்து வனப்புடன் காணப்படுவாள். (பெரும் பாலும் இருளர்கள் தினமும் குளிப்பதில்லை; ஞாயிற்றுக் கிழமைகளில்தான் குளிப்பார்கள்.) மணப்பெண் வீட்டில் ஏழு செம்புகளில் ஜினிபெரங்கி என்ற ஒருவகை சிறு மிளகா யைத் தண்ணீரில் கலந்து நிரப்பியிருப்பார்கள். அந்தத் தண்ணீர் நிரம்பிய ஏழு செம்புகளையும் பாய் விரித்து அதன் மீது வைத்திருப்பார்கள். இது ஏழு உலகங்களிலும் உள்ள நீரை ஏழு செம்புகளில் வைத்திருப்பதைக் குறிக்கும். மாப் பிள்ளை வீட்டார் வந்தவுடன் வீட்டிற்குள்ளே சென்று ஏழு செம்புகளிலும் வைக்கப்பட்டிருக்கும் 'கரெநீரை' ஒவ்வொரு செம்பிலிருந்தும் கொஞ்சம் கொஞ்சமா எடுத்துக் குடிப் பார்கள். குடித்துவிட்டு அதன்பக்கத்தில் வைக்கப்பட்டி ருக்கும் வெற்றிலை பாக்கைப் போட்டுக் கொள்வார்கள். வெளியே வந்து, மணப்பெண்ணுக்குப் பக்கத்தில் பெண் வீட்டு ஜாத்தியும், மாப்பிள்ளைக்குப் பக்கத்தில் மாப் பிள்ளை வீட்டு ஜாத்தியும் நின்று கொண்டு பின் வருமாறு கூறுவார்கள்.

1 இதி கூடியிருக்க சுசபெக்கு ஒரு சரண
ஏழு லோகக்கு ஒரு சரண
தந்தை லோகக்கு ஒரு சரண
தாய் லோகக்கு ஒரு சரண

இவ்வாறு சொல்லிமுடித்த பின் மாப்பிள்ளை வீட்டி லிருந்து வந்தவர்களைப் பெண்வீட்டார் பாய்விரித்து அதில் உட்காரச் சொல்வார்கள். மாப்பிள்ளை வீட்டுப் பாயில் மாப்பிள்ளை ஜாத்தியும், உறவினர்களும் அமர்வர்; பெண் வீட்டுப் பாயில் பெண்வீட்டு ஜாத்தியும் மற்றவர்களும் உட்காருவார்கள். ஆண்கள் தனிப்பாயிலும் பெண்கள் தனிப்பாயிலும் உட்காருவார்கள். பெண் வீட்டார்கள் எல்லாருக்கும் காபி கொடுப்பார்கள். இந்தச் சமயத்தில் சாப்பாடு ஆகிக்கொண்டிருக்கும்.

பெண்வீட்டில் கோழி அடித்துச் சமையல் செய்வார் கள். சமையல் முடிந்ததும் மாப்பிள்ளை வீட்டு ஜாத்தியும் அவன் மனைவியும், பெண்வீட்டு ஜாத்தியும் அவன் மனைவி யும் சாப்பிடுவார்கள். மாப்பிள்ளை வீட்டு ஜாத்திக்குப் போடப் பட்டிருக்கும் சாப்பாட்டில் கோழித் தொடையைக் குத்தி வைத்திருப்பார்கள், பெண்வீட்டு ஜாத்திக்குப் போடப் பட்டிருக்கும் சாப்பாட்டில் கோழித் தலையைக் குத்தி வைத்திருப்பார்கள். இவர்கள் நாலுபேரும் சாப்பிட்ட பின் மற்றவர்களுக்கெல்லாம் சாப்பாடு போடுவார்கள். மற்றவர் களுக்கெல்லாம் கோழிக்கறி கிடையாது.

பெண் வீட்டிற்கு முன் உள்ள நடு இடத்தில் பாய்கள் விரிக்கப்பட்டிருக்கும். மாப்பிள்ளை வீட்டு ஜாத்தி ஒரு பாயிலும், பெண்வீட்டு ஜாத்தி ஒரு பாயிலும் உட்கார்ந்து எல்லார் முன்னிலையிலும் துணிகளையும் அணிகலன்களை யும் மாப்பிள்ளைவீட்டு ஜாத்தி பெண்வீட்டு ஜாத்தியிடம் கொடுப்பான். பெண் வீட்டு ஜாத்தி அதை ஒப்புக்கொண்டு அவை எல்லாவற்றையும் பெற்றுக்கொள்வான். பின்பு வெண்கலக்கிண்ணம் எடுத்து நடுவில் வைத்து, பெண்

வெற்றிலை மாப்பிள்ளை வெற்றிலை என்று வாங்கி அதை ஏழு பாகமாகப் பிரித்து கிண்ணத்தைச் சுற்றிலும் வைப் பார்கள். இதன் நடுவில் கல்லை வைப்பார்கள். மாப்பிள்ளை வீட்டு ஜாத்தி அறுபதேகால் ரூபாய் பரியப் பணத்தை ஒரு ரூபாய் நாணயங்களாகக் கல்லில் போட்டு மூன்று தடவை எண்ணிக் கிண்ணத்தில் போட்டுக் கொடுக்க வேண்டும். அப்படி எண்ணி முடிக்கும் பொழுது, பின்வரும் பாட்டைப் பாடி மாப்பிள்ளை வீட்டு ஜாத்தி, பெண்வீட்டு ஜாத்தி யிடம் கொடுப்பான்.

மும்போனே பிம்போனே
ஓஜிஆயி ஓதுகிவந்தெ
தவளை ஆயி தவந்து வந்தெ
காடிலமெதன மாலெ தனத்து வந்தே பெணிலாவனே
நெல்லு கரிக்கெ புல்லை வெட்டி பெணிலாவனெ
கோட்ட சீங்கெமுள்ளெ வெட்டி பெணிலாவனெ
உரி சீங்கெமுள்ளே வெட்டி பெணிலாவனே
அங்கயி அகல பூமியை தந்து மூங்கயி
பாட்டி பெண்ணை தந்து பெணிலாவனெ
தரந்த கூரை தரந்த சன்னெ
கத்தின திப கத்தின சன்னெ
அட்ட சோறு பேரின் சன்னெ
ஆசின பாய் ஆசின சன்னே
வெட்டின கத்தின வெட்டின சன்னே
நின சம்பல நனசம்பல ஒண்டோ, சண்டதோ
சண்டலெ, சண்டலெ, சண்டலெ, சண்டுட்டது.

மாப்பிள்ளை வீட்டு ஜாத்தி இந்தப் பாடலைக் கூறி முடிக்கும் தருவாயில் பெண்வீட்டு ஜாத்தி சண்டலெ, சண்டலெ, சண்டலெ (என மும்முறை) கூறிவிட்டு, நாலா வது தடவையாகச் சண்டுட்டது (சேர்ந்துவிட்டோம்) என்று கூறுவான் அந்த வெண்கலக் கிண்ணமும் பொருள்களும் குடத்தின்மீது வைக்கப்படும். மறுநாள் காலை வரை அந்தப் பொருள்கள் குடத்தின் மீதே இருக்கும். மறுநாள்

பெண்ஜாத்தி பெற்றுக்கொண்ட துணிமணிகளையும் அணி கலன்களையும் கொண்டு பெண்ணை அலங்கரிப்பார்கள். மாப்பிள்ளை வீட்டு ஜாத்தி பெண் வீட்டு ஜாத்தியிடம் பெரியோர் முன்னிலையில் இரண்டேகால் ரூபாயை மெலை யடி பணம்' என்று தருவான். மணப்பெண்ணின் தாய் தன் மகளுக்குப் பால் கொடுத்தற்காகக் கொடுக்கப்படும் பணம் மெலையடிப் பணம் எனப்படும். பெண்ணையும் மாப் பிள்ளையையும் இணையாக உட்கார வைப்பார்கள். சாம்பிராணி வைத்துப் பெண்ணின் தாய்மாமன் ஒரு சீர்செய் கிறான். மாப்பிள்ளை வீட்டு ஜாத்தி தாலியைத் தன்மனைவி யிடம் கொடுக்கிறான். மாப்பிள்ளை ஜாத்தியின் மனைவி பெண்ணுக்குத் தாலிக் கட்டுகிறாள். தாலியை இவர்கள் "மூண்டகள்ளி'' என்று கூறுகிறார்கள். மணமக்கள் கூடி யிருக்கும் எல்லா இருளர்கள் கால்களிலும் விழுந்துவணங்கு கிறார்கள். இவ்வாறு காலில் விழுந்து வணங்குவதை ''அட விந்துட்டாரு'' என்று கூறுகிறார்கள். ஜாத்திக்காரன் ஆணுக்கு ஒரு குடையும் பெண்ணுக்கு ஒரு குடையும் தரு கிறான். பெண்ணையும் மாப்பிள்ளையையும் பெண்ணின் தாய்மாமன் வாழ்த்துவான். இந்த நிகழ்ச்சி முடிந்தவுடன் பெண்ணும் மாப்பிள்ளையும் புதுத்துணி விரித்துதாய்தந்தை யார் காலில் விழுந்து வணங்கி வாழ்த்தைப் பெறுவார்கள்.

''எங்கள் பெண்ணுக்கு தண்ணீர் எடுக்கத் தெரியாமல் இருக்கலாம், விறகு எடுத்துவர மலையில் வழி தெரியாமல் இருக்கலாம், இதெல்லாம் சொல்லிக் கொடுத்து நீங்கள் வழி காட்டியாக இருக்கவேண்டும். இதெல்லாம் தெரியவில்லை என்ற காரணத்திற்காக விரட்டி அடிக்கக் கூடாது'' என்று பெண் வீட்டு ஜாத்தி கூறுவான். இதற்கெல்லாம் நீங்கள் பயப்பட வேண்டாம். உங்கள் பெண்ணை நல்ல முறையில் வைத்து வாழ்க்கை நடத்தச் செய்வது என் பொறுப்பு" என்று மாப்பிள்ளை வீட்டு ஜாத்தி பெண்வீட்டு ஜாத்தி யிடம் உறுதி கொடுப்பான். பெண் வீட்டு ஜாத்தி மீண்டும் ஒருமுறை பெண்ணையும் மாப்பிள்ளையையும் மாப்பிள்ளை

ஊருக்கு அனுப்புவதற்கு முன் ''சண்டதோ'' என்று கேட்பான். மாப்பிள்ளை வீட்டு ஜாத்தி ''சண்டலெ, சண்டலெ, சண்டலெ, என்று மும்முறை கூறிவிட்டு நாலாவது முறை ''சண்டுட்டது'' என்று கூறுவான். மணப்பெண்ணுக்குப் பக்கத்தில் ஒரு பெண் துணையாகவும், மாப்பிள்ளைக்குப் பக்கத்தில் ஓர் ஆண் துணையாகவும் வருவார்கள். இவர்களுடன் உறவினர்களும் ஜாத்திகளும் வருவார்கள். ஊருக்கு வரும் வழியில் ஆற்றைக் கடக்க வேண்டியதிருந்தால் மணமக்களை ஆற்றைக் கடக்கும் வரை தூக்கிச் செல்வார்கள்.

மாப்பிள்ளை வீடு

மாப்பிள்ளைவீட்டிற்கு எல்லாரும் வந்து சேருவார்கள். சேர்ந்தவுடன் பெண் தனது வலது காலை முன்னால் எடுத்து வைத்து மாப்பிள்ளை வீட்டிற்குள் நுழைய வேண்டும். மாப்பிள்ளை வீட்டை அடைந்தவுடன் அங்குச் சாம்பிராணி போடுவார்கள். மாப்பிள்ளையின் தாய் மாமன், தாய், தந்தை, அண்ணன், அக்கா, அண்ணி மற்ற உறவினர்கள், ஊர் பெரியவர்கள் மணமக்களை வாழ்த்துவார்கள். வாழ்த்தி முடிந்தவுடன் எல்லாரும் சாப்பிடுவார்கள். பெண் தன் வீட்டிலிருந்து மடியில் எடுத்து வந்த அரிசியை ஆண் ஜாத்தியின் மனைவியினுடன் சேர்ந்து சமையல் செய்வாள். பெண் சமைத்த சோற்றை ஒரே இலையில் மாப்பிள்ளையும் பெண்ணும் எதிர் எதிரே உட்கார்ந்து சாப்பிடுவார்கள். பெண் ஒரு பிடி சாதத்தை மாப்பிள்ளைக்கும், மாப்பிள்ளை ஒரு பிடி சாதத்தைப் பெண்ணுக்கும் ஊட்டுவார்கள். இதைப்போன்று மாறி மாறிக் கொடுத்துச் சாப்பிடுவார்கள். அன்று மற்ற இருளா ஆடவரும் பெண்டிரும் ஆட்டங்கள் ஆடியும், பாட்டுகளைப் பாடியும் இசைக்கருவிகளை இசைத்தும் இரவு வெகுநேரம் வரை மணமக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கச் செய்வார்கள். இந்த இசை நிகழ்ச்சியுடன் திருமண விழா நிறைவுறுகிறது.

Reference

E. Thurstan: Castes and Tribes of Southern India, Volume II C—J 1909.

G. R. Damodaran : Socio-Economic survey of the Niligiri Tribes, 1962.

R. Perialvar : Meterials collected in field work

1 இங்குக் கூடியிருக்கிற சபைக்கு ஒரு சரணம்
ஏழு உலகங்களுக்கும் ஒரு சரணம்
தந்தை உலகத்திற்கும் ஒரு சரணம்
தாய் உலகத்திற்கும் ஒரு சரணம்

2 முன்பு போனேன் பின்பு போனேன்
தனியாக ஒதுங்கி வந்தேன்
தவளைபோல் தவழ்ந்து வந்தேன்

காட்டிலுள்ள தினையை மாவு இடித்து வந்தேன்
பெண்ணையுடையவனே
நெல்லின் கரிக்கைப் புல்லை வெட்டி வந்தேன்
பெண்ணையுடையவனே

கோட்ட சிங்கெமுள்ளை வெட்டிப்
பெண்ணையுடையவனே
உரிச்சிங்கெமுள்ளை வெட்டிப் பெண்ணையுடையவனே
உள்ளங்கை அகல நிலத்தைத் தந்து பெண்ணைத் தந்து
பெண்ணையுடையவனே

திறந்த வீடு திறந்தபடி
எரிகிற விளக்கு எரிகிறபடி
சமைத்த சோறு சமைத்தபடி
விரித்த பாய் விரித்தபடி
வெட்டின கத்தி வெட்டினபடி
உன் சம்மணமும் என் சம்மணமும்
ஒன்றானதோ சேர்ந்ததோ
சேரவில்லை, சேரவில்லை, சேரவில்லை
ஒன்றாகிச் சேர்ந்து விட்டது.

* அகமணக்குழு உட்பிரிவுகள்	ஜாத்தியார் நியமனம் பெறும் பிரிவு	மண உறவுக்குரிய பிரிவு
1. குப்பெ	சம்பெ, கல்கட்டி, தெவனே, கொடுவ, புங்கெ	சம்பெ. கல்கட்டி, தெவனெ, கொடுவ, புங்கெ
2. சம்பெ	குப்பெ, தெவனெ, குறுநகெ	குப்பெ, தெவனெ, குறுநகெ
3. கல்கட்டி	குப்பெ, தெவனெ, குறுநகெ	குப்பெ, தெவனெ, குறுநகெ
4. குறுநகெ	சம்பெ, கல்கட்டி, தெவனெ	சம்பெ, கல்கட்டி, தெவனெ
5. தெவனெ	சம்பெ, குப்பெ, குறுநகெ	சம்பெ, குப்பெ, குறுநகெ
6. கொடுவே	குப்பெ	குப்பெ
7. புங்கெ	குப்பெ	குப்பெ

10. இருளரும் இசையும்

ஆர். பெரியாழ்வார்

[இருளர் என்னும் இனத்தினர் நீலகிரியில் வாழும் இனக்குழு நிலையிலிருந்து, முன்னேறாத மக்கள். அவர்களுடைய இசைகருவிகளைப் பற்றி இக் கட்டுரையில் திரு. பெரியாழ்வார் அவர்கள் ஆராய்கிறார். மொழிப் பாடல்களுக்கு முந்தியது கருவி இசை. அது வேட்டைப் பருவத்தில் மனிதன் இருந்தபொழுதே களைப்புப் போக்கத் தோன்றி விட்டது. இசை உணவு தேடும் முயற்சிக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பயன்பட்டதென்பது, வேட்டைக்காகக் காட்டைக் கலைக்க பயன் படுத்தும் கருவிகளைப் பற்றியும், தெய்வ சாந்திக் காகவும் நடத்தப்பெறும் விழாக்களில் அவர்கள் பயன்படுத்தும் கருவிகளைப் பற்றியும் அறிந்தவர் களுக்குத் தெரியும்:

பழம் கருவிகளைப் பற்றிய ஆராய்ச்சி தற் காலக் கருவி வளத்துள்ள வரலாற்றின் தடத்தைக் காட்டுவனவாகவும் உள்ளன. நமது இசையின் வரலாற்றை எழுதப் பழங்குடி மக்களின் இசையையும், இசைக் கருவிகளையும் பற்றிய ஆராய்ச்சி தேவை. ஏனெனில், அவர்களுடைய இசையும், கருவிகளும் பழமையானவை. அவற்றி லிருந்துதான், வரலாற்று ரீதியாக நாகரீகமடைந் துள்ள மக்களின் இசையும், இசை கருவிகளும் தோன்றியுள்ளன. இதுபற்றிய முழுமையான ஆராய்ச்சியை இக்கட்டுரையில் ஆசிரியர் மேற் கொள்ளவில்லை யெனினும், நமது இசைக்கருவி களின் முந்நிலையாக விளங்கிய சில இசைக் கருவிகள் இன்றும் இருளரால் பயன்படுத்தப்படு கின்றன என்று காட்டி அவற்றின் வரலாற்றுத் தடத்தைச் சுட்டிக்காட்டுகிறார். மொழி இசையில் கூட, இருளர் இசை நமது இசையின் முன்நிலை களில் ஒன்று என்பதையும் ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

—பதிப்பாசிரியர்.]

1. முன்னுரை

நீலகிரி மாவட்டத்தில் ஒன்பது இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கிறார்கள். அந்த ஒன்பது இனங்களுள் இருளர் இனமும் ஒன்று. இவர்கள் கோவை மாவட்டத்தில் அட்டப்பாடிமலை, சிறுவாணிமலை, வெள்ளியங்கிரி முதலிய பகுதிகளிலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் செஞ்சிப் பகுதியிலும் வாழ்வதாகத் தெரிகிறது. இக்கட்டுரையில், குறிப்பாக, நீலகிரி மாவட்டத்தில் வாழும் இருளர்களைப் பற்றியும், அவர்கள் இசைபற்றியும் பார்ப்போம். நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் வட்டத்தில் 33 சிற்றூர்களில் சுமார் 4072 இருளர்கள் வாழ்கிறார்கள். இந்தச் சிற்றூர்கள் கடல் மட்டத்திற்கு 4000 அடிக்கு மேல் உள்ள மலைப் பகுதிகளிலும், மலைப் பள்ளத்தாக்குகளிலும் உள்ளன. இவர்கள் கறுப்பு நிறமும் நடுத்தர உயரமும் உள்ளவர்கள். இவர்களுக்கு இருளமொழி, படகமொழி, தமிழ்மொழி மூன்றும் தெரியும்.

2. இசைப் பாடல்கள்

இருளர்கள் தமது மொழியில் மிகச் சில இசைப் பாடல்களையே பாடி மகிழ்வெய்துகின்றனர். இவர்களிடமிருந்து இவர்களுடைய இசைப் பாடல்களை அறிந்து கொள்வது இடர்ப்பாடாகவே உள்ளது. புதியவர்களிடம் தங்களது பாடல்களைப் பாடிக்காட்ட இவர்கள் வெட்கப்படுகிறார்கள். அதனால், நமக்கு இவர்கள் பாடும் எல்லாப் பாடல்களையும் அறிந்து கொள்ள வாய்ப்பில்லை. சில பாடல்களை மட்டுமே அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. நீலகிரி மாவட்டத்தில் வாழும் மக்களில் பெரும்பாலோர் படகர்கள். அதனால்தான், இம் மாவட்டத்தில் வாழும் மற்ற பழங்குடி மக்களும் தமிழர்களும் படகமொழி பேசும் திறன் பெற்றவர்களாக இருக்கிறார்கள். இதற்கு இருளர்கள் விலக்கல்ல. படக மொழியில் மிகுதியான பாடல்கள் உள்ளன. வயது முதிர்ந்த இருளர்கள் படக மொழிப் பாடல்களை அறிந்துள்ளார்கள். நாம் பாடல்களைப் பாடச் சொன்னால்

படகப் பாடல்களையே பாடிக்காட்ட முன் வருகிறார்கள். இளம் தலைமுறையினர் தமிழ் மக்களுடன் பழகும் வாய்ப்புப் பெற்றதால் மிகுதியாகச் சினிமாப் பாடல்களையே அறிந்துள்ளார்கள்.

பெரும்பாலானவர்கள் இருளமொழிப் பாடல்களை அறிந்துள்ளார்கள். சிறிது படித்த பெண்களுக்கும், வாலிபர் களுக்கும் அவர்களுடைய பாடல்கள் மீது நாட்டமில்லை· படிக்காதவர்களும், வயதுவந்த பெண்களும், முதியவர். களும் ஆடல் பாடல்களில் நாட்டம் கொண்டுள்ளனர் பெரும்பாலான பாடல்களில் ஒவ்வோர் அடியின் முன்பகுதி யும் மரம், செடி, மலர் இவற்றின் பெயரைக் கொண்டே அமைந்துள்ளது. பல பாடல்கள் பாலுணர்வு பற்றியனவாக வும், சில பாடல்கள் செடி, மரம், பறவைகள் பற்றியன வாகவும் உள்ளன. இவர்களுடைய இசைப் பாடல்களில் 'பேப் பாட்டு', 'தினைப்பாட்டு' என இரு வகைகள் உள்ளன.

அவர்கள் பாடி மகிழும் சில பாடல்களின் வரிகளைக் காண்போம்.

பாட்டு 1.

ஆடாடோ நவிலே ஆடிவா நவிலே
இச்சிக் கொம்பிலே அறுதடு நவிலே
சக்கெ கொம்பிலே அறுதடு நவிலே

இப் பாடலின் மற்ற வரிகளில் முதல் பகுதியில் வரும் மரப் பெயர் மட்டும் மாறி வரும். மற்றபடி ஒன்றும் மாறுவ தில்லை.

பாடலின் பொருள்

ஆடு மயிலே ஆடிவா மயிலே,
இச்சிக் கொம்பிலே ஆடுகின்ற மயிலே,
பலாக் கொம்பிலே ஆடுகின்ற மயிலே, ஆடிவா!
நவில்=மயில், சக்கெ=பலா,

இதன் இரண்டு பக்கங்களும் கடமான் தோலால் மூடப்பட்டுள்ளன. இந்த இசைக் கருவியைத் திருமணம், சாவு, மற்ற விழாக்களில் பயன்படுத்துகிறார்கள். இந்த இசைக்கருவியை வாங்குகிறார்கள். மான்தோல் குறைந்த சத்தம் உண்டாக்கக் கூடியது.

3.1.3. தம்பட்டெ. இரும்பு வளையத்தில் ஒருபக்கம் மட்டும் வெள்ளாட்டுத்தோலால் போர்த்தப் பட்டுள்ளது. இது அதிக சத்தம் உண்டாக்கவல்லது. இந்தத் தோல் மெல்லியதாக இருக்கும்.

மான்தோலும் வெள்ளாட்டுத்தோலும் இவர்களுக்குக் கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டு இந்த இசைக் கருவிகளைச் செய்கிறார்கள். இரும்புச் சாமான்களை விலைக்கு வாங்கிக் கொள்கிறார்கள். இந்த இசைக்கருவிகளை இசைப்பதற்கு முன் தீயில் வாட்டுகிறார்கள். தீயில் வாட்டினால் அதிக சத்தம் உண்டாகிறது.

3.2. துளைக் கருவிகள்

3.2.1. புகிரி. இந்தத் துளைக் கருவி சிறு மூங்கில் என்னும் ஒருவகை மூங்கிலால் செய்யப்பட்டது. இது ஓர் நீண்ட உருண்டையான $2\frac{1}{2}$ அல்லது 3 அடி நீளமும் $\frac{1}{2}$ அல்லது $\frac{3}{4}$ அங்குல விட்டமும் உள்ள ஒரு மூங்கில் குழல். இந்தக் குழலின் பக்கவாட்டில் ஆறு துளைகள் இடப்பட்டு உள்ளன. வாயால் ஊதும் பக்கத்திலுள்ள ஓட்டை குவிந்துள்ளது. மலைப்பகுதியிலுள்ள மூங்கிலை வெட்டி இந்தக் கருவியைச் செய்கிறார்கள். புகிரியை வாயால் ஊதி இசை எழுப்புகிறார்கள். இந்த இசைக் கருவியை வாசித்துப் பழக்கமில்லாதவர்களால் இதை இசைக்க முடிவதில்லை. இதிலிருந்து ஒரு புதுவிதமான இசை கிடைக்கிறது. வாய்ப் பாட்டை இந்தப் புகிரி வழியாக வாசிக்கிறார்கள்.

3.2.2. நாகசுர. பேய்ச்சுரைக்காய் என்னும் ஒருவகை சுரைக்காயினால் இந்தத் துளைக்கருவியைச் செய்கிறார்கள். நெற்றான பேய்ச்சுரைக்காயின் கூட்டை எடுத்து, அதன்

உள்ளே உள்ள விதை முதலியவற்றை நீக்கிவிட்டு, 6 அல்லது 8 அங்குல நீளமுள்ள இரண்டு 'ஓடெமூங்கில் குழாய்களை அந்தக் கூட்டினுள் பொருத்திக் கொசுவந்தேன் மெழுகைப் பூசியிருக்கிறார்கள். இந்த ஓடெமூங்கில் குழாய் ஒன்றில் ஆறு ஓட்டைகளும், மற்றொன்றில் மூன்று ஓட்டைகளும் இருக்கின்றன. ஒரு குழாயிலுள்ள மூன்று ஓட்டைகளையும் தேன்மெழுகால் மூடியிருக்கிறார்கள். இந்த இசைக் கருவியில் ஓய்வு நேரங்களில் பொழுதுபோக்கிற்காக இசையை எழுப்பி மகிழ்கிறார்கள். இந்த இசைக்கருவியைப் பழக்கமில்லாதவர்களும் வாசிக்க முடியும். இதை வாசிப்பதில் புகிரி வாசிப்பது போன்ற இடர்பாடுகள் இல்லை. நாகசுர என்ற இந்தக் கருவியைத் திருமணம் போன்ற விழாக்களுக்குப் பயன்படுத்துவதில்லை. குவாலு வாசிப்பதில் புலமைபெற, இந்தத் துளைக் கருவியை வாசித்துப் புலமைபெற வேண்டியது அவசியமாகிறது. இந்தக் கருவி பாம்பாட்டிகளிடமுள்ள மகுடி போன்றுள்ளது.

3.2.3. குவாலு. இந்த இசைக்கருவி அமைப்பிலும் ஒலியிலும் நாம் பயன்படுத்தும் நாதசுரத்தைப்போல உள்ளது. கும்மிமரத்தால் இதன் முன்பகுதியையும் நடுப் பகுதியையும் செய்கிறார்கள். இருளர்களே மரத்தை வெட்டி இந்த இசைக் கருவியைச் செய்கிறார்கள். இது செய்வதற்குத் தேவையான இரும்புச் சாமான்களையும், பித்தளைச் சாமான்களையும் விலைக்கு வாங்கிக் கொள்கிறார்கள். இந்த இசைக்கருவியைத் திருமணம், திருவிழாக்கள் போன்ற எல்லா விழாக்களிலும் பயன்படுத்துகிறார்கள்.

முடிவு

இந்த மொழியிலுள்ள பாடல்கள் பலவற்றைச் சேகரித்து ஆராய்வது அவசியமாகும். இவர்களிடம் எழுத்து இலக்கியம் இல்லை. இந்தப் பாடல்களைக் கொண்டு இவர்களுடைய சமுதாயப்பண்பாடு, பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொள்ள முடியும். தமிழ் மொழியிலுள்ள நாட்டுப் பாடல்களையும் இருளமொழிப் பாடல்களையும் ஒப்பிட்டு நோக்கினால் இருவகைப் பண்பாடுகளைப் பற்றிய புதிய உண்மைகள் புலப்படலாம்.

11. நீலகிரி கசவா பழங்குடி மக்கள்

வே. சிதம்பரநாதபிள்ளை எம். ஏ.

நீலகிரி மாவட்டத்தில் கசவா எனும் இப்பழங்குடி மக்கள் கூடலூர் பகுதியிலுள்ள ஆனைக்கட்டி, வாழைத் தோட்டம், சிறூர், மாயார், தெங்கு மாரோடா, அள்ளி மாறு, மாவனல்லா, அரக்கோடு, கெர்க்கோலா, ஆசுனூறு, திம்பா, புளிஞ்சோறு, குண்டத்திபட்டி, கதரப்பட்டி, அதரப் பட்டி, இதியனப்பட்டி, உதகரைப்பட்டி, ஜகாலிகதவு, கத்தனப்பள்ளி, அரைக்கடவுப்பட்டி முதலியவிடங்களில் வாழ்கின்றனர். 1961 ஆம் ஆண்டுக் கணக்குப்படி இவர் களது மக்கள் தொகை சுமார் நானூறு ஆகும். இவர்கள் தடித்த உதடும் கூர்மையான கண்ணும் சுருண்ட மயிரும் கறுப்பு நிறமுமுடையவர்கள். ஆண்களோடு ஒப்பிடுமிடத்துப் பெண்களது முகம் வட்ட வடிவமாகவும், மூக்குப் பந்து போன்றும் உள்ளன. கறுப்பாக இருப்பினும் பார்ப்பதற்கு அழகாகவே இருக்கின்றனர். ஆண்கள் நம்மைப்போன்று வேஷ்டியும் சட்டையும் அணிகிறார்கள். சில வருடங்களுக்கு முன்னால் வாழ்ந்த பெண்கள், தங்கள் இடுப்பின் கீழ் தனி யான சிறிய துணியையும், இடுப்பின் மேல் வேறு சிறிய துணியையும் அணிந்து இருந்தார்கள். ஆனால் இன்றைய பெண்கள், கிராமப்புற மக்கள் உடை அணிவதைப்போன்று அணிகிறார்கள். பெண்கள் தங்கம், வெள்ளி, பித்தளை ஆகியவைகளில் செய்த ஆபரணங்களை அணிகிறார்கள். இவர்கள் மைசூரில் இருந்து வரவில்லை என்று சொன்னா லுங்கூட, இவர்களது ஆபரணங்களை வைத்து, இவர்கள் மைசூரிலிருந்து வந்தவர்கள் என, பிலோ இருதயநாத் அவர் கள் தமது நூலில் குறிப்பிட்டு இருக்கிறார். ஆனால், சிலர் தங்களை இருளர்கள் என்றே கூறிக்கொள்கிறார்கள். சிலர் தங்கட்கும் இருளர்கட்கும் தொடர்பில்லை என்றும்

கூறுகிறார்கள். எனவே, இது பற்றி இனவியலாளர்களும் (Ethnologists) உருவத் தோற்ற மானிடவியலாளர்களும் (Physical Anthropologists) இவர்களது உடலமைப்பு,இரத்த அமைப்பு (Blood groups) முதலியவற்றை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும். ஆந்திரர்கள், இவர்களை 'ஏனாதி யர்கள் என அழைக்கிறார்கள். இருளர்களுக்கும், ஆந்திராவி லுள்ள ஏனாதியர்கட்கும் செஞ்சுக்களுக்கும் உருவ அமைப்பில் ஒற்றுமை உண்டு என்ற உருவத்தோற்ற மானிட வியலார் கருத்து இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

இவர்கள் தங்களது குடிசைகளை 'அஞ்சுப்புல்'' என்ற புல்லினால் அரைவட்டவடிவமாக வேய்ந்து இருக்கிறார்கள். குடிசையினைச் 'சேரி' எனக் குறிப்பிடுகிறார்கள். மண்சுவர் களுக்குப் பதிலாகக் குட்டையான மூங்கிலையும் ஏனைய காட்டுக் கம்புகளையும் நட்டு இருக்கிறார்கள். சிலரது வீடு கள் பல அறைகளைக் கொண்டதாக உள்ளன. தட்டி வைத்துப் பல அறைகளாகப் பிரித்துள்ளனர். வீட்டைச் சுற்றிலும் வாழை, மற்றும் சில காய்கறிச் செடிகளையும் பயிரிடுகிறார்கள். சேரியின் முன்பக்கத்தில் மாடு, கன்று களைக் கட்டி வைத்துள்ளனர். இது நாகாலாந்திலுள்ள நாகா பழங்குடி மக்கள் வீட்டிற்கு முன்பு பன்றிகளை அடைத்து இருப்பது போன்று உள்ளது. ஒவ்வொரு சேரி யிலும் தாம்பாளம், கும்பா, தவலை, உரல், உலக்கை, தொட்டி, அகப்பை, குந்தாணி, அகப்பைச் செருகி, செம்பு, கெண்டி, பானை, குடம், சட்டி, உறி, விளக்குமாறு, பாக்கு வெட்டி முதலியவைகளைக் காணலாம். இவற்றைத் தவிர அழுக்குப்படிந்த கோணிகளையும், (Bags) சிறிய மரக் கட்டைகளையும், மூங்கில் குழாய்களையும் காணலாம். சிலர் இச் சிறிய மரக்கட்டைகளைத் தலையணையாக உப யோகிக்கிறார்கள். மேலும் மண்வெட்டி, அரிவாள், பிக்காசு கயிறு முதலியவற்றையும் காணலாம். சிலர் வண்டியும் வைத்து இருக்கிறார்கள்.

இவர்கள் காட்டுப் பொருட்களைச் சேகரிக்கின்றனர். சிலர் தேன் சேகரிக்கின்றனர். சில ஆண்களும் பெண்களும் எஸ்டேட்டுகளில் வேலை செய்கிறார்கள். காட்டில் கன்று காளைகளை மேய்க்கச் செல்லும் போது, கழுத்தில் அனுமதிச் சீட்டு (Licence), பீடி, வெற்றிலை முதலியவை அடங்கிய மூங்கில் குழாயினைத் தொங்கவிட்டிருப்பர், காட்டு மிருகங்களால் ஆபத்து ஏற்பட்டு இறக்க நேர்ந்தால்· தான் யார் என்பதைப் பிறர் அறிந்து கொள்வதற்காகவே இப்படிச் செய்கிறார்கள். சிலர் கேப்பை பயிர் செய்கிறார்கள். இரவு நேரங்களில் காட்டு மிருகங்களால் பயிர் அழிந்து விடாதபடி பாதுகாக்க, மரத்தின் மீது உயர்ந்த மாடங்கள் கட்டி, அதன் மீதிலிருந்து தகரத்தை அடித்து, ஒலி எழுப்பியும் கூக்குரலிட்டுக் கொண்டும் இருப்பார்கள். கேரளத்திலுள்ள ஊராளிப் பழங்குடிமக்களும், காட்டு மிருகத்தினின்றும் தங்களைப் பாதுகாக்க மாடங்கள் அமைத்தே தங்கியுள்ளனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். மிகச் சிலரே சொந்த நிலம் வைத்துள்ளனர். இப்பழங்குடி மக்களும் காட்டு நாயக்கர்களும் பெரும்பாலும் காய்கறியே பயிரிடுகிறார்கள். பெட்டக்குறும்பர்களும், பளியர்களும், குறும்பர்களும், காட்டுக்குறும்பர்களும், இருளர்களும், கசவர்களும் பெரும்பாலும் கூலிவேலை செய்தே பிழைக்கின்றனர். எனவே, இவர்களது வருமானம் எவ்வளவு என்று திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லை. கைத்தொழிலை போதிக்க இவ்வாதிவாசிகளுக்குக் கைத்தொழிற் கூடங்கள் அமைக்கப்பட்டு உபகாரச் சம்பளமும் அளிக்கப்படுகிறது. ஒரு கசவரது வருட வருமானம் ரூ. 572 என்று சமுதாய-பொருளாதாரப் புள்ளி விபரம் தெரிவிக்கிறது.

குழந்தைகள் (15 வயதிற்குக் குறைவான வயதை உடையவர்கள்) வேலை செய்யும் விகிதாச்சாரத்தை மாநில அளவில் நோக்கும் போது பளியர், கசவர், முள்ளுக்குறும்பர் ஆகியோரின் குழந்தைகளே அதிகமாக வேலை செய்கிறார்கள். இதனை நோக்கும்போது, இவ்வாதிவாசிகளின் பொரு

ளாதார நிலை எத்துணை அளவு தாழ்ந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

இப்பழங்குடி மக்களிடையே ஐவர் கொண்ட பஞ்சாயத்து அமைப்பு உண்டு. இவர்களின் தலைவருக்கு ''மூப்பன்'' என்று பெயர். ஏனைய நான்கு பேரும் இவருக்கு உதவியாக இருப்பர். ஊரில் நடக்கும் எல்லாக் காரியங்களும் இவர்கள் அனுமதியுடனே நடைபெறும். அவர்களுக்கிடையே ஏற்படும் வழக்குகளை இப் பஞ்சாயத்தார் தீர்த்து வைக்கிறார்கள். அபராதம் விதிக்க வேண்டிய நிலை ஏற்படின் அபராதம் விதிக்கப்படும். மூப்பன் சொல்லிற்குக் கட்டுப்பட்டே நடப்பர். கிராமப் பஞ்சாயத்தில் தேர்தல் நடப்பதுபோல இங்கும் தேர்தல் நடந்து அங்கத்தினர்களைத் தேர்ந்து எடுத்தாலும், இவர்களது பரம்பரையினர் செய்ததுபோல் இவர்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட ஐவர் கொண்ட பஞ்சாயத்தே இவர்களது நிர்வாகமாகும். யாரேனும் யாரையாவது கொலை செய்தால், இவர்கள், பிரச்சினையைத் தீர்த்து வைப்பர். முடியாதநிலை ஏற்படின், நீதிமன்றத்தை நாடுவர். கொலை செய்பவனைத் தங்களினத்தை விட்டு நீக்கவோ, சேர்த்துக் கொள்ளவோ பஞ்சாயத்திற்கு உரிமை உண்டு.

இவர்கள் பேசும் மொழி, தமிழும் மலையாளமும் கன்னடச் சொற்களும் நிறைந்த மொழியாகும். எனது கள ஆய்வுகளினின்றும் (Field work), இது கன்னடத்தின் கிளை மொழியெனத் தெரிய வருகிறது.

இவ்வாதிவாசிகளில் ஆண் பெண் இரு பாலரது பெயர்களை நோக்கின், இவர்கள் இந்து மதங்களைச் சார்ந்தவர்கள் போலத் தெரிகிறது. ஆனால், காட்டுத் தேவதைகளையும் (Forest deities) வணங்குகிறார்கள். அவை இந்து மதத் தெய்வங்கள் அல்ல. அக்டோபர் மாதத்தில் திருவிழா நடத்துகிறார்கள். ஒரு நாள் மட்டுந்தான் இத்திருவிழா நடைபெறுகிறது. திருவிழாவன்று காலையில் தேங்காய்

நீரில் கலக்கப்பட்ட மஞ்சள் நீரோடு, சீயக்காய் கலந்த நீரையும் கலந்து தெய்வத்தைக் குளிப்பாட்டுகிறார்கள். பின் மாலைகளை அணிவித்துப் பால், பழம், தேன் இவற் றைப் படைக்கிறார்கள். பிறகு, தீபாராதனை நடக்கும். இத் தீபாராதனையை நடத்துபவர் லிங்காயத்து வகுப்பைச் சார்ந்த பிராமணர் ஆவர். இதனை அடுத்துப் பல காரணங் களுக்காகத் தெய்வத்தை வேண்டி நேர்ச்சை நேர்ந்தவர் கள் மேளதாளங்களுடன் ஆற்றிற்குச் சென்று நீராடி, வரும் வழியில் செவ்வகவடிவில் உள்ள அனற் குழியில் இறங்கித் தங்கள் நேர்ச்சையை (நேர்த்திக் கடனை) நிறைவேற்றுவர். இதற்கு, ''கொண்டமிதி'' என்று பெயர். அதன்பின் இவ்வாதிவாசிகளால் நியமிக்கப்பட்ட பூசாரி தீபாராதனை செய்வார். திருவிழா அன்று மொத்தம் நூற் றொன்று தீபாராதனைகள் நடக்கும். கடாக்களை வெட்டி தெய்வத்திற்குப் பலியிட்டு விருந்து பரிமாறப்படும். பின் நடைபெறும் நடனத்தில் ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டு ஆடுவார்கள். வருடத்திற்கு மூன்று தடவைகள் பூஜை நடத்தப்படும். மார்ச்சு மாதந்தான் இவர்களுடைய வருடப்பிறப்பாகும். வருடப் பிறப்பு அன்று நடக்கும் பூஜைக்கு ''உகாதிப் பூஜை'' என்று பெயர். அக்டோபர் மாதத்திலும், டிசம்பர் மாதத்திலும் நடத்தப்படும் பூஜை களுக்கு முறையே ''கௌரி பூஜை'', ''கார்த்திகைப் பூஜை'' என்று பெயர்.

பொங்கலன்று நான்கு பானைகளை நான்கு திசை களில் வைத்து நடுவில் ஒரு பெரிய பானையையும் வைத்துப் பொங்கலிடுவார்கள். இவர்கள் தீபாவளியைக் கொண்டாடு வது கிடையாது.

அம்மை நோய் வந்தவர்களைத் தனி வீட்டில் தங்கும் படி செய்வர். அம்மை நோய் வந்தவர்கள் இறக்க மாட் டார்கள் என்றும், அதற்குக் காரணம் தெய்வத்தின் கருணை எப்போதும் உண்டு என்றும் நம்பிக்கை கொண்டி

ருக்கிறார்கள். குணம் அடைந்தபிறகு தெய்வத்திற்குப் பால் பொங்கல் படைப்பர்.

சுசவப்பெண்ணை பருவமடைந்தவுடன் தனி வீட்டில் வைக்கின்றனர். அவ்வீட்டின் முன்பு பந்தல் போடப்படும். வீட்டு வாசலில், பேய் பிசாசுகள் வராமலிருக்க இரும்புத் துண்டையும் செருப்பையும் கட்டி தொங்கவிடுவர். இப் பெண், வைக்கோல் விரிக்கப்பட்ட படுக்கையில்தான் தூங்க வேண்டும். இரவில் இவளுக்குத் துணையாக வயதான பெண்ணொருத்தி இவளுடன் தூங்குவாள். தினமும் குளித்தபிறகே உணவு கொடுக்கப்படும். பன்னிரண்டாவது நாளன்று, தாய் மாமன் பொழுது விடிவதற்குமுன் இவள் தங்கியிருந்த வீட்டின் முன்பாகத்தில் உள்ள பந்தலை அழித்து விடுவான். பின் அப்பெண் குளித்துவிட்டுப் புத்தம் புதிய ஆடையணிந்து வீட்டு வாசலின் முன்பு வந்து பெரி யோர்களை வணங்கி வீட்டினுள் செல்வாள். அன்று விருந்தும் நடனமும் நடைபெறும்.

ஒரு காலத்தில் இவர்களிடையே குழந்தைத் திரு மணம் (Child marriage) இருந்ததாக அறிகிறோம். பெற் றோர்கள் பார்த்து நிச்சயிக்கப்பட்ட திருமணமே பெரும் பாலும் நடைபெறுகிறது. பையன் வீட்டாரே பெண் பார்க்கச் செல்ல வேண்டும். ஞாயிற்றுக் கிழமையன்று பெண் பார்க்கச் செல்லுகிறார்கள். மாப்பிள்ளையின் உறவினர்களில் ஐந்து பெரியவர்கள் செல்வார்கள். சோற் றுடன் சர்க்கரை கலந்த கலவையில் ஐந்து உருண்டை களோடு பழம், வெற்றிலை முதலியவற்றை எடுத்துக் கொண்டு மேளதாளங்களோடு செல்வர். பின் பெண்ணின் தந்தையிடம் திருமணத்தைப் பற்றிப் (சீதனம் முதலியவை கள்) பேசி முடிப்பர். அதன் பிறகு விருந்து நடைபெறும். திருமணத்தைப்பற்றித் தன் உறவினர்களுக்கு ஆள்மூலம் செய்தி அனுப்புவர்.

குறிப்பிட்ட நாளில் மாப்பிள்ளை வீட்டார், தங்கள் உறவினர்களையும் வேண்டியவர்களையும் அழைத்துக் கொண்டு பெண்ணுக்குரிய சேலை, ரவிக்கை, பரிசப்பணம் (தங்கள் வசதிக்கு ஏற்றவாறு) முதலியவற்றை எடுத்துக் கொண்டு மேளதாளங்களுடன் மணப்பெண் வீடுவந்து சேருவர். மணப்பெண்ணின் வீட்டின் முன்பு துணியாலான பந்தல் போடப்பட்டுத் தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருக்கும். மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வந்த புதுச் சேலையையும் ரவிக்கையையும் மணப்பெண் அணிந்து கொள்வாள். பெண்ணிற்குரிய சில சடங்குகளும் மாப் பிள்ளைக்குரிய சில சடங்குகளும் நடந்த பிறகு, வந்த உறவினர்கட்கு விருந்தளிக்கப்படும். பின் நடனம் நடை பெறும். மாலையில் மணமக்கள் மாப்பிள்ளை வீட்டிற்கு வருவர். பெண்ணையும் மாப்பிள்ளையையும் தனித்தனி வீட்டில் தங்கச் செய்வர். மறுநாள் அதிகாலையில் ஐந்து சிறு குடங்களில் ஆற்றிலிருந்து நீரை மொண்டுவந்து சூடாக்கி வெந்நீரில் மாப்பிள்ளையை முதலில் குளிக்கச் செய்வர். இதே போன்று மணப்பெண்ணையும் குளிக்கச் செய்வர். தம்பதிகளாகப் போகும் இவர்கள், புத்தாடை களை அணிந்து கொள்வர்.

வீட்டின் முன்பக்கத்திலுள்ள முற்றத்தில் ஐந்து அடி நீளமுள்ள ஒரு பலகை வைக்கப்பட்டிருக்கும். இப் பலகைக்கு 'அசமணிப் பலகை' என்று பெயர். இப் பலகை யின் ஒரு பக்கத்தில் மஞ்சள் பொடி கலந்த அரிசியுள்ள தட்டையும், மறுபக்கத்தில் கரிப்பொடி கலந்த அரிசியுள்ள தட்டையும் வைப்பர். இவை இரண்டிற்கும் இடையே உள்ள இடத்தில் பழம், பலசரக்கு (உப்பைத் தவிர)ச் சாமான்கள் முதலியவற்றை வைப்பர். பின் மாப்பிள்ளை யைப் பலகையின் முன், வடக்குத்திசையை நோக்கி நிற்கும் படி செய்து, நான்கைந்து பேர் ஒரு துணியினை மாப் பிள்ளையைச் சுற்றிப் பிடித்துக் கொள்வர். மணப்பெண், மாப்பிள்ளையைச் சுற்றி மூன்று முறை வலம் வந்து எதிரே வந்து நிற்பாள். இந்நிலையிலும் பெண்ணுக்கும் மாப்

பிள்ளைக்குமிடையே துணி கட்டப்பட்டிருக்கும். பின், மாலை போல் முடிந்து வைத்திருக்கும் கண்ணாடி மணிகளைக் கொண்ட (வசதி உடையவர்கள், தங்கத்தால் மங்கலநாண் செய்கிறார்கள்) தாலியினை மணப் பெண்ணின் கழுத்தில் மணமகன் கட்டுவான். பெண்ணை மாப்பிள்ளையின் இடப்பக்கத்தில் நிற்கச் செய்வர். மாப்பிள்ளையும், மணப்பெண்ணும் பெரியோர்களின் கால்களில் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் பெறுவார்கள். பிறகு, விருந்தும் நடனமும் நடைபெறும். திருமணம் முடிந்தபிறகு, பெண்ணின் வீட்டில் தம்பதிகளுக்கு மூன்று நாள்கள் விருந்து நடைபெறும். பெண்ணின் வீடு அருகில் இருந்தால், தினமும் உணவு அருந்திவிட்டு வந்துவிட வேண்டும். அதிக தூரத்தில் இருந்தால் மூன்று நாள்கள் தங்கியிருந்து விருந்து முடித்துவிட்டு வந்துவிட வேண்டும்.

சனிக்கிழமையைத் தவிர ஏனைய நாட்களை நல்ல நாட்களாகக் கருதுகிறார்கள். இருந்தபோதிலும். ஞாயிற்றுக் கிழமையைத்தான் தாலிகட்டும் நாளுக்கு முந்திய சிறந்த நாளாகக் கருதுகிறார்கள். பெண் வீட்டில் நடைபெறும் வைபவத்தன்றும் மாப்பிள்ளையின் வீட்டில் நடைபெறும் வைபவத்தன்றும் மாப்பிள்ளை தன் தாய் மாமனுக்கும் அவர் மனைவிக்கும் தனித்தனியே ஆடைகளும் ஒன்றரை ரூபாயும் கொடுக்க வேண்டும்.

திருமணத்திற்கு முன்பு இருவரிடையே தொடர்பு ஏற்பட்டு, கர்ப்பம் உண்டாயின், அதற்குக் காரணமானவனே அப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமெனப் பஞ்சாயத்தார் தீர்ப்புக் கூறுகிறார்கள். பிற இனத்திலுள்ளவர்களைத் திருமணம் செய்துகொண்டால் தம்மினத்திலிருந்து நீக்கிவிடுவர். தம்மினத்தோடு சேர்க்க வேண்டுமென்றால் ஆண்களுக்குப் பஞ்சாயத்தார் குறிப்பின் படி, குறிப்பிட்ட அடியும் உதையும் கொடுத்து அபராதம் விதிப்பர். பின், ஆண் பெண் இருவரும் பூசாரியால் மந்திரம் ஓதப்பட்டுப் புனிதப்படுத்தப்பட்டுத் தம்மினத்தாரோடு

சேர்த்துக் கொள்ளப்படுவர். இருபத்து மூன்று வயதிற்கு மேலான மணமாகாத பெண்களை இவர்களிடையே காண முடியாது. ஆனால், ஆண்களுக்கு இருபத்து மூன்று வயதிற்கு மேல்தான் திருமணம் நடக்கும். விதவை மறுமணம் இவ்வினத்தாரிடையேயும் உண்டு. ஒரு பெண்ணின் கணவன் இறந்தால், இறந்தவனின் அண்ணன்மார்களுக்கு விருப்பம் இருந்தால் விதவையான அவளை மறுமணம் செய்து கொள்ள உரிமை உண்டு. ஆனால், இறந்தவனின் தம்பிமார்கள் விதவையான அண்ணியைத் திருமணஞ் செய்து கொள்ளக் கூடாது. அவளைத் தம் தாயாருக்கு ஒப்பாகவே மதிக்கிறார்கள். மனைவியை இழந்தவர்கள் மறுமணம் செய்து கொள்ளலாம். விதவையும் பொட்டு வைத்துக் கொள்ளலாம். விவாகரத்தும் இவ்வாதிவாசிகளிடையே அனுமதிக்கப்படுகிறது.

கருவுற்ற பெண்ணை ஏழாவது மாதத்திலேயே அவளது பிறந்த வீட்டிற்கு அழைத்துச் செல்வார்கள். குழந்தை பிறந்தவுடன் தாயையும் குழந்தையையும் வேறு வீட்டில் தனியாகத் தங்கும்படி செய்வர்; அல்லது வீட்டோடு சேர்ந்து இருக்கும் தனியறையில் தங்கும்படி செய்வர். இவர்கள் இருக்கும் இடத்திற்குப் பெண்ணின் வீட்டில் உள்ளவர்களோ, மாப்பிள்ளையின் வீட்டிலுள்ளவர்களோ செல்லக்கூடாது. வெளியே நின்று கொண்டுதான், தாயையும் குழந்தையையும் பார்க்க வேண்டும். ஆண்குழந்தை பிறந்தால் ஆறாவது நாளிலும், பெண்குழந்தை பிறந்தால் மூன்றாவது நாளிலும், தொட்டிலில் படுக்க வைப்பார்கள். ஊர்ப் பூசாரியே தன் விருப்பம் போல் குழந்தைக்குப் பெயரிடுவார். பெயரிடும் அன்று, உறவினர்களுக்கும் தம்முடன் வந்தவர்களுக்கும் விருந்து கொடுக்கப்படும். ஒரு மாதம் கழித்துத் தாய் குழந்தையுடன் தன் கணவன் வீட்டிற்கு வருவாள். இரண்டாவதாகவும் அதற்குப் பின்னும் பிறக்கும் குழந்தைகளுக்கும், பெண் வீட்டார் வசதி உடையவராயின் அழைத்துச் செல்வர். ஆனால், கட்டாயம் கிடையாது.

பெரும்பாலும் நோயினால் இவர்கள் இறப்பது கிடையாதாம். காட்டு மிருகங்களால்தான், இவர்களுக்குச் சாவு ஏற்படுகிறதாம். ஆனால், பிரசவ சமயத்தில் சில பெண்கள் இறக்க நேரிடுகிறதாம். இறந்தவுடன் இறந்தவரின் கால்களை உடனே மடக்கி விடுகிறார்கள். இறந்த செய்தியினைத் தம் உறவினர்களுக்கும், பஞ்சாயத்திற்கும் ஆள் மூலம் தெரிவித்து விடுகிறார்கள். பின், பிணத்தைப் பாடையில் வைத்து எடுத்துச் செல்கிறார்கள். எடுத்துச் செல்லும்போது உறவினரும் ஊராரும் உடன்வருவர். பின், பிணத்தைச் சவக்குழியினுள் வைத்து உறவினர்கள் குழியைச் சுற்றி வலம் வருகிறார்கள். இறந்தவரின் மூத்த மகனாவது அல்லது உறவினர்களின் ஆண்களில் மூத்தவராவது பிணத்திற்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்வார். பின், பிணத்தை மூடி, நரி போன்ற காட்டு மிருகங்கள் தோண்டாமலிருக்க அதன்மீது மிகப் பெரிய பாறாங்கல்லை வைத்து விடுகிறார்கள். இக்கல்லிற்கு ''கோட்டைக்கல்'' என்று பெயர். பின்பு விருந்து நடைபெறுகிறது. மூன்றாவது நாளன்று, பிணத்தைப் புதைத்த இடத்தில் ஒரு கல்லை நட்டு அதற்கு வெற்றிலை பழம் முதலியவற்றைப் படைக்கின்றனர்.

இப் பழங்குடி மக்கட்கு, விவசாயம் செய்வதற்கு வேண்டிய நிலங்களும் பண வசதியும் அளித்து விவசாயத் துறையில் முன்னேற்றுவிப்பதும், காட்டு இலாக்காக்களில் அதிக வேலை வாய்ப்பு அளிப்பதும், காலனிகளைக் கட்டிக் கொடுப்பதும் அரசினரின் கடமையாகும்.

12. கொடவர் வாழ்க்கை முறை

இரா. பாலகிருஷ்ணன் M. A.

[கொடவர் வாழ்க்கைமுறை என்னும் இந்தக் கட்டுரை இனக்குழு மக்களல்லாதவர்களின் மிக முன்னேறிய பண்பாட்டையும், சுற்றிலும் உள்ள முன்னேறிய பண்பாட்டையுடையவர்காளாடு பல தொடர்புகளையும் உடையவர்களது வாழ்க்கை முறை பற்றிய ஆராய்ச்சியாகும். இது சமுதாய மானிடவியல் ஆராய்ச்சியாக உள்ளது. இவர்களது பண்பாடு சுற்றிலும் உள்ள மக்களது பண்பாட்டோடு வரலாற்று ரீதியாக இணைந்து வருகிறது. இவர்களது நாட்டுப்பாடல்களில் இவர்களது ஆர்வங்களையும், நல்வாழ்க்கை விருப்பையும். பிறரோடு கொண்டுள்ள தொடர்புகளின் தன்மைகளையும் காணலாம் அவற்றைச் சேகரித்து வெளியிட்டால், கன்னட, தமிழ், மலையாள நாட்டுப் பாடல்களோடு ஒப்பிட்டு ஆராயலாம்.

—பதிப்பாசிரியர்]

மைசூர் மாநிலத்தின் தென்கோடியில் அமைந்துள்ளது. குடகு (Coorg) என்னும் சிறு மாவட்டம். 1594 சதுர மைல்களே கொண்ட இச்சிறு மாவட்டம் 1956-ல் மைசூர் மாநிலத்தோடு சேருவதற்கு முன்னால் ஒரு சிறு மாநிலமாக இருந்தது. இது ஏலக்காய், ஆரஞ்சு, காப்பி, தேன் ஆகியவை ஏராளமாகக் கிடைக்கக்கூடிய பகுதியாகும். கடல்மட்டத்திலிருந்து 400 அடி உயரமுடைய காடுகளடர்ந்த மலைப்பிரதேசமாகும். அதோடு தமிழ்நாட்டிற்கு உயிர் அளிக்கும் காவிரியாற்றின் பிறப்பிடமாகவும் அமைந்துள்ளது. இவ்வாறு செறிந்த காடும், வளமான மலைகளும் கொண்ட குடகு மாவட்டத்தின் பெருங்குடி மக்கள் கொடவர் (Coorgees)களாக இருந்தபோதிலும் மற்றும் கௌடர்,

அய்ரி, முகமதியர், லிங்யாட், பிராமணர், கொலயா, பொலயா, மேதை, எரவா, குருபா, பாலர் போன்ற பல் வேறு இனத்தினரும் வாழ்கின்றனர். தம் இனத்தை மட்டு மன்றி அயலாரையும் போற்றி, ஆதரிக்கும் மனப்பக்குவ முள்ள கொடவர்களது வாழ்க்கைமுறை மற்றவர்களி னின்று மாறுபட்டிருப்பது மிகவும் வியப்பிற்குரியதாக வுள்ளது. ''படைக்குப் பிந்து பந்திக்கு முந்து'' என்பது தமிழ்ப் பழமொழி. ஆனால், படைக்கு முந்துவதே கொட வர்களின் குணம். சுதந்தர இந்தியாவின் முதல் முப்படைத் தளபதி திரு. K. M. கரியப்பா அவர்கள் இக் கொடவர் குலத்தில் பிறந்தவராவார். நூற்றுக்கு ஐம்பதுபேர் போரையே தம் தொழிலாகக் கொண்டுள்ளனர். இதனால் வீரத்தின் பரம்பரை எனப் போற்றுகின்றனர் பல்வேறறிஞர் கள். இவ்வாறு வீரத்தாலும் தம் விவேகத்தாலும் வேறு பட்டு நிற்கும் கொடவப் பெருங்குடி மக்களின் வாழ்க்கை முறைகளைப்பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின்நோக்கம்.

''மங்கலம் என்ப மனைமாட்சி''—என்றார் வள்ளுவர். கொடவப் பெருங்குடி மக்கள் தங்கள் வாழ்வில் நடக்கும் நற்காரியங்கள் அனைத்தையும் **மங்கல** என்றே அழைக்கின் றனர். கொடவர் வாழ்வில் பிறப்பு முதல் இறப்புவரை நடக்கும் வாழ்க்கை வழிமுறைகளை ஈண்டு நோக்குவோம்.

1. பிறப்பு

கொடவர் குடும்பத்தில் குழந்தை பிறக்கும் நிகழ்ச்சி அனைவராலும் எதிர்நோக்கப்படும் முக்கியத்துவம் வாய்ந்த தாக அமைந்துள்ளது. ஆண்குழந்தை பிறந்து விட்டால் ஆண்மைக்கு அடையாளமாகத் துப்பாக்கி ஒலி எழுப்பி அனைவருக்கும் அறிவிக்கப்படுகிறது. அதேநேரத்தில் பெண் குழந்தையாயின் இனிமைக்கும் பெருமைக்கும் மென்மைக் கும் அடையாளமாகக் கிண்கிணி மணியோசை எழுப்பப் படும். கொடவர்களின் கொள்கைப்படி பிறந்த குழந்தைக்கு முதன்முதலில் சர்க்கரையும், வெண்ணெய்யும், நல்ல மிளகும் கலந்து, எதிர்காலத்தில் சர்க்கரைப்போல் இனிமையும்

வெண்ணெய்போல் இளகிய மனமும், நல்லமிளகுபோல் சுறுசுறுப்பும் பெற்று வாழவேண்டுமெனக் கூறிக்கொண்டே கொடுப்பர். அக் குழந்தையை மென்மையான வாழை இலையின்மீதே கிடத்தி வைப்பார்கள். குழந்தை பிறந்த வீட்டார் பன்னிரண்டு நாள்கள் பிறப்புத் தீட்டைக் கடைப் பிடிக்கவேண்டும். அவ்வேளைகளில் எவ்வித விழாக்களிலும் கலந்துகொள்ளாமல் இருக்கவேண்டும். 12-வது நாள் குழந்தைக்குப் பெயர் சூட்டுவிழா நடைபெறும். இவ்விழா விற்கு நெருங்கிய உறவினர் அனைவரையும் அழைப்பார்கள். அன்றுதான் குழந்தையை முதன்முதலாகத் தொட்டிலில் கிடத்துவார்கள். குழந்தையைத் தொட்டிலில் இடுவதற்கு முன்னர் ஒத்திகை நடைபெறும். அதாவது ஓர் அடி நீள முள்ள கல்லை எடுத்து அங்கு வந்திருக்கும் சுமங்கலி ஒருத்தி தொட்டிலில் இட்டு 'இக்கல்போல் நெடுநாள் வாழ்க' என வாழ்த்துவாள். அதன்பின்னர்தான், குழந்தையைத் தொட் டிலில் இடுவார்கள். அப்பொழுது அக்குழந்தைக்குத் தங்கக் கரண்டியில் வைக்கப்பட்டிருக்கும் இனிப்புப் பொருளைச் சிறிது கொடுத்து, தொட்டிலில் இட்டவுடன் பெரியோர் களால் சூட்டப்பட்ட பெயரால் அழைத்து, தொட்டில் பாட்டுப் பாடுவார்கள். குழந்தையைப் பெற்றவள் அறுபது நாள்கள் தீட்டுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். இந் நாட்களில் அவள் அனைத்து அணிகலன்களையும் கழற்றி விடவேண்டும். அறுபது நாட்களும் வெந்நீரிலேயே குளித்து வந்த அவள் அறுபதாவது நாள் குளிர்ந்த நீரில் குளிப்பாள். இவ்வளவுநாளும் வெந்நீரேயிருந்த அலுமினியப்பாத்திரத் தில் குளிர்ந்த நீரை விடுகின்ற நேரத்தில், இப்பானைபோல் தாயின்வயிறும் குளிர்ச்சியடையட்டும் என்றுகூறிய வண்ணம் நீரிடுவர். இந்நாளில் தாய் குளித்துச் சுத்தம் செய்து விட்டு, மணப்பெண்போல் உடையணிந்து வந்திருக்கும் உறவினர்களுடன் குடும்பத்துக் கிணற்றிற்குச்சென்று கங்கா பூசை செய்வாள். அதாவது தேங்காய். பழம், அரிசி, வெற் றிலை, பாக்கு, ஆகியவற்றைக் கிணற்றங்கரையில் வைத்து இறைவனை எண்ணி வணங்கிப் பின் தேங்காயை உடைத்து,

வெற்றிலை பாக்குடன் கிணற்றினுள் போடவேண்டும். பின்னர், இரு சிறு பாத்திரங்களில் எடுக்கப்பட்ட நீரில் மும் முறை குடித்து விட்டு, அப்பாத்திரம் இரண்டையும் தலை மேல் ஒன்றன் மேல் ஒன்றாக வைத்து, உறவினர் பின் தொடர வீட்டிற்குச் செல்வாள். அப்பொழுது அவளுடன் ஓரிரு சுமங்கலிகளும் நீர் சுமந்து வருவார்கள். கொண்டு வரும் நீரை அடுப்படியில் இறக்கி வைத்துவிட்டு, மத்திய அறையிலிருக்கும் விளக்கை வணங்கிவிட்டுக் கூடியிருக்கும் பெரியோர்களிடம் ஆசி பெறுவாள். வந்திருக்கும் அனை வரும் குழந்தையையும், தாயையும் வாழ்த்தித் தன்னால் இயன்ற பொருளைப் பரிசாகக் கொடுப்பர். பின்னர், அங்கு பெருவிருந்து நடைபெறும்.

2. கொதி மங்கல

இம்மங்கலம் குழந்தையின் நான்கு அல்லது ஐந்தாவது வயதில் நடைபெறும். இம்மங்கலம் இக்காலத்தில் அதிக மாக இல்லையாயினும் ஒருகாலத்தில் பெரிதும் வழக்கத்தில் இருந்து வந்துள்ளது. பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் மேலுள்ள அன்பு, பாசம் ஆகியவற்றின் காரணமாகத் தம் பெருமைக்கும், பெயருக்கும் ஏற்றாற்போல் இம்மங்கலத்தை நடத்துவர். அன்று விருந்தினர் பலரை வரவழைத்துக் குழந்தையை (பெண் அல்லது ஆண்) திருமணத்திற்கு அலங் காரம் செய்வது போல் அலங்கரித்து, அனைவர் மத்தியிலும் அமர்த்தித் தாய், தந்தை, பெரியவர்கள் என்னும் முறைப் படி வாழ்த்துவார்கள். குழந்தை பெரியவர்கள் காலைத் தொட்டு வணங்கி ஆசிபெறும். பின்னர் அனைவருக்கும் பெருவிருந்து நடைபெறும்.

3. 'கெமிருத்தி மங்கல'

இது ஆண் குழந்தையின் ஆறு அல்லது ஏழாவது வய தில் நடைபெறும். ஒவ்வொரு கொடவ ஆண்மகனும் ''பத்தொந்தி கடுக்கு'' என்னும் காதணியை அணிய வேண்டும் காதைக் குத்தி இவ்வணியையிடும் நாளை

''கெமிகுத்தி மங்கல'' என்று கூறுகிறார்கள். காது குத்தா தார் தம் வாழ்வில் திருமணம் செய்து இல்வாழ்க்கை நடத்தும் உரிமையற்றவர்களாக இருப்பதோடு, எந்தவொரு முக்கிய நாட்களிலும் மற்றவர்களுக்குச் சமமாக அமரும் தகுதியையும் இழந்து விடுகிறார்கள். இவ்வழக்கு இக்காலத்தில் பெரிதும் இல்லையாயினும் சிற்சில இடங்களில் இருப்பதை இன்றும் காணலாம்.

இம்மங்கலம் ஆண்களுக்கு மட்டுமே உரியதாகையால் பெண்களுக்குக் காது குத்த மாட்டார்களா என்று கேட்கலாம். பெண்களுக்குக் காதுகுத்துவதை மங்கலமாகக் கொண்டாடும் வழக்கம் இல்லை. மங்கலம் நடக்கவேண்டிய குறித்த நேரத்தில் காது குத்தப்பட வேண்டிய குழந்தையை நல்ல ஆடை அணிவித்து, தோள்களில் இரு சிவந்த துணிகளைப் போட்டு அமருவதற்குரிய இருக்கையில் அமர்த்துவர். அன்று வீடு முழுவதும் திருமணச் சடங்கின்போது அலங்கரிக்கப்பட்டிருப்பதுபோல அலங்காரம் செய்யப்பட்டிருக்கும். குழந்தை இருக்கையில் அமர்ந்தவுடன், (குடும்பம் அதன் பெருமை) காதுகுத்துவதின், சிறப்பு ஆகியவையடங்கிய பாட்டைப் பாடகர்கள் மேளதாளங்களுடன் பாடுவார்கள். காதுகுத்த வேண்டிய நேரம் வந்தவுடன், காது குத்தக் கூடிய தட்டார் வந்து, காதைக்குத்தி, தான் செய்து கொண்டு வந்த பத்தொந்திக் கடுக்கனை காதில் பொருத்துவார். அதன் பின், அனைவரும் குழந்தையை வாழ்த்தி பண முடிப்புகளைப் பரிசாகக் கொடுப்பர். காதுகுத்திய தட்டாருக்கு வழக்கப்படி கொடுக்கக்கூடிய பணம், அரிசி, பழம், தேங்காய் அனைத்தும் கொடுக்கப்படும். முடிவில் மங்கலத்தில் கலந்து கொண்ட உறவினர் அனைவருக்கும் பெரு விருந்து அளிப்பார்

4. 'நரிமங்கல'

கொடவர்களின் வீரத்தை எடுத்துக்காட்டும் பெருமைக் குரியதாக அமைந்துள்ளது இந்நரிமங்கலம். ஆணோ பெண்ணோ யாராயினும் காட்டின் கொடிய விலங்குகளில் ஒன்

றாகிய புலியைக்கொல்வாராயின் அவர்களின் வீரத்தைப் பலரறியப் போற்றுவதே இம்மங்கலத்தின் நோக்கம். பெண் களும் இவ்விழாவில் பங்குகொள்கின்றனர். என்பதை நோக்குமிடத்துக் கொடவப் பெண்களின் வீரம் நமக்குப் புலனாகின்றது.

பொதுவாக, இம்மங்கலம் நாட்டின் பொதுவிடமாகிய மந்திலோ, ஊர் மந்திலோ வைத்து நடைபெறும். அங்குச் சிறு பந்தல் ஒன்றுகட்டி அலங்கரித்து, அதன் முன்னர் இரு தூண்களை நட்டு, அதன்மேல் மேற்கு முகமாகப் புலியைக் கட்டித் தொங்க விடுவார். புலியைக் கொண்டுவர முடிய வில்லையாயின் புலியின் தலையோ, தோலோ, வால் நுனியோ அங்குத் தொங்கவிடப்பட்டிருக்க வேண்டும். புலியைக் கொன்ற வீரர் தம் வீட்டில் குளித்துச் சுத்தம் செய்து, வழக்கமான குப்பியாபோன்ற துணிமணிகளை அணிந்து, முறைப்படி பூசை அறைவிளக்கு, காரணை யாவற்றையும் வணங்கிவிட்டு, உறவினர் புடைசூழ, மேள தாளங்களுடன் ஊர் மந்துநோக்கி ஊர்வலமாக வருவார். வரும்போது அவ் வீரர் துப்பாக்கியை முன்நோக்கி நீட்டிய வண்ணம் பிடித்தபடி வருவார். ஒஜ என்னும் சிவந்த துணியால் துப்பாக்கி மூடப்பட்டிருக்கும். புலி, துப்பாக்கி யால் கொல்லப்படாமல் வேறு கருவியால் கொல்லப்பட் டிருக்குமாயின், அந்த ஒஜ என்னும் சிவந்த துணி அவ் வீரரின் தலையில் கட்டப்பட்டிருக்கும். புலியைக் கொன்ற வர் ஆண்மகனாயின், வழி நெடுகிலும் வெடிமுழக்கங்கள் செய்யப்படும். பெண் வீரராயின் வெடிமுழக்கத்தை நாம் கேட்க முடியாது. மேளதாளங்களுடன் பாட்டை மட்டுமே நம்மால் கேட்க முடியும். அதோடு, துப்பாக்கியை மூடியிருக்கவேண்டிய ஒஜ, அவரின் தலையில் அலங்கரித்துக் கொண்டிருக்கும். இவ்வாறு அழைத்துவரப்பட்ட வீரரைப் புலி தொங்கவிடப் பட்டிருக்கும் இடத்திற்கு முன்னால் அமைந்த இருக்கையில், புலியை நோக்கிய வண்ணம் கிழக்கு முகமாக அமர்த்துவர். அவ்வேளையில் பந்தலைச் சுற்றி நாட்டியங்களும், புலி கொன்ற வீரச்செயல் பற்றிய

பாட்டும் நடைபெற்றுக்கொண்டிருக்கும். முதன்முதலில் அவ் வீரரின் தாய். வழக்கப்படி புனிதமான அரிசியை அவ் வீரன்மேல் தூவி, ''இன்று போல் என்றும் உன் வீரம் நிலைபெற்று நிற்பதாக''—என்று வாழ்த்திக் குடிப்பதற்குப் பாலும் கொடுத்துப் பொம்பண (Gold coin) என்னும் பண முடிப்பையும் பரிசாகக் கொடுப்பாள். அவ் வேளையில் அந்த வீரமகன் தன் தாயின் காலைத் தொட்டு வணங்கும் காட்சி அனைவருக்கும் பெருமையளிப்பதாக இருக்கும். பின்னர், ஒவ்வொரு உறவினராக வந்து வாழ்த்தித் தனக் கியன்ற பொருளைப் பரிசாக அளிப்பர். இவையாவும் முடிந்தவுடன் அனைவரும் ஊர்வலமாக வீரரின் வீட்டை யடைந்து, அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பெரு விருந்தில் கலந்துகொண்டு மகிழ்வர்.

5. 'கன்னிமங்கல'

ஒருவன் ஒருத்தியை முதன்முதலாகத் தன் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளும் மங்கல விழாவிற்குக் கன்னிமங்கல என்று பெயர். இதைத் தமிழில் திருமணம் என்றழைக்கிறோம். இத்திருமண நிகழ்ச்சியில் பல்வேறு பிரிவுகள் அடங்கும். அவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

மணமகள் தேர்வு: திருமணத்தின் ஆரம்பமாக முதன் முதலில் மணப்பெண் தேர்வும், மணமகன் தேர்வும் மாறி மாறி நடக்கும். மணமகன் வீட்டாரே முதன்முதலாகப் பெண்ணைக் கேட்பதால் மணமகள் தேர்வு எனக்கோடலே ஈண்டு பொருத்தமுடையதாகவுள்ளது. பண்டைக்காலத்தில் பெற்றோர்களே மணப்பெண்ணைத் தேர்ந்தெடுத்துத் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்தார் கள். ஆனால் இக்காலத்தில் பெற்றோர்களின் பங்கு குறைந்து பிள்ளைகளின் விருப்பப்படியே பெரும்பான்மைத் திருமணங்களும் நடைபெறுகின்றன.

கொடவர்கள் மணப்பெண்ணைத் தெரிந்தெடுப்பதற்கு முன்னர்ச் சில முக்கியமான விஷயங்களைக் கவனிக்கிறார்

கள். அதாவது, ''தாயைப்போலப் பிள்ளை நூலைப்போலச் சேலை'' என்னும் பழமொழியை மனத்தில் கொண்டு, பெண்ணின் தாயின் குணநலன்களை முதன் முதலாகக் கவனிக்கின்றனர். அதன் பின்னரே பெண்ணின் குணாதிசயங்கள், குடும்பம் அனைத்தையும் நோக்கி முடிவெடுப்பர். பையன் வீட்டார் பெண்ணைப் பார்ப்பதுபோல் பெண்வீட்டாரும் பையனின் குணநலன்கள், குடும்பப் பெருமைகள் யாவற்றையும் பார்க்கத் தவறுவதில்லை. இவ்வாறு இருசாராரும் ஒருவரையொருவர் பார்த்துச் சம்மதித்த பின்னர், பெண் வீட்டார் பையனின் ஜாதகத்தை வாங்கி சகலவித பொருத்தங்களையும் பார்ப்பார்கள். பையனுக்கு ஜாதகம் இல்லையெனில் இருதரப்பினரும் கோவிலுக்குச் சென்று பையன்பெயரிலும், பிள்ளையின் பெயரிலும் பூசைசெய்வார்கள். அக்காலை இறைவன் திருவுருவத்திருந்து கீழேவிழும்படி பூக்களைச் சொரிவார்கள். அப்பொழுது சிவந்தப்பூ விழுந்தால் கெட்டது எனவும், வெள்ளைப்பூ விழுந்தால் நல்லது எனவும், விழுகின்ற வெள்ளைப்பூ சிலையின் வலப்பக்கம் விழுந்தால் மிகவும் நல்லது எனவும் கொள்வார்கள். சிவந்தப்பூ விழுந்து சில திருமணங்கள் நின்று போனதும் உண்டு. இந் நிகழ்ச்சிக்குப் பூவெடுப்பு என்று பெயர். இவ்வாறு பொருத்தங்களைப் பார்த்த பின்னர்த் திருமணத்திற்கு நாள்குறிக்க ஏற்பாடுகள் செய்வர்.

இவ்வாறு, பெண் தேர்வு முடிந்தபின் திருமணநாள் குறித்தலின் பொருட்டு மணமகன் வீட்டு அருவாவும், மற்றும் சில உறவினர்களும் பெண்வீட்டிற்கு வருவார்கள். கொடவர் குடும்பங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளைத் தலைமை ஏற்று நடத்துபவரை அருவா என்று அழைக்கின்றனர். இவர்கள் மண்ணருவா, பொன்னருவா என இருவகைப்படுவர். நிலபுலன் அடிப்படையில் நண்பரானவரை பொன்னருவா என்றும் அழைக்கிறார்கள். எவ்வாறேனும் அமைந்த இருவீட்டு அருவாக்களும் கூடி நிமித்திகனின் உதவியோடு திருமண நாளைக் குறிப்பர். பின்னர் மண

மகன் வீட்டார் பெண்ணிற்கென்று கொண்டுவந்த நகையை யும், சாட்சிப் பணத்தையும் கொடுத்தபின் சிற்றுண்டியை முடித்துவிட்டு வீடுதிரும்புவர். இவ்வாறு, வீட்டிற்குத் திரும்பி வருங்கால் வேறு எந்த உறவினர் வீட்டிற்கும் செல்லாமல் நேரே தன்வீட்டிற்கே செல்ல வேண்டு மென்பது நியதியாகும். திருமண நாள் குறித்தது முதல் மணமகனும், மணமகளும் சில கட்டுப்பாடுகளைக் கடைப் பிடித்தல் வேண்டும். குறிப்பாக ஆற்றைக் கடத்தல் கூடாது, விசேட நாள்களில் அணியும் ஆடைகளை அணியக் கூடாது. இறப்புப் போன்ற கெட்ட செய்திகள் தங்கள் வீட்டிற்குவந்து சேரக்கூடாது. இவ்வாறு, கட்டுப்பாடு களுடன் திருமணம் ஆகும்வரை நடந்துவருதல் மிகவும் போற்றிக் காக்கப்படுகின்றது.

திருமணத்திற்கு முந்தியநாளைக் கரிக்முரிப்பதினம் அல்லது 'சப்பர' என்று அழைக்கிறார்கள். அன்று தேரணச் சடங்கு அதாவது மணமகனும் மணமகளும் அவரவர் வீட்டில் திருமணத்தன்று வழக்கப்படி செய்யும் கடன்களை முடித்து வருவதுபோல் வந்து பெரியோர்களிடம் ஆசி பெறுவர். தேரணச்சடங்கு முடிந்ததும் ஊராருக்கு ஐந்து வெற்றிலையும் ஆறுபாக்குகள் வீதம் கொடுக்கவேண்டும். இதை ஊருபத்தி என்றழைப்பர்.

கொடவர்களின் திருமணச்சடங்குமுறை மற்ற இனத் தவரினின்று மிகவும் மாறுபட்டுக் காணப்படுகிறது. முதன் முதலில் திருணச் சடங்கிற்கு வருவோரை பாளெவிருது கொடுத்து வரவேற்பார்கள். அதாவது விருந்தினர்கள் கொண்டுவருகிற அரிசி, இறைச்சி, பழம் முதலியவற்றைப் பெறுவதற்கு முன்னால்—வருபவர்களை வீட்டின் முன்பக்கத் திலமர்த்தி மூன்று வாழைத்தண்டுகளை நட்டு—வருகின்ற விருந்தினரில் ஒருவரை வெட்டச் செய்வார்கள். இதை—மண வீட்டாரால் வருவோர் கௌரவிக்கப்படுவதின் அடையாளமாகச் செய்கின்றனர். அதன் பின்னரே அவர்கள் கொண்டு வரும் கேட்டாமெ (அரிசி-இறைச்சி-

பழம்) யைப் பெற்று வீட்டினுள் அழைத்துச் செல்வர். இவ்வாறு, விருந்தினர்கள் அனைவரும் வந்தபின் மணமகனுக்கும் மணமகளுக்கும் தனித்தனியே அவரவர் வீட்டில் முகூர்த்தம் நடைபெறும். அதன் பின் தம்பதி முகூர்த்தா என்று அழைக்கப்படும் சடங்கிற்காக இருவரையும் ஊர் வலமாக அழைத்து வருவார்கள். இவ்வாறு, 'தம்பதி முகூர்த்தா' விற்காக அமைக்கப்பட்ட பொதுவிடத்தில் (கல்யாண மண்டபம்) திருமணம் நடைபெறும். இவர்களிடையே தாலிகட்டும் வழக்கம் இல்லை. வீட்டின் தலைவர் முதல் அனைவரும் வாழ்த்திச் செல்வதையே திருமணமாகக் கருதுகின்றனர். முடிவில் மணமகன் மணமகளின் கையில் தன் அன்பின் அடையாளமாக ஒரு மோதிரத்தை அளிப்பான். பின்னர்க் கையைப் பிடித்தபடி அங்கிருக்கும் குத்துவிளக்கை மும்முறை வலம் வருவார்கள். பின்னர், அனைவருக்கும் பெருவிருந்து அளிக்கப்படும்.

6. 'கூடாவளி மங்கல'

கொடவர் மறுமண வாழ்க்கையை அனுமதிக்கிறார்கள். கணவனை இழந்த கைம்பெண் மறுமணம் செய்து வாழ்வதைக் கூடாவளி அதாவது திரும்பச் சேர்தல் என்றும், அந்நிகழ்ச்சியை 'கூடாவளி மங்கல என்றும்' அழைக்கிறார்கள். கூடாவளி மங்கலம் மூன்று வகைப்படும்.

1. இழந்த கணவனின் உடன் பிறந்தாரை மணத்தல்: இத் திருமண நிகழ்ச்சியில் மணமகன் கன்னிமங்கலத்தில் செய்த அனைத்துக் கலாசார விதிகளையும் செய்ய வேண்டும். ஆனால், மணமகள் அதாவது கைம்பெண் அவ் விதிகள் ஒன்றையும் கடைப்பிடிக்கக்கூடாது. மங்கலத்தின் போது மிக நெருங்கிய உறவினர்களே அழைக்கப்படுவார்கள். தம்பதி முகூர்த்தத்தின் போது மணமகள் தன்னைத்தானே அலங்காரம் செய்துகொண்டு வர வேண்டும். அதன்பிறகு கன்னி மங்கலத்தில் நடந்தது போலவே யாவையும் முடியும்.

2. வேறு குடும்பத்தவரை மணத்தல்: கைம்பெண் வேறொரு குடும்பத்திலுள்ளவரை மணக்க விரும்பினால் முதன்முதலில் தன் கணவன் வீட்டிலுள்ள உறவுமுறை அனைத்தையும் விட்டுவிட்டுத் தான்பிறந்த வீட்டிற்குச் செல்லவேண்டும். இதைக் கல்லுமரகய்ப்பெ என்று அழைக் கிறார்கள். கல்லுமரகய்ப்பெ நடத்துவதற்காக, விதவை யின் பிறந்தவீட்டு அருவாவும், மறைந்த கணவன் வீட்டு அருவாவும், மற்றும் சிலரும் இறந்த கணவன் வீட்டில் கூடு வார்கள். கைம்பெண் திருமணம் நடக்கும்போது கொண்டு வந்த சாமான்கள் அனைத்தையும் வீட்டின் திண்ணையில் கொண்டு வைப்பார்கள். அச்சாமான்களில் ஓரிரு துணிமணி களை மட்டும் எடுத்துவிட்டுத் திருமணநாள் குறித்த நேரத்தில் கொடுக்கப்பட்ட சாட்சிப் பணத்தையும் திரும்பப் பெற்றுக் கொள்வார்கள். கைம்பெண்ணுக்குக் குழந்தைகள் இருந்தால் அவை அங்கேயே வளரும். கைம்பெண் விட்டுச் செல்கின்ற சாமான்களை அவளது குழந்தைகளுக்காகப் பயன்படுத்துவார்கள். இவ்வாறு கல்லுமரகய்ப்பை நடத்திய பின் அக்கைம்பெண் மற்றவரைத் திருமணம் செய்யும் தகுதி பெறுகிறாள். இத்திருமணமும் இழந்த கணவனின் உடன் பிறந்தாரை மணக்கும் நிகழ்ச்சி போலவே நடக்கும்.

3. விவாகரத்து செய்யப்பட்டவளை மணத்தல்: ஏதேனும் வருத்தம் காரணமாகக் கணவன் மனைவிக்குள் மணமுறிவு ஏற்பட்டுத் தொடர்பு நெடிதுநாள் விடுபட்டிருந் தால் விவாகரத்து செய்கிறார்கள். முதன்முதலில் பெண்ணின் வீட்டார் கணவன் வீட்டிற்கு வந்து விவாகரத் துச் செய்யும்படி கேட்பார்கள். சம்மதிக்கின்ற கணவன் வீட்டார் கல்லுமரகய்ப்பெ நடத்திப் பெண்ணின் தொடர்பை அறுத்து விடுகிறார்கள். பின்னர், தான் விரும்புகிற யாரை யேனும் மணம்செய்து வாழ உரிமையளிக்கப்படுகிறது. இவ் வாறு நடக்கும் திருமணமும், மேற்கூறப்பட்ட திருமணத் தைப் போல் நடக்கும். இம்மூன்று கூடாவளி மங்கலங்களும் கொடவர் மத்தியில் இன்றும் பழக்கத்திலுள்ளன.

7. 'ஒக்க பரிஜெ'

ஏதாவது குடும்பத்தில் ஒரேயொரு பெண்ணைத்தவிர மற்ற வாரிசுகள் இல்லாதிருப்பின், அப்பெண் அந்தக் குடும்பத்தின் நிரந்தர வாரிசாக இருக்க வேண்டும். அதற்காகத் திருமணமாகும் பொழுது மணமகன் பெண்வீட்டுக் குடும்பத்தின் உறுப்பினராக மாறவேண்டும். இவ்வாறு, குடும்பத்தின் பெயரை நிலைநிறுத்தும் வண்ணம் நடத்தப்படுகின்ற திருமணத்திற்கு ஒக்க பரிஜெ என்று பெயர். ஒக்க என்றால் குடும்பம்.

மணமகனை மணமகளின் குடும்பத்து உறுப்பினனாக்குவதற்குச் சம்பந்த கொடுப்பெ நிகழ்ச்சியின் போது இரு வீட்டு அருவாக்களும் பழக்க வழக்கங்களின்படியுள்ள முறைபான சடங்கைச் செய்வார்கள். மணமகள் குடும்பத்திற்கு மணமகன் குடும்பம் மாறிவிட்டான் என்பதற்குச் சாட்சிபாகப் பணம் கொடுக்கப்படும். அதன் பிறகு பெண் வீட்டுக் குடும்பப் பெயருடனேயே மணமகன் அழைக்கப்படுவான்.

8. 'மக்க பரிஜெ'

ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணைத் தவிர மற்ற வாரிசுகள் இல்லாதிருந்தால், திருமணம் செய்தவன் பெண்குடும்ப உறுப்பினனாக மாறாதிருந்தால் 'மக்கபரிஜெ' முறை மேற்கொள்ளப்படுகிறது. அதாவது பெண் அவள் பிறந்த வீட்டிலேயேயிருப்பாள். அவளுக்குப் பிறக்கின்ற குழந்தைகள் அவள் குடும்பத்தின் பெயராலேயே அழைக்கப்படுவார்கள். தன் கணவன் குடும்பத்தில் இவளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. கணவன் தன் வீட்டிற்கு வரும்பொழுது அவனுக்கு வேண்டிய உணவு, உடை போன்ற வசதிகள் கொடுக்க வேண்டும். கணவனுக்கு மனைவியைக் காப்பாற்றும் பொறுப்புக் கிடையாது. இவ்வாறு தன் குழந்தைகளைக் குடும்பத்தின் நலனுக்காக மாற்றுவதற்காக ஏற்பாடு செய்யப்படும் திருமணத்திற்கு மக்க பரிஜெ என்று பெயர்.

9. 'குட்ட பரிஜெ'

திருமணமாகாத பெண் கள்ளத்தனமாக மற்ற ஆடவனின் தொடர்பால் கருத்தரித்தலும் உண்டு. அப்படி ஏற்பட்டால், கருதரிப்பதற்குக் காரணமானவன் அவளை திருமணம் செய்ய மறுத்தால் அல்லது குழந்தை பெற்றபின் தாயோ, குழந்தையின் தந்தையோ இறந்தால் அக் குழந்தையை அல்லது அக் கைம்பெண்ணைக் குழந்தைக்கு காரணமாக இருந்தவனின் வீட்டில் சேர்க்கும் உரிமை உண்டு. இதைக் 'குட்ட பரிஜெ' என்றழைக்கிறார்கள்.

10. 'பாளெ மங்கல

ஒரு ஆண்மகனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருந்து அதில் யாரேனும் இறந்து விட்டால், அவர்களின் ஆவி தன்னைப் பின் தொடராவண்ணம் இருப்பதற்கு பாளெ மங்கலம் நடத்துகிறார்கள். முதலில் வாழைத்தண்டு ஒன்றை நாட்டி அதை அலங்கரிக்கிறார்கள். இவ் வாழைத் தண்டை இறந்து போன மனைவியின் பிரதிபிம்பமென எண்ணுகிறார்கள். மணநாளில் மணமகளுக்குச் செய்தது போல் இவ் வாழைத்தண்டிற்குச் செய்வார்கள். இந் நிகழ்ச்சி இக்காலத்தில் அதிகமாக இல்லையாயினும் ஒரு காலத்தில் மிகவும் பழக்கத்தில் இருந்தது. [பாளெ=வாழை]

11. 'பய்த்தாண்டெக்கு அளெப்ப மங்கல'

ஒரு பெண் பத்துக் குழந்தைகளைப் பெற்று அப் பத்துக் குழந்தைகளும் உயிரோடிருந்து விட்டால் அதைவிட மகிழ்ச்சியான செய்தி கொடவர்களுக்கு வேறு எதுவுமேயில்லை. பத்துக் குழந்தைகளைப் பெற்ற தாயின் பெயரையும், பெருமையையும் நிலைநாட்டும் பொருட்டு, பய்த்தாண்டெக்கு அளெப்ப மங்கலம் களிக்கிறார்கள். பொதுவாக, பத்தாவது குழந்தை பெற்ற இரண்டு மாதத்தில் இம் மங்கலம் நடைபெறும். கன்னி மங்கலத்தில் நடந்தது போலவே முகூர்த்தம் அனைத்தும் நடக்கும். முடிவில் வந்திருக்கும் உறவினர் அனைவரும் வாழ்த்திப் பரிசு வழங்கு

வார்கள். அனைவருக்கும் பெருவிருந்து நடைபெறும். இக் காலத்தில் இம் மங்கலம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது

[பய்த்தாண்டெக்கு=பத்து ஆண்டுகளுக்கு, அளெப்ப= இருத்தல்]

திருமணமானபின் ஒரு குழந்தையும் பெறாமல் ஒரு பெண் இறந்து விட்டால் அப் பெண்ணின் விட்டார். திரு மணத்தின்போது கொடுத்த பொருட்களனைத்தும் திரும்பப் பெறுவதற்கு உரிமை பெற்றவர்களாவார்கள். அதுவன்றிப் பெண் தன் கணவனை இழந்து விட்டால் கணவன் வீட்டில் தான் இருக்கவேண்டுமென்ற நியதி கிடையாது; தம் பெற் றோர், வீட்டில் வந்து இருக்கலாம். அப்படி இருக்குங்கால், குடும்பத்தில் எவ்வித உரிமையும் கொடுக்கப்பட மாட்டாது. உணவு, உடை, உறைவிடம் இவற்றிற்கு மட்டுமே அங்கு உரிமை உண்டு. இதைப்போன்று விவாகரத்துச் செய்யப் பட்ட பெண் தம் பெற்றோர் வீட்டில் வந்து இருந்தாலும் உரிமைகள் கொடுக்கப்படமாட்டாது.

ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் செய்யும் உரிமை பெற்றவர்களாக இருக்கிறார்கள். தம் முதல் மனைவியை இழந்து விட்டாலோ, அல்லது விவாகரத்து செய்து விட்டாலோ எவ்விதத் தடையுமின்றி இரண்டாம் திருமணம் செய்யலாம். முதல் மனைவிக்குக் குழந்தை யில்லையாயின் அம் மனைவியின் விருப்பத்தின் பேரிலும் மறுமணம் செய்யலாம். இவ்வாறன்றி ஓர் ஆடவர் மறு திருமணம் செய்ய முற்படுவாராயின் அச் செய்கைக்குக் குடும்பத்தார் ஒத்துக் கொள்வதில்லை.

12. இறப்பு

கொடவர்களின் கொள்கைப்படி, ஒருவர் படுக்கையில் இறந்தாலோ, வீட்டின் உள்ளறையில் உயிர் நீத்தாலோ அது குடும்பத்திற்கே கேடு என எண்ணுகின்றனர். அதனால், ஒருவர் இனி பிழைக்கமாட்டார் எனத் தோன்றுகின்ற நேரத்

தில், வீட்டின் மத்திம அறையில் ஒரு பாயின்மேல் அவரைப் படுக்க வைத்து, பக்கத்தில் ஒரு தேங்காயையும், சிறிது துளசி இலையையும் கரிக்கெ என்னும் புல்லையும், ஒரு தங்க நாணயத்தையும் வைப்பார்கள். உயிர் போய்விடுமோ எனத் தோன்றும் போது அந்தத் தேங்காயை உடைத்து, அதன் நீரைத் துளசி இலையின் மூலமும், கரிக்கெ புல்லின் மூலமும் வாயில் தொட்டுத்தொட்டு வைத்துவிட்டு அந் நாணயத்தை வாயினுள் வைப்பார்கள். இப்பழக்கம் இக் காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது.

ஒருவர் இறந்துவிட்டால் அச்செய்தியை மற்றவர் களுக்குத் தெரியப்படுத்துவதற்காக, கிறிஸ்து மதத்தினர் கோவிலில் மணியடிப்பதுபோல, கொடவர்கள் வெடிகளை வெடிக்கச் செய்கிறார்கள். வயதானவர் அல்லது திருமண மானவர் இறந்தால் இரண்டு வெடிகளும், குழந்தை அல்லது திருமணமாகாதவர் இறந்து விட்டால் ஒரு வெடியும் விட்டு விட்டு வெடித்துக் கொண்டிருக்கும். வெடிச்சத்தம் கேட்ட வுடன் ஊரில் வீட்டிற்கொருவரேனும் இறந்த வீட்டிற்குச் செல்லவேண்டும். தூரத்து உறவினர்களுக்கு ஆட்கள் மூலம் செய்தியனுப்புவார்கள். இறந்தாரைப் புதைப்பதற்கு முன் னால் பல்வேறு சடங்கு முறைகளிருக்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

1. **கூளுபெப்பெ:** இறந்தவருடைய வீட்டாரும், மற்றும் நெருங்கிய உறவினர்களும் முதன்முதலில் குளித்துவிட்டு உடைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். ஆண்கள் ஒரு வெள்ளை வேட்டியும் துண்டும், பெண்கள் சேலையும் அணிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு குளித்து விட்டு உடைகளை மாற்றிக் கொள்வதை நீருக்கிளிவே என்று அழைக்கிறார்கள். நீருக்கிளித்தவர்கள் இறந்தவர்வீட்டிற்கு வரும்போது வீட்டிலிருந்து செல்லுகின்ற பாதையில் ஒரு வாழையிலையில் சோறும் உடைத்த தேங்காயும் அதன் பக்கத்தில் எரிகின்ற திரியொன்றையும் வைக்க வேண்டும். இதை இவர்கள் கூளுபெப்பெ என்று கூறுகிறார்கள்.

இவ் வீட்டிற்கு வருகின்றவர்கள் அனைவரும் தம்புறங் கையால் இறந்தவரின் மார்பைத் தொடவேண்டும். இதற்குச் 'சாவுக்கு கைகொடுப்பெ' என்று பெயர். அப்பொழுதிலிருந்து இறந்தவரை அடக்கம் செய்யும்வரை நான்கு ஆண்கள் சாவுப் பாட்டுப் பாடிக்கொண்டிருப்பார்கள். முற்காலத்தில் பெண்களும் பாடுவதுண்டு. இரவில் இறந்தவரை அடுத்தநாள்தான் அடக்கம் செய்ய வேண்டுமென்னும் நிலை ஏற்படின், அவ்வுடலின் பக்கத்தில் ஒரு விளக்கை ஏற்றி வைத்து, அவ்வீட்டு அருவாவும், மற்றும் சிலரும் தூங்காம லிருப்பார்கள், இதற்குச் சாவு ஒளிவே என்று பெயர்.

2. குளிப்பாட்டுதல்: இறந்தாரைக் குளிப்பாட்டுவதற்காக வீட்டின் இடப்பக்கம் ஒரு மறைவிடம் அமைப்பார்கள். இறந்தது ஆணாயின் அவனுக்கு நண்பர்களோ, உறவினர்களோ சவரம் செய்ய வேண்டும். குளிப்பாட்டும் போது மனைவியாயின் கணவனும், கணவனாயின் மனைவியும், தாத்தாவாயின் பேரனும், குழந்தையாயின் தாயும் முதன் முதலாக நீரூற்ற வேண்டும். அதன்பின் மஞ்சள் பொடியை எண்ணெயில் கலந்து உடல் முழுவதும் தேய்ப்பார்கள். பின்னர், அவர்களது வழக்கமான வெள்ளைநிற ஆடையை அணிவிப்பார்கள். ஆண்களுக்கு ஆடவரும் பெண்களுக்குச் சுமங்கலியும் ஆடை அணிவிக்க வேண்டும். ஆடை அணியும்போது முக்கியமாக, விபூதியைப் பிணத்தில் பூசுவதோடு நெற்றியில் சில நாணயங்களையும் கையில் ஒரு கண்ணாடி (Mirror)யையும் வைக்கிறார்கள். தூங்குவது போன்ற முறையில் அல்லது தரையில் அமர்ந்திருப்பது போன்ற முறையில் ஆடைகளை அணிவித்து ஒரு பாயின் மேல் அல்லது பெஞ்சின்மேல் வைப்பார்கள். பிணத்தின் வாயைச் சிவந்த துணியால் கட்டி வைப்பார்கள். பக்கத்தில் வர்சனைப்புகை புகைந்து கொண்டிருக்கும்.

இறந்தவர் வீட்டிற்கு வருகின்ற நெருங்கிய உறவினர்கள். மேளத்துடனும், புதிய வெள்ளைத் துணிகளுடனும், தங்கள் துப்பாக்கிகளுடனும் வருவார்கள். இதைக் கொல்

லட்டி என்று அழைக்கிறார்கள். இவ்வாறு வருகின்றவர்கள் வீட்டின் பக்கத்தில் வந்ததும் இரண்டு துப்பாக்கிகள் ஒலி யெழுப்பும். அப்பொழுது அவர்கள் கொண்டுவரும் முரி என்னும் வெள்ளைத்துணியை எடுத்துப் பெண்கள் தங்கள் தலையிலோ, தோளிலோ போட்டுக் கொண்டு மார் பில் அல்லது தலையில் அடித்தபடி அழுவார்கள். இவ்வாறு அழுதபடி பிணத்தின் பக்கத்தில் வந்ததும் தோளில் கிடக் கின்ற முரியை எடுத்துப் பிணத்தின் பக்கத்தில் வைப் பார்கள்.

திருமணமானவள் இறந்துவிட்டால் அப்பெண் பிறந்த வீட்டு உறுப்பினர்கள் தேங்காய், அரிசி, மற்றும் சோற் றுடன் இறைச்சி, முட்டை முதலியவற்றையும் கொண்டு வரவேண்டும். அதோடு, கஜ்ஜாய என்னும் பொருள் மூன்றை எண்ணெயில் வறுத்தும் மஞ்சள்கலந்த அரிசியை (மங்கலக்கி)யும் கொண்டுவரவேண்டும். இதைச் சமய என்று அழைக்கிறார்கள். சமயாவை இறந்தவரின் பெற் றோர் கொண்டுவர வேண்டுமென்பது பொது விதியாகும்.

3. சாவுச் சடங்கு: பெரும்பாலோர் இறந்தவர் களைப் புதைத்தாலும் சில இடங்களில் எரிக்கவும் செய் கிறார்கள். இறந்தவர் வீட்டு அருவா இச் சடங்கிற்குரிய ஏற்பாடுகளெல்லாம் செய்வார். பிணத்தை அடக்கம் நடத்தும் இடத்திற்கு எடுத்துச் செல்வதற்காக நாற் காலியையோ, அதற்கெனச் செய்யப்பட்ட அலங்காரத் தேரையோ (பாடை) உபயோகிக்கிறார்கள். தூக்கிச் செல்ல இளைஞர்கள் உதவி செய்வார்கள். அப்பொழுது அவர்கள் தன் தலையிலுள்ள துணியையும், செருப்பையும் அகற்றிவிட வேண்டும். பிணத்தைத் தூக்கியவுடன் வீட்டை மும்முறை சுற்றுவார்கள். அப்பொழுது சிறிது நாணயங்களை மங்கலக்கியுடன் கலந்து வானத்தை நோக்கி வீசுவார்கள். வீட்டிலிருந்து அடக்கம் நடக்கும் இடம்வரை ஊர்வலமாகச் செல்லும்போது வழிநெடுகிலும் நாணயங்

களையும் அரிசியையும் தூவுவார்கள். சமயாவை அருவா வீட்டுப் பெண்ணொருத்தி எடுத்து வருவாள்.

சடங்கு நடக்கும் இடத்தை அடைந்ததும் அங்கிருக்கும் குழியை அல்லது ஈமக்குழியை மும்முறை சுற்றிவிட்டு,தலை தெற்குப்பக்கத்தில் இருக்கும் விதமாக குழி''யின் கிழக்குப் பக்கத்தில் வைப்பார்கள். சிறிது நாணயங்கள் கட்டப்பட்ட புதிய வெள்ளை ஆடையை வேலைக்காரர்களுக்கு, இறந்தவரின் பரிசாகக் கொடுக்கிறார்கள். அதன்பின் இறந்தவரின் மனைவி அல்லது கணவன் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் மற்றுமொரு முறை நீர்க்கிளிவார்கள். பின்னர், மனைவி அல்லது கணவன் தன் தலைமேல் நீர் நிரம்பிய மண்குடிக்கையை (குடம்) வைத்துக் கொள்ள வேண்டும். குடத்தின் அடியிலுள்ள துவாரம் வழியாக நீர் பாய்ந்து கொண்டிருக்கும். இறந்தவரின் மூத்தமகன் தன் தலைமேல் ஒரு தேங்காயை வைத்துக் கொள்ள வேண்டும். மருமகன் தன் தலைமேல் ஒரு வெங்கலப் பாத்திரத்தில் (செம்பில்) நீர் வைத்துக் கொள்ள வேண்டும். இம் மூவரும் குசா என்னும் புல்லினால் செய்த மோதிரத்தைத் தம் விரல்களில் அணிந்திருப்பார்கள். பின் ஒருவர் பின் ஒருவ ராகப் பிணத்தை மும்முறை சுற்றிவிட்டுக் கணவன் அல்லது மனைவி பிணத்தின் தலைப்பக்கமும், மகன் கால் பக்கமும் மருமகன் இடைப்பக்கமும் நிற்பார்கள். அவர்களுக்கு நிழல் படும்படியாக மேலே வெள்ளைத் துணியைப் பிடிப்பார்கள். இதை மேமடி (தமிழில் பாடை) என்றழைக்கிறார்கள். முதலில் மண்குடத்தை வைத்திருப்பவர், அக்குடத்தைப் பிணம் வைக்கப்பட்டிருக்கும் நாற்காலியின் காலில் இரு முறை அடித்து உடைத்து அதை நாற்காலியின் அடியிலிடு வார். இதே போல் தேங்காயையும், செம்புப் பாத்திரத்தை யும் நாற்காலியின் அடியில் இடுவார்கள். இந்நிகழ்ச்சியைக் கொடக்குக்குவெ என்றழைக்கிறார்கள். தமிழர்களின் கொள்ளிவைத்தலுக்கும் இதற்கும் ஒற்றுமை இருப்பது ஈண்டு நோக்கத்தக்கது.

இறந்தது மனைவியாயின் கணவன் ஒரு நாணயத்தை மனைவிக்கு அணிவிக்கப்பட்டிருக்கும் சேலையின் ஒரு மூலையில் கட்டி வைக்கவேண்டும். இறந்தது கணவனாயின் மனைவி தன் வளையல்களை உடைத்து விட்டுக் கரிமணி, ஓலை என்னும் காதணி போன்றவற்றை நீக்கிவிட்டு அவற்றைக் கணவனின் கைக்குள் இட வேண்டும். அப்பொழுது விலைமதிப்புள்ள நகைகளை எடுத்து விடுகிறார்கள். அடக்கம் செய்யும் போது தூங்குவது போலிருக்கும் பிணத்தை தெற்கு முகமாகவும், உட்கார்ந்திருப்பது போலுள்ளதைக் கிழக்கு முகமாகவும், சுமார் எட்டடி ஆழமுள்ள குழிக்குள் வைப்பார்கள். பின்னர், அப் பிணத்தைச் சுற்றி கடலுப்பைப் போட்டபின் மனைவியோ, மகனோ மூன்றுபிடி மண்ணைப் போடவேண்டும். அதன்பிறகே மற்றவர்கள் பக்கத்திலிருக்கும் மண்குவியலைக் கவனமாகக் குழிக்குள் தள்ளுவார்கள். நரி, ஓநாய் போன்றவை அக்குழியைத் தோண்ட முடியாத வகையில் மண்ணால் மூடிப் பின், கொண்டுவந்த சமயாவைத் தலைபக்கமாகக் குழியின் மேல் வைத்து இரண்டு வெடிகளை வெடிக்கச் செய்வார்கள். அடக்கம் செய்யுமிடத்திற்கு இறந்தவரின் மனைவி போகவியலாதபடி கர்ப்பிணியாக இருந்தால் தன்நகைகளையெல்லாம் களைந்துவிட்டு, வீட்டிலிருந்த படியே சிறிது நீர் கொடுத்து விடுவாள். அந் நீரைப் பிணத்தின் மேல் தெளிப்பார்கள்.

பிணத்தை எரிப்பார்களேயாயின், மூத்தமகன் முதன் முதலாக ஈமகுண்டத்திற்குத் தீ வைக்க வேண்டும். பிணம் எரிந்து முடியும்வரை வந்திருப்போர் அனைவரும் அங்கேயே நிற்க வேண்டும். இவ்வாறு சவச்சடங்கை முடித்துவிட்டு வீடு திரும்புங்கால், கடைசியில் வருகிறவன் பாதையில் முட்களையும்; கற்களையும் இட்டுக்கொண்டு வருவான். இதனால் போனவன் பாதையில் மற்றவன் போகமாட்டான், போகக் கூடாது என்னும் நம்பிக்கையடைகிறார்கள். இச் சடங்கில் கலந்து கொண்டவர்கள் குளிக்காமலும், மாற்றுடையணியாமலும் வீட்டிற்குள் போகக்கூடாது. மற்ற

வர்கள் யாரையும் தொடவுங்கூடாது. தாங்களணிந்திருந்த பழைய துணிகளை உடனே வண்ணானிடம் இடுவார்கள் அல்லது ஒருநாள் முழுதும் வெயிலில் போடுவார்கள். பிணத்தை வீட்டிலிருந்து எடுக்கும்வரை அவ் வீட்டில் எவ்வித உணவும் தயார் செய்யமாட்டார்கள், சவச்சடங்கு முடிந்தபின் முதன் முதலாக அருவா, வாழைக் காய்களை வெட்டி ஒரு பெண்ணிடம் கொடுத்து அதை வேகவைத்து, வெந்தபின் அதை இறந்தவரின் கணவனுக்கு அல்லது மனைவிக்குக் கொடுத்த பின்னரே மற்றவர்கள் உணவு உண்ணலாம். இதைச் சாத்தப்புக்குவெ என்றழைக்கிறார்கள். எரிக்கப்பட்ட பிணத்தின் சாம்பலை அடுத்தநாள் காலையில் ஒரு மண்குடத்தில் எடுத்துச் சென்று பக்கத்திலுள்ள ஆற்றிலோ காவிரியும் கனிக்கையும் சங்கமமாகும் இடத்திலோ கரைப்பார்கள். இவ்வாறு நீரில் கரைக்கமுடியவில்லையாயின், அச்சாம்பலை பாலில் கரைத்து மரத்திற்கு விடுவார்கள். சாம்பல் எடுக்கப்பட்ட அப்பாத்திரத்தில் (குடத்தில்) நீரிட்டு நெல் போன்ற செடிகளை வளர்ப்பார்கள். நல்ல முறையில் இச்செடி வளருமாயின் இறந்தவரின் ஆத்மாவும் சாந்தியடைகிறதாகக் கொள்வார்கள்.

பிறந்த இரண்டு மாதத்தில் குழந்தை இறந்துவிட்டால் அதை வீட்டுத்தோட்டத்திலோ, பக்கத்து எஸ்டேட்டிலோ புதைக்கிறார்கள். குழந்தையின் இறப்பைப் பற்றி அனைவருக்கும் அறிவிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அதன்றிக் குளிப்பாட்டுதல் போன்ற சடங்குகளும் தேவையில்லை. குழந்தையைப் புதைத்தபின் குழந்தையின் தலைப் பக்கத்தின் மேலே ஒரு கிண்ணம் நிறையத் தாயின்பால் வைப்பார்கள். இரண்டு மாதத்திற்குமேல் ஆகிவிட்டால் குழந்தையைக் குளிப்பாட்டி விபூதியணிந்து வெள்ளைத் துணியால் மூடிப் புதைப்பதோடு குழியின்மேல் சோற்றுடன் பால் கலந்து ஒரு கிண்ணத்தில் வைக்கிறார்கள். குழந்தையைப் புதைப்பதற்கு எடுத்துச் சென்ற பின்னர், தாய் குளித்துவிட்டு உடைகளை மாற்றிக் கொள்வாள்.

சொந்த இடத்திற்கு கொண்டுவர முடியாத அளவு தூர இடத்தில் ஒருவர் இறந்துவிட்டால் அவருக்குப் பதிலாக சிறிது முடியையும், நகத்தையும் எடுத்து வருவதோடு புதைக்கப்பட்டால் சிறிது மண்ணும், எரிக்கப்பட்டால் சிறிது சாம்பலும் எடுத்துவந்து வீட்டின் வெளியே வைத்தபடி சவச்சடங்கிற்குச்செய்ய வேண்டியதனைத்தையும் செய்வார்கள். இவர்கள் அம்மைநோய் போன்ற கொடிய நோயினால் இறந்து விட்டால் அவரைப் போன்று வைக்கோலில் ஓர் உருவத்தைச் செய்து சவச்சடங்கு செய்வார்கள். கொடிய நோய் ஏற்பட்டு வீட்டிலேயே இறந்தால் குழந்தைகளுக்குச் செய்யும் சவச் சடங்கு போலச் செய்து புதைக்கவோ எரிக்கவோ செய்கிறார்கள்.

இவ்வாறு, சவச் சடங்கு செய்த நாள் முதல் சில நாட்களைத் துக்க நாட்களாகக் கடைப்பிடிக்கிறார்கள். இந்த நாட்களில் செத்த வீட்டினர் எந்தவொரு நல்ல காரியத்திலும் கலந்துகொள்ளவோ, அதைக் கடைப்பிடிக்கவோ கூடாது. இவ்வாறு துக்கநாட்களைக் கடைப்பிடிப்பவர்கள் இருவகைப்படுகின்றனர். பதினோரு நாட்கள் மட்டும் கடைப்பிடிப்பவர்களை மேங்கத்தெ நிப்பெவு என்றும் அடுத்த ஏதேனும் புண்ணிய தீர்த்தம் குளிக்கும்வரை கடைப்பிடிப்பவர்களை குளிக்கு நிப்பெவு என்றும் அழைக்கிறார்கள். இறந்தவரின் மனைவி அல்லது கணவன், மற்றும் சில நெருங்கிய உறவினர்கள் குளிக்கு நிப்பே என்னும் வழக்கத்தை அதாவது ஏதாவது புண்ணிய தீர்த்தம் குளிக்கும் வரை துக்கதினத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்பது நியதி. இவர்கள் ஒரு வெள்ளிச் சங்கிலியைத் தன் மணிக்கட்டில் கட்டியிருப்பதோடு எப்போதும் ஒரு கத்தியைத் தன்னுடன் வைத்துக்கொள்ள வேண்டும். அத்துடன் வெளியிடங்களுக்குப் போகவோ, ஆற்றைக் கடக்கவோ, பெஞ்சு, நாற்காலி போன்ற இருக்கைகளில் அமரவோ கூடாது. வாழையிலையில் சாப்பிட்டுவிட்டுப் பாயில்தான் படுக்க வேண்டும். இவையன்றி மற்றும் சில நடவடிக்கைகளும் இம் மக்கள் மத்தியிலுள்ளன. சவச்சடங்கு முடிந்ததும்

அருவா ஒரு சோதிடரைக் கொணர்ந்து, அவரின் ஆலோசனைகளின் பேரில், சாத்தன், கூளிக்க போன்ற பிசாசுகளின் தொந்தரவு இருக்காமலிருக்கப் பூசை நடத்துகிறார்கள். சில இடத்திலுள்ளவர்கள் வேறு பல பழக்க வழக்கங்களைக் கையாளுகிறார்கள். ஒருவர் இறந்ததிலிருந்து மூன்று நாள்கள், துக்க தினத்தைக் கடைப்பிடிக்கிறவர்கள் பக்கத்திலுள்ள குளத்திற்குச் சென்று, மீன்களுக்கு இரையாக அரிசியைத் தூவுகிறார்கள். ஏனெனில் இறந்தவர்கள் மீனாக அங்கு இருக்கிறார்கள் என்று நம்புகிறார்கள். இதை நீர் பெலி என்றழைப்பர். பின்னர், நான்காவது நாள் முதல் ஏழாம் நாள்வரை ஒரு குளக்கரையில் அல்லது ஆற்றின் கரையில் வைத்து மண்பாண்டத்தில் சோறாக்கி, அங்கேயே தரையில் வாழும் பிராணிகளுக்கு இடுகிறார்கள். இதைக் கரை பெலி என்றழைக்கிறார்கள். ஏழாவது நாளில் வீட்டின் பக்கத்தில் மூன்று கால்களைக் கொண்ட மேடை ஒன்று ஏற்படுத்துகிறார்கள். இதைப் பெலிமர என்றழைப்பர். இதில் இறந்தவரின் மனைவி அல்லது கணவன் தான் சாப்பிடும் பொழுதெல்லாம் சிறிது சோற்றை வாழையிலையிலெடுத்து அந்தப் பெலிமரத்தில் வைத்து காக்கைகளை உண்ணச் செய்வர். இதைக் **காக்கைக்கு கூளுப்பெப்பெ** என்றழைப்பர். இவ்வாறு 11 நாள்கள் வரை செய்தபின் மாலையில் கருமாதிச் சடங்கைச் செய்து முடித்துத் தம் துக்கதினத்தை முடித்துக் கொள்கிறார்கள். முடிவில் பொலிச்சிப் பாட்டு என்ற பாட்டைப் பாடுவார்கள். அது, "இறப்பு யாவருக்கும் பொதுவானது, இறப்பைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை" எனப் பொருள் பொதிந்ததாக இருக்கும்.

இதுகாறும் கொடவப் பெருமக்களின் வாழ்வில் பிறப்பு முதல் இறப்புவரை நடக்கின்ற வாழ்க்கை முறைகளைக் கண்டோம். பரம்பரை பரம்பரையாக இந்துமதத்தைப் பின்பற்றி வரும் இவர்கள் இன்றுவரை வேறு எம்மதத்தையும் பின்பற்றாமல் இருந்து வருவதின் மூலமும், இறந்த ஆன்றோர்களை வணங்கும் பழக்கத்தையுடையவர்கள் என்

பதன் மூலமும், அவர்களுக்கு தங்கள பண்பாட்டின் பிரதி பிம்பமாகிய பழக்கவழக்கத்தின் மேலுள்ள ஈடுபாடு நமக்கு நன்றாகப் புலனாகின்றது. மலைக்கேற்பப் புலால் உணவையே பெரிதும் உண்கின்றவர்களாயினும் இந்தியாவி லிருக்கின்ற முந்நூறறுக்கும் அதிகமான மலைவாழ் பெருங் குடி மக்களினின்றும் நாகரிகத்தாலும், நாட்டுப்பற்றுடைமை யாலும், பண்பாலும், பழக்க வழக்கங்களாலும் மாறுபட்டு காணப்படுகின்றனர். இதனால் இவர்கள் ஆரியரா? திராவி டரா? அல்லது மங்கோலியரா? அரேபியரா? என்றெல்லாம் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு ஆராய்ச்சியாளர்களால் சரியாகப் பதில் சொல்ல முடியவில்லை. எனினும் மொழி, பெரும்பான்மைப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் இவர்கள் திராவிட இனத்தவர் எனக் கூறலாம்.

எமது சிறந்த நூல்கள்

நா. வானமாமலை

தமிழர் வரலாறும் பண்பாடும்

தமிழர் பண்பாடும் தத்துவமும்

பி. எல். சாமி

தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு

கே. ஏ. குணசேகரன்

நாட்டுப்புற மண்ணும் மக்களும்

நாட்டுப்புற நடனங்களும் பாடல்களும்

சத்திய சோதனை

நாட்டுப்புற நிகழ்கலைகள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

சென்னை-600 098.

Code No. A 623 ISBN: 81-234-0149-3